
மா.ரா.இளங்கோவன் எம்.ஏ

இந்திய இதழ்கள்

கிழக்கிந்தியக் கம்பெனிக் காலம்

(1780-1858)

சேகர் பதிப்பகம்



இந்திய இதழியலின்

இரு நூறாவது ஆண்டு நிறைவு

வெளியீடு

1780 - 1980

BIBLIOGRAPHICAL DATA

Tittle of the Book	:	INTHIA ITHAZHKAL
Author	:	M. R. ILANGOVAN
Language	:	Tamil
Edition	:	First
Published on	:	5th January, 1981
Copy right Holder	:	M. R. ILANGOVAN
Paper used	:	Double Crown White Printing
Size of the book	:	18 × 12.5 cm.
Printing Points used	:	10 Pt.
No. of Pages	:	248
No. of Copies	:	1200
Printer	:	VETTRI ACHAGAM Madras - 600 005
Binding	:	Card-Board Binding
Price	:	Rs. 15 - 00
Publisher	:	SEKAR PATHIPPAGAM Madras - 600 078
Subject	:	Journalism
Call Number	:	44.2 ·M58←·L80 M1

இந்தியா இதழ்கள்

கிழக்கிந்தியக் கம்பெனிக் காலம்

இதழியல் துறை] 7 ஜனவரி 1981 [நூல் 3

இந்திய இதழியலின் இருநூறாண்டு
நிறைவை ஒட்டிய சிறப்பு வெளியீடு

வெற்றி அச்சக உரிமையாளர் எஸ். குப்புசாமியால் அச்சேற்றப்பட்டு, சென்னை, எம்.ஜி.ஆர். நகர் சேகர் பதிப்பக உரிமையாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் வெளியிட்டது. ஆசிரியர்: மா. ரா. இளங்கோவன், எம்.ஏ., தயாரிப்புத் துணை: பெ. பன்னீர்செல்வம்.

முதற் பதிப்பு 5 - 1 - 1981

விலை ரூ 15-

அச்சிட்டோர்

வெற்றி அச்சகம்
27, கஜபதி லாலா சந்து
ஐஸ் ஹவுஸ்
சென்னை - 600 005

உருவாக்கியோர்

ஆசிரியர்	மா. ரா. இளங்கோவன், எம்.ஏ.,
ஓவியர்	கவிஞர் அமுதோன்
பிளாக் செய்தவர்	எலிகண்ட் பிராசஸ்
முகப்பு அச்சிட்டோர்	பிரபு பிரிண்டிங் ஹவுஸ்
அச்சுக்கோப்பு	சங்கர், ஜெயராமன், தங்கம் கன்னிகா, சுதா
அச்சகத்தார்	எஸ். குப்புசாமி வெற்றி அச்சகம்
அச்சேற்றியவர்	ஸ்ரீவாஸ், சக்கரவர்த்தி M. W. N. பிரிண்டர்ஸ்
பைண்டிங் செய்தவர்	கே. தங்வேலு
தயாரிப்பு	பெ. பன்னீர் செல்வம்
பதிப்பாளர்	வெள்ளையாம்பட்டு சுந்தரம்

அகத்துறை

முன்னுரை

பச்சையப்பன் கல்லூரி மாணவனாயிருந்தபோதே நான் எழுதிய சிறுகதைகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டு எழுதத் தூண்டியவர் பேராசிரியர் நாரண துரைக்கண்ணன் அவர்கள்.

சிலம்புச் செல்வர் அவர்களின் செங்கோல் இதழில் 'சிலம்பும் கனவும்' என்னும் தலைப்பில் நான்கு வாரங்கள் தொடர்ந்து எழுதும் வாய்ப்பும் 1954 இல் கிடைத்தது.

1955 ஆம் ஆண்டில் மதுரை தமிழ்நாடு நாளிதழில் பணியாற்றியபோது இதழியல் துறையில் எனக்குப் பேரார்வத்தை உண்டாக்கி, மதிப்புரை எழுதும் கலையைக் கற்பித்து, ஆற்றலை வளர்த்து உதவினார் அப்போது தமிழ்நாடு நாளிதழின் ஆசிரியராக இருந்த ராவ்சாஹேப் டி. ஏ. வி. நாதன் பி. ஏ., பி எல்., அவர்கள்.

பல அரசியல் அறிஞர்களுக்கு இதழியல் துறையில் வழி காட்டியாக விளங்கிய அப்பெருமகனாரிடம் பயிற்சி பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைப்பற்றிப் பெருமை கொள்கிறேன்.

1960 முதல் 1968 வரை சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் துணையாசிரியனாகப் பணியாற்றியபோது, 1900 ஆண்டுகளில் வெளிவந்த நாளிதழ்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றிலிருந்து சிறு சிறு பகுதிகளைத் தேர்ந்தெடுத்து வாரப் பதிப்பின் சில பக்கங்களிலும் ஞாயிறு மலரின் சில பக்கங் களிலும் வெளியிடுவது ஒரு முறையாகக் கொள்ளப்பட்டிருந்தது. அந்தக் காலத்தில்தான் உலகம் சுற்றிய தமிழரும், குமரி மலர் என்னும் திங்களிதழின் ஆசிரியருமான திரு ஏ கே.

செட்டியார் அவர்கள் சுதேசமித்திரனின் பழைய, நாளிதழ்களில் வெளிவந்த தலையங்கம், நிருபர் கடிதம், செய்திகள் பற்றிய ஆய்வு செய்து கொண்டிருந்தார். பின்னர், அவற்றைத் தொகுத்துப் "புண்ணியவான் காந்தி" என்னும் பெயரில் நூலாக்கிச் சுதேசமித்திரன் வாயிலாகவே வெளியிட்டார். அப்போதிலிருந்தே இதழியல் துறையில் ஆய்வு செய்யவேண்டும் என்னும் ஆர்வம் எழுந்தது.

சென்ற ஆண்டு 'முற்காலத் தமிழ் இதழ்கள்', 'சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்' என்னும் இருநூல்களைச் சேகர் பதிப்பக வாயிலாக வெளியிட்டேன்.

நண்பர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களின் தூண்டுதலால் கடந்த நான்காண்டுகளாக அவ்வப்போது குறித்து வைத்திருந்த குறிப்புகளின் துணை கொண்டு, இந்திய இதழ்கள் என்னும் இந்நூலினை உருவாக்கினேன்.

இந்திய இதழியலின் இருநூறாவதாண்டு நிறைவைப் போற்றும் வகையில் வெளிவரும் "இந்திய இதழ்கள்" என்னும் பெயர் கொண்ட இந்நூல், கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிக் காலத்தில் வெளிவந்த இதழ்கள்பற்றிக் கூறுவதாகும்.

1757 ஆம் ஆண்டு முதல் கிழக்கிந்தியக் கம்பெனி நாடாளத் தொடங்கியது. ஆனால் இருபத்து மூன்றாண்டுகளுக்குப் பின்னரே இதழ் வெளி வந்தது. கம்பெனி ஆட்சி 1858 இல் முடிவடைந்தது. இந்த எழுபத்தொன்பது ஆண்டுகளில் ஆங்கிலம் (71), வங்காளி (17), பெர்சியன் (:9), உருது (13), மராத்தி (15), குஜராத்தி (12), இந்தி (2), தமிழ் (:), தெலுங்கு (3) பஞ்சாபி (1), மலையாளம் (1) ஆகிய மொழிகளில் 205 இதழ்கள் வந்துள்ளன. இன்ன மொழியில் வெளிவந்த இதழ் என்னும் குறிப்பினை அறிய முடியாத நிலையில் பல இதழ்களின் பெயர்கள் மட்டுமே அவை வெளிவந்த காலத்துடன் அறிய முடிந்தது. அவற்றை அப்படியே தந்துள்ளேன்.

செய்திகளின் செய்திகள் என்னும் முதல் பிரிவில் Public opinion என்னும் சொல் வளர்ந்த வகையும், செய்தியாளர்களின் தோற்றம் பற்றியும் மொகலாய மன்னர்கள் செய்தியாளர்களைக் கொண்டிருந்தமையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் வெளிவந்த இதழ்கள் என்னும் இரண்டாவது பிரிவில், 79 ஆண்டுகளில் வெளிவந்த இதழ்கள் பற்றிய பட்டியல் தரப்பட்டுள்ளது. இப் பட்டியலைத் தயாரிக்கும்போது பல வகையகன ஐயங்கள் விளைந்தன. இதழாளர்கள், இதழ்கள் தோன்றிய காலம், இடம் ஆகியவற்றில் இருவேறு கருத்துடையவராயுள்ளனர். சில இதழாசிரியர்களின் பெயர்களும் வேறுபடுகின்றன. அத்தகைய நிலையில் அவர்கள் குறிக்கும் பெயர்களையும் சேர்த்துள்ளனர். ஒரு விவரமும் தெரியாத நிலையில் அந்தக் கட்டத்தை நிரப்பாமல் வெற்றிடமாகவே விட்டுள்ளேன்.

இந்தியாவைக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் நீடிக்கச் செய்யக்கூடாது. பேரரசியின் நேராட்சியில் இருப்பது தான் பொருத்தம் என்று இந்தியாவில் வாழ்ந்து கம்பெனியாரின் ஆட்சி முறையைக் கண்டவர்கள் பாராளுமன்றத்தில் பலமுறை சொன்னபோதும் காலம் நோக்கியிருந்தனர் செயலாற்ற வேண்டியவர்கள். இந்தியாவில் ஆங்காங்கே அவ்வப்போது ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடந்தவண்ணமிருந்தன. எங்கெங்கோ ஓரிடத்தில் கிளர்ச்சி என்பதால் அடக்கிவிடுவது படைபலம் கொண்டவர்க்கு எளிதாயிற்று.

1857 ஆம் ஆண்டில் மீரட்டில் நடந்த பெருங்கிளர்ச்சிதான் கம்பெனி ஆட்சிக்கு முடிவைத் தந்தது. காலம் கனிந்த சாட்சி யாக அது அமைந்தது. அந்தப் பெருங் கிளர்ச்சியை வரலாற்றாசிரியர்கள் இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்றும், சிப்பாய்க் கலகம் என்றும் கூறுகின்றனர். அது பற்றிய பலருடைய கருத்துகள் 'இந்திய மொழி இதழ்கள்' என்னும் பகுதியில் தரப்பட்டுள்ளன. அந்தப் பொங்கெழுச்

சிக்குக் காரணமான பல நிகழ்ச்சிகளைக் காலவரிசைப் படுத்தித் தந்துள்ளேன்.

இந்தியாவின் முதல் இதழ் என்னும் மூன்றாவது பகுதியில் கிழக்கிந்தியக் கம்பெனியின் வரலாறு, இதழியல் பிறந்த வரலாறு இந்த உணர்வுக்கு வித்திட்ட வில்லியம் போல்ட்ஸ் பற்றிய விவரங்கள், இந்தியாவின் முதல் இதழை வெளியிட்ட ஜேம்ஸ் ஹிக்கி பற்றிய செய்திகள், அவரைப் பற்றிய பிறருடைய கருத்துகள், அவர் நடத்திய பெங்கால் கெசட் அல்லது கல்கத்தா அட்வர்டைசர் என்னும் இதழ் பற்றிய செய்திகள், இதழாசிரியர் என்னும் நிலையில் அவர் அடைந்த துன்பங்கள் மிகத் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

'ஹிக்கி - கிழக்கிந்தியக் கம்பெனியின் அச்சாளர்' என்னும் நான்காவது பிரிவு, ஹிக்கியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாகும். மக்களால் விரும்பப்பட்ட இதழாசிரியர் ஆட்சியாளரால் எத்தகைய கொடுமைகளுக்கெல்லாம் ஆளானார் என்பது முழுமையாகத் தரப்பட்டுள்ளது.

இந்திய இதழ்கள் I (1780 - 1799) என்னும் ஐந்தாவது பகுதியில், 1780 முதல் இருபதாண்டுகளில் வெளிவந்த இதழ்கள் பற்றிய விவரங்கள் உள்ளன. அப்பகுதி கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய பகுதிகளில் வெளிவந்த இதழ்கள் பற்றி விளக்கும் வகையில் மூன்று சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இருபதாண்டுகளில் இதழ்கள் - பருந்துப் பார்வை என்னும் ஆறாவது பகுதியில், அதுகாறும் அறிந்த இதழ்களின் பொது நோக்கு ஆராயப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் நாடு கடத்துதல் போன்ற கடுமையான தண்டனைகளுக்குள்ளான இதழாசிரியர்கள், இதழாசிரியர்களுக்குத் தோன்றிய பலவகையான தடைகள், அவர்களுக்காக இரங்காத மனம் கொண்ட ஆட்சியாளர்கள் கல் மனம் பற்றியெல்லாம் சொல்லப்படுகின்றன.

இந்திய இதழ்கள் II (1800 - 1858) என்னும் ஏழாவது பகுதி கல்கத்தா, பம்பாய், சென்னைப் பகுதிகளிலிருந்து வெளியான ஆங்கில இதழ்களைப் பற்றிய செய்திகளே உள்ளன. மிகச் சிறந்த இதழாசிரியரான ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாமின் வரலாறு கற்பார்க்கும் பயன் தருவதாகும்.

இந்திய மொழி இதழ்கள் என்னும் இறுதிப்பகுதி, இந்திய மொழிகளில் வெளிவந்த இதழ்களைப் பற்றியதாகும். இந்த மொழிகளில் இதழ்கள் ஏன் தொடங்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்பன போன்ற செய்திகள் நன்றாக வெளிப் படுத்தப்பட்டுள்ளன.

பழைமை இதழ்கள் சிலவற்றின் குறிப்புகளும் தரப் பட்டுள்ளன. வங்காள மொழியிலும், பெர்சியன் மொழியிலும் தான் இதழ்கள் ஆங்கிலத்துக்கடுத்தபடியாக மிகுதியாக வெளி வந்துள்ளன.

இதழியல் வளர்ந்து வரும் துறை. தமிழில் போதிய அளவுக்கு நூல்கள் இல்லாத குறை. மூதுகலைப் பாடத்திட்டத் தில் இதழியலையும் ஒரு பகுதியாக்கி, கல்வி உலகில் பாடத் திட்டத்தில் 'தேய்ந்த பாட்டை' முறையை மாற்றியுள்ள போக்கினை இன்று காண முடிகிறது. இதழியல் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தினை இளைஞர் உலகில் காண முடிகிறது.

அவர்களுக்குத் துணையாகும் வகையில் மூல நூல்களை அவர்கள் காணவேண்டும் என்னும் ஆர்வத்தால் எனக்குக் கிடைத்த குறிப்புகளில் தரப்பட்டிருந்த அடிக்குறிப்புகளையே நான் ஓரளவுக்குப் பயன்படுத்தியுள்ளேன். பொது நூலகங் களில் அப் பழைமைப் பதிப்புகள் இருக்குமாதலால், பறவை நோக்கில் சொல்லிச் செல்லும் பகுதிகளை முழுமையாகக் கற்பது பயன் தரும் என்னும் நோக்கமே அதற்குக் காரணமாகும்.

இதழின் ஒவ்வொரு பகுதியும் ஆய்விற்குரியதுதான்.

"அமெரிக்காவில் நியூ ஜெர்சியில் உள்ள சார்லஸ் ஹியூஸ் என்பவர், டாக்டர் பட்டத்திற்காக ஒரு ஆராய்ச்சியை மேற் கொண்டுள்ளார். பொருள் : 'பத்திரிகை ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதங்கள்.'

சிகாகோவைச் சேர்ந்த ஒரு வாசகரின் 1800 கடிதங்கள் 'ஆசிரியர்க்குக் கடிதம்' பகுதியில் பல்வேறு வார, மாத இதழ்களில் பிரசுரம் ஆகியிருந்ததை இவர் கண்டு, கணக்கெடுத்து, தன் ஆராய்ச்சிக்குப் பயன் படுத்திக் கொண்டுள்ளார்."

இச்செய்தி பி. நாராயணன் என்பவரால் எழுதப் பட்டுள்ளது; 'குங்குமம்' வார இதழில் (4 - 1 - 81) வெளி வந்துள்ளது.

1818 இல் வெளிவந்த 'கல்கத்தா ஜர்னல்' என்னும் வாரம் இருமுறை இதழின் ஆசிரியர் ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம், தமது இதழில் 'ஆசிரியர்க்குக் கடிதம்' என்னும் தனிப்பகுதியை ஒதுக்கியிருந்தார் என்பதை அறியும்போது, குங்குமத்தில் வந்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஆசிரியர்க்குக் கடிதம்' என்னும் பகுதியின் வளர்ச்சி நிலையை ஒப்பிட்டுக் காண ஆய்வாளர்க்குத் தூண்டுதலாகுமல்லவா?

இதழியல் துறைக்கு என்னுடைய இம் மூன்றாம் படைப்பை உரிமையாக்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மா. ரா. இளங்கோவன்

பதிப்புரை

தமிழர்க்கு ஓர் நற்செய்தி!

தமிழ் மொழிக்கு ஓர் நற்செய்தி!

செய்திகளின் தொட்டில் இதழ்கள்;

பத்திரிகைகள்!

செய்தி இதழ்களின் செம்மாந்த வாழ்வை இன்று அனைவரும் அறிந்து வைத்திருக்கிறோம்.

ஆசிரியர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை ஏழைத் தொழிலாளி முதல் ஏற்றமிகு செல்வர் வரை உலகம் முழுவதிலும் இன்று செய்தித் தாட்களே செங்கோலோச்சுகின்றன.

அங்கிங்கெனாதபடி எங்கும் தானாகி எல்லாரையும் ஈர்த்துவிடும் ஆற்றல்மிக்க இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும் எவ்வாறென்று எண்ணிப் பார்ப்பது தேவைதானே! சுவையானதும் அல்லவா?

இதழ்கள் இங்கே பிறந்தனவா?

இல்லை; இதுவும் அந்நியர் கொடையே!

மேற்கே மெத்த வளர்வதெல்லாம் மெல்ல மெல்ல கிழக்கேயும் பரவி விடும்! பத்திரிகைகளும் அவ்வாறே.

பொருள்கள் வாங்கி வாணிகம் செய்ய வந்த ஒரு குழுவினர், அவர்கள் இங்கு தங்கிய காலத்தில் அவர்கட்காகவே ஏற்பட்டது ஓர் இதழ்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் நாடு பிடிப் படலத்தில் ஒரு சிறு பொறியாகச் சீறி எழுந்தது ஒரு செய்தி ஏடு!

1780 ல் இந்திய மண்ணில் கல்கத்தா பெரு நகரில் அந்த முதல் இதழ் தோன்றியது.

தொடங்கியவர் ஆங்கிலேயர்!

பெயர் அகஸ்டஸ் ஹிக்கி.

இதழின் பெயர் கல்கத்தா கெசட்!

தொடங்கியவர் வாழ்வு சுவைபல கொண்ட தாகும். அவரைச் சூழ்ந்த இடர்கள் அரியதொரு வரலாற்றையே உருவாக்கி விட்டன.

இந்திய நாட்டில் இதழ் ஒன்றைத் தொடங் கிய முதல்வர், அத்துறையின் இன்று வரையுள்ள தொடர் வரலாற்றில் தோன்றிய பற்பல மாற்ற ஏற்றங்களுக்கும் அவரே முதல்வர் என்ற தனி யிடம் பெற்று விட்டார்.

முதல் இதழும் இதழாளரும் நீண்டதொரு வரலாற்றையே உருவாக்கி விட்டதை, சுவையான கதைபோல படித்து வியக்கலாம்; உருகலாம். இதோபடியுங்கள்!

இந்திய இதழ்கள்!

முதல் இதழ் 1780 ல் தோன்றியது. 1980 முடிய இருநூற்றாண்டுகள் வளர்ந்து மறைந்து விட்டது.

இருநூறு ஆண்டின் நெடுகிலும் எத்தனை எத்தனையோ இதழ்கள் தோன்றின! இந்தியா

விலுள்ள பல மொழிகளிலும் தோன்றின நம் தாய் மொழித் தமிழிலும் தாள்கள் உருக்கொண்டன; பல வகைகளில் வளர்ந்தன.

இவ்வரலாறு சுவையானது.

சுவைத்துப் பழகியவர் சொல்லத் துணிந்துள் ளார். துணை நின்ற நூல்கள் தொல்லை தந்தது ஒரு பக்கம்; முரண்பாடுகள் காட்டி மிரட்டின மறு பக்கம்!

புரட்டிப் புரட்டிப் பார்த்தார் இவர்; இவரையே புரட்டி எடுத்தன அந்தப் புத்தகங்கள்.

தமிழ் மொழிக்குப் புதிய துறை இதழியல் துறை. நல்ல வளமான அறிமுகம் தேவை. அதற்கு நண்பர் தகுந்தவர்; அவரோடு இத் துறையில் ஒத்த உணர்வு கொண்ட நானும் ஊக்கமுடன் செயல்படத் தொடங்கினேன்.

அதன் விளைவே இந்த நூல். மிக உழைத்து உருவாக்கியுள்ள ஆசிரியர் இத்துறைக்கு நிகரற்ற ஆய்வாளர். வரலாற்றில் நல்லதொரு இடம் பிடித்துள்ளார். இதழ் பற்றிய அவரது மூன் றாவது நூல் இது; இதனையும் நான் வெளியிடு வதன் மூலம் அவர் ஆர்வத்துக்கும் தமிழ் இதழியல் துறைக்கும் பணிசெய்த மகிழ்வை யடைகிறேன். நாடும் நல்லோரும் நம்பிக்கை தருவார்கள் என்று நம்புகிறேன்.

—வெள்ளையாம்பட்டு **சுந்தரம்**

இந்திய இதழியலின்
இருநூறாவதாண்டு நிறைவின்போது
இந்தியாவின் முதல் இதழாசிரியரான
ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கியின்
நினைவு போற்றும் படைப்பு

இந்திய இதழ்கள்

1

செய்திகளின் செய்திகள்

1

செய்திகளின் செய்திகள்

மனிதன் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பற்றி அறியாத காலமொன்று இருந்தது.

காலச் சூழல், தன்னைத் தவிரப் பிறர் பற்றியும் அறியும் ஆர்வத்தை அவனுள் வளர்த்தது. இவ்வாறு தோன்றிய தனிமனித விருப்பமும், சமுதாயத் தேவைகளும்தான் இதழ்களின் பிறப்புக்குக் காரணமாயமைந்தன.

செய்தி எழுத்தாளர்

தொடக்கத்தில் வாய்மொழிகளால் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருந்த மனிதன், பின்னர் அறிக்கைகள் வழியாகச் செய்திகளைத் தெரிவிக்கலானான்.' அந்த அறிக்கைகள் பொதுவிடங்களில் ஒட்டப்பட்டன.

ரோமானியர்கள் காலத்தில், ரோமாபுரியின் பொதுவிடங்களில் Acta Diruna எனப்பட்ட செய்தி அறிக்கைகள் ஒட்டப்பட்டன. இந்த அறிக்கைகளை எழுதுவோர் 'செய்தி எழுத்தாளர்' (News writers) எனப்பட்டனர்.

இந்தச் செய்தி எழுத்தாளர்கள் எலிசபெத் பேரரசியின் ஆட்சிக் காலத்தில் (1558 - 1603) பெருஞ்சிறப்புப் பெற்றிருந் தனர். சமுதாயத்தில் செல்வாக்குள்ளவர்கள் இவர்களைப் பயன் படுத்திச் செய்திகளை அறிந்தனர். இவர்கள் முறையாக இத் துறையில் பயின்றவர்களில்லையென்றாலும், அனுபவ அறிவு இவர்களுக்குத் துணை நின்றது.

மூவகைப் பிரிவினர்

செய்தி அறியும் ஆர்வம் யாருக்குத்தான் இல்லை? மொகலாய மன்னர்களும் இந்தத் துறையில் பேரார்வம் கொண்டிருந்தனர். அவர்கள் காலத்தில் செய்திகளைச் சேகரிக்கும் செய்தியாளர்கள் "வாக்யா நாவிஸ்" (waki'ahnavis) எனப்பட்டனர். இவர்கள் அவ்வப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்பற்றிச் செய்திகளைச் சேகரித்து எழுதி அனுப்புவர். இவர்கள் அனுப்பும் செய்திகளை யொட்டி, அரசு தேவையான முடிபுகளை எடுக்கும்.

அரசு முடிபுகளை மக்களுக்குத் தெரிவிக்கும் செய்தியாளர் "சவானிக் நாவிஸ்" (Savanik navis) எனப்பட்டனர்.

அரசின் ரகசிய செய்தி எழுத்தாளர் "கோஃபியா நாவிஸ்" (Cofia navis) என்று அழைக்கப்பட்டார்.

செய்திகளின் தரம்

இச் செய்தியாளர் அனுப்பும் செய்திகள் எல்லாமே நடந்தவை அல்லது உண்மையானவை என்று கூறுவதற்கில்லை. அரசரின்மீது கொண்ட கோபத்தால் சில வேளைகளில் இவர்கள் தவறான செய்திகளையும் அனுப்பினர். அதனால் இழப்புகள் அரசருக்கு நேர்ந்ததும் உண்டு. இத்தகைய செய்தியாளர்கள் பற்றிச் சிலர் எழுதியுள்ள செய்திகளை அறிவோம்.

ஃப்ராங்கோஸ் பெர்னியர்

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஃப்ராங்கோஸ் பெர்னியர் (Francois Bernier) என்பவர் 1656 - 1668 வரை ஷாஜகான், அவுரங்கசீப் ஆகியோரின் அரண்மனை மருத்துவராகப் பணியாற்றியவர். இவர் இந்தச் செய்தியாளர் பற்றிக் கூறுவதனைக் காண்போம் :

> " மொகலாயப் பேரரசர் தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கு 'வாக்யா நாவிஸ்'களை அனுப்பி வைப்பார். அவர்கள் அப்பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அவருக்கு எழுதி அனுப்ப வேண்டும் என்பது விதி. அவ்வப் பகுதிகளைப் பேரரசரின் சார்பாளராக ஆண்டு கொண்டிருப்பவர்களின் கொடுமை தாளாமல் மக்கள் மனம் குமுறிக் கொண்டிருப்பர். அதுபற்றி ஆளுவோர் கவலைப்படுவதில்லை. மக்களின் மனக் குமுறல் பேரரசர்க்கு எட்ட வாய்ப்பில்லை என்பதை அறிந்தவர்கள் அவர்கள். அவர்களுக்கு அஞ்சி, அது போன்ற நிகழ்ச்சிகளைத் தங்கள் குறிப்புகளில் 'வாக்யா நாவிஸ்'கள் சேர்ப்பதில்லை.[1]

ஜான் ஃப்ரையர்

இந்தியாவில் அவுரங்கசீப் ஆட்சிக் காலத்தில் 1672 ஆம் ஆண்டு முதல் 1681 ஆம் ஆண்டு வரை டாக்டராகப் பணியாற்றிய ஜான் ஃப்ரையர் (John Fryer) என்பவர், தக்காணப் படையெடுப்பில் அவுரங்கசீப்பின் தோல்விக்குக் காரணம் செய்திக் கடிதம் எழுதியவர்கள் தந்த தவறான தகவல்களே யாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.[2]

---

1 Constable and Smith (Ed.) Travels in the Mogul Empire, p. 231

2 Margarita Barns, The Indian press, p. 4.

சர் வில்லியம் ஸ்லீமன்

நூற்றைம்பது ஆண்டுகட்குப் பின்னர் இவர்கள் பற்றிய குறிப்பொன்றினை நாம் காண முடிகிறது. இதனை எழுதியவர் மேஜர் ஜெனரல் சர். வில்லியம் ஸ்லீமன் (Sir William Sleeman) என்பவர். இவர் அயோத்தி அரசுபற்றியும், குலாம் உசேன் என்பவன் பற்றியும் எழுதியுள்ளார்.

> "குலாம் உசேன், தன்னைப் பிறர் தடிகொண்டு தாக்கியது குறித்துப் பெரிதும் அவமானமுற்றிருந்தான். தன்னைப் பற்றிய இந்தச் செய்தி அரசருக்கு எட்டுதல் கூடாது என்று அவன் எண்ணினான். அதனால் அவன் செய்தி எழுத்தாளர்களை அணுகினான். இருபது கல் தொலைவு வரைப் பணியாற்றிய செய்தியாளர்களை அழைத்து, அவர்களுக்குக் கையூட்டளித்து, தன்னைப்பற்றிய செய்தியினை அரசவை அறியாதவாறு செய்யுமாறு வேண்டினான். அவனும் அதுபற்றி எவரிடமும் பேசவில்லை."[1]

இக்குறிப்பால், செய்தி சேகரிப்பவர்கள் கையூட்டினைப் பெற்றுக்கொண்டு, தங்கள் கடமையிலிருந்து வழுவி உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

வில்லியம் ஸ்லீமன், தம்முடைய மற்றொரு நூலில் இவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது நிருபர்களாகவே இவர்களைக் குறிப்பிடுகின்றார். இவர்களைக் குறிப்பிடப் பயன்பட்டு வந்த சொற்களை ஸ்லீமன் பயன்படுத்தவில்லை. அயோத்தி மன்னர் 660 செய்தி எழுத்தாளர்களை அமர்த்தியிருந்ததாகவும், அவர்களுக்குத் திங்களொன்றுக்கு நான்கு அல்லது ஐந்து ரூபாய்

---

1 Sir William Sleeman, Rambles and Recollections, p. 249.

ஊதியமாகத் தரப்பட்டது என்றும் அவர் குறித்துள்ளார். நாள்தோறும் அவர்கள் செய்ய வேண்டும் பணி பற்றிய விளக்கங்கள் அரசராலும், அமைச்சர்களாலும் தரப்பட்டன என்றும் அவர் கூறுகின்றார்.[1]

நிகோலா மெனுசி

வெனிஸ் நாட்டுப் பயணியரான நிக்கோலா மெனுசி (Niccola Manucci) என்பவர், அவுரங்கசீப்பின் அரண்மனையில் சிறிது காலம் தங்கியிருந்தவர். இவர், இந்த இதழாளர்களின் செய்திக் கடிதங்கள் பற்றிக் கூறுவதாவது :

"அரசைச் சேர்ந்த "வாக்யா நாவிஸ், "கோஃபியா நாவிஸ்" ஆகியோர் வாரத்திற்கு ஒருமுறை நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புகளைத் தெரிவித்தாக வேண்டும் என்பது நிலையான விதியாக மொகலாயர் ஆட்சிக் காலத்தில் இருந்தது. இது முக்கியமான நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் 'கெசட்' போன்ற முறையை ஒட்டியதாகும்.

"இந்தச் செய்திக் கடிதங்கள் அரண்மனையில் அரசன் முன்னிலையில், அரண்மனையைச் சேர்ந்த பெண்களால் படிக்கப்படும். இரவு ஒன்பது மணியளவில் தான் இப்படிப் படிப்பது தொடங்கும்.

"இவை தவிர ஒற்றர்கள் அனுப்பும் செய்திகளும் படிக்கப் படும். அரசன் நள்ளிரவு வரையிலும் அமர்ந்து செய்திகளைக் கேட்பான்.

"இதனால் தன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் செய்திகளை மன்னன் அறிந்துகொள்ள முடிந்தது".[2]

---

1 Sir William Sleeman, Journey through the kingdom of Oude, Vol I. pp. 67 – 69.

2 Margarita Barns, The Indian Press, p. 4.

செய்திக் கடிதங்கள் பற்றி

இத்தகைய செய்திக் கடிதங்களைத் தொகுத்து கர்னல் ஜேம்ஸ் டாட் என்பவர் லண்டனில் உள்ள ராயல் ஏஷியாட்டிக் சொசைடிக்கு 1828 ஆம் ஆண்டில் அனுப்பி வைத்தார். அவை பற்றி "ஜர்னல் ஆஃப் தி ராயல் ஏஷியாட்டிக் சொசைட்டி" என்னும் இதழில் எச். பீவரிட்ஜ் எழுதியுள்ள குறிப்பின் துணை கொண்டு, இச்செய்திக் கடிதங்கள் எட்டு அங்குல நீளமும் நாலரை அங்குல அகலமும் கொண்டவை என்று அறியமுடிகிறது

இவை பலரால் எழுதப்பட்டவை ஆதலால் எழுத்தில் வேறு பாடு உள்ளது. இக்கடிதங்கள் பெர்ஷியன் அல்லது உருது மொழியில் எழுதப்பட்டுள்ளன

இவற்றுள் பதவி உயர்வு பற்றிய செய்திகள், அரசர் சென்று கண்ட மசூதிகள், அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், அவருடைய வேட்டை அனுபவங்கள், அவர் பரிசளித்துப் போற்றிய நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன என்பன போன்ற செய்திகளும் பீவரிட்ஜ் கட்டுரையால் அறிய முடிகிறது.[1]

வக்கீல் ராமச்சந்திரா

கிழக்கிந்தியக் கம்பெனியார், மொகலாய மன்னர்கள் கையாண்ட இம்முறையைப் பெரிதும் விரும்பினர். அவர்களும் இத்தகைய 'செய்தியாளர்'களை அமர்த்திக் கொண்டனர்.

1704 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாளன்று அவர்கள், ராமச்சந்திரா என்பவரை ஹூக்ளிக்கு அனுப்பினர். "நாங்கள் அவரை ஹூக்ளியில் ஆங்கிலேயர் தொடர்பான வக்கீலாகப் (Vacqueel) பணியாற்ற நியமித்துள்ளோம்"

---

1 October issue, 1908

என்னும் குறிப்புடன் அவர் அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு வாழும் ஆங்கில மக்கள் தொடர்பான செய்திகளை அவ்வப்போது தெரிவிக்க வேண்டுவதுதான் அவர் பணி. செய்திகளை அவர் தமது தாய்மொழியிலேயே எழுதலாம் என்றும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது

இந் நிகழ்ச்சியால் செய்திக் கடிதங்களில் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கிருந்த ஆர்வம் புலப்படுகின்றது. கம்பெனியின் பிரதிநிதிகளைப் பற்றிய குறிப்புகளையும் அக்கடிதங்கள் கொண்டிருக்கும். அதனால் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்துக் குறைகள் நீக்க முடிந்தது.

விடுபட்ட குறை

மொகலாய மன்னர்கள் தகவலறிந்து செயல்பட்டதைக் கண்டு, செய்திகளின் வலிமையை உணர்ந்து செய்தியாளர்களை அமர்த்திக் கொண்ட ஆங்கில ஆட்சியினர், மொகலாய அரசவைகளில் சில வேளைகளில் அக்கடிதங்கள் பற்றிய விவாதங்கள் நடந்ததைப் பின்பற்றத் தவறிவிட்டனர் அவ்வாறு நடைபெற்ற விவாதங்களால் கருத்துத் தெளிவு ஏற்பட வாய்ப்பிருந்தது. ஆனால், ஏனோ அவர்களை அடுத்து ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர்கள் அம்முறையைத் தொடரவில்லை என்கிறார் மர்காரிதா பர்ன்ஸ்

கருத்து - செய்தி

மக்கள் எண்ணங்களே செய்திகளாக உருவாகின்றன. சங்கப் புலவர்கள் மன்னர்களுக்கு வழங்கிய அறிவுரைகளின் பின்னணியாக மக்களின் எண்ணங்கள் இருப்பதை அறியலாம். தனிப்பட்ட ஒருவராலோ அல்லது பலராலோ மன்னனைக் கண்டு கூறமுடியாத செய்திகளை அவனோடு பழகும் வாய்ப்பும் உரிமையும் கொண்ட புலவர்களால் கூறமுடிந்தது. மக்கள் கருத்தை மன்னன் அறிய அவர்கள் துணையாயினர்.

இந்நிலையில் சங்கப் புலவர்களைச் செய்தியாளர்கள் என்றும் கொள்ளலாம். நாடெங்கும் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிந்து உரியவர்களுக்குத் தக்க வகையில் எடுத்துக் கூறும் ஆற்றல் கொண்ட அவர்களை 'நிருபர்கள்' என்றும் கூறலாம். சங்க இலக்கியங்களில் காணப்படும் முரசு, ஓலை, தூதுவர் உரை, வம்பளப்பு (அலர்) முதலியனவற்றைச் செய்திச் சாதனங் களாகக் கொள்ளலாம். எனவே, இதழியலின் கரு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே உருவாகிவிட்டது என்னலாம்.

செய்திக்கு அடிப்படையாக உள்ள மக்கள் கருத்தினை Public Opinion என்று கூறும் வழக்கம் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான் ஏற்பட்டது. ஆயினும் இக் காலத்திற்கும் முன்னரே இதற்குச் சமமான சொற்கள் இதனை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கிரேக்க மொழியில், கிரேக்கர்கள் 'Ossa, Pheme or nomos' என்னும் சொற்களையும், ரோமானியர்கள் 'fama, fama popularis, rumore, Vox populi' என்னும் சொற்களையும் பொதுமக்கள் கருத்தைக் குறிக்கப் பயன்படுத்தினர்.

பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நடைபெற்ற உள்நாட்டுப் போராட்டம்தான் இன்று நாம் வழங்கும் பொருளில், மக்கள் கருத்து அல்லது Public opinion என்பதைப் பயன்படுத்தக் காரணமாயிற்று. இந்தப் பழக்கம் பிரெஞ்சுப் புரட்சியின்போது, பிரான்சில் 'Opinion Publique' என்னும் சொல்லை உருவாக்கித் தந்தது. நாளடைவில் இச்சொல் உலகெங்கும் பரவலாயிற்று என்கிறார் எட்வின் R. A. செலிக் மான் என்பவர்.

1 Dr. D. Sadasivam, The Growth of Public opinion in the Madras Presidency, p. 4.

'நாலு பேர்' கருத்து

செய்தி அல்லது பொதுமக்கள் கருத்து என்பது எப்படி உருவாகின்றது என்பதைக் காண்போம்.

தனி ஒரு மனிதனுக்கு அவர் விரும்பாத ஒன்று அல்லது அவர் எதிர்பாராத ஒன்று அவர்மீது சுமத்தப்படும்போது அவர் சினந்தெழுவது இயல்பாகும். தமது குறையினைப் போக்கிக் கொள்ள அவர் உரியவர்களை நாடுவார். அப்போதும் அவர்க்கு அவர் எண்ணியது போன்று நிறைவு தோன்றவில்லையென்றால், அவர் எண்ணியது பொருந்தாததாக இருந்தாலும் கூட, முன்கொண்ட சின நிலையிலிருந்து சற்றும் விடுபடாமல், தனக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதாகத் தம் மனைவியிடமும், உறவினர்களிடமும் புலம்பித் தீர்ப்பது மனச்சுமையின் குறைவைக் காண வடிகால் போக்காகும். இந்த உரத்தப் பேச்சு அடுத்த பகுதிகளில் வாழ்பவரின் கருத்தை ஈர்க்கும்.

பிறரைப் பற்றிய செய்திகள் என்றாலே பெருஞ் சுவை உணர்வு தோன்றுவது வியப்புக்குரிய கேவல இயல்பாக அல்லவா பெரும்பாலோரிடையே வளர்ந்துள்ளது. இந்த இயல்பின் அழுத்தத்தால் அவர்கள், தாங்கள் கேட்டதைப் பரிவு உணர்வோடு அல்லது 'அந்த மனிதனுக்கு வேண்டும் தான் இது' என்ற மகிழ்வு உணர்வோடு, கருத்தாக மற்றவர்க்குத் தவறாமல் சொல்லுவர்.

தனி ஒருவருடைய மனக்குறை, இப்போது அடுத்தவர்க்குரிய அவலாகி மற்றொருவர்க்கும் பரவியதைக் கண்டோம். இந்தச் செய்திப் பரப்பில் உரியவர் மறைந்துவிட, சொன்னவரும் கேட்டவரும் கூடிப் பேசுகிறார்கள். பல வகையான கருத்துகள் பரிமாற்றம் பெறுகின்றன. முதலாமவரின் குறை, இந்த வேண்டாத பேச்சில் கலந்துகொண்ட யாருக்கேனும் இருக்குமானால், அவர் மட்டும் முதலாமவருக்காகப் பரிந்துகொண்டு, தொடர்புடையவர்களைப் பழிக்கின்றார். இப்போது நிலைமை

யில் ஒரு புது வழி பிறந்து விடுகின்றது. அதில் சிலர் சொல் நடை இடுகின்றனர். தங்களுக்கும் இதுபோன்ற நிலை இன்றில்லாவிட்டாலும் நாளை வந்து சேருமோ என்று நினைக்கும் 'தீர்க்க தரிசிகள்' சிலர், புது வழி கண்டவர்களொடு சேர்ந்து கொள்கின்றனர்.

இந்நிலையில், இந்தப் பேச்சுக்கே காரணமானவர் முற்று மாக மறைந்துவிடுகிறார். பிரச்சினை மட்டும் உயிர் பெற்று விடுகிறது. எப்படியும் இந்த அநீதியை அம்பலமாக்க வேண்டும் என்ற உணர்வு அந்தக் கூட்டத்தில் - அம்பலத்தில் பிறக்கிறது. அவர்கள், பலர்க்கு அநீதி விவரத்தைச் சொல்கிறார்கள். இப்படி ஒருவரிடம் தொடங்கி, இன்னொருவரிடம் சேர்ந்து, பின்னர் பலரால் பேசப்பட்டு, தொடர்ந்து பலரிடம் கூறப்படும்போது, ஆரம்பச் செய்தி புதிய வடிவமே பெற்றுவிடுகிறது. இப்போது முதலாமவரின் பிரச்சினை பொதுப் பிரச்சினையாகிவிடுகிறது. கருத்து ஒரு குரல் வடிவெடுக்கிறது அது பெருத்த முயற்சியின் பின், தக்கார் வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது. இந்த வெளிப் பாட்டு நிலையின் போதுதான் அது 'நாலு பேர் கருத்தாக', 'மக்கள் கருத்தாக'ப் பெயர்கொண்டு செல்வாக்குடையதாகி விடு கிறது. இப்படித்தான் 'பொது மக்கள் கருத்து' அல்லது 'பப்ளிக் ஒப்பினியன்' உருவாகிறது.

சங்கிலி முறை

தனி ஒருவருடைய கருத்து எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும் பலருடைய ஆதரவுக் குரலால்தான் அதற்கு வலிமை சேர்கிறது - பயன் உண்டாகின்றது.

பொதுமக்கள் கருத்து உருவாகும் முறை பற்றிய தமது கட்டுரையில், பிலிப்ஸ் டேவிஸன் என்பவர் கூறுவதைக் காண் போம்.

"ஒருவரிடமிருந்து இன்னொருவர்க்கு ஒரு கருத்து சொல்லப்படும் போதுதான் அது வலிமை பெறுகிறது - பிரச்சினை ஆகிறது. அந்த இன்னொருவர் அதைப் பலர்க்கும் பொதுவாக்குகிறார். அப்போது அவருடைய கூற்றில் அவருடைய சொந்தக் கருத்துகளும் கலந்து விடுகின்றன. சில வேளைகளில் முக்கியமான பல பிரச்சினைகள் ஒருவரிடமே உருவாகி வெளிப்பாடு பெறாமையால், நல் வடிவு கொள்ளாமல் மறைந்து விடுவதுமுண்டு. ஏதேனும் ஒருவகையில் தாம் எண்ணியது செயல்படும்போது, 'நான் அப்போதே நினைத்தேன்' என்று சொல்லி நிறைவு பெறுவதோடு அந்த ஒருவர் அமைதியடைந்து விடுகிறார். ஆனால், பலருடைய பேச்சுத் தொடர் என்னும் சங்கிலி முறையால், பல சிறு புள்ளிகள் பெரு வடிவெடுத்துச் சாதனைகளை உருவாக்கி விடுவதையும் காணமுடிகிறது. இந்தச் சாதனைகள் 'பொது மக்கள் கருத்து' என்னும் வலுவான அரணுள் இடம் பெற்றதன் விளைவுகளே."[1]

எத்தனை எத்தனை வழிகள்!

'பொது மக்கள் கருத்து' வெளிப்படும் வாயில்கள் பலவாகும். அவற்றை ஒழுங்கமைதி உடையவை (Organized), ஒழுங்கமைதி அற்றவை (Un Organized) என்னும் இரு பிரிவுகளில் வகைப்படுத்தலாம்.

ஒழுங்கமைதியுடையவைகளை வெளிப்படுத்தும் வாயில்களை 'ஆக்க அமைவு சார்ந்தவை' (Constitutional), 'ஆக்க அமைவு சாராதவை' (Unconstitutional) என்று இருவகைப் படுத்தலாம்.

ஒழுங்கமைதியுடைய வெளிப்பாட்டு வாயில், சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட முறைகளுக்குரியதாகும்.

---

1 W. Phillips Davison, The American Review, January 1961, p. 7.

ஆனால் 'பொது மக்கள் கருத்து' பெரும்பாலும் இந்த ஒழுங்குமுறைக்குட்பட்டு வெளிப்படுவதில்லை. பல வேளைகளில் எண்ணங்கள் பரவலாக அலசப்படும்போது, எந்த வரம்பு முறைகளையும் பற்றி எண்ணாமல், சூழ்நிலையையும் எண்ணங்களின் வேகத்தையும் பொறுத்து உடனடியாக கருத்து வெளிப்பாடு நேர்வதுமுண்டு. அது ஆக்க அமைவு சாராததாக இருந்தாலும் அதனைப் புறக்கணிப்பதில்லை.

இவை பொதுமக்கள் கருத்து வெளிப்பாடு பற்றிய விதிமுறைகள் தானே தவிர, நடைமுறையில் இவற்றைப் பின்பற்றுவது கடினம்தான்.

தனிப்பட்ட ஒருவர் அதிகாரிகளைக் கண்டு குறைகளை வெளிப்படுத்துதல், பொதுக்கூட்டங்கள், சங்கங்கள், ஊர்வலங்கள், இதழ்கள், நூல்கள், அறிக்கைகள், விண்ணப்பங்கள், சட்ட மன்றங்கள், பஞ்சாயத்து அமைப்புகள், தொழிற் சங்கங்கள் ஆகிய இவை யாவும் பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துதற்குரிய 'ஆக்க அமைவு சார்ந்த' வாயில்களாகும்.

அரசியல் காரணமாகச் செய்யப்படும் கொலைகள், ரகசியச் செய்திகளை அனுப்புதல், வதந்திகளைப் பரப்புதல், அவதூறு செய்திகளை வெளியிடுதல், உண்ணாவிரதம் என்பன பொது மக்கள் கருத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் 'ஆக்க அமைவு சாராத' வாயில்களாகும். இவற்றால் பொது மக்களிடையே வன்முறைச் செயல்கள் தோன்றவும் வாய்ப்புண்டு.

பொதுக் கூட்டங்கள்

பொதுக் கூட்டங்கள், சங்கங்கள் போன்று வலுவான அல்லது உறுதியான நன்மையை விளைவிப்பவை என்று சொல்வதற்கில்லை. திரண்டிருக்கும் மக்கள் மனநிலைக்குச் சற்றும் மதிப்பளிக்காமல் தங்கள் பெருமைகளையே பட்டியலிட்டுக் காட்டிவிடும் சிலரும், தாமதமாக வந்து சுருக்கமாகப்

பேசி விடைபெறும் சிலரும், நீண்ட விரிவுரையை முன்னுரை யாக்கிவிட்டு, தேவையானதைப் பேச நேரமில்லாமல் ,எஞ்சியதைப் பின்னர் சொல்வார்' என்று சொல்லுவோரும், சுவரொட்டி விளம்பரம் போதும் என்ற நிறைவோடு கூட்டத் திற்கு வராமலேயே இருக்கும் பலரும் மக்கள் கருத்தை வெளிப் படுத்தியவர்களாகிவிட முடியுமா? வேண்டுமானால் சில தீர் மானங்களின் மூலம் மக்கள் கருத்தை வெளிப்படுத்திவிடலாம்.

ஊர்வலங்கள்

ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டப் போக்குக்குச் சரியானவை யாகுமே தவிர, 'பலம்' காட்ட உதவுமே தவிர, பெரும்பயன் தந்துவிட முடியும் என்று கூறுவதற்கில்லை. ஒரு சில பிரிவினரின் தலைவர்கள் தங்களுக்கு விளம்பரம் வேண்டும் என்று எண்ணும்போது, நடத்தப்படும் ஊர்வலங்களில் அவர் நினைப்பது நடக்குமே யொழிய, மக்கள் கருத்துக்கு அதனால் போதிய ஆக்கம் கிடைத்துவிட முடியும் என்று கூறுவதற் கில்லை.

இதழ்கள்

இதழ்களின் நிலை இவற்றினின்றும் வேறுபட்டதாகின்றது. எந்தப் பிரிவினரைச் சார்ந்த இதழானாலும், அந்தப் பிரிவினர்க் காக உழைக்க வேண்டுவது அதன் அவசியமாகின்றது. அந்தப் பிரிவினரின் சார்பாக வாதாட வேண்டுவது அதன் கடமையாகி விடுகின்றது. குறிப்பிட்ட அவர்கள் மட்டுமல்லாமல் பலரும் படிப்பது இதழ் என்பதால், குறிப்பிட்ட இதழின் கருத்து பலராலும் உணர முடிகின்றது. எனவே ஒரு சாராரின் குறைகள், தேவைகள் எல்லோர்க்கும் தெரிகின்றது. நியாயங்கள் பற்றிய பேச்சுக்கள் தோன்றுகின்றன. தேவையேற்பட்டால் பிற இதழ்களும் துணை சேர்கின்றன.

பொதுமக்கள் கருத்தினை வெளிப்படுத்துவதில் இதழ்கள் ஆற்றல் மிக்க வாயில்கள் என்பதால், அதிகாரிகளும்

ஆளுவோரும் அதுபற்றி எண்ணுவர். அப்போது நன்மைகள் விளையக் காணமுடிகின்றது.

பொதுமக்கள் கருத்துக்கு மாறாக நடைபோடும் இதழ்கள் சுருங்கிய கால அளவே வாழ முடியும் என்ற உண்மையைக் காலம் நமக்கு உணர்த்துகின்றது. உரிமைப் போராட்டத்தின் போது, சுய ஆட்சி உணர்வைப் பரப்பி, நாட்டு மக்களைக் கவர்ந்த இதழ் 'நியூ இந்தியா' (1914) என்பது. வசந்த அம்மையார் என்று திரு. வி. கலியாண சுந்தரனாரால் போற்றப் பட்ட டாக்டர் அன்னிபெஸண்ட் அவ்விதழின் ஆசிரியர். மக்களின் பேராதரவைப் பெற்ற இதழாக 'நியூ இந்தியா' விளங்கியது. ஆனால் மக்கள் உள்ளங்களைப் பெருமளவில் கவர்ந்திருந்த காங்கிரஸ் பேரியக்கத்தின் கொள்கைகளை 'நியூ இந்தியா' சாடிய போது - அவற்றுக்கு முரண்பட்ட கருத்து களைத் தெரிவித்தபோது, படிப்படியான வீழ்ச்சியை அவ்விதழ் பெற்று அழிந்தது.

எனவே, பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்தும் வாயில்கள் பலவற்றுள் ஒன்று ஆனதும், சிறந்தது ஆனதுமான இதழியல், இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சிக் காலத்தில் (1757 - 1858) தோன்றி வளர்ந்த வரலாற்றை இனி, அறிவோம்.

2

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் வெளி வந்த இதழ்கள்

இந்திய இதழியலின் இருநூறாவ தாண்டு இது. இந்த இருநூறாண்டு களில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்திற்குரிய ஆண்டுகள் எழுபத் தொன்பது.

1780 ஆம் ஆண்டு முதல் இந்தியப் பொங்கெழுச்சி நிகழ்ச்சிக்குப் பின்னர் பேரரசி விக்டோரியா இந்தியாவின் ஆட்சியை ஏற்ற 1858 ஆம் ஆண்டு வரை வெளிவந்த இதழ்களின் பட்டியல், அவை வெளிவந்த ஆண்டு, இதழின் பெயர், மொழி, இதழாசிரியர், இதழின் நிலைமை, ஊர் என்னும் தலைப்புகளில் நிரல்பட அடுத்துவரும் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

இதழ்கள் பற்றிய எல்லா விவரங் களையும் அறிய முயன்றும் முழுமைபெற முடியவில்லை. எனவே, விவரம் கிடைக் காத அப்பகுதிகள் வெற்றிடங்களாகவே விடப்பட்டுள்ளன.

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
1	1780	ஹிக்கீஸ் பெங்கால் கெசட் அல்லது கல்கத்தா ஜெனரல் அட்வர்டைசர்	ஆங்கிலம்
2	,,	இந்தியா கெசட்	,,
3	1784	கல்கத்தா கெசட்	,,
4	1785	ஓரியண்டல் மேகஸின் அல்லது கல்கத்தா அம்யூஸ்மென்ட்	,,
5	,,	பெங்கால் ஜர்னல்	,,
6	,,	மெட்ராஸ் கூரியர்	,,
7	1786	கல்கத்தா கிரானிக்கள்	,,
8	1789	பாம்பே ஹெரால்ட்	,,
9	1790	பாம்பே கூரியர்	,,
10	1791	பாம்பே கெசட்	,,
11	,,	இண்டியன் வோர்ல்டு	,,
12	1793	ஹர்க்காரு	,,
13	1794	ஏஷியாட்டிக் மிர்ரர்	,,
14	1795	மெட்ராஸ் கெசட்	,,

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி	வாரம்	கல்கத்தா
பி. மெஸ்ஸின்க், பீட்டர் ரீட்	,,	,,
ஹார்லி	,,	,,
	திங்கள்	,,
தாமஸ் ஜோன்ஸ் வில்லியம் டுயன் (1791 முதல்)	வாரம்	,,
ரிச்சர்ட் ஜான்சன் ஹியூக் பாய்ட் (1789) ஜேம்ஸ் ஸ்டுவர்ட் ஹால்	,,	சென்னை
	,,	கல்கத்தா
	,,	பம்பாய்
லூக் ஆஷ்பர்னர்	,,	,,
	,,	,,
வில்லியம் டுயன்		கல்கத்தா
ஹியூக் பாய்ட்	வாரம்	சென்னை
சார்லஸ் கே. ப்ரூஸ் ரெவரண்ட் சாமுவேல் ப்ரைஸ் (1814) ஜேம்ஸ் ரால்ஃப் (1815)	,,	கல்கத்தா
ஆர். வில்லியம்ஸ்	,,	சென்னை

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
15	1795	இண்டியன் ஹெரால்ட்	ஆங்கிலம்
16	,,	கவர்ன்மென்ட் கெசட்	,,
17	,,	இண்டியன் அப்பெல்லோ	,,
18	1796	டெலிகிராப்	,,
19	1798	மார்னிங் போஸ்ட்	,,
20	,,	ஓரியண்டல் ஸ்டார்	,,
21	,,	இந்தியா கெசட்	,,
22	,,	பெங்கால் ஹர்க்காரு	,,
23	1799	ரிலேட்டர்	,,
24	,,	கல்கத்தா கூரியர்	,,
25	1816	பெங்கால் கெசட்	,,
26	1818	கார்டியன்	,,
27	,,	கல்கத்தா ஜர்னல்	,,
28	,,	திக் தர்சன்	வங்காளி
29	,,	சமாச்சார் தர்பன்	,,

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
ஹம்ப்ரீஸ்	வாரம்	சென்னை
ஜான் கோல்டின் ஹாம்	,,	,,
		கல்கத்தா
ஹால்ட் மெக்கன்லி		கல்கத்தா
ஆர்ச் பால்ட் தாம்ஸன் பால் பெர்ரீஸ், மார்ஷி கிரீன்வே, ஹீட்லி (1818)		,,
ரிச்சர்ட் ப்ளெம்மிங்		,,
வில்லியம் மாரிஸ், வில்லியம் ஃபார்லி ஜே. டி. வில்லியம்ஸ்		,,
டாக்டர் சார்லஸ் மெக்ளீன்		,,
		,,
தாமஸ் ஹாலிங்பரி, ராபர்ட் கீலன்		,,
கங்காதர் பட்டாசார்யா, ஹரிசந்திர ராய்		,,
ஜேம்ஸ் மெக்கன்ஸி, ஜான் பர்ட்டன்	வாரம்	,,
ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம், ஜான் பிரான்ஸிஸ் சேண்டிஸ் சேன்ட் ஃபோர்ட் ஆர்னாட் ஜேம்ஸ் சதர்லண்ட் (1823) டாக்டர் மஸ்டன் (1825)	வாரம் இருமுறை	,,
டாக்டர் மார்ஷ்மன், வார்ட்	திங்கள்	,,
டாக்டர் ஜே. சி. மார்ஷ்மன்	வாரம்	,,

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
30	1818	ஃப்ரண்ட் ஆஃப் இண்டியா	ஆங்கிலம்
31	1820	,,	,,
32	1821	ஜான் புல் இன் தி ஈஸ்ட்	ஆங்கிலம்
33	,,	சம்பாத் கௌமதி	வங்காளி
34	,,	கல்கத்தா ஜர்னல்	ஆங்கிலம்
35	,,	பிராமணிகல் மேகஸின் அல்லது பிராமண் சேவாதி	,,
36	1822	சமாச்சார் சந்திரிகா	வங்காளி
37	,,	மீரட் அல் அக்பர்	பெர்ஷியன்
38	,,	மும்பாய்னா சமாச்சார்	குஜராத்தி
39	,,	ஜாம் - இ - ஜான் நியூமா	பெர்சியன் & இந்துஸ்தானி
40	1823	சங்பாத் கௌமுதி	,,
41	,,	ஸூமா - ஸூல் - அக்பர்	பெர்சியன் & இந்துஸ்தானி
42	,,	சம்வாத் பூர்ண சந்த்ரோதயா	வங்காளி
43	,,	கியானான் ஷான்	,,

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
டாக்டர் ஜே. சி. மார்ஷ்மன்	திங்கள்	கல்கத்தா
,,	காலாண்டு	,,
கிழக்கிந்தியக் கம்பெனி ஊழியர் சிலர்		,,
பாபு தாரா சந்த் தத்தா, பாபு பவானி சரண் பண்டோபாத்யாயா	வாரம்	,,
ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம்	நாளிதழ்	,,
ராஜாராம் மோகன் ராய்		கல்கத்தா
பவானி சரண் பானர்ஜி	வாரம்	,,
ராஜாராம் மோகன் ராய்	,,	,,
பர்தூன் ஜி முர்ஸ்பார்ன்	வாரம் நாளிதழ்	பம்பாய்
முன் ஷி சூதா சூக்	வாரம்	கல்கத்தா
கோவிந்த் சந்தர் கௌர், ஆனந்த கோபால் முகர்ஜி	,,	,,
மோத்தூர் மோகன் மிட்டர், முனிராம் தாகூர்	,,	,,
	மாதம்	,,
ஆர். எம். மார்ட்டின், நில் ரதன் டீ	வாரம்	,,

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
44	1823	ஷாம் ஸூல் அக்பர்	பெர்சியன் & இந்துஸ்தானி
45	1824	பாம்பே கெசட்	ஆங்கிலம்
46	1824	வீக்லி கிளீனர்	,,
47	,,	கொலம்பியன் பிரஸ் கெசட் (கொலம்பியன் பிரஸ் கெசட் அண்ட் கமர்ஷியல் அட்வர்டைசர்)	,,
48	,,	ஸ்காட்ஸ் மேன் இன் தி ஈஸ்ட்	,,
49	,,	பெங்கால் வீக்லி மெஸன்ஜர்	,,
50	1825	குவார்ட்டர்லி ஓரியண்டல் மாக்ஸின், ரெவ்யூ அண்ட் ரிஜிஸ்டர்	,,
51	,,	பெங்கால் கிரானிக்கள்	,,
52	,,	ஜான்புல்	,,
53	1826	ஊதந்த் மார்டண்ட்	இந்தி
54	,,	செராம்பூர் அக்பர்	பெர்சியன்
55	1827	கல்கத்தா கிரானிக்கள்	ஆங்கிலம்
56	,,	இண்டியா மாகஸின் அல்லது மிஸ்ஸலேனி ஆஃப் ஜெனரல் லிட்டரேச்சர்	,,
57	,,	ஐரிஸ்	,,

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
மணிராம் தாகூர்	வாரம்	கல்கத்தா
சி. ஜே. ஃபேர்	வாரம்	,,
பேட்ரிக் கிரிக்டன்		,,
மான்டி டி ரொசாரியோ	வாரம் இருமுறை	கல்கத்தா
டாக்டர் மஸ்டன்		,,
	வாரம்	,,
டாக்டர் ப்ரைஸ் ஏ.ஸி. மைக்கேல் ஜான்	காலாண்டு	,,
ஜேம்ஸ் சதர்லண்ட், சாமுவேல் ஸ்மித்		,,
ரெவரெண்ட் சாமுவேல் ப்ரைஸ் ஏ. ஸி. மைக்கேல் ஜான் 1830 முதல் ஜே. எச். ஸ்டாக்குலர்	நாளிதழ்	,,
ஜூகல் கிஷோர் ஷூகுல்	வாரம்	,,
கிறிஸ்தவ சமயத்தவர்	,,	,,
வில்லியம் ஆடம்		,,
வில்லியர்ஸ் ஹால் கிராஃப்ட்	திங்கள்	,,
ஜே. எச். ஸ்டாக்குலர்		,,

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
58	1828	கல்கத்தா கெசட் அண்ட் கமர்ஷியல் அட்வர்டைஸர்	ஆங்கிலம்
59	,,	காஸ்பெல் இன்வெஸ்டிகேட்டர்	,,
60	,,	கெலிடாஸ்கோப்	,,
61		கல்கத்தா டொமாஸ்டிக் ரீட்டெயில் பிரைஸ் கரண்ட் அண்ட் மிஸ்ஸலேனியஸ் ரிஜிஸ்டர்	,,
62	,,	ஈப்தால் இ கபிஷ்	குஜராத்தி
63	,,	அக்பர் இ கபீஷ்	,,
64	,,	கிளீனிங்ஸ் இன் சயன்ஸ்	ஆங்கிலம்
65	1830	தி மிர்ரர் ஆஃப் தி பிரஸ் அல்லது தி பொலிட்டிக்கல் அண்ட் லிட்டரரி ரிஜிஸ்டர்	,,
66	,,	பெங்கால் ஹெரால்ட் அல்லது வீக்லி இன்டலிஜென்ஸர்	,,
67	,,	பங்க தூத்	வங்காளி & பெர்சியன்
68	,,	சாது ரஞ்சன்	
69	,,	கியான் தர்பன்	
70	,,	கியான் சஞ்சாரினி	
71	,,	ராங்பூர் பர்த்தபாஹ°	
72	,,	ராஷ்முட்கார்	

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
வில்லியர்ஸ் ஹால் கிராஃபட்	வாரம்	கல்கத்தா
இமானுவேல் ரோபம்		
எச். எல். வி. டி. ரொஸாரியோ	திங்கள்	
மாண்டி டி. ரொஸாரியோ		
காட்மிஸ் பிரிவினர்		பம்பாய்
ஷாஹன் ஷாஹிஸ் பிரிவினர்		,,
	திங்கள்	கல்கத்தா
மார்க்கஸ் ராக்ஃபோர்ட்		
ராபர்ட் மாண்ட் கோமரி மார்ட்டின், நீல் ரத்தன் ஹால்தார்	வாரம்	,,
துவாரகநாத் தாகூர். பிரசன்னகுமார் தாகூர்	,,	,,
	வாரம்	
	,,	
	,,	
	,,	
	,,	

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
73	,,	நித்ய தர்ம நரஞ்சிகா	
74	,,	தர்பன் தாமன் மஹாநாபன்	
75	1830	தத்வ போதினி	வங்காளி பெர்சியன்
76	,,	சந்திரிகா	,,
77	,,	ராஸ்ராஜ்	
78	,,	சமாச்சார் சுப ராஜேந்த்ரா	வங்காளி பெர்சியன்
79	,,	்ரம்பாய் வர்த்தமான்	குஜராத்தி
80	,,	பிரபாகர்	
81	,,	சந்த்ரோதயா	
82	,,	மகாஜன் தர்பன்	
83	,,	பாஸ்கர்	வங்காளி
84	,,	ஷக்யான் சேவாதி	,,
85	1831	ஆயினே-இ-சிக்கந்தர்	பெர்சியன்
86	,,	சம்பாத் பிரபாகர்	வங்காளி
87	,,	சம்பாத் சுதாகர்	,,
88	,,	சம்பாத் ரத்னாகர்	,,
89	,,	நித்ய பிரகாஷ்	,,

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
	திங்கள் இருமுறை	
	,,	
	திங்கள்	கல்கத்தா
	வாரம் இருமுறை	,,
	,,	
ஷேக் அலி முல்லா	வாரம்	
நவ்ரோஜி தோராப்ஜி சந்த்ரு	வாரம்	பம்பாய்
	நாளிதழ்	கல்கத்தா
	,,	,,
	,,	,,
	வாரம் மும்முறை	,,
ஸ்ரீநாத்ராய்	திங்கள்	,,
முன்ஷி வாஜூதீன்		
ஈஸ்வர் சந்தர் குப்தா	வாரம்	கல்கத்தா
பிரேம் சந்த் ராய்	வாரம்	,,
மதுசூதனதாஸ்	,,	,,
துலூப் சந்தர் சட்டர்ஜி	நாளிதழ்	,,

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
90	1831	சம்பாத் முயோகா	,,
91	,,	ரிஃபார்மர்	ஆங்கிலம்
92	,,	தி ஜுவைனல் எமலேட்டர்	,,
93	,,	தி என்கொய்ரர்	,,
94	,,	தி ஹெஸ்பரஸ்	ஆங்கிலம்
95	,,	மும்பாய்னா ஹல்காரு ஆனே வர்த்தமான்	,,
96	,,	இண்டியன் ரிஜிஸ்டர்	ஆங்கிலம்
97	,,	ஜாம்-இ-ஜாம்ஷெட் (1853-இல் நாளிதழ்)	குஜராத்தி
98	,,	சங்பாத்சர் சாங்கோ	வங்காளி ஆங்கிலம்
99	,,	சங்பாத் சௌதாமிணி	வங்காளி
100	,,	தமிழ் மாகஸின்	தமிழ்
101	1832	சங்பாத் ரத்னபாலி	வங்காளி
102	,,	கல்கத்தா கூரியர்	ஆங்கிலம்
103	,,	பெங்கால் ஜர்னல்	,,
104	,,	பாம்பே தர்பன்	மராத்தி ஆங்கிலம்
105	,,	மும்பாய்னா சாபுக்	
106	1833	கல்கத்தா கெசட்	ஆங்கிலம்
107	,,	ராஜவிருத்தி போதினி	தமிழ்

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
பூபன் மோகன் முகர்ஜி	வாரம்	கல்கத்தா
ஜே. பி. நேமி	,,	,,
சார்லஸ் ஹென்றி டிசென்ட்	,,	,,
கிருஷ்ண மோகன் பானர்ஜி	வாரம்	,,
எ. மொரீரோ		கல்கத்தா
நவ்ரோஜி தோராப்ஜி சந்த்ரு	வாரம் இருமுறை	பம்பாய்
டபிள்யூ. கிர்க் பாட்ரிக்	திங்கள்	கல்கத்தா
பெஸ்டோன்ஜி மாணிக்ஜி மோதிவாலா	வாரம்	பம்பாய்
பானே மதாப் டே	,,	கல்கத்தா
ஈஸ்வர் சந்தர் தத்	,,	,,
கிறிஸ்தவ சமயத்தவர்	திங்கள்	சென்னை
மோகஸ் சந்தர்பால்	வாரம்	கல்கத்தா
	வாரம் இருமுறை	,,
ஆண்ட்ரு டிஸௌஸா		,,
பால்சாஸ்திரி ஜம்பேகார்	திங்கள்	பம்பாய்
	வாரம் இருமுறை	,,
ஜி. ஏ. பிரின்ஸப்		கல்கத்தா
		சென்னை

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
108	1833	தி பிலந்த்ட்ராபிஸ்ட்	ஆங்கிலம்
109	,,	ஜுப்தத்-அல்-அக்பர்	பெர்சியன்
110	,,	கியான் ஆனேஷம்	வங்காளி ஆங்கிலம்
111	,,	மாஹ்-இ-ஆலம் அஃப்ரோஜ	பெர்சியன்
112	,,	மொபஸல்-அக்பர்	உருது
113	,,	இங்கிலீஷ் மேன்	ஆங்கிலம்
114	,,	அஃப்ரோஜ்	பெர்சியன்
115	1835	ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா	ஆங்கிலம்
116	,,	சத்திய தூதன்	தெலுங்கு
117	,,	சுல்தான்-அல்-அக்பர்	பெர்சியன்
118	1836	உருது அக்பர்	உருது
119	,,	மெட்ராஸ் ஸ்பெக்டேட்டர்	ஆங்கிலம்
120	1837	சையத்-அல்-அக்பர்	உருது
121	1838	டெல்ஹி அக்பர்	,,
122	,,	பாம்பே டைம்ஸ் அண்ட் ஜர்னல் ஆஃப் காமர்ஸ்	ஆங்கிலம்
123	1839	சங்பாத் ராசராஜ்	வங்காளி
124	,,	சங்பாத் பாஸ்கர்	,,
125	1840	சுவிசேஷ பிரபவ விளக்கம்	தமிழ்

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
ஜி. எச். ஹாக்		கல்கத்தா
முன்ஷி வாஜித் அலிகான்	திங்கள்	வடமேற்கு மாநிலம்
ரசி கிருஷ்ண முல்லிக் மதுாப் சந்தர் முல்லிக்	,,	கல்கத்தா
வஹாஜுடீன் முஹம்மது		,,
பீட்டர்ஸன் ஸாண்டர்ஸ்		,,
ஜெ. எச். ஸ்டாக்குலர்		,,
ராஸா அலி		
டாக்டர் மார்ஷமன்	வாரம்	கல்கத்தா
பெல்லாரி கிறிஸ்தவ சமயத்தவர்		சென்னை
முன்ஷி வாஜுஉதீன்	வாரம்	கல்கத்தா
மௌல்வி முகம்மது பாகர்	,,	டில்லி
டி. ஆக்டர் லோனி	வாரம் இருமுறை	சென்னை
சையத் முகமத்கான்		டில்லி
		,,
ஜே. இ. பிரீனன்	வாரம் இருமுறை	கல்கத்தா
		கல்கத்தா
		,,
கிறிஸ்தவ சமயத்தவர்	திங்கள்	நாகர் கோவில்

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
126	1840	பால தீபிகை	தமிழ்
127	,,	பெங்கால் கவர்ன்மெண்ட் கெசட்	ஆங்கிலம்
128	,,	விர்த்தாந்தினி	தெலுங்கு
129	,,	விஞ்ஞான நிக்ஷேபம்	மலையாளம்
130	,,	மும்பாய் அக்பர்	மராத்தி
131	,,	திக் தர்சன்	மராத்தி
132	,,	யுனைடெட் சர்வீஸ் கெசட் அண்ட் லிட்டரரி கிரானிக்கள்	மராத்தி
133	,,	உபதேஷ் சந்திரிகா	,,
134	,,	தூர்பின் (1856 வரை)	,,
135	1841	பிரபாகர்	,,
136	,,	தூமகேது	,,
137	,,	டாஹ்ற-இ-முனிர்	பெர்சியன்
138	,,	சிராஜ்-அல்-அக்பர்	,,
139	,,	ஜன சினேகன்	தமிழ்
140	1842	தியானோதயா	மராத்தி
141	,,	தின்யான் சிந்து	,,
142	,,	மும்பாய்னா காசுட் (1843 வரை)	
143	,,	தரங்கிணி	தெலுங்கு
144	1843	தத்துவ போதினி பத்ரிகா	வங்காளி

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
கிறிஸ்தவ சமயத்தவர்	காலாண்டு	நாகர் கோவில்
ஜே. ஸி. மார்ஷ்மன்		கல்கத்தா
கிறிஸ்தவ சமயத்தவர்	வாரம்	சென்னை
,,	வாரம்	கோட்டயம்
சூர்யாஜி கிருஷ்ணாஜி		பம்பாய்
பால்சாஸ்திரி ஜம்பேகர்	திங்கள்	,,
,,	வாரம்	பம்பாய்
,,	திங்கள்	பம்பாய்
கோவிந்த விட்டல் குந்தே என்னும் பாஹு மகாஜன்	வாரம்	,,
,,	,,	,,
	,,	,,
அரசவை இதழ்		டில்லி
கிறிஸ்தவ சமயத்தவர்	திங்கள் இருமுறை	சென்னை
ரெவரண்ட் ஹென்றி பாலண்டைன்		அகமத்நகர்
வீரேஷ்வர் சாதுசத் சாத்ரே		பம்பாய்
கிறிஸ்தவ சமயத்தவர்		சென்னை
தேவேந்திரநாத் தாகூர்	திங்கள்	கல்கத்தா

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
145	1844	மஹர் அல் ஹக் (ஷியா பிரிவு)	
146	,,	ஃபாவைத்-உஸ்-ஷாயுக்யூன்	உருது
147	,,	அசன் அல் அக்பர்	பெர்சியன்
148	,,	கிரெசன்ட்	ஆங்கிலம்
149	,,	சமாச்சார் தர்பன்	,,
150	,,	உபதேஷ் சந்திரிகா	மராத்தி
151	,,	டெல்லி உர்தூ அக்பர்	உருது
152	,,	மஹீர் அல் ஹக்	உருது
153	,,	டோஃபாட் அல் ஹதயாக்	,,
154	,,	சாதிக்-அல்-அக்பர்	பெர்சியன்
155	1845	சித்தரஞ்சன் தர்பன் (1846 வரை)	,,
156	,,	கோஹினூர்	குர்முகி மொழி
157	1846	அருணோதயா	ஆங்கிலம்
158	,,	சுத்தர் அல் அக்பர் பெயர் மாற்றம் அக்பர் அல் ஹகயாக்	உருது
159	1847	திராவிட தீபிகை	தமிழ்
160	,,	ஓம் தத் அல் அக்பர்	
161	1847-48	ஷேக் அல் அக்பர்	
162	,,	மோஹிப்-இ-ஹிந்த்	உருது
163	,,	ஃபேவைத் அல் நஸ்ரீன்	,,
164	,,	குரான் அல் சாதைன்	,,
165	1848	பெனாரஸ் கெசட்	,,

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
ஷேக் இம்தாத் ஹுசேன்	வாரம்	டில்லி
பிர்போ தயாள் (அரசிதழ்)		டில்லி
காசலு லட்சுமி நரசு செட்டி	வாரம்	சென்னை
பண்டிட் மொராபட் தந்தேகர்	திங்கள்	பம்பாய்
மௌலவி முகமது பாகுர், மோதிலால்		
		டில்லி
		டில்லி
முன்ஷி ஹர்சுக் ராய்		பஞ்சாப்
அமெரிக்க கிறிஸ்தவ பாதிரியார்கள்		சிப்சாகர்
ஃபாலன்	வாரம்	ஆக்ரா
(ஆக்ரா கல்லூரி வெளியீடு)	இருமுறை	
கிறிஸ்தவ சமயத்தவர்	திங்கள்	சென்னை
மௌலவி அப்துல் ரஹ்மான்		
டில்லி கல்லூரி		டில்லி
,,		,,
தர்ம் நாராயண்		ஆக்ரா
அரசிதழ்		காசி

எண்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
166	1848	பெனராஸ் அக்பர்	உருது
167	,,	பெனாரஸ் சுதாகர் அக்பர்	,,
168	,,	சிம்லா அக்பர்	,,
169	1849	வர்த்தமான்	குஜராத்தி
170	,,	நற்போதகம்	தமிழ்
171	,,	ஜியா அல் அக்பர்	
172	,,	தின்யான் பிரகாஷ்	மராத்தி
173	,,	குதாப் அல் அக்பர்	
174	,,	சிறு பிள்ளையின் நேசத்தோழன்	தமிழ்
175	1849-1850	அக்பர் உன் நூவா	
176	,,	மிபாத் அல் அக்பர்	
177	,,	பாக் ஓ பகார்	
178	,,	பனாரசி சந்திரோதயா	
179	,,	மாள்வா அக்பர்	
180	,,	கோஹினூர்	
131	,,	துர்யா - சி - நூர்	
182	,,	சயூரீன் இ ஹிந்த்	
183	,,	சிம்லா அக்பர்	
184	,,	புத்தி பிரகாஷ்	குஜராத்தி
185	,,	சூரத் சமாச்சார்	,,
186	,,	சா புக் (1851 வரை)	,,
187	,,	சித்தரஞ்சன் தர்பன்	,,
188	1851	பாம்பே கார்டியன்	

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
பாபு ரகுநாத்		காசி
பண்டிட் ரத்னேஸ்வர் திவாரி		,,
ஷேக் அப்துல்லா	வாரம்	சிம்லா
அமரேஷ்வர் கபீர்தாஸ்		அகமதா
கிறிஸ்தவ சமயத்தவர்	திங்கள்	திருநெல்
ஷேக் முகமது ஜியாவுடீன்		
கிருஷ்ணாஜி ட்ரிம்பக் ரானடே	வாரம்	புனா
		ஆக்ரா
கிறிஸ்தவ சமயத்தவர்		பாளையங் கோட்டை
		ஆக்ரா
		மீரட்
		காசி
		,,
		இந்தூர்
முன்ஷி ஹர்சூக் ராய்		லாகூர்
		,,
		காசி
		சிம்லா
வித்தியா வர்த்தக் மண்டலி	திங்கள்	
துர்காராம் மன்சாராம்	வாரம் இருமுறை	சூரத்
நவ்ரோஸ்ஜி தோரப்ஜி		பம்பாய்
பெரம்ஜி ஜாம்ஷெட்ஜி காந்தி		,,
		பம்பாய்

என்	ஆண்டு	இதழின் பெயர்	மொழி
189	1851	ராஷ்ட் காஃப்டர்	குஜராத்தி
190	,,	டெல்ஹி ஸ்கெட்ச் புக்	ஆங்கிலம்
191	,,	சத்ய பிரகாஷ்	குஜராத்தி
192	1852	வர்த்தமான் தீபிகா	மராத்தி
193	,,	பார்சி பஞ்ச்	
194	,,	விசார லஹரி	மராத்தி
195	,,	அக்பர் இ சோட்கார்	குஜராத்தி
196	1853	தூமகேது	மராத்தி குஜராத்தி
197	,,	ஹிண்டு பேட்ரியட்	ஆங்கிலம்
198	1854	சமாச்சார் சுதாவர்ஷன்	இந்தி
199	,,	ஆப் அகத்தியர்	குஜராத்தி
200	,,	ஷாம்ஷர் பகதூர்	,,
201	1855	தினவர்த்தமானி	தமிழ்
202	1856	ஜில்லா கெசட்	தமிழ்
203	1857	பாம்பே ஸ்டாண்டர்ட்	ஆங்கிலம்
204	1858	ஷோம் பிரகாஷ்	வங்காளி
205	,,	மிஷன் பாடசாலை பத்திரிகை	தமிழ்

ஆசிரியர்	இதழின் நிலை	ஊர்
தாதாபாய் நவ்ரோஜி	திங்கள்	பம்பாய்
கர்ஸன்தாஸ் முல்ஜி (1858, 1861-63)	இருமுறை	
குன்னியாலால், எ. டிஸௌஸா	திங்கள்	டில்லி
கேர்சன்தாஸ் முல்ஜி, கேசஸ்ரு கப்ராஜி		பம்பாய்
வி. பி. கோகலே	வாரம்	பம்பாய்
	,,	,,
கிருஷ்ண சாஸ்திரி சிப்லோன்கர்	திங்கள் இருமுறை	புனா
தாதாபாய் கவாஸ்ஜி	வாரம் மும்முறை	
கோவிந்த் விட்டல் குந்தே என்னும் பாஹுமகாஜன்	வாரம்	பம்பாய்
சிரீஸ் சந்திரகோஷ், ஹரிஷ் சந்திர முகர்ஜி		கல்கத்தா
		கல்கத்தா
நஸர்வான்ஜி தோரப்ஜி		பம்பாய்
லல்லுபாய் ராய்சந்த்		அகமதா பாத்
பெர்சிவல் பாதிரியார், சி. வை. தாமோதரம் பிள்ளை	வாரம்	சென்னை
அரசு வெளியீடு		சென்னை
ராபர்ட் நைட்		பம்பாய்
ஈசுவர சந்திர வித்தியாசாகர், துவாரிகாநாத் வித்யா பூஷன்		கல்கத்தா
கிறிஸ்தவ சமயத்தவர்	திங்கள்	சென்னை

௩

இந்தியாவின் முதல் இதழ்

3

இந்தியாவின் முதல் இதழ்

அருமையான சிறுகதை ஒன்றைச் சொல்லி "இப்படிப்பட்ட சிறுகதையைப் படித்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன, மனதிற்கு நிறைவாக இருந்தது" என்கிறார் ஒருவர்.

"எந்த இதழில்?" சுருக்கமாகக் கேட்கிறார் இன்னொருவர்.

முன்னவர் இதழின் பெயரைச் சொல்கிறார்.

"அப்படி ஒரு இதழா? நான் கேள்விப்படவே இல்லையே" என்கிறார் பின்னவர்.

"நேற்றுதான் முதல் இதழ் வந்தது" என்று முன்னவர் சொன்னதும், நாளும் என்னென்ன புதிய இதழ்கள் வெளிவருகின்றன என்பதைத் தெரிந்து

கொள்ளும் ஆர்வம் கொண்ட பின்னவர் வியப்புறுகிறார்.

அவரவர் நிலைக்கேற்ப ஏதேனும் ஒரு இதழைப் படிப்பதில் எல்லோரும் ஆர்வம் காட்டுகின்றனர். இதழ் வாங்கிய பின்னர்தான் பிற வேலைகள் என்று காத்திருந்து இதழ் வாங்குவோரும் உண்டு. பிந்தி விட்டால் இதழ் கிடைக்காமல் போகுமோ என்ற ஐய உணர்வுடன், முன் நாளே உரிய தொகையினைத் தந்து, மறவாமல் ஒரு படியை எடுத்து வைக்குமாறு விற்பனையாளரிடம் சொல்லுவோரும் உண்டு. இவ்வாறு, இதழியல் மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே இன்று ஆகிவிட்டது.

மக்களை மிக அதிகமாக ஆட்கொண்டுள்ள இந்த இதழியல் இந்தியாவில் எப்போது தோன்றியது?, ஏன் தோன்றியது?, எப்படி வளர்ந்தது? என்பன போன்றவற்றையெல்லாம் நாம் அறிய வேண்டாமா?

கிழக்கிந்தியக் கம்பெனி

இந்தியாவோடு வாணிப உறவு கொள்ள வேண்டும் என்னும் விருப்பத்தினை ஐரோப்பிய வணிகர்களுக்குச் சில கடலோடிகளின் முயற்சி வளர்த்தது. புதிய கடல்வழி கண்டு இந்தியாவை அடைய வேண்டும் என்று எண்ணிய அவர்கள் பிரிட்டிஷ் பேரரசி எலிசபெத்தின் இசைவு பெறுவது அரிதாக இருந்தது. அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த ஸ்பானியப் போர் அமைதி பெற்றாலொழிய அரசியின் இசைவினைப் பெறுவது எளிதல்ல என்றறிந்த அவர்கள், காலத்தை நோக்கியிருந்தனர். 1599 இலேயே அவர்கள் தங்கள் முயற்சிக்குத் துணை நிற்க உறுப்பினர்களைச் சேர்த்தனர்.

1600 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாளன்று பேரரசி எலிசபெத், "The Governor and Company of

Merchants of London Trading into the East Indies" என்னும் பெயரில் கம்பெனியினை அமைத்துக் கொண்டு வாணிகம் செய்ய இசைவளித்தார்.

1601 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ஆம் நாள் முதன் முறையாக ஐந்து கப்பல்கள் இந்தியாவை நோக்கி நெடும்பயணம் துவக்கின. அவை ஜுன் திங்கள் 5ஆம் நாள் சுமத்ரா தீவை அடைந்தன. அவற்றில் பயணம் செய்தவர்கள் 220 பேர். அவருள் வணிக நோக்கற்ற சிலரும் இருந்தனர். அவர்கள் வணிகர்க்குத் துணை புரிய வந்தனர்.[1]

1604, 1607, 1613 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து வாணிகம் பொருட்டுப் பலர் வந்து சேர்ந்தனர். 1613இல் பேரரசர் ஜிஹாங்கீர் அவர்களுக்கு வணிக உரிமை வழங்கினார். சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களைத் தங்களுக் குரிய வணிகக்களனாகக் கொண்டு கம்பெனியார் தங்கள் வணிகத்தைத் தொடங்கினர்.

வென்று நின்றது

இவர்களுக்கும் முன்னரே 1500-இல் கோழிக்கோட்டிலும், 1506-இல் கோவாவிலும் போர்த்துகீசியர்கள் தங்கள் வணிகக் களங்களை அமைத்துக் கொண்டனர். 1602-இல் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி என்னும் பெயரில் டச்சுக்காரர்களும், 1664-இல் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி என்னும் பெயரில் பிரெஞ்சுக்காரர்களும் இந்தியாவில் வணிகத் தொடர்பு கொள்ள வந்து சேர்ந்தனர். ஆயினும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியே 1610—1615க்குட்பட்ட ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான வியாபாரப் போட்டியில் டச்சுக்காரர்களையும், போர்த்துகீசியர்களையும் வென்றது; பின்னர் பிரெஞ்சுத்

---

1 Dr. R. Sadasivam, The Growth of Public opinion in the Madras Presidency, p. 9.

தளபதியான டியூப்ளேயின் முயற்சிகளையும் தகர்த்தது; சூரத், மசூலிப்பட்டணம், ஹூக்ளி முதலிய இடங்களைத் தங்கள் வணிகக் கோட்டைகளாக்கிக் கொண்டது. சிறு வியாபாரிகள், பாதிரிமார்கள், டாக்டர்கள் போன்ற பல பிரிவினர் கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பில் இந்தியா வரலாயினர்.

பிளாசிப் போர்

அவர்கள் தொடக்கத்தில் தங்கள் நாட்டின் பொருள்களை இந்தியாவில் விற்பனை செய்து லாபமீட்டும் நோக்குடன் தங்கள் நாட்டுச் சரக்குகளுடனும், பிற வணிகக் குழுவினரிட மிருந்து தங்களைக் காத்துக்கொள்வதற்குரிய போதிய படைகளு டனும் தங்கள் வணிகத்துக்குத் துணைபுரிய சிலருடனும் வந்து வாழ்க்கையைத் தொடங்கினர்.[1] நூற்றைம்பது ஆண்டுகட்கும் மேலாக வணிகர்களாக இருந்த அவர்கள், படிப்படியாக நாட்டு விவகாரங்களில் கருத்தினைச் செலுத்தினர். வரி செலுத்தாமல் வாணிகம் செய்த அவர்கள் மீது வங்காள நவாப் சுராஜ் உத்தௌலா சினம் கொண்டான். ஆங்கிலேயர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆயினும் சுராஜ் உத்தௌலா அவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். 1756-ஆம் ஆண்டில் கல்கத்தாவை அவர் களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டான். அப்போது கைதான ஆங்கிலேயர்களுள் பிற்காலத்தில் இந்தியாவின் தலைமை ஆளுநராக விளங்கிய வாரன் ஹேஸ்டிங்ஸூம் ஒருவர்.[2]

1757இல் ராபர்ட் கிளைவ் தலைமையிலமைந்த படை சுராஜ் உத்தௌலாவை எதிர்த்துப் போர் செய்தது. பிரெஞ்சுப் படையின் துணையிருந்தபோதும் சுராஜ் உத்தௌலா தோற்றுப் போனான். பிளாசி என்னும் இடத்தில் நடைபெற்ற போரில்

---

1 இ. எம். எஸ். நம்பூதிரிபாட், இந்திய வரலாறு ஒரு மார்க்சிய கண்ணோட்டம் — (மொபெ) பி. ஆர். பரமேஸ்வரன், பக் 106.

2 பி. ஸ்ரீ., கிளைவ் முதல் ராஜாஜி வரை, பக் 49.

பெற்ற இந்த வெற்றிதான் கிழக்கிந்தியக் கம்பெனியாரை, 'வணிகர்' என்னும் நிலையிலிருந்து 'ஆளுவோர்' என்னும் நிலைக்கு உயர்த்தியது. இந்தப் போரினால் வங்காளமும் பீகாரும் கம்பெனியார் ஆட்சிக்குள்ளாயின.

தொடர்ந்து, படிப்படியான வெற்றி பெற்று, நாடு பிடித்து ஆளவும் தொடங்கிய கம்பெனியின் போக்கைக் கண்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் செய்வதறியாது அமைதி காத்தது; வணிகக் குழு வினர் நாடு பிடிப்பதும் ஆள்வதும் முன் நடந்திராத ஒன்று ஆதலால் என்ன செய்வது என்று அறியாமல், அவ்வப்போது சில அறிவுரைகளைக் கூறுவதுடன் தன் கடமையினை நிறுத்திக் கொண்டது.

கம்பெனி ஆட்சி

1773ஆம் ஆண்டில் லார்ட் நார்த்தின் ரெகுலேடிங் ஆக்டின் மூலம்தான் இந்திய நிருவாகம் கம்பெனி ஆட்சிக்குரிய தாக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலமாக, முன்பு கல்கத்தா விலிருந்த வணிகக்குழு பல புதிய பொறுப்பாளர்களைக் கொண்டு மாற்றம் செய்யப்பட்டது. இந்த மாற்றத்தின்படி தலைமை ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவருக்குத் துணை புரிய நான்கு உறுப்பினரைக் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது. இம்முறையின் மூலம் இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக வாரன்ஹேஸ்டிங்ஸ் 1774 ஆம் ஆண்டு பொறுப்பேற்றார்.

அவ்வப்போது செய்யப்பட்ட பல சட்டங்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியைச் செம்மைப்படுத்த உதவின. கம்பெனி யின் ஆட்சி பற்றிக் கர்ஸன் பிரபு கூறியுள்ளதைக் காண்போம்.

> " The Company passed from being a narrow and selfish Commercial oligarchy

concerned only with projits and culpably indifferent as to means, into a governing organisation in which the tradesman was replaced by the Statesman."[1]

பிளாசிப் போர் வெற்றிக்குக் காரணமான ராபர்ட் கிளைவ், இந்தியாவில் பிரெஞ்சுப் பேரரசை நிலைநிறுத்தி விடுவதென்று முயன்ற டியூப்ளேவின் எண்ணங்களையும் முயற்சிகளையும் முறியடித்தான். போர்த்துகீசியர்கள்தான் முதன் முதலாக இந்தியாவுக்கு வந்தவர்களென்றாலும், ஆங்கிலேயர் முன் அவர்கள் நிற்க முடியவில்லை. உலாந்தர்கள் என்று இந்தியர் களால் அழைக்கப்பட்ட டச்சுக்காரர்கள் இந்தியாவை விட்டே செல்ல வேண்டியதாயிற்று.

இந்திய மன்னர்களிடையேயும் மக்களிடையேயும் மல்கிக் கிடந்த பல வேற்றுமை உணர்வுகளையும் பகைமை உணர்வு களையும் பயன்படுத்திக் கொண்டு, கம்பெனியார் மேலாதிக்கம் செய்யத் தொடங்கி விட்டனர். இரு நூற்றாண்டுக்கும் மேலாக நீடித்த இந்த நிலைமை 1857 இல் நடைபெற்ற இந்தியப் பெருங் கிளர்ச்சிக்குப் பின்னர் முடிவடைந்தது.

இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியாதிக்கம் வணிக வழி 1600 - இல் தொடங்கியது; ஆட்சிவழி 1757 முதல் 1858 வரை நீடித்தது. இதழியல் துறை 1780 ஆம் ஆண்டு முதல் 1858 ஆம் ஆண்டு வரை அவர்களது ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது.

1858 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளன்று, கிழக்கிந்தியக் கம்பெனி ஆதிக்கத்திலிருந்த இந்திய அரசை இங்கிலாந்து அரசு ஏற்றுக் கொண்டு விட்டதாக விக்டோரியா மகாராணியாரின் அறிவிப்பு தெரிவித்தது.

---

1 Margarita Barns, The Indian Press, p. 33.

கம்பெனி ஊழியர்

வணிகரல்லாத பிற ஊழியர்களின் பணி நிலை, பயிற்சி யாளர் என்னும் நிலையிலிருந்து படிப்படியான உயர்வினைப் பெறும் வகையில் அமைந்திருந்தது. 'பயிற்சியாளர் நிலை' முடிந்த பின் அவர் 'எழுத்தர்' என்னும் நிலை பெறுவர். பின்னர் அவர்கள் தரகு வணிகர் எனப்படுவர். அப்பொறுப்பிற் குரிய காலம் வரைப் பணியாற்றிய பின் அவர்கள் வணிகர் எனப்படுவர். அந்நிலைக்குரிய காலம் கடந்த பின்னர், மேல் நிலை வணிகர் என்னும் நிலை அவர்களுக்கு உரியதாகும். இதுவே ஊழியர்களின் உயர்நிலையாகும்.

இப்படி படிப்படியான நிலைகளில் பணிபுரியும் காலமும், பெறும் ஊதியமும்கூட கம்பெனி இயக்குநர் குழுவினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனைக் காண்போம் :

பயிற்சியாளர் ஐந்தாண்டுகள் பணிபுரிந்தால் கடைசி இரண்டாண்டுகளுக்கு அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 10 பவுன்கள் வீதம் தரப்படும். அதற்குப் பின்னர் ஓராண்டுக் காலம் அவர்கள் எழுத்தராகப் பணிபுரிய வேண்டும். அக் காலத்தில் அவர்களுக்கு எழுத்துக்குரிய ஊதியமாக ஆண் டொன்றுக்கு 10 பவுன்கள் வழங்கப்படும். பத்தாண்டுகள் கழிந்த பின்னர் அவர்கள் தரகு வணிகர் என்னும் நிலை பெறுவர். அப்போது அவர்களுக்கு ஊதியம் ஆண்டொன்றுக்கு 15 பவுன்களாகும். இந்நிலைக்குப் பின்னரே அவர்கள் சொந்தமாக வணிகம் செய்யும் வாய்ப்பினைப் பெறுவர்.[1]

பிறந்தது எப்படியோ?

இதழியல்கலை ஐரோப்பியர் வரவால் கிடைத்த நன்மை களுள் ஒன்றாகும். தொடக்க காலத்தில் ஆட்சியாளர்கள்

---

1 J. Natarajan, History of Indian Journalism, p. 3.

இதழ்களை ஆரம்பிக்கவில்லை, இதழ் நடத்தியவர்களுக்கு உரிமையளித்து ஊக்குவிக்கவுமில்லை. இந்தத் துறையில் ஆர்வமும் பற்றும் உடைய தனிப்பட்ட சிலராலேயே இக்கலை வளர்ந்தது. புதியது செய்ய வேண்டும் என்னும் ஆர்வமே இக் கலையின் பிறப்பிற்குக் காரணமாயமைந்தது என்னலாம்.

தொடக்க கால இதழ்கள் பல, கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றியவர்களாலேயே தொடங்கப்பட்டன. கம்பெனி நிருவாகத்தினர், அதிகாரிகள் ஆகியோரின் உல்லாச வாழ்க்கையினையும், அவர்களின் ஒரு சார்புடைய போக்கினையும், தங்களைச் சார்ந்து நில்லாதார் மீது அவர்கள் விடுத்த கொடுமைக் கணைகளையும் வெறுத்த அவர்கள், தங்கள் மனக் குமுறலை வெளிப்படுத்திட இதழ்களை வாய்ப்பாகக் கொண்டனர். இதழாசிரியர்களின் இந்தப் போக்கு, கடுமையான சட்டங்கள் பிறக்க வழி வகுத்தது; அரசாங்கமே இதழ் நடத்தும் ஆர்வத்தையும் அளித்தது.

வில்லியம் போல்ட்ஸ்

1766இல் வில்லியம் போல்ட்ஸ் என்பவர் கல்கத்தாவிலிருந்து இதழொன்றை வெளியிட வேண்டும் என்று விரும்பி முயன்றார். 'இத்துறையில் இவரது முயற்சியே முதலாவதாகும். இவர் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணிபுரிந்து கொண்டிருந்தார்; கம்பெனியின் இயக்குநர்களுக்குத் தெரியாமல் தனியாக வாணிகம் செய்யத் தொடங்கியதால் அவர்களின் சீற்றத்திற்கும், கண்டனத்திற்கும் ஆளானார். மிகக் குறைந்த ஊதியத்தில், புதிய சூழ்நிலையில் கம்பெனியின் ஊழியர்கள் மன நிறைவின்றிப் பணி புரிந்து கொண்டிருந்ததாலும், வணிகர்களாக உள்ளவர்கள் வளமாக வாழ்வதைக் கண்டு அவர்கள் மனம் உளைவதும் இயற்கையே என்று உணர்ந்ததாலும், ஊழியர்கள் தனி வாணிகம் செய்வதை அறிந்தும் அறியாதவர்கள் போல் மேலாளர்கள் இருந்து வந்தனர். ஆயினும் சில வேளைகளில் அதையே குற்றமாகக் கொண்டு தண்டிக்க முற்பட்டதும் உண்டு.

அம்முறையில்தான் போல்ட்ஸின் முயற்சியில் அவர்கள் குறை கண்டு சினம்கொண்டனர்.

அதனால் 1766இல், போல்ட்ஸ் தமது பதவியை விட்டு விலகினார்.

கம்பெனியாரின் வெறுப்பிற்கு ஆளாகியிருந்தமையால், இதழொன்றைத் தொடங்குவதற்குத் தமக்கு அனுமதி கிடைக்காது என்று வில்லியம் போல்ட்ஸ் உணர்ந்தார்; எனவே, யாரைக் கொண்டேனும் தமது எண்ணத்துக்கு உயிரளித்துவிட வேண்டும் என்று விரும்பினார்.

எனவே, 1766ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தமது எண்ணங்களைச் சிறியதொரு அறிக்கையின் மூலம் மக்களுக்கு வெளிப்படுத்தினார்; அரசாங்கத்தாரும் அவ்வறிக்கையினை அறியுமாறு செய்தார்; அதனை அரசாங்கத்தின் தலைமைச் செயலகத்தின் கதவிலும் மற்றும் பல பொதுவிடங்களிலும் ஒட்டினார். அவ்வறிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது.

போல்ட்ஸின் அறிக்கை

"பொது மக்களுக்கு

கல்கத்தாவில் இதழொன்று வெளியிடப்பட வேண்டுவதின் அவசியத்தை வலியுறுத்த திரு. போல்ட்ஸ் இம் முறையின் மூலம் தமது கருத்தினைத் தெரிவிக்கின்றார்.

இதழ் இல்லாத குறையால் வணிக வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் தடைபடுகிறது. ஒவ்வொரு பிரிட்டிஷ் குடிமகனுக்கும் இதழ் வேண்டுவதாகும்.

எனவே அச்சுக் கலையில் வல்லவர்க்கும், அச்சகத்தை நிர்வகிக்கக் கூடியவர்க்கும் அச்செழுத்துகளையும் பிற அச்சுக் கருவிகளையும் பயன்படுத்தக் கூடிய

வர்க்கும் எல்லா வகையிலும் ஊக்கமும் ஆக்கமும் தர போல்ட்ஸ் ஆர்வமுடன் உள்ளார்.

அவரிடம் தனிப்பட்டவர்களைப் பற்றிய அந்தரங்க மான செய்திகள் - பிறர் அறிய வேண்டும் என்று எழுதி வைக்கப்பட்டுள்ள எழுத்துரைகள் மிகுதியாக உள்ளன. அவற்றைக் காண வேண்டும் என்னும் ஆர்வம் கொண்டவர்களும், அவரைப் பாராட்ட வேண்டும் என்னும் உணர்வு உடையவர்களும் போல்ட்ஸ் இல்லத்திற்கு வந்து பார்க்கலாம் என் பதைப் பொது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ள அவர் விரும்புகிறார்.

பொது மக்கள் அவரிடம் உள்ள எழுத்துரை களைப் படிக்கலாம். தேவையானால் அவற்றைப் படி எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் காலை பத்து மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரை வருபவர் உரிய முறையில் வரவேற்கப்படுவர். தேவை யான செய்திகளை அவர்கள் அறிந்துகொள்ள வகை செய்யப்படும்.''[1]

இந்த அறிக்கை அதிகாரிகளுக்குச் சினத்தைத் தந்தது. வில்லியம் போல்ட்ஸ் உடனடியாக வங்காளத்திலிருந்து ஜுலை மாதம் சென்னை நோக்கிச் செல்லும் கப்பலில் பயணமாகி, சென்னையிலிருந்து செப்டம்பர் மாதம் புறப்படும் கப்பலேறி ஐரோப்பாவுக்குச் செல்ல வேண்டும் என்று 1767 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் நாளன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. வேறு வழியின்றி போல்ட்ஸ் இங்கிலாந்து நோக்கினார்.

இதழியல் துறையில் தோன்றிய இம்முதன் முயற்சி முளையிலேயே கிள்ளியெறியப்பட்டது.

---

1 Margarita Barns, The Indian Press, p 45.

ஏன் இல்லை இதழ்கள்?

இதனைத் தொடர்ந்து பதினான்கு ஆண்டுகள் இதழியல் துறையில் புதுமைகள் தோன்றவில்லை.

1618 - ஆம் ஆண்டிலேயே இதழ்களின் அவசியம், அமைப்புப்பற்றிய ஒழுங்கு முறைகள் அனைத்துலகக் கோட்பாடாக உருக்கொண்ட போதிலும் இந்தியாவில் 1780 ஆம் ஆண்டுவரை இதழொன்றும் வெளிவரவில்லை.

1780 - ஆம் ஆண்டுவரை இந்தியாவிலிருந்த ஐரோப்பியர்கள், இங்கிலாந்திலிருந்து கப்பல் வழி வந்து சேரும் இதழ்களையே நம்பியிருந்தனர். அவை இங்கிலாந்தில் வெளியான பின்பு, ஒன்பது மாதங்கள் அல்லது ஓராண்டு கழித்துத்தான் இந்தியாவுக்கு வந்து சேரும். அச்சகங்கள் இந்தியாவில் நிறுவப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகிய பின்னரும் இந்த நிலையில் மாற்றம் காண ஐரோப்பியர்கள் முயலாதது வியப்பைத் தருகின்றது.

நிலையில்லாத அரசியல் பின்னணியே இதழ்கள் தோன்றாமைக்குக் காரணம் எனலாம். டச்சுக்காரர்கள், போர்த்துகீசியர்கள், ஆங்கிலேயர்கள் ஆகிய மூவருமே இதழியல் துறையில் ஆர்வம் கொண்டவர்கள்தாம் என்றாலும், இந்தியாவில் ஆதிக்கம் கொள்ள அவர்கள் மேற்கொண்ட போராட்டங்களும், வாணிகம் செய்வதில் தங்களைப் பெரிதும் வளர்த்துக் கொள்வதில் காட்டிய முனைப்புகளும்தான் இதழியல் பற்றிய சிந்தனையைப் பின்னுக்குத் தள்ளுமாறு செய்துவிட்டன என்று எண்ணலாம். தங்கள் நேரடிப் பார்வைக்கு உள்ளாகாதபடி வேறு எவரும் இதழ் நடத்தவும் அவர்கள் உரிமையளிக்கவில்லை.

தொடக்க காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேயர்கள் மிகக் குறைந்த அளவினராகவே இருந்தனர். அவர்களுள்ளும் பலர் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணி புரிந்தவர்களாகவும் ஏதேனும்

ஒரு வகையில் அதனுடன் தொடர்புடையவர்களுமாகவே இருந்தனர். அதனால் ஒருவரிடமிருந்து ஒருவர்க்கு எளிதில் பேச்சு மூலமே செய்திகள் பரவிட முடிந்தது. அவர்களுக்குத் தங்கள் நாட்டுச் செய்திகளிலேயே ஆர்வம் இருந்ததால் ஒன்பது மாதங்கள் அல்லது ஒரு வருடம் வரைக் காத்திருந்து இங்கிலாந்திலிருந்து பெறும் செய்திகளே போதுமானதாக இருந்தது. இந்தியாவில் ஆங்கில இதழ்கள் தோன்றுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு இதுவும் ஒரு காரணமாகலாம்.

காலத்தின் போக்கு

காலத்தின் போக்கும் எண்ணத்தின் வேகமும்தான் இந்தியாவில் இதழ்கள் தோன்றக் காரணமாயின. நடுத்தரப் பிரிவு மக்கள் அப்போதைக்கப்போது நடைபெறும் நிகழ்ச்சிகளை விரைவாக அறியும் ஆர்வம் கொண்டனர். மார்க்கெட் நிலவரம், கப்பல் போக்குவரத்து, நிர்வாகச் செய்திகள் போன்றவற்றை உடனுக்குடன் அறிய வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். எப்போதாவது ஒரு முறை வெளிவரும் செய்தி மடல் (News Letter) அவர்களுக்குப் போதியதாக இல்லை. காலத்தின் வேகம் அல்லது போக்கு என்றுதான் இந்த நிலையைச் சொல்ல வேண்டும்.

புகழுடையவர்

இந்நிலையில்தான் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் இதழ் நடத்த ஆர்வம் கொண்டார்.

ஹிக்கி, இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்தவர். தம்முடைய எதிர்காலத்தை இந்தியா வலிமையுடையதாக்கும் என்று அவர் எண்ணினார். ஆனால் அவருடைய அந்த எண்ணம் நிறைவேறவில்லை. இந்தியாவின் முதல் இதழைத் தொடங்கியவர் என்னும் புகழ்தான் அவருக்கு நிலைத்தது. சிறிது காலம் அவர் கிழக்கிந்தியக் கம்பெனியில் எழுத்தராகப் பணியாற்றினார்.

பின்னர் 1778 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் ரூபா இரண்டாயிரம் செலவு செய்து அச்சகம் ஒன்றை நிறுவினார். கிழக்கிந்தியக் கம்பெனியின் முதல் அச்சாளர் என்று அவர் தம்மை குறிப்பிட்டுக் கொண்டார்; அச்சகம் தொடங்குவதற்கு முன்னர் அதற்காகப் பெற்றிருந்த கடனைத் திருப்பித் தராத காரணத்தால் சில காலம் சிறைத் தண்டனையும் பெற்றிருந்தார். 177? ஆம் ஆண்டில் இந்திய ராணுவ அதிகாரியான சர். அயர்கூட் என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க புதுப்பிக்கப்பட்ட ராணுவ சட்ட திட்டங்களை அச்சிட்டுத் தரும் பணியினை மேற்கொண்டார்; அதற்குரிய - தமது அச்சுப் பணிக்குரிய தொகையினைப் பெறுவதில் அவர் அடைந்த துன்பங்கள் கொடுமையானவை. புதினாறாண்டுகள் உரியவர்களுடன் கடிதத் தொடர்பு கொண்டு, தாம் தம் பணிக்குரியதாகக் குறித்த தொகையில் ஒரு சிறு பகுதியினையே பெற்றார். வறுமையின் கொடுமையை நன்குணர்ந்த வாழ்வு அவர் வாழ்வு.

சென்னைத் தொலைக்காட்சியின் சிறப்பு நிகழ்ச்சி

இந்திய இதழியலின் இருநூறாவதாண்டு நிறைவினை இந்திய இதழ்கள் சில சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டுப் போற்றின. அவை இந்தியாவின் முதல் இதழாசிரியரான ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளையும் வெளியிட்டன.

இது தொடர்பாகச் சென்னைத் தொலைக்காட்சி நிலையம் 14-9-1980 அன்று இரவு 9-00—9-15 மணியளவில் சிறப்பு நிகழ்ச்சியொன்றினை ஒளி பரப்பியது. அதன் மூலம் ஹிக்கிக்குப் பெண் மக்கள் இருவர் இருந்தனர் என்றும், அவர்கள் இறந்தனர் என்றும் அறியமுடிகிறது. அது மட்டுமல்லாமல் ஹிக்கி இந்தியாவுக்கு வரும்போது, கப்பல் புயலால் தாக்குற்றதால் அவருடைய உடமைகள் யாவும் அழிந்தன என்றும், அதனால்தான் பொருள்

சேர்க்கும் ஆர்வம் அவருக்குப் பெருகியிருந்தது என்றும் அறிய முடிகிறது.

கிழக்கிந்தியக் கம்பெனியில் பணிபுரிந்த அவர் கம்பெனியாரின் போக்கில் கருத்து வேறுபாடு கொண்டார். ஆங்கில அதிகாரிகளின் மமதைப் போக்கு அவருக்கு வெறுப்பைத் தந்தது. தம் உள்ளக் குமுறலைப் பலரும் அறியச் செய்துவிட வேண்டும் என்று விரும்பினார். இந்நிலையில், கல்கத்தாவில் வாழ்ந்த ஆங்கிலேயர்களும், இந்தியர்களில் நடுத்தரப் பிரிவைச் சார்ந்தவர்களும் கொண்ட 'செய்திப் பசி' அவருடைய விருப்பத்தை வளர்க்கச் செய்தது.

இந்தியாவின் முதல் இதழ்

1780 - ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 - ஆம் நாள் சனிக்கிழமையன்று இந்தியாவின் முதல் இதழ் என்னும் பெருமைக்குரிய 'பெங்கால் கெசட்' அல்லது 'கல்கத்தா அட்வர்ட்டைசர்' என்ற இதழினை 'ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி' வெளியிட்டார்.

12″ × 8″ அளவில் நான்கு பக்கங்களைக் கொண்ட இவ்வார இதழ், (two - sheet news paper) பக்கத்திற்கு மூன்று பத்திகளைக் கொண்டது.

> "அரசியல் - வர்த்தக வார இதழ்; எல்லார்க்கும் உரியது. எவருடைய தூண்டுதலும் இல்லாதது"

என்று தன்னைப்பற்றி இவ்விதழ் அறிமுகப்படுத்திக் கொண்டது

இவ்விதழ் பற்றிய கட்டுரை ஒன்றில் P. K. பட்டாசார்ஜி என்பவர், "பெங்கால் கெசட்" என்பதே இதன் முதற் பெயர் என்றும், பின்னரே இது "கல்கத்தா ஜெனரல் அட்வர்டைஸர்"

என்றும் "ஹிக்கீஸ் கெசட்" என்றும் பெயர் கொண்டதென்று கூறுகின்றார்.

("Bengal Gazette, the first news paper published in India. It later also came to be known as "Calcutta General Advertiser" and as "Hicky's Gazette," – Mirror, Vol. XIX, No 3, P. 70.)

ஆனால் முதல் இதழின் முதல் பக்கத்தில் இதழின் பெயர்,

Hicky's
Bengal Gazette
OR
Calcutta General Advertiser

என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதழின் முதற் பெயரே 'ஹிக்கீஸ் பெங்கால் கெசட் அல்லது கல்கத்தா ஜெரனல் அட்வர்டைசர்" என்பதே ஆகும் என்பது தெளிவாகின்றது. ஹிக்கி, இவ்விதழின் ஆசிரியராகவும் உரிமையாளராகவும் இருந்தார்.

இதழ் பற்றி இதழாசிரியர்

ஹிக்கி, தம்முடைய இதழின் நோக்கும் போக்கும் பற்றி முதல் இதழிலேயே பின்வருமாறு எழுதியுள்ளார்.

> "செய்திகளை எளிதாகப் பரவச் செய்வது இந்த இதழின் நோக்கமாக இருக்கும். அவை பயனுள்ளன வாகவும், பொழுது போக்கிற்குரியனவாகவும், வணிகத் தைப் பெருக்க துணை செய்வனவாகவும், தனிப் பட்டோருக்கு ஊக்கம் தருவனவாகவும் இருக்கும். இந்த அடிப்படையில் தம் போக்கை வகுத்துக் கொள்

ளும் இந்த இதழ், தவறு செய்பவர்களை மக்களுக்கு உணர்த்தும்; நாட்டு நிகழ்ச்சிகளை உடனுக்குடன் விமர்சிக்கும், வினோதமான அறிவிப்புகளையும் விளம் பரங்களையும்கூட இதில் காணலாம். இப்போது இது சில ஏவலர்களால் பொது மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்படும்.[1]

அடுத்த இதழிலேயே இதழின் விற்பனை பற்றிய பின்வரும் குறிப்பு இடம் பெற்றது.

"ஆங்கில அரசின் தலைமையிடமாகவும், வணிக மையமாகவும் விளங்கும் கல்கத்தாவில் ஏவலர் மூல மாக இதழை விநியோகம் செய்வது தொல்லையாகவும் அவமானமாகவும் உள்ளது. எனவே, இனி இத் தொல்லைகள் நீங்குமளவில் முயற்சிகள் மேற் கொள்ளப்படும்."

உரிமை உணர்வு கொண்ட ஹிக்கி, தமது இதழ் வளர்ச்சி யில் கருத்துடையவராக இருந்தார் என்பதனை இந்த அறிக்கை யால் உணர முடிகிறது. தம்முடைய இதழாசிரியப் பணி குறித்து அவர் மற்றொரு இதழில் எழுதிய குறிப்பு இது:

"I have no particular passion for printing ofnews papers; I have no propeusity; I was not bred to a slavish life of hard work, yet I take a pleasure in enslaving my body in order to purchase freedom for my mind and soul."[2]

---

1 P. K. Bhattacharjee, Mirror, Vol XIX, No 3, p. 69 (January 1960)

2 M. Chalapathi Rau, The press, p. 12.

இதழின் நிலை

இன்றுள்ள செய்தி இதழ்களைப் பார்க்கும் நமக்கு ஹிக்கியின் "பெங்கால் கெசட்"டைச் செய்தி இதழாகக் கருதுவது பொருந்தாததாகத் தோன்றும். அச்சு சிறப்பாக அமையவில்லை. பொறுப்புடன் அவ்விதழ் நடத்தப்பட்டது என்பதை அதன் உள்ளடக்கமும் வெளிப்படுத்தவில்லை. போற்றி வைத்துப் படிக்க வேண்டும் என்னும் உணர்வை அந்த இதழ் தன் வாசகர் வட்டத்தில் உண்டாக்கவில்லை.

ஆயினும் இதழியல் துறையில் அதுதான் 'முதல் இதழ்.' இங்கிலாந்திலிருந்து வந்த இதழ்களே முன்மாதிரி இதழ்களாக அமைந்தன. எனவே, இந்திய மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப 'பெங்கால் கெசட்' அமையவில்லை.

இதழின் உள்ளடக்கம்

இங்கிலாந்து இதழ்களில் வந்த செய்திகளை வெளியிடுவதை ஹிக்கி வழக்கமாகக் கொண்டதால் அவை பழமையாகி விடுகின்றன. எனவே ஆங்கிலேயர்களே அவற்றை விரும்பவில்லை.

ஹிக்கியின் தலையங்கங்கள், கல்கத்தாவில் வாழ்ந்த ஆங்கிலேயர்களைப் பற்றியும் இங்கிலாந்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும், இந்திய மன்னர்களின் ஆளுகைக் குட்பட்ட பகுதிகளில் ஆங்கில ராணுவத்தார் இடம் பெற ஆட்சியாளர்கள் தீட்டிய திட்டங்கள் பற்றியும் அமைந்தன.

இவை மட்டுமல்லாமல் ஆசிரியர்க்குக் கடிதங்கள், அரசாங்க அறிக்கைகள், சமுதாயச் செய்திகள், வணிகச் செய்திகள், தனியார் தரும் விளம்பரங்கள், கவிதைப் பக்கம்,

ஐரோப்பிய செய்திக்கடிதம் முதலியனவும் இதழின் உள்ளடக்கச் செய்திகளாயின.

இவ்வளவு கொண்டிருந்தும், இதழ் பார்வைக்குக் கவர்ச்சியாக அமையவில்லை. தலைப்பு வரிகள் தரப்பட வில்லை. செய்திகளைப் பிரித்துக் காட்ட எழுத்துகளின் அளவில் மாற்றமும் இல்லை. மொத்தத்தில் தொடக்கம் முதல் இறுதி வரை ஒரே மாதிரியாகக் காட்சியளித்தது. அது படிப்பவர்க்குச் சலிப்பையே தந்தது.

விளம்பரங்கள்

இவ்விதழில் வெளிவந்த விளம்பரங்கள் அக்காலத்தின் சமுதாய வரலாற்றை அறிய உதவுவனவாக உள்ளன என்கிறார் பி. கே. பட்டாசார்ஜீ. அடிமைத்தனம், உள்நாட்டுக் குழப்பங் கள், குழந்தை மணங்கள், கல்விப் பிரச்னைகள், ஒழுக்கக் கேடு கள் முதலானவை இப்பகுதியில் இடம் பெற்றன. பெரும்பாலான விளம்பரங்கள் பொருள்களின் ஏலம்—விற்பனை தொடர்பாகவே இருந்தன.

"பெரு விருந்துகளுக்குச் சென்று கலந்து கொள்வோர்க்கு"

என்று சிறப்பாகச் சில வேண்டுகோள்களையும் "பெங்கால் கெசட்"டின் பல இதழ்களில் காணலாம்.

விருந்துக்குச் சென்றவர்கள் தங்களுக்கு உரிமை இல்லாதன வற்றைக் கொண்டு சென்று விடுவதுமுண்டு. அத்தகையவர்கள் அவற்றைத் திருப்பித் தந்து விட்டால் வெகுமதி வழங்கப் படும் என்றும், அவர்களுடைய குற்றங்கள் மறக்கப்பட்டுவிடும் என்றும் அந்த அறிவிப்புகள் கூறும். அழகான மெழுகுவர்த்தி 'ஷேட்', காலணிகள், விலையுயர்ந்த போர்வைகள், துப்பாக்கி கள், போர்க் கருவிகள் முதலியன காணாமற்போன பொருள் களில் சிலவாகும்.

சில வேளைகளில் அதிகாரிகள் தனி வாழ்க்கை பற்றியும் விளம்பர முறையில் ஹிக்கி எழுதுவதுண்டு.

ஏன் இந்த இதழ்?

ஹிக்கி, கம்பெனியாரின் குறைகளை வெளிப்படுத்த வேண்டும் என்னும் குறிக்கோளுடையவர். தம்முடைய இதழ் பல துறைகளில் கருத்து செலுத்தும் என்று இதழின் தொடக்கத்தின் போது அவர் அறிவித்திருந்தாலும் காலப் போக்கும், ஆட்சியாளர்கள் ஒருசார்புப் போக்கும் அவற்றுள் பலவற்றை நீக்கம் பெறச் செய்து விட்டது. அதிகாரிகள் குறைகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணிய ஹிக்கி, அவர்களுடைய தவறுகளைச் சுட்டிக் காட்டுவதுதான்— கடுமையாக எழுதுவதுதான் அதற்குரிய வழி எனக் கொண்டார். எனவே அவருடைய "பெங்கால் கெசட்", கம்பெனியார் தொடர்பான சமுதாய வாழ்வில் பெருங்கருத்துடன் இருந்தது. அச் செய்திகளை அதற்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் வெளியிடுவதுடன் நில்லாது செய்திப் பகுதிகளிலும் இணைக்கப்பட்டதுமுண்டு. திருமணங்களைப் பற்றியும், திருமண உறுதிகள் பற்றியும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. இந்தப் பகுதியினைப் பிற்காலத்தில் ஹிக்கி, தனிப்பட்டவரின் வாழ்க்கைக் கேடுகளை நையாண்டி செய்யும் பகுதியாக்கிக் கொண்டார். அதிகாரிகளின் துணை கொண்டு அடாத செயல்கள் செய்தவர்களைப் பற்றி விவரமாக எழுத ஹிக்கிக்கு இப்பகுதி பயன்பட்டது. மக்களிடையே கவர்ச்சியைப் பெறுவதற்காகக் கல்கத்தாவில் வாழ்ந்த ஐரோப்பியர்களின் தனி வாழ்க்கைக் கேடுகள் அம்பலமாக்கப்பட்டன. இவற்றை எழுதும்போது ஹிக்கியின் மொழி நடை, செய்தியின் தரத்திற்கேற்பவே அமைந்தது.

இதனால் படிப்பவர்க்குச் சுவை பெருகியது; இதழின் வளர்ச்சியும் பெருகியது. கம்பெனியின் சாதாரண ஊழியர் பற்றியும், தலைமை ஆளுநரான வாரன் ஹேஸ்டிங்ஸ் பற்றியும், அவர் மனைவி பற்றியும், இந்தியாவின் உச்ச நீதிபதியாக

விளங்கிய எலிஜா இம்பே பற்றியும் கண்டனக் கணைகளைத் தொடுப்பதில் ஹிக்கி பின்னடையவில்லை. அரசின் ஐயப் பார்வை ஒருபுறம், அதிகாரிகளின் பகை ஒருபுறமாக "பெங்கால் கெசட்"டைத் தாக்கியதால் சுகவாழ்வு பெறவில்லை அது.

இதழின் குறைகள்

"இலக்கியப் பணிக்குத் தம் இதழில் பங்கு உண்டு என்று ஹிக்கி சொல்லவில்லை. இதழ் நடத்தும் நோக்கில் மிகத் தெளிவாகவே இருந்தார். அவர் நோக்கம் பணம் பெருக்குவது தான். எனவே விரசமான செய்திகளை வெளியிடவும் அவர் தயங்கவில்லை. மக்களிடையே அவற்றுக்குள்ள 'செல் வாக்கினை' அறிந்தவர் அவர்.

"கல்கத்தாவில் வாழ்ந்த நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த ஆங்கிலேயர்களிடையே "பெங்கால் கெசட்" நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது. கம்பெனி ஆட்சியாளரின் போக்கில் அவர் களுள் பலர் குறை கொண்டிருந்ததுதான் அதற்குக் காரணம்.

"கொள்கைகளை விவாதிப்பதில் அவர் இதழ் கருந்து கொள்ளவில்லை. மாறாக, தனிப்பட்டவர்களின் வாழ்க்கைக் குறைபாடுகளையே பெரிதுபடுத்தி வெளியிடுவதில் ஆர்வம் காட்டியது. அந்தச் செய்திகளும் பல வேளைகளில் ஆதாரமற்ற உரையாகவும், ஒரு சார்புடையனவாகவும் இருந்தன," என்கிறார் பி. கே. பட்டாசார்ஜீ.[1]

ஆங்கில அரசு, அதிகாரிகளின் துணையுடன் நடத்திய முறையற்ற செயல்களை வெளிப்படுத்துவதிலும் கண்டிப்பதிலும் ஹிக்கி ஆர்வம் காட்டினார். எனவே அரசின் ஐயப் பார்வை யும் அதிகாரிகளின் பகையும் பெருகியது.

இந்தியாவில் உள்ள ஆங்கிலேயர்களுக்காகவே "பெங்கால் கெசட்" நடத்தப்பட்டதால், இங்கிலாந்திலிருந்து வந்த இதழ்

---

1 P. K. Bhattacharjee, First Indian News Paper, Mirror, Vol XIX, No 3, p. 70

களைப் போலவே அமைப்புடையதாக்கப் பட்டது. ஆங்கில வணிகர்களும், அதிகாரிகள் அல்லாத ஆங்கிலேயர்களுமே "பெங்கால் கெசட்"டின் வாசகர்கள்.

பஸ்டீட் கூற்று

கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாக அதிகாரிகளை வன்மையாகக் கண்டித்து எழுதிய ஹிக்கி, இந்திய நாட்டின் நிலை பற்றியோ, எதிர்காலம் பற்றியோ ஏதும் எழுதவில்லை.

> "உள் நாட்டு விவகாரங்களைப் பற்றித் தமக்கு மிகுந்த கவலை உண்டு என்று எப்போதுமே ஹிக்கி சொன்னதில்லை. அவை பற்றி அவர் எண்ணியது மில்லை. அரசாங்கத்தைப் பற்றிய தமது எழுத்துகள் அரசாங்கச் சார்புடையவர்களின் திருந்திய நல்வாழ்வு குறித்து அமைவனவே என்பதை அவர் வலியுறுத் தினார்."

என்று ஹிக்கி பற்றி பஸ்டீட் (Busteed) என்பவர் எழுதியுள்ள குறிப்பினைக்[1] காணும்போது, இதழியல் நோக்கில் ஹிக்கி தெளிவுடையவராகவே இருந்தார் என்று கருதத் தோன்றுகிறது.

இரண்டாவது இந்திய இதழ்

பெங்கால் கெசட் தோன்றிய ஒன்பது மாதங்களுக்குப் பின்னர்—1780-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இந்தியா கெசட் (India Gazette) என்னும் இதழ் தோன்றியது. இவ் இதழைத் தொடங்கியவர்கள் பெர்னார்டு மெஸ்ஸிங், பீட்டர் ரீட் என்னும் இருவராவர்.

இவர்கள் இருவரும் வணிகர்கள்; கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கட்டுப்பட்டவர்கள். இவர்கள் தங்கள் வணிக வளர்ச்சிக்

---

1 Ibid, p. 71


காகவே இதழைத் தொடங்கினர். தலைமை ஆளுநரான வாரன் ஹேஸ்டிங்ஸின் கட்டுப்பாடுகளை மீறுவதில்லை என்ற உறுதி மொழியின் அடிப்படையில்தான் இதழ் இயக்கம் கண்டது. இவ்விதழின் வளர்ச்சிக்காகத் திருமதி வாரன்ஹேஸ்டிங்ஸ் கூறிய பரிந்துரைகள் வாரன்ஹேஸ்டிங்ஸால் செயல்படுத்தப் பட்டன.

ஹிக்கியின் சினம்

ஹிக்கி புதிய இதழ் பற்றி அறிந்தார்; "இந்தியா கெசட்", "பெங்கால் கெசட்"டின் போட்டி இதழாகத் தோன்றுகிறது என்று எண்ணினார்; தம்முடைய சந்தாதாரர்கள் புதிய இதழின் தொடர்புடையவர்களாய்க் காணப்படுகின்றனர்—அச்சந்தாதாரர் கள் புதிய இதழினை விரும்பி ஏற்கும் வகையில் வற்புறுத்தப்படு கின்றனர் என்று கேள்வியுற்றார்; எனவே பெரிதும் சினம் கொண்டார்.

தம்முடைய இதழில் ஹிக்கி புதிய இதழின் உரிமையாளர் கள் இருவரையும் வன்மையாகத் தாக்கி எழுதினார்; அது மட்டு மல்லாமல் புதிய இதழுக்கு அச்செழுத்துகளை விற்ற இருவர் பற்றியும், அவர்கள் அந்த இதழின் வளர்ச்சிக்காகச் செய்த பிரசாரங்கள் பற்றியும் எழுதினார். ஆயினும், இவற்றால் 'இந்தியா கெசட்'டின் வளர்ச்சி எந்த அளவுக்கும் பாதிக்கப்பட வில்லை.

திருமதி வாரன் ஹேஸ்டிங்ஸின் புதிய இதழின் வளர்ச்சிக் கான பரிந்துரைகளை வாரன் ஹேஸ்டிங்ஸ் செயல்படுத்து வதாக எண்ணிய ஹிக்கி அதனைப் பெரிதும் விளம்பரப்படுத்தி எழுதியதுடன் இழிதகவான நடையில் தாக்கியும் எழுதினார். தமக்கு நீக்கப்பட்ட அஞ்சல் சலுகைகள் 'இந்தியா கெசட்'டுக் குத் தரப்பட்டது பற்றியும் அவர் கண்டித்து எழுதினார்.


HICK

BENGAL GAZETTE

OR,

Calcutta General Advertifer

Hicky's Bengal Gazette : Calcutta, January 29, 1780

வாரன் ஹேஸ்டிங்ஸ் ஓய்வு பெற்று சென்ற பின்னர் அவர் மீது நடைபெற்ற விசாரணை வழக்கில் ஹிக்கியின் குற்றச் சாட்டுகள் விசாரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது[1].

என்று மறையும் இந்த இதழ்?

அதிகாரிகளைப் பற்றியும், தலைமை ஆளுநர் பற்றியும், அவர்தம் மனைவியாரைப் பற்றியும் அவதூறுகளையே மிகுதியாகக் கொண்டு "பெங்கால் கெசட்" வெளி வந்து கொண்டிருந்தது, கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாகத்தினரிடையே பெரிதும் சலசலப்பை ஏற்படுத்தியது.

அவர்கள் ஹிக்கியையும் அவருடைய இதழையும் வெறுத்தனர். ஆரம்பம் முதலே அவர்கள் "பெங்கால் கெசட்"டின் போக்கினை விரும்பவில்லை என்றாலும் இப்போது அவர்களிடையே அந்த விருப்பின்மை வெறுப்பாக மாறியது. பிறரைப் பற்றிய குறைகள்தானே விளம்பரப்படுத்தப்படுகின்றன என்று எண்ணி அவர்கள் மகிழவில்லை. அத்தகைய செய்திகளை அவர்கள் சுவையாகப் படித்தார்கள் என்றாலும், தங்களைப் பற்றியும் என்றாவது ஒருநாள் எழுதப்படுமோ என்ற அச்சத்தில் சுவை முழுமையானதாக இல்லாமலிருந்தது. எனவே அவர்களும் ஹிக்கியின் "கெசட்" என்று மறையும் என்றுதான் எதிர்பார்த்தார்கள்.

வாரன் ஹேஸ்டிங்ஸின் நடவடிக்கை

வாரன் ஹேஸ்டிங்ஸைப் பொறுத்த வரையில் மிகப் பொறுமையாகத்தான் "பெங்கால் கெசட்"டின் போக்கினைக் கவனித்துக் கொண்டிருந்தார்: காலப் போக்கில் ஹிக்கி தமது

---

1 P. K. Bhattacharjee, First Indian News Paper, Mirror, Vol XIX, No 3, p. 69

எண்ணத்தை மாற்றிக் கொண்டு, இதழை நல்ல முறையில்—பயன்படும் வகையில் நடத்த முற்படுவார் என்று எதிர்பார்த்தார்.

ஆனால், ஹிக்கி தம் போக்கில் மாற்றம் கொள்ளவில்லை. இந்தப் போக்கினைத் தடை செய்ய எண்ணிய வாரன்ஹேஸ்டிங்ஸ், "பெங்கால் கெசட்"டுக்குத் தரப்பட்டிருந்த அஞ்சல் சலுகைகளைத் திரும்பப் பெற்றார். அஞ்சல் மூலம் 'பெங்கால் கெசட்' பரவுவது இவ்வாறு தடை செய்யப்பட்டது.

இது பற்றிய அரசாங்கத்தின் அறிக்கை பின்வருமாறு அமைந்துள்ளது:

> Fort William, 14th Nov., 1780
>
> Public notice is hereby given that as a weekly newspaper called the Bengal Gazette or the Calcutta General Advertiser by J. A. Hicky, has lately been found to contain several improper paragraphs tending to vilify private characters and to disturb the peace of the Settlement, it is no longer permitted to be circulated through the channel of the General Post Office"[1]

ஹிக்கியின் அடங்காப் போக்கு

இந்தத் தடைக்குப் பின் ஹிக்கியின் இதழ் வேகம் கொண்டது. அரசியல் செல்வாக்கும் அதிகாரப் பெருக்கும் எந்த அளவுக்கு ஒரு செயலை அழித்துவிட முடியும் என்பதற்கு, "பெங்கால் கெசட்"டுக்குத் தரப்பட்ட அஞ்சல் சலுகை நீக்கப்

1 Margarita Barns, The Indian Press, p. 47.

பட்டதே போதுமான சான்றாகும் என்று ஹிக்கி தமது ‘பெங்கால் கெசட்’டின் நாற்பத்து நான்காவது இதழில் எழுதினார்.

இந்தச் சலுகை நீக்கத்தால் அவருக்கு மாதந்தோறும் ரூபாய் ஐந்நூறு இழப்பாகியது. தொடக்கத்திலிருந்ததுபோல தமது ஏவலர்கள் மூலமே இதழின் விற்பனைக்கு அவர் ஏற்பாடு செய்ய வேண்டியதாயிற்று. "நிருவாகத்தின் அடக்குமுறைக்குத் தாம் பணியப் போவதில்லை" என்று இதழ்வழித் தம் வாசகர்க்குத் தமது நிலையை உணர்த்திய ஹிக்கி, தம் போக்கில் மாற்றமேதும் கொள்ளாமல் இதழினைத் தொடர்ந்து நடத்தினார்.

தாக்குதலுக்குள்ளான மூவர்

கிழக்கிந்தியக் கம்பெனியோடு தொடர்புடைய சைமன் டிரோஸ் (Simon Diroz), தலைமை ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸின் நண்பரான தாமஸ் டீன் பியர்ஸ் (Thomas Deen Pearse), ஸ்விடன் நாட்டைச் சேர்ந்த பாதிரியாராகிய ஜான் ஜக்கரியா கிர்னன்டர் (John Zachariah Kirenander) என்பவர்கள் பற்றியும் ஹிக்கி தமது இதழில் செய்திகள் வெளியிட்டார்.

சைமன் டிரோஸின் கடிதம்

"பெங்கால் கெசட்" விற்பனையை அஞ்சல் வழி தடை செய்ய வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆணை பிறப்பிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அவருக்கு சைமன் டிரோஸிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. அக்கடிதத்தில் சைமன் பின் வருமாறு எழுதியிருந்தார்.

> "தாக்குறைவான நடையில் பொறுத்துக் கொள்ள முடியாத குற்றச் சாட்டுகளை என்மீது சுமத்தி ஹிக்கி என்பவரின் வார இதழில் எழுதப்பட்டுள்ளது பற்றித் தங்கட்கு எழுத விரும்புகிறேன்.

"தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் நல்வாழ்வு தருவதில் தங்களுக்குள்ள பொறுப்புணர்வையும் கடமையுணர்வையும் நன்கு உணர்ந்து போற்றி வருபவன் நான். திரு. ஹிக்கியும் பிரிட்டிஷ் குடிமகன்தான் என்பதில் எந்தவித ஐயமில்லை. ஹிக்கியின் இதழில் வெளிவரும் செய்திகளை - அவதூறுகளை நீங்கள் விரும்ப மாட்டீர்கள் - பிறர் மனம் எவ்வகையிலும் புண்படல் கூடாது என்று எண்ணுவதில் உங்களுக்கு ஒப்பாக எவரையும் சொல்லுதல் இயலாது என்பதையும் ஐயமற நான் அறிவேன்.

"ஹிக்கி தமது இதழில் குறிப்பிட்டுள்ளது போல எந்தக் குற்றமும் நான் செய்ததில்லை. அவருடைய இதழுக்கு எதிராக மற்றொரு இதழுக்கு நான் ஊக்கமும் ஆக்கமும் தருவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். நான் அவ்வாறு ஏதும் செய்யவில்லை. அப்படியே செய்தாலும் அது குற்றமாகாது என்றும் கருதுகிறேன். காரணமேதுமில்லாமல் அவதூறாக எழுதுவது எந்த வகையில் நியாயமாகும் என்பதுதான் புரியவில்லை.

"இவற்றையெல்லாம் தங்கட்கு எழுதுவதற்குக் காரணம், குறும்புகள் செய்வதில் ஹிக்கி எந்த அளவுக்குத் துணிவுடையவராக உள்ளார் என்பதை விளக்குவதற்குதான்."[1]

தாமஸ் டீன் பியர்ஸின் கடிதம்

தலைமை ஆளுநரின் நண்பரான தாமஸ் டீன் பியர்ஸ் என்பவர், 1781 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாளன்று சென்னையைச் சேர்ந்த கஞ்சம் மாவட்டத்திலிருந்து தலைமை

---

1 Margarita Barns, The Indian Press, p. 47.

ஆளுநருக்குக் கடிதம் ஒன்று எழுதினார். அதில் அவர் ஹிக்கியைப் பற்றி எழுதியிருப்பதாவது :

"ஒவ்வொரு சனிக்கிழமையும் அவதூறுச் செய்திகளைக் குவிக்கும் இதழொன்றின் போக்கினைக் கண்டும் பொறுமையாக இருக்கும் உங்கள் போக்கு எனக்கு வியப்பைத் தருகின்றது. இந்தப் பகுதிகளில் அந்த இதழ் கிடைப்பதில்லை. நாம் சந்தித்தும் ஆறு வாரங்கள் ஆகிவிட்டன. இருப்பினும் பிற பகுதியைச் சேர்ந்தவர்களைக் காணும்போது அவர்கள் மூலம்தான் அந்த இதழ் வெளியிடும் செய்திகளைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களும் என்னைப் போலவே உங்கள் பொறுமை குறித்து வியப்படைகிறார்கள். அந்த மனிதனே அதன் ஆசிரியப் பொறுப்பில் இருக்கிறார் என்றும் சொல்கிறார்கள். அது உண்மை என்றும் தோன்றுகிறது.

"பொறுப்பில்லாத பரிதாபத்துக்குரிய எவரோ ஒருவர் பிறரைத் தூற்றுவதில் இன்பம் கொண்டு பலரை (இருட்டில்) முதுகில் குத்திக் கொண்டிருக்கிறார். கல்கத்தா போன்ற பெருநகரிலிருந்து "கெசட்" போன்ற இதழ் வெளிவருவதற்கு அனுமதி வழங்கியிருக்கவே கூடாது.

"இதழ் வெளியீட்டிற்கு உங்கள் இசைவைத் தெரிவித்த போதே, ஒவ்வொருவருடைய பொது வாழ்க்கையைப் பற்றியும் தனிவாழ்க்கையைப் பற்றியும் அவதூறான செய்திகளைத்தான் இனி ஆண்டு முழுவதும் நாம் அறிந்து கொண்டிருக்கப் போகிறோம் என்று நான் சொன்னதை இப்போது எண்ணிப் பார்க்கிறேன். அதுதானே உண்மையாகி விட்டது."[1]

---

1 Margarita Barns, The Indian Press, P. 48.

தண்டனை

ஜான் ஜக்கரியா கிர்னன்டர்மீது ஹிக்கிக்குக் கடுங்கோபம். அதற்குக் காரணம் அவர் அச்செழுத்துகளை "இந்தியா கெசட்" இதழுக்கு விற்றார் என்பதே ஆகும். 1781-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் வெளியான "பெங்கால் கெசட்"டில் கிர்னண்டர் பாதிரியார் மாதாகோவில் ஒன்றின் விற்பனையில் ஈடுபட்டுள்ளதாக எழுதினார்.

இதனை அறிந்த கிர்னண்டர், வாரன்ஹேஸ்டிங்ஸுக்கு 1781 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் நாளன்று கடிதம் ஒன்று எழுதினார். அக்கடிதத்தில், "பெங்கால் கெசட்"டில் வெளியான தம்மைப் பற்றிய செய்தி தமக்கு அவமானத்தைத் தருவதாகும் என்றும், அது பற்றிய விவரங்களை வெளியிட்டுத் தமக்கு ஆதரவு தருமாறு வேண்டியும் குறிப்பிட்டிருந்தார்.

> "மாதா கோவிலை விற்பனை செய்வதிலோ வாடகைக்கு விடுவதிலோ கிழக்கிந்தியக் கம்பெனியோடு எந்தவிதமான தொடர்பினையும் ஜான் ஜக்கரியா கிர்னண்டர் கொள்ளவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் குழுவினர், அவர் அதுபோன்ற எண்ணம் ஏதும் கொண்டிருக்கிறார் என்று எண்ணவில்லை."[1]

என்று வாரன்ஹேஸ்டிங்ஸ் பாதிரியார்க்குப் பதில் எழுதினார்.

இதனைத் தொடர்ந்து ஹிக்கிமீது அவதூறு வழக்குத் தொடரப்பட்டது. நான்கு மாதச் சிறைத் தண்டனையும் 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத் தொகை கட்டும் வரையில் சிறைத் தண்டனை நீடிக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு கூறப்பட்டது.

---

1 Mirror, vol. XIX, No 3, p. 72.

இம்பே மீது குற்றச்சாட்டு

ஹிக்கியின் போக்கில் இத்தகைய தண்டனைகள் மாற்ற மேதும் விளைவிக்கவில்லை. தலைமை நீதிபதியான இம்பே, பாலங்களைப் பாதுகாக்கும் பணியில் தம்முடைய உறவினர் ஒருவர்க்கு தமது செல்வாக்கைப் பயன்படுத்திப் பணி வாய்ப்புப் பெற்றார் என்று குற்றம் சாட்டி ஹிக்கி எழுதினார்.

அவர் தொடர்ந்து அதிகாரிகளின் குறைகளை வெளிப்படை யாக இழிநடையில் எழுதி வந்ததால் அவரைத் தண்டிக்க வேண்டிய நெருக்கடிநிலை வாரன்ஹேஸ்டிங்ஸுக்கு ஏற் பட்டது.

கல்கத்தாவில் மட்டுமல்லாமல், இந்தியாவின் பிற பகுதி களிலும் ஹிக்கியின் இதழுக்குப் பரபரப்பான வரவேற்பு இருந் தது. இந்நிலையில் "கல்கத்தா கெசட்" வெளிவர வொட்டாமல் செய்ய வேண்டும் என்று எண்ணிய வாரன்ஹேஸ்டிங்ஸ் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மீண்டும் தண்டனை

ஹிக்கியைக் கைது செய்யவேண்டும் என்னும் தலைமை ஆளுநரின் எண்ணம் அறிந்த தலைமை நீதிபதி, அதனைச் செயல்படுத்தத் தொடங்கினார். ஹிக்கியைக் கைது செய்ய தலைமை நீதிபதியின் உத்தரவைப் பெற்ற ராணுவத்தினர் சிலரும், சிப்பாய்கள் சிலரும், ஐரோப்பியர் பலரும், முன்னூறுக் கும் மேற்பட்ட ஏவலர்களுமாகச் சென்றனர். ஹிக்கி அவர்களை எதிர்த்துப் போராடினார். ஆயினும் அன்றே அவர் தலைமை நீதிமன்றத்துக்குச் சென்று தம்மை ஒப்படைத்துக் கொண்டார்.

அவருக்கு ஈடு காணமாகச் (தொகை) சொல்லப்பட்ட ரூபாய் எண்பதாயிரத்தை அவரால் கட்ட முடியாமல் போகவே ஹிக்கி காவலில் வைக்கப்பட்டார். 1781 ஆம் ஆண்டு ஜூன் மாதத் தில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சி.

1782 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவர் மீண்டும் நீதி மன்றத்துக்குப் பிறிதொரு வழக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டார். வாரன்ஹேஸ்டிங்ஸால் தொடரப்பட்ட இரு வழக்குகளை யொட்டி ஹிக்கிக்கு ஓராண்டு சிறைத் தண்டனையும் ரூபாய் இரண்டாயிரம் அபராதமும் விதிக்கப் பட்டன.

சிறையிலும் இதழ்ப்பணி

சிறையிலிருந்தபடியே ஹிக்கி தம் இதழைத் தொடர்ந்து வெளியிடலானார். அச்சுச் சட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாத காலமானதால் ஹிக்கியின் இந்தச் செயலுக்குத் தடை யேதும் விதிக்க முடியவில்லை. சிறைத் தண்டனை இதழை மட்டுமா தடைப்படுத்தவில்லை? அவருடைய மொழி நடை யையும் அத்தண்டனையால் மாற்ற முடியவில்லை.

"பொதுமக்களுக்குச் சில வார்த்தைகள் (Adresses to the Public) என்னும் தலைப்பிலும் இன்னும் பல பகுதிகளிலும் தனிப்பட்டவர் தாக்குதல் "பெங்கால் கெசட்"டில் தொடர்ந்தது.

ஹிக்கியின் மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டதால் மக்களுக்கு அவர் மீது அனுதாப உணர்வே தோன்றியது. குறை களைத்தானே எழுதுகிறார் - குறைகளுக்குரியவர்கள் திருந்த விரும்பாமல் சொன்னவரையே - நல்ல நோக்கத்தைப் பாராட்ட வில்லை யென்றாலும், பழிப்பதோடும் நிறுத்திக் கொள்ளாமல் தண்டிக்கிறார்களே என்றுதான் பொதுமக்கள் எண்ணினர்.

தொடர்ந்து வந்த இதழ்களில் புதிய புதிய நோக்கில் அரசின் எல்லா அதிகாரிகளும் கண்டிக்கப்பட்டார்கள்.

'பெங்கால் கெசட்' நின்றது

1782ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் 'பெங்கால் கெசட்' நின்றது.

புதிதாக நான்கு குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டன. 'பெங்கால் கெசட்' அச்சாகி வந்த அச்சகத்தில் உள்ள எழுத்துக் களைப் பறிமுதல் செய்வது பற்றியும் ஹிக்கிக்கு எழுதப்பட்டது. அது பற்றித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி அச்செழுத்து களை பறிமுதல் செய்யாத காரணத்தால்,'மாண்பமை நீதிபதி குடி மகனுடைய உரிமையைக் காத்த பெருமைக்கும்' இதழியல்துறை யின் வளர்ச்சிக்குத் தடையாக அமையாத சிறப்புக்கும் உரியவர் களானார்கள்' என்று ஹிக்கி எழுதியுள்ளார்.[1]

யார் அவர் ?

ஹிக்கியின் இதழ் பெற்ற செல்வாக்கைக் கண்ட பலர், இதழின் எழுத்து வன்மைக்கு யார் காரணமாக இருக்கக்கூடும் என்று ஆராயத் தொடங்கினர். ஹிக்கி முறையாகப் படித் தவர் அல்லர் ஆனதால், கல்வியின் அடிப்படையில் அமையும் பண்பாட்டினை அவரிடம் எவரும் எதிர்பார்க்க வில்லை; அது போலவே திறன் கொண்ட எழுத்து வன்மை யையும் எதிர்பார்க்கவில்லை.

வாரன்ஹேஸ்டிங்ஸின் பகையாளரான, சர். பிலிப்ஸ் ஃப்ரான்ஸிஸ் என்பவர்தான் 'பெங்கால் கெசட்'டில் வெளி யாகும் வசைபுரைகளுக்குப் பின்னணியாக இருக்கக்கூடும் என்று அவர்கள் எண்ணினர். ஆனால் அவருக்கும் வாரன் ஹேஸ்டிங்ஸுக்கும் இடைப்பட்ட கருத்து வேறுபாடுகள் 'பெங்கால் கெசட்'டில் வெளிவராததைக் கொண்டு அந்த எண்ணத்தை விட்டொழித்தனர்.[2]

யார் எழுதினாலும், அல்லது பிறர் எழுதத் துணை நின்றா லும், இதழாசிரியர் ஹிக்கியே ஆனமையால் இதழில் வெளிவந்த எல்லாச் செய்திகளுக்கும் அவரே பொறுப்பானார்.

---

1 Margarita Barns, The Indian Press. p. 50.

2 Ibid, p. 47.

இதழ் பற்றிய பொது நோக்கு

ஹிக்கியின் "பெங்கால் கெசட் அல்லது கல்கத்தா அட்வர்டைசர்" இருபத்தேழு மாதங்களே (1780 ஜனவரி முதல் 1782 மார்ச் வரை) நடைபெற்றது.

அவதூறுகளை - பிறர் தனிவாழ்க்கையைப் பற்றிய செய்திகளைத் தரக்குறைவான நடையில் எழுதி, படிப்பவரிடையே ஒருவிதக் கிளர்ச்சியை உண்டாக்கிப் பணம் பெருக்க நடத்தப் பட்ட இதழாகவே அதனைப் பலரும் கருதினர்.

இதழில் சுட்டப்பட்ட குறைகள் உண்மையானவையாக இருந்தாலும், நடையமைப்பில் கருத்து செலுத்தப்பட்டிருந்தால் பாராட்டுக்குரிய இதழாக அது கொள்ளப்பட்டிருக்கும் என்று சிலர் கருதினர்.

குறையுடையவர்கள் "பெங்கால் கெசட்" குறித்து அச்சம் கொண்டே வாழ்ந்தனர்.

ஆயினும் ஹிக்கியின் 'பெங்கால் கெசட்', தனிப்பட்ட பலரும் இதழ் நடத்தும் ஆர்வம் கொள்ளச் செய்த முதல் இதழ் என்னும் பெருமைக்குரியது என்பது உண்மை.

"பெங்கால் கெசட்" 1780 ஜனவரியில் வெளிவந்த பின்னர்,

1780 நவம்பரில் "இந்தியா கெசட்"டும்,

1784 பிப்ரவரியில் "கல்கத்தா கெசட்"டும்,

1785 பிப்ரவரியில் "பெங்கால் ஜர்னலு"ம்,

1785 ஏப்ரலில் "ஓரியண்டல் மாகஸின் அல்லது கல்கத்தா அம்யூஸ்மெண்ட்"டும்,

1786 பிப்ரவரியில் "கல்கத்தா கிரானிகளு"ம்

வெளிவந்தன. இவை யாவும் கல்கத்தாவிலிருந்து வெளிவந்த இதழ்களாகும்.

இந்த ஆர்வம் காலப்போக்கில் சென்னை, பம்பாயில் பரவியது. "பெங்கால் கெசட்" தோன்றிய பத்தாண்டுகளுக்குள் கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய இடங்களிலிருந்து பதினைந்து இதழ்கள் வெளிவரத் தொடங்கின.

ஹிக்கியின் இதழ் வெளிவரும் வரை இதழியல் பற்றி இந்திய மக்கள் ஏதும் அறியாதவர்களாகவே இருந்தனர். இதழ்களின் ஆற்றலை அல்லது பயனை அவர்கள் அறியச் செய்த முதல்வராக ஹிக்கி விளங்கினார். உரிமைகளை வலியுறுத்தும் உணர்ச்சியை மக்கள் பெறச் செய்தவர் அவரே ஆவார். சுதந்திரம் பெறுவதற்கு முன் இந்திய மொழி இதழாசிரியர்கள் இதழ் நடத்துவதில் அடைந்த துன்பங்களுக்கு முன்னோடியாக விளங்கியவர் ஹிக்கி. இதழின் நோக்கிலும் போக்கிலும் வேண்டுமானால், இந்திய மொழி இதழாசிரியர் களுக்கும் அவருக்கும் வேறுபாடு இருக்கலாமே தவிர, அநீதிகளைக் கண்டிப்பது, உரிமைக்காகப் போராடுவது போன்ற பொதுத் தன்மைகள் இருவர்க்கும் ஒன்றாகவே இருந்தன

ஹிக்கியின் "பெங்கால் கெசட்" மூலம்தான், அரசியலில் உள்ள குறைகளையே அவர் குவியலாக்கிச் சொன்னார் என்றாலும், அரசியலை இதழுக்குரிய ஒரு பகுதியாகக் கொள்ளும் எண்ணம் பிற்கால இதழாசிரியர்களுக்கு உண்டாயிற்று எனலாம்.

அரசினரால் குற்றம் சாட்டப்பட்டு இதழின் வளர்ச்சிக்குத் தடை விதிக்கப்படும்போது, பணியாமல் சிறை வாழ்வை ஏற்கும் போக்கைப் பிற்கால இதழாசிரியர்களுக்கு, உணர்த்தியவர் என்ற வகையிலும் ஹிக்கி முதல்வராகின்றார்.

முதல் இதழாசிரியர் பற்றி

இந்தியாவின் முதல் இதழாசிரியரான ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி பற்றி, இதழியல் துறையோடு தொடர்பு கொண்ட பலர்

தங்கள் நூல்களில் குறித்துள்ளனர். அவற்றுள் சிலருடைய குறிப்புகள் இங்குத் தரப்படுகின்றன.

வில்லியம் ஹிக்கி

வில்லியம் ஹிக்கி என்பவர், கல்கத்தாவில் வழக்குரைஞ ராகப் பணியாற்றியவர்; இதழியல் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். "பெங்கால் கெசட்" ஆசிரியர் பற்றித் தமது நூலொன்றில் பின்வருமாறு எழுதுகின்றார்.

> "ஹிக்கி ஒரு மனிதனுக்குத் தேவையான திறமைகளை முழுமையாகக் கொண்டவர். அவை அவரிடம் இயற்கையாகவே அமைந்திருந்தன. எந்த புதிய இயல்பையும் எந்தச் சூழலின் தாக்குதலாலும் அவர் விடுவித்துக் கொண்டதில்லை. அவர் முரட்டுத் தன்மை உடையவராக இருந்தார். அவருடைய அணுகுமுறைகளில் மென்மை இருந்ததில்லை. அதற்குக் காரணம் அவர் கற்றவரல்லர். எனவேதான், எதிர்ப்புகள் நேரும் போதெல்லாம் வன்மையின் எல்லைக்குப் போய்விடுவார். அந்தப் போக்கிற்கு ஏற்பத்தான் அவருடைய திட்டங்களும் செயல்களும் இருக்கும்.
>
> "எவ்வளவுதான் திறமையுடையவராக ஹிக்கி விளங்கிய போதிலும், கல்லாமை, அவருடைய ஆற்றலின் விளக்கத்துக்குத் துணையாயில்லாமல் போய் விட்டது. எனவே, 'நாகரிகம்' போற்றாமல், 'நளினம்' பற்றி எண்ணாமல், இதழ் படிப்பவரின் மன நலமும் கருதாமல் அவர் எழுதினார்.'[1]

---

1 Memoirs of William Hickey, Vol III, pp. 160—161

மர்காரிதா பார்ன்ஸ்

இந்திய இதழியல் துறையில் நெடுங் காலம் தொடர்பு கொண்டிருந்த மர்காரிதா பார்ன்ஸ் என்பவர் 'முதல் இந்திய இதழ்கள்' என்னும் தமது கட்டுரையில் ஹிக்கியின் எழுத்துப் போக்கு பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "ஹிக்கி தமக்குப் பிடிக்காதவர்களை வன்மையாகத் தாக்கி எழுதுவார். அவர்களைப் பற்றி ஒரு நாடகம் அல்லது கவிதைக் கொத்து தயார் செய்து விடுவார். அவற்றைத் தமது இதழின் மூலம் பொது மக்கள் பார்வைக்குள்ளாக்குவார். உண்மையான பெயர்களைப் பயன்படுத்தமாட்டார் என்றாலும், நாடக உறுப்பினர் உரையாடல்களைக் கொண்டு உரியவர் யார் என்பதைப் படிப்பவர்கள் தெரிந்து கொள்ளச் செய்வார். இந்த முறையில் அவர் எழுதியவை அனைத்தும் பலரால் விரும்பிப் படிக்கப்பட்டன.
>
> அவருடைய இதழ் செல்வாக்குடன் விளங்கியது. பெரும்பாலானவர்கள் ஏதேனும் ஒருவகையில் ஆளுவோர்க்கு எதிரான மனப்பான்மையையே கொண்டிருந்ததால் ஹிக்கியின் இதழ் அவர்களின் பாராட்டுக்குள்ளாகியது."[1]

ஜே. என். சானி

காளிநாத் ராயை ஆசிரியராகக் கொண்ட "ட்ரிப்யூன்" இதழில் தம்முடைய பணியினைத் தொடங்கிப் பின்னர், புகழ் கொண்ட "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" இதழின் ஆசிரியராகத் தமது இருபத்தாறாவது வயதிலேயே பொறுப்பேற்று ஐம்பது ஆண்டுக்கும் மேலாக இதழியல் துறையில் வல்லவராக விளங்

1 Margarita Barns, The Indian Press, P. 48.

கிய ஜே. என். சானி ஹிக்கி பற்றித் தமது நூலொன்றில் பின் வருமாறு கூறியுள்ளார்.

> " He was bold, fearless, and inclined to be scurrilous Above all he was irrespressible. Having no political objectives, he concentrated on the personal life of the community. He spared no one! He made sensational exposures about the corrupt dractises of company officials, their qepraved sex life, and their Coercive dealings. He did not even spare warren Hastings himself, or his wife, or the chief justice.
>
> " When Edmund Burke later impeached warren Hastings in the House of commons, some of the material used by him must have been taken from Hicky's Gazette.
>
> " He led the way for many an Indian Hickey to follow in his footsteps." [1]

ஆர். சாமண்ணு

கர்நாடகத்தைச் சேர்ந்த உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவரான திரு. ஆர். சாமண்ணா, " lhe Indian Press - New Bearings" என்னும் தமது கட்டுரையில் ஹிக்கி பற்றி எழுதியிருப்பதாவது:

---

1 J. N. Sahni, Truth About Indian Press, pp. VIII - IX.

"There was nothing very wonderful about the paper except that it was published in India. Hickey was one of those who believed in the old tradition of 'Print the news and raise hell'. This two sheet English language weekly paper was litte more than a scandal rag.

" Luckily this phase of scandal Journalism was short" lived. [1]

வழி வகுத்த முதல்வர்

பெரும்பாலானவர்கள், ஹிக்கி சமூக விரோதச் செய்திகளை வெளியிட்டார் என்றும், அவர் இதழ் எந்த வளர்ச்சிக்கும் துணையாகவில்லை என்றும், தமக்குப் பிடிக்காதவர்களைப் பழிக்கவே அவர் இதழ் நடத்தியுள்ளார் என்றும் கூறியுள்ளதைக் கண்டோம். ஈடு காணம் (தொகை) கட்டுதல், அது கட்ட முடியவில்லை யென்றால் அளிக்கப்பட்ட சிறைத் தண்டனையோடு கூடுதலாகச் சில காலம் சிறை வாழ்க்கை அனுபவித்தல் ஆகிய தண்டனைகள் அவருக்கு வழங்கப்பட்டன.

இவற்றையெல்லாம் படித்த பின்பு ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கியைப் பற்றி நாம் பின்வரும் கருத்துக்களைக் கொள்ளலாம்.

இந்தியாவின் முதல் இதழை நடத்தியவர் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி

அவர், ஆளுவோருடைய குறைகளையும், அதிகாரிகளின் கொடுமைகளையும் சுட்டிக் காட்டினார்; அவர்களின் தனி

1 R. Shamanna, The Press and the People, p. 2I

வாழ்க்கையைப் பற்றி எழுதினார்; அவர்கள் குறையற்றவர் களாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அவற்றை எழுதி னார், குறையுடையவர்கள் பிறருக்கு வழிகாட்டியாக ஆக முடியாது என்று தெளிவுபடுத்தினார்.

அதனால் தொல்லைகள் விளைந்தபோதும், சிறையிலிருந்த போதும் கொள்கைப் பிடிப்புடையவராக இதழைத் தொடர்ந்து நடத்தினார் அவர்.

அச்சுறுத்தல்களுக்கும் தண்டனைகளுக்கும் கலங்கி இதழின் போக்கை அவர் மாற்றவில்லை.

கம்பெனி ஆட்சி, அவர் இதழுக்கு அஞ்சல் சலுகையை நீக்கியபோது, தமது ஏவலர்களைக் கொண்டு விற்பனையைத் தொடர்ந்தார்.

இவையெல்லாம், தமது மக்கள் ஒழுக்கத்தோடு வாழ வேண்டும் என்ற நல்ல நோக்கமே அவருக்கிருந்தது என்பதை வெளிப்படுத்துகின்றன.

ஆயினும், கம்பெனியாரால் அவர் பல கொடுமைகளுக்குள் ளாக்கப்பட்டது ஏன்? ஒழுக்கமற்ற அவர்கள் தங்கள் நலனையே கருதிய அவர்கள், வகுக்கப்பட்ட விதிமுறைகளுக்கு மாறாக வாழ்ந்த அவர்கள் தங்களைப் பற்றிய செய்திகள் ஹிக்கியால் வெளிப்படுத்தப்படுகின்றனவே என்று கொண்ட சீற்றம்தான் அவர்மீது தொடுக்கப்பட்ட வன்முறைச் செயல்களுக்கும் விதிக் கப்பட்ட தண்டனைகளுக்கும் காரணமாகும் என்று கருதலாம்.

'பழிப்பிதழியல்'?

எனவே, ஹிக்கியின் நோக்கத்தில் தவறில்லை என்பது தெரிகிறது. தமது கொள்கை இதுதான் என்பதைத் திட்ட வட்டமாக அறிவித்து, அதற்கேற்பவே இறுதி இதழ்வரை நடத்திச் சென்ற திறன் கொண்டவரைக் 'கொள்கையாளர்',

என்றுதானே சொல்லவேண்டும். திரு ஆர். சாமண்ணா, Scandal journalism என்று ஹிக்கியின் இதழியல் முறையைக் குறித்ததைக் கண்டோம்.

இந்தியாவின் முதல் இதழ்- இரு நூற்றாண்டுகட்கு முன்னர் நடைபெற்ற இதழ் 'பழிப்பிதழியல்' வகையைச் சார்ந்தது என்றால், இன்று - இரு நூற்றாண்டுகட்குப் பின்னரும் 'பழிப்பிதழியல் முறை'யை நம்பித்தான் அல்லது தொடர்ந்து தான் இந்தியப் பேரிதழ்கள் பல வெற்றி நடை இடுவதைக் காண முடிகிறது.

திரு. சானி சொன்னதுபோல, ஆங்கில நாட்டு ஹிக்கி, பல இந்திய ஹிக்கிகளின் தோற்றத்துக்கு வழிவகுத்தார் என்பது தான் பொருந்தும். அவருடைய கூற்றினை மனத்தில் நிறுத்தி எண்ணும்போது, இன்றைய வடமாநில இதழ்கள் பல, பல இதழாசிரியர்களின் அந்தரங்க வாழ்க்கையைத் தங்கள் இதழ் களில் வெளியிடுவதில் போட்டியும் நிறைவும் கொள்வதைக் காண முடிகிறது. இந்தப் போக்கு குறையுடையது தான் என்றாலும் தனிப்பட்டவர்கள் தங்களை சமுதாய போக்கில் மேம்பட்டவர்களாக, முதனிலை வாய்ந்தவர்களாக உயர்த்திக் கொண்டு பிறரையெல்லாம் புண்ணாக்கும்போது, மனம் வருந்துபவர்களுக்கு வேறு என்னே வழி இருந்திட முடியும் என்று எண்ணுவது இயல்புதான். இம்முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று விரும்புவதும் முறையேயாகும்.

ஹிக்கியின் இதழியல் முறைக்கும் மேற்குறிப்பிட்ட இதழ் களின் போக்குக்கும் வேறுபாட்டினை உணரவேண்டும். இன்றைய இந்திய இதழ்களில் பல அவற்றின் ஆசிரியர்கள் பலர் சொந்தப் பகைமைகளை அந்தரங்க உறவுகளோடு தொடர் பாக்கி - அம்பலமாக்கும் 'பழிப்பிதழியல்' நிலைக்குத் தங்கள் இதழ்களைக் கொண்டு செல்கின்றனர். மக்களுக்குச் சிறிதும் பயனாகாத இதுபோன்ற செய்திகளைக் கொண்டு வெளிவரும்

இவ்விதழ்கள், நாட்டின் வளர்ச்சிக்கு எந்த வகையில் துணை யாகிட முடியும்?

ஹிக்கியின் எழுத்துகளால் தாக்குண்டவர்கள் ஆளு வோரும் அதிகாரிகளுமே ஆவர். அவர்களின் கொடுமைகள் ஒரு சார்பு நிலை நாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததாகாது என்பது ஹிக்கியின் கருத்தாக இருந்தது. சட்டத்தைக் காப்பவர்களே சலுகைகளுக்குள் சிக்கிக் கொண்டால் அறம் வழங்கிடும் தகுதி எப்படி விளைந்திட முடியும் என்று எண்ணும்போதும் எழுதும் போதும் சமுதாய நன்மையே ஹிக்கியின் உள்ளத்தில் மேலோங்கியிருந்ததாகத் தோன்றுகிறது.

அவர்கள் குறைகள் தனிப்பட்டதுதான் - அந்தரங்கமானது தான். அந்த அந்தரங்கத்தை அம்பலப்படுத்தினால்தான் அவர்கள் அஞ்சுவார்கள், செய்யும் குறைகள் குறையும் என்று எதிர்பார்த்து ஹிக்கி எழுதிய போக்கு 'இதழியல் அறத்'துக்கு உள்ளானதேயாகும். தனிப்பட்ட சலுகைகளைப் பெறவோ, அல்லது அவர்களை அச்சுறுத்திப் பொருள் பெறவோ அவர் கருதவில்லை. அந்த மனத்தெளிவு இருந்தமையால்தான் அடுக்கடுக்காகத் துன்பங்கள் வந்த போதிலும் 'சரணடையும்' போக்கு அவரிடம் இல்லாமலிருந்தது.

அவருடைய இதழின் நோக்கும் போக்கும் தொடக்கம் முதல் இறுதிவரை மாறாமலிருந்தது.

எனவே, இந்தியாவின் முதல் இதழாசிரியரான ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி,

சிறந்த கொள்கையாளர்
தீமைகளை வெறுத்தவர்
குறைகளை வெளிப்படுத்துவதில் அஞ்சாதவர்

என்று கொள்ளலாம்.

இந்திய இதழ்கள்

4

ஹிக்கி -
கிழக்கிந்தியக் கம்பெனியின்
அச்சாளர்

4

ஹிக்கி - கிழக்கிந்தியக் கம்பெனியின் அச்சாளர்

ஹிக்கி - அச்சாளர்

ஹிக்கி, 'பெங்கால் கெசட் அல்லது கல்கத்தா அட்வர்டைசர்' தொடங்குவதற்கு முன் அச்சாளராக இருந்தார் என்று முன்னர் அறிந்தோம் அல்லவா? அவர் அச்சக உரிமையாளராக இருந்த போது, இதழ் தொடங்குவதற்கு ஓராண்டிற்கு முன்னால் – 1779 ஆம் ஆண்டில் இந்திய ராணுவ அதிகாரியான சர். அயர்கூட் என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, திருத்தப்பட்ட ராணுவ சட்ட திட்டங்களை அச்சிட்டுத் தரும் பணியினை மேற்கொண்டார்.

1780 இல் ''பெங்கால் கெசட்''டைத் தொடங்கிய பின்பு, அரசின் எதிர்ப்புக் கணைகளுக்குப் பல நிலைகளில் அவர்

ஆளானபோதும், சர் அயர்கூட்டிடம் ஒப்புக்கொண்ட பணி யினைக் குறைவில்லாமல் முடித்துக் கொடுத்தார். ஆயினும், அவருடைய இதழின் போக்குக் காரணமாக அவர்மீது அடங்காச் சினம் கொண்டிருந்த ஆட்சியாளர்கள் அவர் பணிக்குரிய ஊதியத்தைத் தராமல் காலம் நீட்டித்தனர்; பதினாறாண்டு கள் கழிந்த பின்னர் அவர் தமக்குச் சேரவேண்டும் என்று குறித்திருந்த தொகையினைத் தராமல், மிகக்குறைந்த அளவு தொகையினையே தந்தனர்.

தங்கள் போக்கினை எவரும் சுட்டுதல் கூடாது என்ற எண்ணம் கொண்ட 'ஆட்சியாளரின் போக்கும்', ஆட்சியாளர் கள் ஒழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும், ஒரு சார்பு உடையவர்களாக இருக்கக்கூடாது என்பதை உணர்த்துவதற் காக உரியவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டி எழுதி நலம் காண விழைந்த 'இதழாசிரியரின் போராட்ட வாழ்வும்' பற்றி இனி, அறிவோம்.

பணியும் பயனின்மையும்

சர். அயர்கூட்டிடம் ஒப்புக்கொண்டபடி ஹிக்கி, 16,800 தாள்களை அச்சிட்டுக் கொடுத்தார். ஒரு தாளுக்கு ரூபா இரண்டு என்று அச்சுக்கூலி பேசப்பட்டது. தாளின் விலை அச்சுக்கூலி, பிற செலவுகள் என்றெல்லாம் சேர்த்து ஹிக்கி ரூபா 35,092க்கு கணக்குக் கொடுத்தார். ஆனால் ஆறு ஆண்டுகள் வரையும் ஹிக்கிக்கு அந்தத் தொகை தரப்படவே இல்லை: சர். அயர்கூட் காலமாகி விடவே ஹிக்கிக்குச் சேர வேண்டிய தொகையை அளிப்பது பற்றி எவரும் கவலை கொள்ளவில்லை.

கொடிய வறுமையிலுழன்ற ஹிக்கி, தம் குழந்தைகளைக் காப்பாற்றும் வகையறியாமல் கம்பெனியாருக்குப் பல கடிதங்கள் எழுதினார். 1785 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாளன்று இராணுவத்துறைச் செயலாளராக இருந்த 'கிட்' என்ப பவர், ஹிக்கி அச்சிட்டுத் தந்தவற்றிற்குரிய சான்றிதழ் வழங்

கினார். அந்தச் சான்றிதழைக் கொண்டு மீண்டும் ஹிக்கி, தமக்குரிய தொகையினை வழங்குமாறு வேண்டி அரசுச் செயலர் 'ப்ருயர்' என்பவருக்கு மே மாதம் 31 ஆம் தேதி ஓர் கடிதம் எழுதினார்.

மீண்டும் ஜூன் மாதம் 4ஆம் நாளன்று, தாம் அச்சிட்டுக் கொடுத்தவற்றிற்காகப் பணமேதும் எவரிடமிருந்தும் பெறவில்லையென்றும், அச்சிட்டவை, தமது அலுவலர் மூலம் உரியவர்க்குச் சேர்ப்பிக்கப்பட்டது என்றும், சர். அயர்கூட்டின் செயலராக இருந்த டர்னியிடம் அவை ஒப்படைக்கப்பட்டன என்றும், அவை டர்னியின் அறையில் வைக்கப்பட்டதைத் தமது அலுவலர் கண்டார் என்றும் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்து ஹிக்கி கடிதம் எழுதினார்.

என்ன காரணம் பற்றியோ ஹிக்கியின் கடிதங்களுக்குரிய செயல்பாடு மேற்கொள்ளப்படவில்லை. மூன்றாண்டுகள் கழிந்த பின்னர் 1788இல் (ஜூலை 24) கம்பெனி செயலர் 'ஹே' என்பவரிடமிருந்து இது தொடர்பாக ஒரு அறிவிப்பு வந்தது. அது 1785 ஜூன் மாதம் 3ஆம் நாள் ஹிக்கி தலைமை ஆளுநர்க்கு எழுதிய கடிதம் பற்றித் தெரிவித்தது.

ஹிக்கியின் கடிதம்

அக் கடிதத்தில்,

காலஞ்சென்ற சர். அயர்கூட்டின் வேண்டுகோளின்படி 1778ஆம் ஆண்டு இராணுவ சட்ட திட்டங்களை அச்சிட்டுக் கொடுக்க அதிகப்படியான ஆட்களை நியமித்துச் செயல்பட்ட நிலையை ஹிக்கி குறிப்பிட்டிருந்தார். அதன் காரணமாக ஏற்பட்ட அதிகச் செலவையும், அரசிடமிருந்து பணம் வராததால் வேலை செய்தவர்க்குரிய ஊதியம் இன்னமும் தரப்படாமலிருப்பதையும் அதனால் அவர்களுக்குத் தான் கடன் பட்டிருப்பதையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அச்சிடப்பட்டவையும், அதற்குத் தரப்பட வேண்டிய தொகையைப் பற்றிய விவரமும் சர் அயர் கூட்டிடம் அவரது பணிமனைக்குச் சென்று தரப்பட்டன அவர் மற்றொரு அதிகாரியான கிட் என்பவரிடம் ஹிக்கியை அனுப்பி, பற்றுச் சீட்டில் கண்ட விவரங்கள் சரியாக உள்ளனவா என்று சரி பார்த்து ஒப்புதல் பெற்றுவரச் சொன்னார். ஆனால் கர்னல் கிட், தமக்கு அச்சுத் துறையில் தொடர்பில்லை என்றும், அதுபற்றி எதுவும் கூறும் தகுதி தமக்கில்லையென்றும் அவற்றை சர் அயர் கூட்டின் பார்வைக்கே மீண்டும் அனுப்பினார். அவர் அதனைத் தலைமை ஆளுநரின் பார்வைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கூறிவிட்டார் என்னும் செய்திகள் ஹிக்கியின் கடிதத்தில் இருந்தன.

உயர்மட்டக் குழுவின் முடிவு

அந்த விண்ணப்பத்தைச் சார்ந்து வெளியிட்ட அறிக்கை, ஹிக்கிக்கு அதுவரையும் அந்த அச்சிடப்பட்டது தொடர்பாகப் பணமேதும் தரப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியது.

சர் அயர் கூட் அது போன்ற காரியங்களைச் செய்யும் அதிகாரத்தை அவருக்குக் கம்பெனியின் நிருவாகக் குழு அளிக்கவில்லை. அது மட்டுமல்லாமல் கம்பெனியின் உயர் மட்டக் குழு ஹிக்கியை நேரில் அழைத்து, சர் அயர் கூட் குறிப்பிட்ட அளவுக்கு அவர் அச்சிட்டுக் கொடுத்தாரா என்பதை அவரிடம் கேட்டறிய வேண்டும் என்றும், அச்சிட்டவற்றுக்குரிய படிகள் தம்மிடமிருந்தால் அவர் அவற்றைக் கொண்டு வந்து காட்டுதல் வேண்டும் என்றும் விரும்பியது. ஹிக்கி உயர்மட்டக் குழுவினரின் எண்ணத்தை நிறைவேற்றினார்.

பின்னர் அக்குழு ஹிக்கியின் கூற்றினை ஏற்றது. கம்பெனியார் சர் அயர் கூட்டின் செய்கைக்கு அதிகாரம் தராத போதும், அவர் ஹிக்கியிடம் ராணுவ விதிகளை அச்சிடக் கொடுத்தது தவறாகும் என்றாலும் அதனைப் பொருட்

படுத்தாமல் ஹிக்கிக்குரிய பணத்தைக் கொடுக்கத்தான் வேண்டும் என்றும் முடிவு செய்தது.

அதற்குப் பின்னர் அக்குழுவினர், கர்னல் கிட்டை அழைத்து, ஹிக்கியின் விண்ணப்பம் குறித்து அவர் அறிந்த வற்றைத் தொகுத்துத் தரும்படி ஆணையிட்டனர்.

கர்னல் கிட் கடிதம்

1788 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாளன்று கர்னல் கிட் எழுதிய கடிதம் ஹிக்கி பற்றிய பின்வரும் விவரங்களைக் கொண்டிருந்தது.

சர் அயர் கூட் ராணுவ விதிகளை ஹிக்கி அச்சிட வேண்டும் என்று கொடுத்தார் என்னும் செய்தி அக்கடிதத்தால் தெளிவாகியது. அதுமட்டுமல்லாமல் அவை அச்சுக்குத் தரப்பட்டதன் காரணமும் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது.

"1769 ஆம் ஆண்டில் சர் ராபர்ட் பார்க்கர் என்பவரால் தயாரித்தளிக்கப்பட்ட விதிமுறைகள் பல திருத்தத்திற்குரியவை யாயிருந்தன. எனவே அவை திருத்தப்பட்டன. சில நுணுக் கங்களைக்கொண்டு மிகப் பெரியதாக இருந்த அந்த விதிமுறை களின் தொகுப்பினை எளிமையான முறையில் தேவையில்லாதன வற்றை நீக்கி, வேண்டும் திருத்தங்களும் செய்து தனித்தனிப் பகுதிகளாக்குவது குழப்பங்களைத் தவிர்ப்பதுடன் பயனுள்ள செயலுமாகும் என்று அயர்கூட் கருதினார். அதனை மேலோர் களும் ஆதரித்தனர்.

"இந்த நிலையில் அச்சகம் வைத்திருந்த ஹிக்கி, வார இதழ் ஒன்று தொடங்குவது குறித்து என்னிடம் மனுச் செய்திருந்தார். அதுமட்டுமல்லாமல் ராணுவ விதிமுறை முறை களின் தொகுப்பினை ஆறு வாரங்கள் அல்லது இரண்டு மாதங் களில் அச்சிட்டுக் கொடுப்பதாகவும் அவர் என்னிடம் தெரிவித்

தார். நான் அவரிடம் ஒரு பகுதியினைக் கொடுத்தேன். அவர் அதனை ஒழுங்காக அச்சிட்டு என்னிடம் தந்தார். தம்முடைய இதழின் காரணமாக தொடர்ந்து அச்சிடும் பணியினைத் தான் மேற்கொண்டு செய்ய இயலவில்லை என்றும் அவர் தெரிவித்தார். சில காலம் கடந்த பின்னர் மீண்டும் என்னை அணுகி, எஞ்சிய பகுதிகளையும் தருமாறு வேண்டினார். நான் மறுத்துவிட்டேன். சர் அயர்கூட்டுக்கும் தெரிவித்தேன். வேறு எவரும் இதனை அச்சிட முன் வராததால், சர் அயர்கூட், மீண்டும் என்னை அழைத்து, அவற்றை அச்சாக்கும் பொறுப் பினை மேற்கொண்டு செயல்பட வேண்டினார்.

"ஹிக்கி தம் அச்சுக்கூலிக்குரிய பணம் பெரும் பொருட்டு மனுச் செய்தாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் 1782 ஆம் ஆண்டில் ஹிக்கி, பண விவகாரம் தொடர்பாக அவர்கட்கு மனுச் செய்திருந்தார் என்பதைப் பின்னர் அறிந்தேன். அவர் அவரிடமிருந்து ஏதேனும் பணம் பெற்றிருந்தாரா என்பதும் எனக்குத் தெரியாது. அப்படி ஏதும் அவர் பெறவில்லை யென்றால், கடும் உழைப்பினைக் கொண்டு செயலாற்றிய ஹிக்கிக்கு உரிய தொகை தரப்படுவது வேண்டும். சர் அயர்கூட் இப்பணிக்குரிய தொகையினைப் பொது மக்களிடமிருந்து திரட்டித் தரவேண்டும் என்று கருதினாரா அல்லது தம்முடைய துறையிலிருந்தே தரவேண்டும் என்று எண்ணியிருந்தாரா என்றும் எனக்குத் தெரியாது."

இப்படி, கடிதப் போக்குவரத்துகள்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தனவே அல்லாமல் 'நான்காண்டுகள்' வரை ஹிக்கிக்குப் பணமேதும் தரப்படவேயில்லை.

'மனித மனம் கொள்க'

1792 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் நாளன்று ஹிக்கி, மீண்டும் ஒரு முறை செயலாளர் ஹே என்பவர்க்குக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதம் அவருடைய உடல்—மனத்

தளர்ச்சிகளைக் காட்டியது. அவருடைய கையெழுத்து மிகவும் தளர்வுற்றிருந்தது. தம்முடைய தள்ளாமையைக் கருத்தில் கொள்வதுடன், தம்முடைய குழந்தைகளின் வருங்கால நிலையையும் மனதில் கொண்டு தமக்குச் சேரவேண்டிய தொகையினைக் காலத்தால் அளிக்கும் கருணைச் செயலைச் செய்ய அவர் வேண்டியிருந்தார். தம்முடைய கடிதத்தைத் தலைமை ஆளுநருக்கு அனுப்பி ஆவன செய்ய வேண்டினார்.

"என்னுடைய அறையை விட்டு வெளியில் வர முடியாதபடி நான் தளர்ந்துள்ளேன். என்னுடைய பணிக்குரிய எல்லா ஆதாரங்களையும் அனுப்பியுள்ளேன். என்னைத் தவிரக் காக்கும் பொறுப்புடைய எவருமில்லாத என் குழந்தைகளின் வாழ்வுக்குத் துணையாகும் மனித மனத்தைக் கொள்ள வேண்டுகிறேன்."

என்று எழுதியிருந்தார் ஹிக்கி.

வழக்காடுக

தலைமை ஆளுநர், ஹிக்கிக்கு 6,711 ரூபாய் தந்து அவர் கணக்கை முடித்துவிடக் கருத்து வெளியிட்டுள்ளார் என்றும், அந்தத் தொகை தமக்குப் போதாது என்று ஹிக்கி கருதினால் அவர் சுப்ரீம் கோர்ட்டிற்கு மனுச் செய்து கொள்ளலாம் என்றும் அவர் எழுதியிருந்தார்.

முறைதானா இது?

தமக்களிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் தொகை மிகக் குறைவானதென்றும், எந்த அடிப்படையில் அல்லது உரிமையில் இவ்வாறு செய்யப்பட்டது என்பது தெரிதல் வேண்டும் என்றும் ஹிக்கி மீண்டும் எழுதினார். அவர் வறுமையின் கோரப்பிடிகளுக்கு ஆளானவர்தான் என்றாலும், செய்த தொழிலுக்குரிய ஊதியம் தரப்படாதபோது பெரிதும் வருந்தினார். எனவே அவர், அச்சிடப்பட்டவற்றுக்

குரிய தாள்களின் விலை, அச்சுக்கூலி, பிற செலவுகள் பற்றி யெல்லாம் எண்ணிப் பார்த்தால் தாம் முன்னர் குறித்ததில் எந்த வகையான மிகைத் தொகையும் சேர்க்கப்படவில்லை என்பது விளங்கும் என்று கடிதம் எழுதிய ஹிக்கி, தமக்குச் சேரவேண்டிய தொகையை மீண்டும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

அச்சிட்டுத் தந்த 16,800 தாள்களுக்கு தாள் ஒன்று ரூபாய் இரண்டு வீதம் அச்சுக்கூலி, தாள் விலை, பிற செலவுகளுமாகச் சேர்ந்து மொத்தம் ரூபாய் 35,092. இதற்கு மூன்றாண்டுக்குரிய வட்டித் தொகை ஆண்டொன்றுக்கு எட்டு சதவிகிதம் வீதம் ரூபாய் 8,425 - 1 - 3. இவ்விரண்டும் சேர ரூபாய் 43,514 - 1 -3 தமக்குச் சேர வேண்டும் என்று தெளிவுபடுத்தினார்.

ஆனால் கம்பெனியார் இதனை ஏற்கவில்லை. அவர் சற்றும் எதிர்பாராத சிறு தொகையினைக் கொடுத்துக் கணக்கைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றே அவர்கள் எண்ணினர்.

மேலும் பல கடிதங்கள்

1793 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதி ஹிக்கி மீண்டும் செயலாளர் ஹேக்குக் கடிதம் எழுதினார். பயன் ஏதும் விளையாமல் போகவே மீண்டும் 1795 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி ஒரு கடிதம் எழுதினார். அதற்கும் பதில் இல்லை.

> "நான் வறுமை காரணமாக மிகுதியும் கடன் பட்டுள்ளேன். சில காலத்திற்குள் கடன் பெற்ற தொகையைத் திருப்பித் தரா விட்டால் நான் சிறை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டி வரும். என் பிள்ளைகள் ஆதரவற்றவர்களாகி விடுவார்கள்."

என்று எழுதியும் பதிலெதுவும் வராத காரணத்தால், ஹிக்கி பத்து நாட்கள் கழித்து - பிப்ரவரி 25 ஆம் நாளன்று தலைமை ஆளுநர் சர். ஜான் ஷோருக்குக் கடிதம் எழுதினார்.

இரண்டு நாட்கள் கழித்து கம்பெனியின் சட்ட ஆலோசக ரான வில்லியம் ஜாக்ஸனுக்கு ஹிக்கி எழுதிய கடிதத்தில் தமக்குத் தருவதாகச் சொன்ன ரூபாய் 6,711 ஐயும் பெற்றுக் கொள்ளத் தாம் தயாராக இருப்பதாகவும், வறுமையின் கொடுமை யிலிருந்து தாம் ஓரளவு விடுபட மறு நாளே அத் தொகையினைத் தந்துதவுமாறும் வேண்டினார். மீண்டும் மார்ச் மாதம் 2 ஆம் நாளன்று நினைப்பூட்டல் கடிதமும் எழுதினார்.

கடைசியாக மார்ச் மாதம் 7 ஆம் தேதியன்று ஜாக்ஸன், ஹிக்கியின் கணக்கைத் தீர்க்கும்படி அரசு துணைக் கருவூலச் செயலர் காலின் ஷேக்ஸ்பியருக்கு எழுதினார்.

ஹிக்கியின் இறுதிக் காலம்

இந்தியாவின் முதல் இதழை வெளியிட்ட அஞ்சா நெஞ்ச ரான ஹிக்கி, தமக்குச் சேர வேண்டிய தொகையினைப் பெற கிழக்கிந்தியக் கம்பெனியோடு பதினாறாண்டு காலம் போராட வேண்டியதாகி விட்டது. ஹிக்கியின் இதழின் போக்கினால் துன்புற்றவர்கள் தீர்த்துக் கொண்ட பழிதான் இது என்று எண்ணத் தோன்றுகிறது. கிழக்கிந்தியக் கம்பெனியார் ஹிக்கிக்குச் செய்த பெருந் துரோகச் செயல் இது என்று எஸ். என். சானி தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஹிக்கியினால் "பெங்கால் கெசட்"டில் பெரிதும் பழிக்கப் பட்டவர் அப்போதைய தலைமை ஆளுநராக விளங்கிய வாரன் ஹேஸ்டிங்ஸ். அவர் 1785-லேயே ஓய்வு பெற்றுத் தாயகம் சென்றவர். அவர் ஓய்வு பெற்ற எட்டாண்டுகட்குப் பிறகு ஒரு முறையும், பதினைந்தாண்டுகட்குப் பிறகு ஒரு முறையுமாக அவருக்கு இரண்டு கடிதங்களை ஹிக்கி எழுதினார். இரண்டி லும் தமக்கு ஒரு பணி கொடுத்து பொருள் பெற வழிகாட்ட

வேண்டியிருந்தார்; கல்கத்தா மார்க்கெட்டில் தம்மை ஒரு மேலாளரின் உதவியாளராக நியமித்தருளவும் வேண்டியிருந்தார்.

ஒரு காலத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸைப் பற்றிக் கடுமையாகத் தமது இதழில் விமரிசனம் செய்த ஹிக்கி, இவ்வேண்டுகோள் கடிதங்களை அவருக்கே எழுத வேண்டிய அவல நிலை ஏற்பட்டு விட்டது.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குச் செல்லும் சரக்குக் கப்பலில் உள்ள மருத்துவப் பிரிவில் ஒரு உதவியாளராகச் சேர்ந்து தாய்நாடு செல்வதைத் தவிர வேறு வழியேதுமில்லை என்று அவருக்கு உணர்த்தப்பட்டது.

இதுகாறும் இந்தியாவின் முதல் இதழை வெளியிட்ட ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கியைப் பற்றியும், அவர் இதழ் பற்றியும், அவருடைய வாழ்வியல் பற்றியும் அறிந்தோம்.

இந்திய இதழ்கள்

5

இந்திய இதழ்கள் - 1
(1780 - 1799)

5

இந்திய இதழ்கள் - 1
(1780 - 1799)

1. கல்கத்தாவில் இதழ்கள்

இந்தியா கெசட்

"இந்தியா கெசட்" என்பது இந்தியாவில் தோன்றிய இரண்டாவது இதழாகும். இவ்விதழ் 1780 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளிவந்தது. இதனை நடத்தியவர்கள் பி. மெஸ்ஸின்க், பீட்டர் ரீட் என்போராவர். இவருள் மெஸ்ஸின்க் நாடகக் குழுக்களோடு தொடர்புடையவர்; பீட்டர் ரீட் உப்பு வணிகர்.

இவர்கள் இருவரும் தங்கள் துறைகளில் பெருங்கருத்துச் செலுத்தினர். இதழைத் தொடங்குவதற்கு முன்னால் இவர்கள் இருவரும் தலைமை ஆளுநருக்கும் ஆட்சிக் குழுவினர்க்கும் ஒரு கடிதம் எழுதினர். அக்கடிதம் வருமாறு :

"மேன்மை மிகு வாரன் ஹேஸ்டிங்ஸ்,
தலைமை ஆளுநர், மற்றும் ஆட்சிக் குழுவினர்,
வில்லியம் கோட்டை, கல்கத்தா. அக்டோபர் 4, 1780

மேன்மை மிக்கீர்!

நாங்கள் இதழொன்று தொடங்குவதாக எண்ணி யுள்ளோம். கல்கத்தாவைத் தவிர மற்ற இடங் களிலுள்ள வாசகர்கள் இதழினைப் பெறும் வகையில் இலவச அஞ்சல் சலுகையைப் பெறத் தங்கள் கருணையை நாடுகின்றோம்.

ஆண்டுக்கொரு முறை மொத்தமாக அஞ்சல் துறையினருக்குச் செலுத்த வேண்டும் தொகையினைப் பற்றித் தாங்கள் கூறுவதை ஏற்க நாங்கள் காத் துள்ளோம்.

இதழினைச் சுற்றி அனுப்பப்படும் மேலட்டையில் இதழின் பெயர் தவிர வேறு எதையும் அச்சிடு வதில்லை என்றும், செய்திகளையோ செய்திக் குறிப்புகளையோ அச்சிடுவதில்லை என்றும், தாங்கள் குறிப்பிடுமாறு பணிக்கும் செய்தியை மட்டும் அச்சிட இசைகின்றோம் என்றும் தெரிவித்துக் கொள்ளு கிறோம்

எங்களிடமுள்ள அச்சகம் மேன்மை மிகு கம்பெனிக்குரியவற்றை அச்சடித்துத்தரும் வாய்ப்பைத் தருமாறு தங்களைப் பணிவோடு வேண்டிக் கொள்ளு வதில் பெருமையடைகிறோம். எங்களிடம் ஒப் படைக்கும் பணியினைக் குறித்த காலத்தில் பிழையறச் செய்து முடிப்போம் என்னும் உறுதி யளிக்கின்றோம்.

தங்களிடம் பணிவுடைய
எளிய ஊழியர்கள்
B. மெஸ்ஸின்க்
பீட்டர் ரீட்

கல்கத்தா கெசட்

1784 பிப்ரவரியில் அரசாங்க ஆதரவுடன் 'கல்கத்தா கெசட்' (Calcutta Gazette) என்னும் இதழ் வெளிவந்தது. இது இந்தியாவில் தோன்றிய மூன்றாவது இதழாகும். ஹார்வி என்பவரை ஆசிரியராகக் கொண்ட 'கல்கத்தா கெசட்' அரசினரின் செய்திகளை வெளியிடும் இதழாக விளங்கியது.

பெங்கால் ஜர்னல்

1785 பிப்ரவரியில், 'தி பெங்கால் ஜர்னல்' (The Bengal Journal) என்னும் இதழ் வெளிவந்தது.

தாமஸ் ஜோன்ஸ் என்பவர் இதன் உரிமையாளர். இதழ் தொடங்கிய ஒரு மாதத்திற்குப் பின்னர் இவர் அஞ்சல் சலுகைக்காகக் கம்பெனியின் மேல் மட்டக் குழுவினர்க்கு வேண்டுகோள் விடுத்தார்.

மெஸ்ஸின்க், பீட்டர் ரீட் போன்று இவரும் தமது அச்சகத்திற்கு அரசின் வெளியீடுகளை அச்சடித்துத் தரும் வாய்ப்பினைத் தருமாறு வேண்டினார், அதுமட்டுமல்லாமல் அரசாங்கத்தின் விளம்பரங்கள், ஆணைகள் முதலியவற்றைத் தமது இதழில் கட்டணம் ஏதுமில்லாமல் வெளியிட முன் வருவதாகவும் தெரிவித்தார்.

வில்லியம் டுயன்

1791 - இல் 'பெங்கால் ஜர்னலி'ன் ஆசிரியராக வில்லியம் டுயன் (William Duane) பொறுப்பேற்றார்.

இவர் வட அமெரிக்காவைச் சேர்ந்தவர்; ஐரிஷ் மரபினர்; 1787 இல் இந்தியாவுக்கு வந்தவர்; கிழக்கிந்தியக் கம்பெனியில்

வருவாய்த் துறையில் பணியாற்றியவர். இவர் அச்சக உரிமையாளர்.

இவர் 'பெங்கால் ஜர்னலு'டன் தொடர்புடைய டிம்கின், காசன் என்னும் இருவருடன் பணியாளராகச் சேர்ந்து, 1791 இல் அப்பத்திரிகையின் ஆசிரியரானார்.

இவர் ஆசிரியப் பொறுப்பேற்ற சிறிது காலத்திற்குள் வங்காள அரசின் சீற்றத்திற்கு ஆளானார். மாராத்தியரை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்த தலைமை ஆளுநர் கார்ன்வாலிஸ் இறந்துவிட்டார் என்று செய்தி இவர் வெளியிட்டமையே அதற்குக் காரணம். அச்செய்தி ஒரு பிரெஞ்சுக் காரர் மூலமாகத் தமக்குக் கிடைத்தது என்றும் அவர் கூறினார்.

அப்போது பிரெஞ்சு ஆட்சியை இந்தியாவில் நிலை நிறுத்தும் காரியங்களில் தலைமை யேற்றுச் செயல்பட்ட கர்னல் டி கானப்ளீ என்பவர் தம்மைத்தான் டூயன் குறிப்பிடுகின்றார் என்று கொண்டு, இதுபற்றி விசாரிக்குமாறு வங்க அரசுக்குக் கடிதம் எழுதினார்.

நாடு கடத்தலாமா?

பிரெஞ்சுக் கர்னலிடம் மன்னிப்புக் கேட்குமாறு டூயன் வற்புறுத்தப்பட்டார். ஆனால் டூயன் இதழிலேயே மறுப்பு எழுதி விடுவதாகச் சொன்னார். கார்ன்வாலிஸ் பொறுப்பேற்றுச் செயல்பட வேண்டிய செயல்கள் பலவாக இருந்தமையால் இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஆரம்ப நிலையிலேயே அறிந்துகொள்ள அவர் விரும்பினார். தமக்கு முன்னுள்ள பிரச்னைகளில் பிரெஞ்சுக்காரர்களோடு கருத்து வேறுபாடு கொள்ளும் நிலை நேர்வதை அவர் விரும்பவில்லை.

எனவே சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்த பின்னர், டூயனை நாடு கடத்துவது என்று அவர் தீர்மானித்தார்.

ஆனால் பிரெஞ்சு அரசாங்கத்தின் இந்தியப் பிரதிநிதியாக விளங்கிய என். ஃப்யூமிரான் என்பவர், கர்னல் டி கானப்லி இறந்து விட்டதாலும், டுயன் சில தண்டனைகளை அநுபவித்து விட்டதாலும் அவரை நாடு கடத்துவது பற்றிப் புனராலோசனை செய்வது நலம் என்று கூறியதால் டுயனை நாடு கடத்தும் யோசனையை அரசு கைவிட்டது. ஆனால் அவர் தொடர்ந்து "பெங்கால் ஜர்னலி"ன் ஆசிரியராக இருக்க அரசு அனுமதிக்கவில்லை.

இண்டியன் வோர்ல்ட்

பின்னர் டுயன் "இண்டியன் வோர்ல்ட்" (Indian World) என்னும் இதழை 1791 டிசம்பரில் தொடங்கித் தொடர்ந்து மூன்றாண்டுகள் நடத்தினார். "இந்த மூன்றாண்டுகளில் என்னுடைய வளர்ச்சி எந்த அளவிலும் தளர்வுறவில்லை" என்று அவர் கூறியுள்ளார். ஆயினும் அரசின் தொல்லைகள் குறைந்த பாடில்லை.

"இண்டியன் வோர்ல்டி"ல் எவரும் விளம்பரம் செய்தல் கூடாது என்றும், எவரும் அதனைப் படித்தல் கூடாது என்றும் அரசினரால் மறைமுகத் தடைகள் விதிக்கப்பட்டன, 1794 இல் அவரைக் கைது செய்து நாடு கடத்தும் முயற்சிகள் இரண்டாம் முறையாக மேற்கொள்ளப்பட்டன.

வன்முறைத் தாக்குதல்

கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிப் போக்கினை அவர் கடுமையாக எதிர்த்து எழுதி வந்தார். 14 - 3 - 1794 இல் டுயன், அரசுச் செயலாளரான ஹே என்பார்க்கு எழுதிய கடிதத்தில், ஐரோப்பியர் ஒருவரின் தலைமையில் பலரைக் கொண்ட ஒரு கூட்டம் தமது இல்லத்துக்கு வந்து தமது தலைமயிரைப் பிடித்து வெளியில் இழுத்ததுடன் நில்லாமல், தொடர்ந்த அந்த நிலையிலேயே தெருவிலும் நடத்தி வந்து,

ஓரிடத்தில் இருக்கச் செய்திருப்பதாகவும், அந்த இடம் சாதாரண வழக்குகளை விசாரிக்கும் சிறியதொரு வழக்கு மன்றமாக இருக்குமென்று தாம் எண்ணுவதாகவும், தமக்கு இழைக்கப் பட்ட இக்கொடுமை தலைமை ஆளுநரான சர். ஜான் ஷோருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று விரும்புவதாகவும் எழுதியிருந்தார்.

மீண்டும் தொல்லை

சர் ஜான் ஷோர், காரன்வாலிஸுக்குப் பின் 1793 இல் தலைமை ஆளுநராக வந்தார். அவர் டூயனை நாடு கடத்துவதில் ஆர்வம் காட்டினார். 1794 ஜூன் மாதம் 2ஆம் நாள் இராணுவ வீரர் பலர் அவர் வீட்டுக்குச் சென்று பூட்டை உடைத்து வீட்டினுள் நுழைந்து சந்தேகத்துக்கிடமான பொருள்கள் உள்ளனவா என்று ஆராய்ந்தனர்.

இதுபோன்ற இழி செயல்கள் தம்மைத் தாக்குவானேன் என்று தெரிவிக்குமாறு மேல் நீதி மன்றத்துக்கு டூயன் மனுச் செய்தார். அதற்குப் பதிலேதும் இல்லையென்றாலும், அரசு அவரை இங்கிலாந்துக்கு அனுப்புவதில் ஆர்வம் கொண்டுள்ளது என்னும் செய்தி தெரிவிக்கப்பட்டது.

அறிக்கைகள் பேசும்

டூயன் தமக்குத் தொடர்ந்து தரப்படும் தொல்லைகளை நேரில் தலைமை ஆளுநரிடம் விளக்க விரும்பினார். அது பற்றித் தலைமை ஆளுநரின் தனி அலுவலருக்குக் கடிதம் எழுதினார். தலைமை ஆளுநரைக் காண வாய்ப்பு கிடைக்க் வில்லை என்றால் தம்மீது தொடுக்கப்படும் அடக்கு முறைகளின் கொடுமைகள் குறித்துத் தாம் ஏற்கனவே தயாரித்து அச்சிட்டு வைத்துள்ள அறிக்கைகளை மக்களிடையே வழங்க நேரிடும் என்று எச்சரித்தார்.

டுயன் நாடு கடத்தப்பட்டார்

நிலைமைகளை உணர்ந்த சர். ஜான் ஷோர் உடனடியாக டுயனுக்குப் பேட்டி வழங்க இசைந்தார். டுயன் தலைமை ஆளுநரின் மாளிகைக்கு வரவழைக்கப்பட்டார். அங்கு அவர் ஆளுநரின் தனி அலுவலரோடு பேசிக் கொண்டிருக்கும்போதே கைது செய்யப்பட்டார். வில்லியம் கோட்டையில் இரண்டு நாட்கள் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் அவர் இந்தியச் சரக்குக் கப்பலின் மூலம் இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப் பட்டார். அவருடன் அவர் வளர்த்து வந்த மூன்று அனாதைச் சிறுவர்களும் அனுப்பப்பட்டனர்.

இந்தியாவில் அவருக்குச் சொந்தமாக இருந்தவை எவையும் அவருக்குத் தரப்படவில்லை. அவற்றுக்குரிய நஷ்ட ஈடாகவும் எதுவும் அளிக்கப்படவில்லை.

அரோரா

இங்கிலாந்தில் உரியவர்களிடம் தமது நிலைமை குறித்து டுயன் முறையீடு செய்தும் பயனில்லாமல் போயிற்று. பின் அவர் அமெரிக்காவுக்குச் சென்றார். பிலடெல்பியாவிலிருந்து 'அரோரா' (Aurora) என்னும் இதழைத் தொடங்கி நடத்தினார். பிரிட்டிஷாருக்கு எதிரான தீவிர இதழாக 'அரோரா' விளங்கியது.

சர். ஜான் ஷோரின் கடிதம்

டுயன் தொடர்பாக தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் சர். ஜான் ஷோர் தனிப்பட்ட வகையில் ரைட் ஹானரபிள் ஹென்றி டுண்டாஸ் என்பவருக்கு 1794 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாளன்று எழுதிய கடிதத்தைக் காண்போம்.

"கல்கத்தாவில் நடைபெறும் நம்முடைய இதழ்களின் போக்கு அச்சத்தைத் தருவதாக உள்ளது. அவை தொடர்ந்து நடைபெறுவது நல்லதல்ல என்று தோன்றுகிறது. ஒரு இதழின் ஆசிரியரை ஐரோப்பாவிற்கு அனுப்பிவிட நான் கட்டளையிட்டுள்ளேன். அவருடைய பெயர் வில்லியம் டுயன். என்னுடைய இம்முடிவை நீங்கள் ஏற்பீர்கள் என்றே எண்ணுகிறேன்.

"டுயனின் நடவடிக்கை, கம்பெனியாரின் பாதுகாப்புக்கு அவர் உரியவரில்லை என்பதைத் தெளிவாக்கி விட்டது என்று நான் கொண்டுள்ள முடிவை நீங்களும் ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறேன்."[1]

அரசினரின் சீற்றத்திற்கு உள்ளானவர்கள் நாடு கடத்தப்படுவார்கள் என்பதற்கு 'முதற் சான்றாய்' டுயன் நாடு கடத்தப்பட்டது அமைந்தது.

தொடர்ந்து வந்த இதழ்கள்

1785 ஏப்ரலில், "ஓரியண்டல் மேகஸைன் அல்லது கல்கத்தா அம்யூஸ்மென்ட்" (Oriental Magazine or Calcutta Amusement) என்னும் மாத இதழ் வெளி வந்தது. இந்தியாவில் வெளிவந்த முதல் மாத இதழ் இதுவாகும்.

1786 ஜனவரியில் "கல்கத்தா கிரானிக்கிள்" என்னும் இதழ் வெளிவந்தது.

ஹிக்கியின் முதல் முயற்சியின் விளைவான "பெங்கால் கெசட்"டுக்குப் பின்னர்—ஆறு ஆண்டுகளுக்குள் கல்கத்தாவில் ஒரு மாத இதழும் நான்கு வார இதழ்களும் தோன்றியதைக் கண்டோம்.

---

1 Margarita Barns, The Indian Press, p 66.

மேலும் பல இதழ்கள் (1790-1799)

கல்கத்தாவில் 1790 ஆம் ஆண்டிற்குப் பின்னரே இதழியல் பெருவளர்ச்சி பெற்றது.

1794 இல் "ஏஷியாட்டிக் மிர்ரர்" சார்லஸ் கே. ப்ரூஸ், ஜான் ஸ்கூல்பிரட் என்போரால் தொடங்கப்பட்டது. சார்லஸ் கே. ப்ரூஸ் இதழின் ஆசிரியராக விளங்கினார்.

தாமஸ் ஹாலிங்பரி, ராபர்ட் கீலன் என்போர் 1795 இல் "கல்கத்தா கூரியர்" என்னும் இதழைத் தொடங்கினர். இவர்கள் இருவருமே இதழின் ஆசிரியர்களாயிருந்தனர்.

"பெங்கால் ஹர்க்காரு" என்னும் இதழ் 1795 இல் தொடங்கப்பட்டது. (இதில் கருத்து வேறுபாடு உள்ளது.) வில்லியம் ஹண்டர் இதழின் உரிமையாளராகவும், ஆசிரியராகவும் விளங்கினார். 1798 இல் டாக்டர் சார்லஸ் மெக்ளீன் இவ்விதழின் ஆசிரியப் பொறுப்பேற்றார்.[1]

1796 இல் ஹால்ட் மெக்கன்லி, எச். டி. வில்சன் ஆகியோர் "டெலிகிராப்" இதழைத் தொடங்கினர். ஹால்ட் மெக்கன்லி ஆசிரியராக விளங்கினார்.

1798 இல் ஆர்ச்பால்ட் தாம்ஸன், பால் பெர்ரீஸ், மார்லி கிரீன்வே ஆகியோர் பொறுப்பில் "கல்கத்தா மார்னிங் போஸ்ட்" வெளி வந்தது. இதழின் ஆசிரியர்களாக இம் மூவருமே குறிக்கப்படுகின்றனர். தொடக்கத்தில் இவ்விதழின் ஆசிரியராக இருந்த புஷ் என்பவர் சிறிது காலத்திற்குள் தமது பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

"ஓரியண்டல் ஸ்டார்" என்னும் இதழ் 1798 இல் ரிச்சர்ட் ப்ளெம்மிங் என்பவரால் நடத்தப்பட்டது.

---

1 J. Natarajan, History of Indian Journalism, p. 8

"இந்தியா கெசட்" என்னும் இதழ் வில்லியம் மாரிஸ் வில்லியம் ஃபார்லி, ஜே. டி. வில்லியம்ஸ் என்போரால் நடத்தப் பட்டது.

இவையே அல்லாமல்,

"இண்டியன் அப்பல்லோ" (1795) "ரிலேட்டர்" (1799)

என்னும் இதழ்களும் நடைபெற்றன.

இவ்வெளியீடுகளினால் இதழ்களின் பயனை ஆளுவோர் உணர்ந்தனர்; அரசாங்கத்தின் நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகள் எல்லா இதழ்களிலும் வெளி வரச் செய்வதில் ஆர்வம் கொண்ட னர்; இதழாசிரியர்களைக் கூட்டிப் பேசும் பழக்கமும் கொண்டனர்.

CALCUTTA GAZETTE;

OR,

ORIENTAL ADVERTISER.

PUBLISHED BY AUTHORITY

Vol. I. THURSDAY, MARCH [illegible] 1784. [No. [illegible]]

ADVERTISEMENT.

THE Hon. the GOVERNOR GENERAL AND COUNCIL having [illegible] GAZETTE to publish a list [illegible] under their [illegible] the Heads of Offices [illegible] of the Company [illegible] the Hon. Company through the channel of the Paper. W. BRUERE, Sec.

[illegible]

THE Hon. the GOVERNOR GENERAL and COUNCIL, having received two presentments from the Grand Jury containing [illegible] committed by the [illegible]

[illegible] DO HEREBY require and command all Captains and [illegible] of [illegible] Ships and other Vessels [illegible] out their people from [illegible] before the [illegible] in the morning [illegible] after the hour of [illegible] the evening, and it is hereby [illegible] that if any Portuguese [illegible] shall be found in the town within the [illegible] hours, they will be apprehended by the Superintendant of the [illegible] and shall suffer such other punishment as the circumstances under which they may be apprehended shall merit.

By Order of the Hon. the Governor-General and Council,

W. BRUERE, Sec.

[illegible]

NOTICE IS HEREBY GIVEN, that the Hon. the Governor-General and Council, have resolved to keep the treasury open for the receipt of money upon [illegible] for bills upon the Court of Directors, and that it will remain open until the [illegible] of April next to receive [illegible] sums as they may think proper. The bills for money so paid in will [illegible] at the rate of [illegible] per [illegible] to be dated [illegible] 1784, and to be [illegible] after that date as they [illegible] at the [illegible] of [illegible] ings and one penny per Current Rupee and made payable at three hundred and sixty five days Sight with an option reserved to the Court of Directors to extend the term of payment to one two or three years longer, allowing an Interest of five per Cent per Annum upon the period of such extension.

By Order of the Hon. the Governor General and Council,

W. BRUERE, Sec.

To be SOLD by Public Auction at Mess. Williams & [illegible] Auction-room,

ON Friday next the [illegible] [illegible]

[illegible]

The Calcutta Gazette, Calcutta, March 4, 1784

2. சென்னை இதழ்கள்

மெட்ராஸ் கூரியர்

சென்னையில் 1785ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 12 ஆம் நாளன்று 'மெட்ராஸ் கூரியர்' என்னும் வார இதழ் வெளி வந்தது.

சென்னையிலிருந்து வெளிவந்த முதல் இதழ் இது.

அரசு இதழ்

'மெட்ராஸ் கூரியரை'த் தொடங்கியவர் ரிச்சர்ட் ஜான்சன் (Richard Johnson) என்பவர். இவர் அரசாங்க அச்சாளராக இருந்தவர்.

இவ்விதழ் அதிகார பூர்வமான அரசிதழாகவே விளங்கியது.

இவ்விதழ் வெளிவருவதற்கு முன்னர் அரசாங்க அறிவிப்புகள் எல்லாம் 'ஸௌத் ஸீ கேட்' எனப்பட்ட செயின்ட்ஜார்ஜ் கோட்டையின் கதவுகளில் ஒட்டப்பட்டிருக்கும். இப்போது அவை இந்த இதழிலேயே வெளிவந்தன.

இது பற்றிய அரசாங்கத்தின் அறிக்கை, அரசாங்கத்தின் குறிப்பேடுகளில் காணப்படுகிறது.

"அரசாங்கச் செயலாளர்கள் அல்லது அதிகாரிகள் கையொப்பமிட்டு, அரசின் இலச்சினையோடு கூடிய எல்லா அறிக்கைகளையும் வெளியிடும் உரிமை மெட்ராஸ் கூரியருக்குத் தரப்படுகிறது. இது தவிர இயக்குநர் குழுவினரின் தீர்மானங்களும் ஆணை களும் அறிவிப்புகளும் கூட மெட்ராஸ் கூரியரில் வெளி வரும். கம்பெனியைச் சேர்ந்த தனிப்பட்ட ஒருவர்க்கோ அல்லது பலர்க்கோ வழங்கப்பட்ட ஆணைகள் அல்லது அறிவிப்புகள் பற்றிய குறிப்பு களும் இவ்விதழில் வெளியிடப்படும்."[1]

இதழின் அமைப்பு

'மெட்ராஸ் கூரியர் 20″ × 12″ அளவுள்ளது; நான்கு பக்கங் களைக் கொண்டது; செய்திகள் மிகுதியாக இருக்கும்போது ஆறு பக்கங்களுடனும் வெளிவந்தது; சென்னை மாநிலத்தில் மட்டும் இலவச அஞ்சல் சலுகை பெற்றது. தனி இதழின் விலை ரூபா ஒன்று.

ஆங்கில நாட்டின் இதழ்களிலிருந்து கொள்ளப்பட்ட செய்திகளே இதழின் முதல் இரண்டு பக்கங்களை நிரப்பின. மூன்றாம் பக்கத்தில் ஆசிரியர்க்குக் கடிதம் என்னும் பகுதியும் இந்தியச் செய்திகளும் இடம் பெற்றன. நான்காம் பக்கத்தில் கவிதைகளும் விளம்பரங்களும் இருந்தன.

அரசு உதவி

1786 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் புதிய அச்சு இயந்திரங் களும் அச்செழுத்துகளும், அச்சுத் தொழிலுக்குத் தேவையான பிற கருவிகளும் இங்கிலாந்திலிருந்து ரிச்சர்ட் ஜான்சனால் வர வழைக்கப்பட்டன. அவை எந்தவித வரிகளுக்கும் உள்ளாகாமல் இறக்குமதி செய்து கொள்ள அரசாங்கம் உதவியது.

---

1 Margarita Barns, The Indian Press, p. 57

ஹியூக் பாய்ட்

இவர் டப்ளின் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்; சிறந்த அறிஞர்; கோல்ட்ஸ்மித், திருமதி மெக்காலே ஆகியோரின் நண்பர்; ஆர்க்காட்டு நவாப்பின் ஏஜெண்டான லாஸின் மெக்ளீன் என்பவருக்கு அறிமுகமானவர். பாய்ட், நவாப்புக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் இருந்து வந்த பகைமையை மெக்ளீன் மூலம் அறிந்தார். நவாப் சார்பாக எண்ணற்ற கடிதங்களை இவர் லண்டனிலிருந்து வெளியான 'பப்ளிக் அட்வர்டைசர்' என்னும் இதழில் 1778ஆம் ஆண்டில் எழுதினார்.

சென்னை ஆளுநராக மக்கார்த்தி பிரபு நியமிக்கப்பட்ட போது, அவருடன் அவருடைய இரண்டாம் செயலாளர் என்னும் தகுதியோடு லண்டனிலிருந்து சென்னைக்கு 1781இல் பாய்ட் வந்தார்.

1782-இல் டச்சுக்காரர்களுக்கு எதிர்ப்பாக, கண்டி அரசரின் உதவியைப் பெறுவதற்காக இலங்கைக்கு இவர் அனுப்பப்பட்டார்; இலங்கையிலிருந்து திரும்பும்போது பிரெஞ்சுக்காரர்களால் பிடிக்கப்பட்டு மொரீஷியஸ் தீவில் சிலகாலம் காவலில் வைக்கப்பட்டார். விடுதலையடைந்தபின் பாய்டுக்குக் கிழக்கிந்தியக் கம்பெனி, அவருடைய தொண்டையும் மொரீஷியஸில் அவர் அடைந்த துன்பத்தையும் உளங்கொண்டு 6,000 ரூபா வழங்கியது. அப்போதுதான் அவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியராகப் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார்.

1789இல் இவர் 'மெட்ராஸ் கூரியரி'ன் ஆசிரியரானார். ஆனால் இதழாசிரியர் பணியையும், கம்பெனியின் அலுவலையும் இவரால் இணைத்துச் செய்ய முடியவில்லை. ஒரு வேலையின் காரணமாக மற்றொரு வேலை பாதிக்கப்படுவதாகச் சொல்லி 1791இல் இவர் தமது இதழாசிரியப் பொறுப்பிலிருந்து விலகினார்.

ஹர்க்காரு

1793இல் ஹியூக் பாய்ட் 'ஹர்க்காரு' என்னும் இதழினைத் தமது சொந்தப் பொறுப்பில் தொடங்கினார். ஆனால் அந்த இதழினைத் தொடர்ந்து நடத்த முடியாத வகையில் இவர் 1794ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் காலமானார். இறக்கும்போது இவர் மிகவும் வறுமையிலிருந்தார்.

கூரியரின் செய்திகள்

'மெட்ராஸ் கூரிய'ரின் சில இதழ்களில் வெளிவந்த செய்திகளைக் காண்போம்.

விளம்பரப் பகுதியில் கல்வி நிலையங்கள் தொடர்பானவையே மிகுதியாக இருந்தன.

1790 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 27ஆம் நாளன்று வெளிவந்த இதழில் உள்ள விளம்பரம் இது:

> "ஏ. எம். ஜான்ஹோம்ஸ், கூடிய விரைவில் கறுப்பர் பட்டணத்தில் (Black town) குழந்தைகளுக்காக ஒரு கல்வி நிலையத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளார். அப்பள்ளியில் படிக்கவும் எழுதவும் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படும். கணக்கு, வரலாறு, பிரெஞ்சு, கிரீக், லத்தீன் முதலியனவும் சொல்லித் தரப்படும்.
>
> "மிஸ்டர் ஹோம்ஸ் நன்கு கற்றவர். அவர் தம்மிடம் ஒப்படைக்கும் குழந்தைகள் ஒழுக்கம் உடையவர்களாக விளங்கச் செய்வதில் பெருங்கருத்து செலுத்துவார்.
>
> "சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள ஆண்களும் பெண்களும் தங்கள் குழந்தை

களில் நல்ல எதிர்காலத்தை முன்னிட்டு, அவர்களைப் பொறுப்பாகக் கவனித்துக் கொள்ள உறுதியளிக்கும் மிஸ்டர் ஹேராம்ஸூடன் மக்கள் தொடர்புகொள்ள வேண்டப்படுகிறார்கள்."

1791ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 15ஆம் நாள்வெளி வந்த விளம்பரம் இது.

"பெண்கள் பள்ளி : திருமதி மர்ரே தன் தோழியர்க்கும் பொதுமக்களுக்கும் தெரிவிப்பதாவது :

"அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் கறுப்புப் பட்டணத்தில் அரசு அனுமதியுடன் உணவு வசதியுடன் பெண்கள் தங்கிப்படிக்கும் பள்ளியொன்று தொடங்க உள்ளேன். லண்டன் மாநகரத்தில் நடைபெறும் பள்ளிகளைப் போலவே இது சிறப்பாக நடத்தப்படும்.

"பள்ளியில் சேரும் பெண்கள் அன்பாகக் கவனித்துக் கொள்ளப்படுவார்கள்; கருத்துடன் கற்பிக்கப்படுவார்கள். மென்மையாக நடத்தப்படுவார்கள். ஒழுக்கத்துறையில் கடுமையாகக் காக்கப்படுவார்கள்."

புத்தாண்டுக் கொண்டாட்டம் பற்றிக் கூரியரில் வந்த ஒரு செய்தி இது:

"புத்தாண்டு இரவின்போது லேடி ஓக்கலீனின் நடன நிகழ்ச்சி நெஞ்சைவிட்டு அகலாத ஒன்றாகும்.

"மாலை முதலே நடன அரங்கில் மேசை நாற்காலிகள் அலங்காரமாகப் போடப்பட்டிருந்தன. இந்த நாட்டின் கலை நிகழ்ச்சிகள் மாலை முழுவதும் நடைபெற்றன. குறித்த நேரத்தில் தொடங்கிய நடன நிகழ்ச்சிகள் இரண்டுமே கண்ணுள் நிலைக்கின்றன.

"காலை இரண்டு மணி வரையில் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. மக்கள் கூட்டம் மண்டபத்தை மறைத்திருந்தது."[1]

மெட்ராஸ் கெசட்

1795 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆர். வில்லியம்ஸ் என்பவரால் "மெட்ராஸ் கெசட்" என்னும் வார இதழ் வெளியிடப் பட்டது. இது சென்னையில் தோன்றிய இரண்டாவது இதழாகும்.

இவ்விதழின் தோற்றம் குறித்து "மெட்ராஸ் கூரியரி"ன் உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். புதிய இதழின் வெளியீட்டிற்கு அனுமதி கொடுத்தது, முதல் இதழின் வளர்ச்சியையும் வாழ்வையும் தடை செய்வது போன்றதாகும் என்னும் தங்கள் கருத்தினை அவர்கள் அரசுக்குத் தெரிவித்தனர். ஆனால் அரசு அதுபற்றி ஏதும் கருதாமல், இரண்டு இதழ்களுக்கும் தங்கள் விளம்பரம் தருதல், செய்திகள் தருதல் போன்ற உதவிகளைச் செய்தனர்.

புதிய இதழ் - 'மெட்ராஸ் கெசட்'டின் உரிமையாளர்கள் பெர்சிய மொழி, பிற இந்திய மொழிகளின் எழுத்துகளைப் பயன் படுத்துவதில் ஆர்வம் காட்டினர்.

இண்டியன் ஹெரால்ட்

1795 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் தேதியன்று கிழக்கிந்தியக் கம்பெனியின் ஒப்புதலின்றி 'இண்டியன் ஹெரால்ட்' (Indian Herald) என்னும் இதழ் ஹம்ப்ரீஸ் என்பவரால் வெளியிடப் பட்டது.

---

1 A. A. Nair, Peeps at the Press in South India, p.56.

இவர் 1794 இலேயே இதழ் ஒன்று 'தொடங்க வேண்டு மென்று அரசாங்கத்தின் இசைவைக் கோரியிருந்தார். ஆனால் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவேதான் அவர் எந்த அனுமதியும் பெறாமல் 'இந்தியா ஹெரால்டை'த் தொடங்கி விட்டார்.

இவ்விதழ் அரசாங்கத்திற்கெதிர்ப்பான செய்திகளையும், வேல்ஸ் இளவரசர் பற்றிய அவதூறான செய்திகளையும் வெளி யிட்ட காரணத்தால் அரசாங்கம் சினந்தது. இதழாசிரியர் ஹம்ப்ரியைக் கைது செய்வதென்றும் அவரை இங்கிலாந்துக்கு அனுப்பி விடுவதென்றும் அரசு தீர்மானித்தது. அவ்வாறே அவர் கைது செய்யப்பட்டார்; கப்பலில் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். ஆனால் வழியில் அவர் கப்பலிலிருந்து தப்பிவிட்டார்.

இதழ் தணிக்கைச் சட்டம்

இக்காலத்தில்தான் முதன் முதலாகச் சென்னையில் இதழ் தணிக்கைச் சட்டம் புகுத்தப்பட்டது. 1795 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் நாளன்று 'மெட்ராஸ் கெசட்' ஆசிரியர் அரசாங்க அறிவிப்புகளை அதிகாரிகளின் இசைவின்றி வெளி யிடுதல் கூடாதென்று அறிவுறுத்தப்பட்டார். இராணுவச் செயலாளரிடம் அவற்றைக் காட்டி அவர் ஒப்புதல் பெற வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.[1]

கவர்ன்மெண்ட் கெசட்

இதே ஆண்டில் 'கவர்ன்மெண்ட் கெசட்' என்னும் இதழினைக், கிழக்கிந்தியக் கம்பெனியின் வானியல் அறிஞரான ஜான் கோல்டின்ஹாம் என்பவர் தொடங்கினார். இவ்விதழ் சென்னை எழும்பூரில் அரசு தொடங்கிய அச்சகத்தில் அச்சா யிற்று.

---

1 J. Natarajan, History of Indian Journalism, p. 6.

இவர் பிளாசி, சீரங்கப்பட்டணம் ஆகிய இடங்களில் நடை பெற்ற போர்களில் ராபர்ட்கிளைவ் பெற்ற வெற்றிகளின் நினைவுச் சின்னமாக விருந்தினர் மாளிகை ஒன்றினைச் சென்னையில் 1803இல் கட்டினார். கிளைவ் காலம் முதல் சென்னை ஆளுநர் கள் விருந்தினரைப் போற்றும் மண்டபமாக அதனைக் கொண் டனர். இன்றும் அரசு நிகழ்ச்சிகளும் பொது நிகழ்ச்சிகளும் நடைபெற அம்மண்டபம் பயன்பட்டு வருகின்றது.

சென்னை ஆளுநரான ராபர்ட் கிளைவினை வெற்றிக்குரிய சின்னமாக அமைந்த அம்மண்டபம் நாட்டுரிமைக்குப் பின்னர் இந்தியாவின் முதல் தலைமை ஆளுநரான ராஜாஜியின் நினை வாக இப்போது ராஜாஜி மண்டபம் என்றழைக்கப்படுகின்றது.[1]

இதழ்கள் ஒழுங்கு முறைச் சட்டம்

நான்காண்டுகளுக்குப் பின்னர், தலைமை ஆளுநர் வெல்லெஸ்லியின் காலத்தில், 1799-ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் நாளன்று 'இதழ்கள் ஒழுங்குமுறைச் சட்டம்' நடைமுறைப் படுத்தப்பட்டது.

இதழ்கள் கருத்து வெளியிடும் உரிமையைத் தடை செய்யப் புகுத்தப்பட்ட முதல் அடிமைத் தளையாகும் இது.

இதழ்களில் இடம் பெறும் எல்லாச் செய்திகளும் அவை அச்சேற்றம் பெறுவதற்கு முன்னர் சென்னை அரசாங்கத்தின் செயலர்க்கு அனுப்பி அவருடைய ஒப்புதல் பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது. திரு வெப்பீ, 'மெட்ராஸ் கூரியர்,' 'மெட்ராஸ் கெசட்' இதழாசிரியர்களுக்குப் பின் வருமாறு எழுதினார்:

---

1 A A. Nair, Peeps at the Press in South India, P. 4.

"மாண்பமை தலைமை ஆளுநர் அவர்கள் இந்த மாநிலத்தில் வெளியாகும் எல்லா இதழ்களின் ஆசிரியர்களும் தாங்கள் வெளியிடப் போகும் செய்திகளை, அவை அச்சேறுவதற்கு முன்னால், அரசாங்கச் செயலாளரின் பார்வைக்குள்ளாக்கி ஒப்புதல் பெறவேண்டும் என்று தீர்மானித்துள்ளார். எனவே, தாங்கள் தங்கள் இதழ்களில் வெளியாகவிருக்கும் செய்திகளைத் தவறாமல் ஒழுங்காக எனது அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று விரும்புகிறேன்." [1]

இக்காலத்தில்தான் (1799) இதழ்களுக்குத் தரப்பட்டு வந்த அஞ்சல் சலுகை நிறுத்தப்பட்டது. சென்னையிலிருந்து வெளிவந்த ஏடுகள் இதை எதிர்த்துக் குரலெழுப்பின. அதனால் அரசு விதித்த அஞ்சல் கட்டணத் தொகையில் சிறிதளவு குறைந்தது.

---

1 Indian Records Series, Vestiges of old Madras, Vol III, Pp 569-70

3. பம்பாய் இதழ்கள்

பாம்பே ஹெரால்ட்

ஆங்கில ஆதிக்கம் பம்பாயில் முதன் முதலாகத் தோன்றிய போதிலும் 1789 வரையில் பம்பாயிலிருந்து இதழ்கள் ஏதும் வரவில்லை. (1661ஆம் ஆண்டில் போர்த்துகல் நாட்டு மன்னரான ஆறாவது அல்போன்ஸாவால் இரண்டாவது சார்லஸை மணந்த அவரது தங்கை காதரினாவுக்குப் பம்பாய் சீதனப் பொருளாகத் தரப்பட்டது.)

1789 இல் 'பாம்பே ஹெரால்ட்' (Bombay Herald) என்னும் வார இதழ் பம்பாயின் முதல் இதழாக வெளிவந்தது.

மேலும் சில இதழ்கள்

1790 இல் "பாம்பே கூரியர்" (Bombay Courier) லூக் ஆஸ்பர்னர் என்பவரால் தொடங்கப்பட்டது. இவ்விதழ் 1838 இல் 'பாம்பே டைம்ஸ்' என்று பெயர் மாற்றம் கொண்ட நாளிதழாக விளங்கியது. இராபர்ட் நைட் என்பவர் இதன் ஆசிரியரானார்.

பின்னர் இவர் 'பாம்பே டைம்ஸ்' 'பாம்பே கூரியர்', 'ஸ்டாண்டர்ட்' 'டெலிகிராப்' என்னும் இதழ்களை இணைத்து 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' என்னும் இதழினை உருவாக்கி அதன் முதல் ஆசிரியரானார். மோபட் ஜிஜிபாய் பெராம்ஜி சாப்கார் என்னும் பார்ஸிக்காரரால் தயாரிக்கப்பட்ட குஜராத்தி மொழி அச்செழுத்துகளைக் கொண்டு இவ்விதழில் குஜராத்தி மொழியில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

பாம்பே கெசட்

1791 இல் 'பாம்பே கெசட்' வெளிவந்தது. இவ்விதழின் ஆசிரியர் அரசாங்கத்தின் ஆணைக்குட்பட்டு நடப்பதாகத் தெரிவித்துக் கொண்டார்.

1792 இல் பாம்பே ஹெரால்ட், பாம்பே கெசட்டுடன் இணைந்தது. அரசாங்கச் சார்புடைய இதழாக விளங்குவதால் தங்கள் இதழின் வளர்ச்சி எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்றும், அரசாங்கத்தின் முழு அரவணைப்பு இருந்தால்தான் இழப்பேதும் இல்லாமல் தங்களால் இதழ் நடத்த முடியும் என்றும் பாம்பே கெசட்டின் ஆசிரியர் அரசாங்கத்திற்கு எழுதினார். அரசும் அதனை ஏற்று, கிழக்கிந்தியக் கம்பெனியின் எல்லாவிதமான அறிவிப்புகளும், ஆணைகளும், தீர்மானங்களும் பாம்பே கெசட்டில் வெளியிடப்படும் என்றும், கம்பெனியின் எல்லா தரப்பு ஊழியர்களும் அதன் வழி அனைத்தும் அறிந்து கொள்ளலாம் என்றும் அறிவித்தது.

அரசின் புதிய முயற்சி

இதழ்கள் பயன் தரும் சாதனமாக அரசால் கருதப்பட்டது. செய்திகளை—நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் சாதனமாக இதழ்கள் அமைந்ததை உணர்ந்த அரசு, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வெளியாகும் இதழ்களைத் தொகுத்துக் காக்க எண்ணம் கொண்டது.

ஒரு மாநிலத்தைச் சார்ந்த அதிகாரி ஒருவர் தமது பகுதியில் வெளியாகும் இதழ்கள் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு பிரதி களை மற்றொரு மாநிலத்தின் அதிகாரிக்கு அனுப்பி, அங்கு வெளியாகும் இதழ்கள் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு பிரதி களைத் தமக்கு அனுப்புமாறு வேண்டினார். நாளடைவில் இந்த வழக்கம் நிலைபெறத் தொடங்கியது.

1793 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் நாளன்று பம்பாய் அரசுச் செயலாளர் ஜான்மாரிஸ், கல்கத்தா வில்லியம் கோட்டை யில் இருந்த செயலாளர் 'ஹே'க்கு பாம்பே கூரியரின் இரண்டு பிரதிகளை அனுப்பி, கல்கத்தாவில் வெளியாகும் இதழ்களின் இரண்டிரண்டு பிரதிகளைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டினார் என்பதை அரசு குறிப்புகளால் அறிய முடிகிறது.

6

இருபதாண்டுகளில் இதழ்கள் - பருந்துப் பார்வை

6

இருபதாண்டுகளில் இதழ்கள் - பருந்துப் பார்வை

1780 ஆம் ஆண்டு முதல் 1799 ஆம் ஆண்டு வரையுள்ள இருபதாண்டு காலத்தை இந்திய இதழியலின் முதல் கால கட்டம் என்று கூறலாம்.

கொடுமை, அச்சம், துணிவு

ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கியால் தொடங்கப்பட்ட முதல் இதழ் தந்த ஆர்வம்தான் இந்த கால கட்டத்தில் பல இதழ்கள் தொடர்ந்து தோன்றக் காரணமாயிற்று.

ஹிக்கியின் இதழ் பிறர் குறைகளையே சுட்டிக் காட்டியது என்று குற்றம் சாட்டப்பட்டாலும், பின்வந்த இதழ்களும் அதனின்று முழுவதுமாகத் தங்களை விலக்கிக் கொள்ள முடியவில்லை. வெள்ளையரின் வாழ்க்கை முறைகளையும் களியாட்

டங்களையும் போலிக் கௌரவச் செயல்களையும் தெளிவாக அவை வெளியிடத் தயங்கின என்றாலும், வாய்ப்பு நேர்ந்த போது சுட்டிக் காட்டவும் தவறவில்லை. அரசினரின் அடக்கு முறைகளுக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்பதில் ஹிக்கிக் குப் பின்வந்த இதழாசிரியர்கள் விழிப்புடன் இருந்தனர். ஹிக்கி எவ்வெவ்வாறெல்லாம் ஆளுவோரால் பழிவாங்கப்பட்டார் என்பதை நன்கறிந்த அவர்கள், அத்தகைய கொடுமைகளுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளக்கூடாது என்று எண்ணியதில் வியப்பில்லை.

கம்பெனியாரின் ஆணையை யேற்றுக் கடமை உணர்வோடு அச்சிட்டுக் கொடுத்தவற்றிற்குரிய நியாயமான ஊதியத்தைக் கூட கொடுக்க மறுத்து, அவரை வறுமையின் கோரப் பிடிகளுக் குள்ளாக்கி வேடிக்கைப் பார்த்து, தமது மக்கட் செல்வங்களின் நல்வாழ்வுக்குத் துணையாக முடியாமல் தவித்த அந்தத் தந்தை யின் - இதழியல் முன்னோடியின் துயரத்தை, இறுமாப்பு நோக்குடன் கண்டு எண்ணற்ற கடிதப் போக்குவரத்துகளுக்கும் கால தாமதத்துக்கும் அவரை ஆளாக்கிப் பதினாறு ஆண்டு களுக்குப் பின் தாங்கள் எண்ணிய ஒரு சிறு தொகையைக் கொடுத்துக் கணக்கு முடித்த கம்பெனியாரின் கொடுமையைக் கண்டவர்கள் வெளிப்படையாகத் தங்களைக் காட்டிக்கொள்ள விரும்பாததில் வியப்பில்லை.

டுயன் நாடு கடத்தப்பட்ட கொடுமைச் செயல் ஆட்சியினர் இதழியலுக்கு உரிமை தர மறுக்கும் போக்கினைத் தெளிவாக உணர்த்தியதை அவர்கள் உணர்ந்தனர்.

எனவேதான், கண்டனங்களைக் குறைத்துக்கொண்டு இதழியலில் சில புதுமைகளைச் செய்யத் தொடங்கினர். ஒன்றன் பின் ஒன்றாக இதழ்கள் வெளிவந்தமையால், அரசின் உதவியை நாடி முழுமையான அரசுச் சார்புடையனவாகத் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்ட ஒரு சில இதழ்களைத் தவிர, பிற இதழ்கள் செய்திகளை மிகுதியாகவும் முன்னதாகவும் தரும் முயற்சியில் ஈடுபட்டன.

போட்டி உணர்வு

இங்கிலாந்தில் மக்கள் சபையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இந்த இதழ்கள் தருவதில் காலதாமதம் ஏற்பட்டது. ஏனென்றால் ஆறு மாதங்கள் கழித்த பின்னரே அவை இந்தியாவுக்குக் கிடைத்தன. செய்திகள் வருகின்றன என்ற குறிப்பு தெரிந்ததும், இதழாசிரியர்கள் அவற்றை முதலில் பெறுவதில் போட்டியிட்டனர். செய்திகளை விரைந்து கொடுக்கும் இதழை மக்களும் விரும்பினர். எனவேதான் இந்தப் போட்டி உணர்வு இதழாசிரியர்களுக்கு இருந்தது.

இதழின் உள்ளடக்கம்

பாராளுமன்றச் செய்திகள் மட்டுமல்லாமல், இந்தியாவில் வாழும் ஆங்கிலேயர்க்குள்ள பிரச்னைகள் பற்றிய தலையங்கங்கள், இங்கிலாந்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளின் தொகுப்பு, ராணுவ விவரங்கள், இந்திய மன்னர்களின் போக்கு முதலிய பகுதிகளும் இவ்விதழ்களில் இருந்தன.

இவை மட்டுமல்லாமல் பாரீஸ், ஸ்டாக்ஹோம், வியன்னா, மேட்ரிட், சைனா, ரியோ ஜெனிரோ மற்றும் முக்கியமான பல இடங்களிலிருந்து கிடைத்த செய்திக் குறிப்புகளும் இடம் பெற்றன. இன்றைய இதழ்களில் உணர்ச்சி ஊட்டத்தக்க வகையில் அமையும் பல செய்திகள் போன்று அன்றைய இதழ்களிலும் பல செய்திகள் இருந்தன. ஆசிரியர்க்குக் கடிதங்கள், அரசாங்க அறிவிப்புகள், சமுதாயச் செய்திகள், கவிஞர்கள் பக்கம், நாகரிகக் குறிப்புகள், விளம்பரங்கள் போன்றனவும் இதழடக்கப் பிரிவுகளாக இருந்தன.

சமுதாயச் செய்திகள் என்னும் பிரிவில் ஆங்கிலேயரின் வருகை, தாயகம் செல்லும் ஆங்கிலேயர் பற்றிய குறிப்பு, பிறப்பு-இறப்பு பற்றிய விவரங்கள் திருமணங்கள் ஆகியவை இடம் பெற்றன.

விளம்பரங்கள்

விளம்பரங்கள் என்னும் பகுதியில், லாட்டரிகள் பற்றிய விவரங்கள், வீடு விற்பனை, மது வகைகள், மரச் சாமான்கள் விற்பனை பற்றிய விவரங்கள் இருந்தன.

'பாம்பே கூரியரில்' வெளிவந்த நவநாகரிகக் குறிப் பொன்றைக் கொண்ட விளம்பரத்தைக் காண்போம்.

'பாரீசில் புது நாகரிகம்: பெண்களுக்கு: " என்பது அந்த விளம்பரத்தின் தலைப்பு, அந்த விளம்பரம் உள்ளவாறே தரப் படுகிறது.

> " Coloured felt hats are now the prevalent fafhion; they pasf for full dresf. They are either of grey or violet colour, with a bow of ribbands, 'as you like it.' The green and carmelite ribbands are the moft fafhionable. On the top a Cockade of ribband of the same colour, white lawn kerchief.
>
> "A jacket of Taffeta, with white and violet stripes behind; and on the wrifts round plaits of green ribband. Stomacher laced with green.
>
> "Lawn petticoat bordered from below with round plaits of green taffeta.
>
> "Green Fan. Green morocco Shoes."[1]

---

1 Margarita Barns, The Indian Press, p. 62.

அனுபந்தங்கள்

11×18 அளவுடன் நான்கு பக்கங்களைக் கொண்ட இந்த இதழ்கள் லண்டனிலிருந்து கிடைக்கும் செய்திகளின் அளவுக் கேற்ப சில வேளைகளில் அனுபந்தங்களையும் வெளியிட்டன. வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது நடைபெற்ற வழக்கின் விவரங்களை வெளியிட நேர்ந்த போதும் குயூபெக் சட்டம் பற்றிப் பாராளு மன்றத்தில் நடைபெற்ற உரையாடல்களை வெளியிட நேர்ந்த போதும் அனுபந்தங்களை வெளியிடுவது - பக்கங்களைக் கூட்டுவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

ஆட்சியாளரின் அச்சம்

முற்கால இதழ்களின் உள்ளடக்கம் பற்றி அறிவோர், அவை தாம் தோன்றிய பகுதிகளின் பிரச்னைகள் குறித்து மிகக் குறைந்த அளவிலேயே கருத்து செலுத்தின என்பதை உணர முடியும். அவ்விதழ்கள், அவை தோன்றிய அவ்வப் பகுதி களில் வாழ்ந்த ஆங்கிலேயர்க்காகவே தோற்றுவிக்கப்பட்டன என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டால், அவற்றின் போக்குக்குரிய காரணம் பொருந்துவதென்றே தோன்றும். ஆட்சி புரிந்தவர்கள் இதழ்களின் தோற்றத்தையோ அவை மக்களால் விரும்பி வரவேற்கப் படுவதையோ விரும்பவில்லை. இதழ்களின் போக்கு அவர்களுக்கு அச்சத்தைத் தந்தது, ஆட்சியாளர்களின் குறைகள் சுட்டிக் காட்டப்பட்டதே அதற்குக் காரணமாகும்.

இந்தியாவில் முதல் இதழைத் தோற்றுவித்த ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கிதான் ஆளுவோரின் குறைகளை துணிவாக வெளிப்படுத்தினார் என்று அவரின் இதழ் ஆட்சியாளரால் அழிக்கப்பட்டதற்குக் காரணமாகக் கூறப்பட்டது. ஆனால் ஹிக்கிக்குப் பின் வந்தவர்களும் அந்தப் போக்கினை அறவே விடவில்லையென்பதால் ஆளுவோர், இதழ்களையே வெறுக்கத் தொடங்கினர். இதற்கு ஒரு சான்றினைக் காண்போம்.

மாலுமியின் அடிமை வாணிகம்

உள்நாட்டிலாகாவின் 1789 ஆம் ஆண்டுக் குறிப்புகளில் உள்ள 'பெங்கால் ஜர்னலி'ல் வெளிவந்த செய்திப் பகுதி யொன்றினைக் காண்போம்.

இச்செய்தி 1789 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் நாளன்று வெளிவந்தது ஆகும்.

> "பொது மக்களின் பார்வைக்குப் பின்வரும் செய்தியை உரிமையாக்குவது எங்கள் கடமை என்று உணர்கிறோம். இந்தச் செய்தியை முழுவதும் படித்துப் பார்த்து இது உண்மையானதுதான் என்று நம்பிக் கைக்குரிய உயர் அதிகாரி ஒருவர் கூறியதன் பின்னரே இது இங்கு வெளியிடப்படுகின்றது"

இந்த அறிவிப்புடன் 'பெங்கால் ஜர்னல்' வெளியிட்ட செய்தியின் சுருக்கம் இது :

> "துல்லா என்னுமிடத்திலிருந்து வங்காளத்தில் பணம் கொடுத்து வாங்கிய நூற்றைம்பது அனாதைச் சிறுவர்களைத் தமது கப்பலில் ஏற்றிக் கொண்டு சென்ற மாலுமி ஒருவன், கொழும்புவில் அவர்களை அடிமைகளாக விற்றுவிட்டான். டச்சுக் கவர்னர், அவர்கள் கொழும்புவில் இறங்குவதற்கு மறுப்பு தெரிவித்த போதிலும், அந்த மாலுமி அதனைப் புறக்கணித்து, தான் கொண்டு சென்ற அனாதைச் சிறுவர்களின் விற்பனையில் வெற்றி பெற்றுவிட்டான். கப்பலோட்டும் மாலுமி ஒருவன் அடிமை வாணிகத் தோடு தொடர்புடையவனாக இருக்கின்றான் என்பதை இந்த நிகழ்ச்சி தெரிவிக்கின்றது"

இந்தச் செய்தி ஆளுவோர்க்கு அதிர்ச்சியைத் தந்தது. பொதுமக்கள் அச்சம் கொண்டனர். இதுபற்றி முழுவதுமாக

விசாரித்துத் தக்க நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தங்கள் வழக்கறிஞர்க்கு அரசினர் ஆணையிட்டனர். வழக்கறிஞரின் விசாரணைக்குப் பிறகு அந்த மாலுமி தண்டிக்கப்பட்டார்.

'பெங்கால் ஜர்னலி'ன் இந்தச் செய்தியின் மூலம் ஆளப் படுவோரின் நலனில் இதழ்கள் கருத்துடையனவாக இருந்தன என்பதை அறிய முடிகிறது.

அகராதியும் அவதியும்

கம்பெனியாரின் ஆதரவு இல்லாமல் யாரும் புதிய முயற்சிகளில் ஈடுபட முடியாத சூழ்நிலை அக்காலத்தில் இருந்தது. கம்பெனியார் மக்களுக்குக் கல்வி அளிப்பது போன்ற முயற்சிகளை அரைகுறை மனதோடுதான் மேற்கொண்டனர்; தாங்கள் நன்மைதரும் பலவற்றை நடைமுறைப் படுத்துவதாக மக்களுக்குக் காட்டிக் கொள்ளவேண்டும் என்னும் ஆர்வம் கொண்டனர்.

அதனால் ஜான் கில்கிரைஸ்ட் என்பவர் தயாரித்த ஆங்கிலம் இந்துஸ்தானி அகராதியை முத்நூறு படிகள் வாங்கி ஆதரவளித்தனர். ஆனால் அதற்குரிய பணத்தை அவருக்குத் தருவதில் ஆர்வம் காட்டவில்லை. அகராதி தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட ஜான் கில் கிரைஸ்ட் அச்சகத்துக்குப் பணம் தரவேண்டிய கடனாளியானார். இந்த நெருக்கடியிலிருந்து விடுபட எண்ணிய அவர், 1791 ஆம் ஆண்டு ஜனவரி 12இல், தம்மிடமிருந்து வாங்கிய முந்நூறு படிகளுக்கு, படி ஒன்றுக்கு பத்து ரூபா வீதம் முன் பணம் தருமாறு வேண்டி ஒரு கடிதம் எழுதினார். அகராதி தயாரிப்பு வகையில் தமக்குப் ரூபாய் பன்னிரண்டாயிரம் வரை இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். கல்வி வளர்ச்சியில் கம்பெனியாரின் ஆர்வம் போலியாகவே இருந்தது. கில் கிரைஸ்டின் அனுபவம், அவர் போன்ற நூல் ஆசிரியர் களுக்குக் கம்பெனியாட்சியின் இறுதிவரை இருந்தது என்பது குறிப்பிடத்தகுந்தது.

தண்டனைகள், தொடர்கதை

அக்காலத்தில் நடைபெற்ற இவ் இதழ்கள் ராணுவச் செய்திகளையே மிகுதியாக வெளியிட்டன. கம்பெனியார் தங்களாட்சியை இந்தியாவில் நிலைநிறுத்த வேண்டும் என்று விரும்பியதால் போராட்டங்கள் பலவற்றைச் சந்திக்க வேண்டியிருந்தது. இந்த நிலையில் இதழ்கள் வழி ரகசியக் குறிப்புகள் எதிரிகளுக்குத் தெரிந்து விடுமோ என்றும் அவர்கள் அஞ்சினர். இந்த அச்சத்திற்குச் சில இதழாசிரியர்கள் ஆளாயினர். ராணுவத் தளபதி ஒருவர் ராணுவத் தொடர்பான செய்திகளை அறிவித்தார் என்பதற்காக அவருக்குத் தரப்பட்டு வந்த ஊதியம் பாதியாகக் குறைக்கப்பட்டதுடன் அவர் இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

1796 இல், "டெலிகிராப்" என்னும் இதழின் ஆசிரியர் ஹால்ட் மெக்கன்லி என்பவர்,

வெள்ளிக்குப் பதிலாகத் தங்கக் கட்டிகள் பரிமாற்றம் செய்த வகையில் கம்பெனியைச் சார்ந்த அதிகாரி ஒருவர் மிக அதிகமான கழிவுத் தொகையைப் பெற்றார் என்று எழுதிய காரணத்துக்காகத் தண்டிக்கப்பட்டார். அவர் இதழின் உரிமையாளரான ஹேர் கொடுத்த தகவலைத்தான் தாம் எழுதியதாகக் கூறினார். ஆனால் ஹேர் அதனை மறுத்து விட்டார்.

அதே ஆண்டில் "கல்கத்தா கெசட்"டின் ஆசிரியரான ஹார்ஸ்லி, கம்பெனி டைரக்டர்களுக்கும் பிரெஞ்சுக் குடியரசுக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துகள் பற்றி எழுதினார் என்பதற்காகக் கண்டிக்கப்பட்டார். இனி அவ்வாறு அதுபோன்ற கட்டுரைகளையோ, செய்திகளையோ வெளியிடுவதில்லை என்று ஹார்ஸ்லி கொடுத்த உறுதிமொழியோடு அந்த நடவடிக்கை முடிவு பெற்றது,

17 6 இல் 'டெலிகிராப்' இதழில் கடிதம் ஒன்று வெளியிடப்பட்டது. "மென்டார்" (Mentor) என்று எழுதியவரின்

பெயர் குறிப்பிடப்பட்டது. இந்திய ராணுவத்தினரிடையே வெறுப்புணர்ச்சியை வளர்க்கும் வகையில் அக்கடிதம் அமைந் திருந்தது என்று கருதிவிட்டதால் அதை எழுதியவரின் மீது நடவடிக்கை எடுக்க அரசு முனைந்தது. “மென்டார்” என்னும் பெயரில் வங்காள ராணுவத்தைச் சேர்ந்த காப்டன் வில்லியம்ஸன் என்பவர்தான் அக்கடிதத்தை எழுதியுள்ளார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அக்கடிதத்தை அவர் எழுதியபோது நோயுற் றிருந்தார் என்றும், அதனால் மனக்கோளாறு பெற்றிருந்தார் என்றும், அதன் விளைவாகவே அக்கடிதம் எழுதப்பட்டது என்றும் வில்லியம்ஸன் கூறியதால் கம்பெனியின் இயக்குநர் குழுவினர் அவருக்கு பாதிச் சம்பளம் அளித்தனர்.

இவை யாவும், கம்பெனியின் ஆட்சியில் இதழாசிரியர்கள் அடைந்த இன்னல்களை விளக்கத் துணை புரியும் சில சான்று களாகும்.

அஞ்சல் துறையினர் இடையீடு

இவ்விதழாசிரியர்களுக்கு அஞ்சல் துறையினரும் பல நிலை களில் இன்னல் இழைத்தனர்.

1798 ஆம் ஆண்டில் “பெங்கால் ஹர்க்காரு”வின் ஆசிரியராக இருந்தவர் சார்லஸ் மெக்ளீன். இவர் 21 - 7- 1798 இல் தலைமை அஞ்சல் அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதினார்.

> சில கடிதங்கள் தமக்கு வந்துள்ளதாகவும் அவை தமக்கு வழங்கப்படாமல் அஞ்சலகத்திலேயே இருப்ப தாகவும் இந்த நிலைமை, அஞ்சல் நிலைய ஊழியர் களின் பொருந்தாப் போக்கினைக் குறித்துக் கண்டித்து எழுதத் தம்மைத் தூண்டுவதாக இருப்பதாகவும்

அக் கடிதத்தில் குறிப்பிட்டார்.

அரசாங்க அதிகாரிகள் தங்களைக் காத்துக் கொள்வதில் எப்போதும் கண்ணும் கருத்துமாயிருந்தனர். மெக்ளீன் கடிதம் எழுதிய மூன்று நாட்களுக்குப் பின்னர் தலைமை அஞ்சல் அதிகாரி, அப்போது அரசின் செயலராக இருந்த பார்லோவுக்கு எழுதிய கடிதத்தில், பெங்கால் ஹர்க்காருவில் அன்றைய தினம் வெளி வந்த செய்தியினைக் குறிப்பிட்டார். அச் செய்தி பொது அஞ்சல் அலுவலகத்தில் பணி புரிவோர் நிலை பற்றித் தவறான கருத்தை மக்களிடையே ஏற்படுத்தும் என்றும், தமது அலுவலகத்தைச் சேர்ந்த பணியாள் ஒருவன். மெக்ளீன் தமக்கு வந்துள்ள இரண்டு கடிதங்களையும் அவை பணம் கட்டிப் பெற்றுக் கொள்ள வேண்டுவனவாதலால் அவற்றுக்குரிய தொகையினைக் கட்டினாலல்லாமல் அவை அனுப்பப்பட மாட்டா என்று தாம் கூறி அனுப்பியதை அவரிடம் தெரிவித்தான் என்றும், மெக்ளீன் அவனை அடித்துத் துரத்தினார் என்றும் குறிப்பிட்டார். மெக்ளீன் அக்கடிதங்களுக்குரிய தொகையினைக் கட்டியதும் அவருக்கு அவை அனுப்பப்படும் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

அஞ்சல் கட்டணம்

அஞ்சல் துறையினரின் இடையீட்டை அறிய மேலும் சில சான்றுகளைக் காண்போம்.

1798 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதி தலைமை ஆளுநரான மார்னிங்டன் பிரபுவுக்கு இதழாசிரியர் பலர் ஒன்று சேர்ந்து அஞ்சல் கட்டணம் தொடர்பாக ஒரு கடிதம் எழுதினர். அக் கடிதத்தில், "இந்தியா கெசட்" பத்திரிகையின் உரிமையாளர்களுக்காக ஜான் மாக்ஸ்வெலும், டி. ஏ; ஹம்ப்ரீஸ் தமக்காகவும் ஏஷியாடிக் மிர்ரர் உரிமையாளர்களுக்காகவும், மார்னிங் போஸ்டின் உரிமையாளர்களான தாம்ஸன் பெர்ரிஸ், கீரீன் வே ஆகியோரும் கையெழுத்திட்டனர்.

ஜூலை 15 ஆம் தேதி முதல் அஞ்சல் கட்டணம் உயர்த்தப் பட்டிருப்பது தங்கள் தொழிலைப் பெரிதும் பாதிப்பதாகும்

என்றும், தங்கள் இதழ்களைக் கல்கத்தாவைத் தவிர வேறு எந்தப் பகுதிக்கும் அனுப்ப இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர். கல்கத்தாவில் நடைபெறும் பிற இதழ்களுக்காகவும் தாங்கள் இந்த முறையீட்டைச் செய்வதாகவும் அவர்கள் குறித்திருந்தனர். இதழ்களை ஒடுக்கி விட அரசினர் கையாண்ட ஒரு செயல் அஞ்சல் கட்டண உயர்வு ஆகும். இது தொடர்பாக அவ்வப்போது அரசினர்க்கும் இதழாளர்களுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்தவண்ணமிருந்தது. காலச் சூழலுக்கேற்பச் சில சலுகைகள் வழங்கப்படுவதும், பின் அவை ஏதேனும் ஒரு காரணம் காட்டி நீக்கப்படுவதுமாகவே இருந்து வந்ததைப் பல குறிப்புகள் தெரிவிக்கின்றன.

டெலிகிராப்

கல்கத்தாவில் இருந்த பொது அஞ்சல் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக் கணக்கர் ஜோக்ஸ் என்பவருக்காக போஸ்மாஸ்டர் ஜெனரல் சர் சார்லஸ் ப்ளண்ட், அரசுச் செயலர் பார்லோவுக்குப் பரிந்துரைக் கடிதம் ஒன்று எழுதினார். அதில் "டெலிகிராப்" இதழின் ஆசிரியரான மெக்கன்லியால் ஜேம்ஸ் அநியாயமாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள கொடுமையைக் குறித்திருந்தார். சார்லஸ் பிளண்டின் இந்தப் போக்கிற்கு என்ன காரணம் என்பதைக் காண்போம்.

மெக்கன்லி, தமக்கு சென்னையிலிருந்து அல்லது பம்பாயிலிருந்து வரும் அஞ்சல்கள் பற்றி உடனுக்குடன் அறிவிக்க ரகசியபாக ஒருவரை நாடியிருந்தார். அவரிடமிருந்து செய்தி வந்ததும் அஞ்சல் நிலையத்துக்குக் கடிதம் எழுதி அவற்றைப் பெற மெக்கன்லி முயல்வார். சாதாரணமாக அஞ்சலக அதிகாரிகளே இதுபற்றி முடிவெடுப்பர். ஒருமுறை மெக்கன்லி போஸ்ட் மாஸ்டர் ஜெனரலுக்கு, தமக்கு வந்துள்ள தபால்களைக் கொடுக்குமாறு கடிதம் எழுதினார். அதில் சென்னை,

பம்பாய் ஆகிய இடங்களிலிருந்து வரும் இதழ்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். இது போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு ஐயத்தைக் கொடுத்தது. மெக்கன்லிக்கு யாரோ ரகசியமாக அஞ்சல் நிலையச் செய்திகளை அறிவிப்பதாக அவர் ஐயுற்றார். எனவே மெக்கன்லியின் வேண்டுகோளை அவர் நிராகரித்தார்.

மறுநாளே 'டெலிகிராப்' இதழில் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் போக்குபற்றி எழுதப்பட்டது. உடனே அவர், அரசுக்கு எழுதிய கடிதத்தில், இதழின் உரிமையாளர்கள் அல்லது ஆசிரியர்கள் தங்களுக்கு அஞ்சலக அதிகாரிகள் மீது கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் அரசுக்கு எழுதவேண்டும் என்னும் கருத்தினைக் கொள்ளச் செய்ய வேண்டும் என்றும், அப்படியில்லாமல் இதழ்களில் எழுதுவது என்னும் போக்கு தடுக்கப்பட்டு நெறிபடுத்தப்பட வேண்டும் என்றும் வேண்டி அரசுச் செயலருக்குக் கடிதம் எழுதினார்.

நாடு கடத்தப்பட்ட மெக்ளீன் கதை

'டெலிகிராப்' ஆசிரியர் மீண்டும் ஒரு சிக்கலில் அகப்பட்டுக் கொண்டார்; கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த டாக்டரான சார்லஸ் மெக்ளீன் என்பவர் காஜிப்பூர் மாஜிஸ்ட்ரேட்டான ரைடர் (Rider) என்பவரின் முறையற்ற செய்கை குறித்து எழுதிய கடிதத்தை டெலிகிராப்பில் வெளியிட்டதே அதற்குக் காரணமாகும்.

இதழாசிரியரும், கடிதம் எழுதியவரும் அரசினரால் அழைக்கப்பட்டு, மாஜிஸ்டிரேட்டிடம் மன்னிப்பு கேட்குமாறு கோரப்பட்டனர். இதழாசிரியர் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். டாக்டர் சார்லஸ் மெக்ளீன் மன்னிப்பு வேண்ட மறுக்கவே அவர் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.

டாக்டர் சார்லஸ் மெக்ளீன், 1798இல் 'பெங்கால் ஹர்க்காரு' என்னும் இதழின் ஆசிரியாக இருந்தவர்[1]; இதற்கு முன்னர் ஒரு முறை கம்பெனியாரின் சீற்றத்துக்கு ஆளானவர். கப்பலொன்றில் அவருக்குப் பணியொதுக்கியபோது, டாக்டர் சார்லஸ், கப்பலில் போகாமல் கம்பெனியாரின் இசைவின்றி இந்தியாவிலேயே இருந்துவிட்டார். எனவேதான், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவரை இங்கிலாத்துக்கு அனுப்புவதில் அவர்கள் தீவிரம் காட்டி வென்றனர். இந் நிகழ்ச்சியின்போது தலைமை ஆளுநராக இருந்தவர் வெல்லெஸ்லி என்பவர்.

லார்ட் வெல்லெஸ்லி டாக்டர் சார்லஸ் மெக்ளீனை இங்கி லாந்துக்கு அனுப்பிய தம்முடைய செயல் குறித்துப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> "டாக்டர் மெக்ளீனும், டெலிகிராப் இதழாசிரிய ரான மெக்கன்லேயும் நீதிமன்ற நடுவர் ஒருவரைப் பற்றி, தமக்குரிய பணியில், தமக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றிய ஒருவரைப் பற்றி மக்கள் தொடர்பு கொள்ளும் சாதனமான இதழில் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவதூறாக எழுதியது கண்டிக்கத் தகுந்தது என்றே எண்ணுகிறேன்."

ஆசியாவின் விவகாரங்கள்

இங்கிலாந்துக்குச் சென்ற மெக்ளீன், "ஆசியாவின் விவ காரங்கள்" (The Affairs of Asia) என்னும் நூலினை (Phamplet) வெளியிட்டார். அதில் அவர் வெல்லெஸ்லியை மனிதத் தன்மையற்றவர் என்று வருணித்துள்ளார்.[2] அத் துடன் நில்லாமல் அவர் வெல்லெஸ்லிக்கு எதிராகத் தொடங்கப் பட்ட இயக்கத்துடன் கலந்து கொண்டு அவரைத் தாக்கிப் பேசலானார். அதன் விளைவாக 1805 இல் வெல்லெஸ்லி தமது பதவியை விட்டு விலக நேர்ந்தது.

---

1 Margarita Barns, The Indian Press, p. 67
2 R. R. Pearce, Wellesley's Memoirs, Vol 1, p. 451

லீஸெஸ்டர் ஸ்டேன்ஹோப்

இதழியல் துறையில் இருந்த அடக்கு முறைகளை யாவரும் நன்குணர வேண்டும் என்ற நோக்கில், இந்த நிகழ்ச்சி பற்றிய செய்தியினை, லீஸெஸ்டர் ஸ்டேன்ஹோப் என்பவர் (Leicester Stanhope) "பிரிட்டிஷ் இந்தியாவில் இதழியலின் வரலாறும் செல்வாக்கும்" என்னும் தமது நூலில் பின்வருமாறு குறித்துள்ளார்.

"டி அகுலர் என்பவரும் A. மெக்ளீன் என்பவரும் காஜிப்பூர் அருகில் இருந்த சாயத் தொழிற்சாலை ஒன்றின் பங்குதாரர்களாக இருந்தனர். அவர்களுக்குள் தங்கள் தொழில் தொடர்பாகக் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அக் கருத்து வேறுபாடு கைகலப்பில் முடிந்தது. மெக்ளீன் டி அகுலரின் மூக்கை உடைத்து விட்டார். அவன் கோபம் தணிந்ததும் தன் செயலுக்காக வருத்தம் தெரிவித்தார். ஆனால் அகுலர் வழக்கு மன்றம் சென்று விட்டார். மாஜிஸ்ட்ரேட் மெக்ளீன் தம் சார்பில் என்ன சொல்லப் போகிறார் என்பது பற்றி எண்ணாமல், விசாரணை ஏதும் செய்யாமல், அவர் ஜாமீனில் செல்ல இசையாமல் சிறையிலடைக்கச் செய்தார். காசியிலிருந்த மேல் முறையீட்டு மன்ற நீதிபதிகளுக்கும் இம் மாஜிஸ்ட்ரேட், இவ் வழக்கில் தலையிடவோ, அல்லது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தம்மை நெறிப்படுத்தவோ அவர்களுக்கு உரிமை இல்லை என்றும் எழுதினர். மேல் முறையீட்டு மன்ற நீதிபதிகளுள் ஒருவரான ட்ரீவ்ஸ் என்பவர் மெக்ளீனைக் கைது செய்து கல்கத்தாவிற்கு அனுப்புமாறு எழுதினார். மற்றொரு நீதிபதியான நீவே என்பவர் விடுப்பிலிருந்த காரணத்தால் மாஜிஸ்ட்ரேட் ட்ரீவ்ஸின் வேண்டு

கோளை ஏற்கவில்லை. பின்னர் மக்ளீனை மாஜிஸ்ட்ரேட் சரக்குகள் ஏற்றப்பட்ட படகொன்றின் மூலம் கல்கத்தாவுக்குப் பயணமுறச் செய்தார். போதுமான மறைப்புகள் இல்லாத நிலையில், அந்தப் படகில் கப்பல் காவல் துறைச் சிற்றலுவலர் ஒருவர், பன்னிரண்டு சிப்பாய்கள், ஒரு காவலர் துணையாய் வர, பகலில் கதிரவன் வெப்பத்துக்கும் இரவில் பனியின் கொடுமைக்கும் ஆளாகி ஒரு மாத காலம் பயணம் செய்தார் மக்ளீன். இடையில் கல்கத்தாவிலிருந்த தம் பெயர் கொண்ட டாக்டர் மக்ளீனுக்குத் தமது நிலைமை விளக்கிச் செய்தி அனுப்பினார். அத்துடன் தாம் இறந்து விட்டதாக "இந்தியா கெசட்"டில் வந்த செய்தியையும் அனுப்பியிருந்தார்.

1798 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதியன்று டாக்டர் மக்ளீன் பின்வருமாறு கடிதமொன்றை அந்த இதழாசிரியர்க்கு எழுதினார்.

காசியில் ஏற்பட்ட கைகலப்பு நிகழ்ச்சியில் A. மக்ளீன் இறந்து விட்டதாக கடந்த "இந்தியா கெசட்" இதழிலும் "ஹர்க்காரு" விலும் வெளிவந்த செய்தி முழுமையும் தவறானது. அதற்கு நீங்கள் வருத்தம் தெரிவிப்பீர்கள் என்று எண்ணுகிறேன். இன்று A. மெக்ளீனிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்துள்ளது. அக்கடிதத்தில் அவர் தமக்கு ஏற்பட்ட துன்பங்களையும், உலகியலறிவு இல்லாமல் அவருடைய எதிரி மேற்கொண்ட கொடுமைச் செயல்களால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளார். காஜிப்பூர் மாஜிஸ்ட்ரேட்டின் தேவையற்ற இடையீட்டினால்தான் இவ்வளவும் நேர்ந்தது என்பதும் ஏற்றுக்கொள்ள முடியாத – ஏற்றுக்கொள்ள வேண்டாத தண்டனை வழங்கும் அவருடைய கொடுங்கோன்மைப் போக்குக்குரிய வெளிப்பாடாக அந்தச்

செய்தியினை வெளியிட்ட உங்களைப் பாராட்ட இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

இக்கடிதம் A. மெக்ளீனுக்கு விடுதலையைத் தந்தது; டாக்டர் மெக்ளீனுக்கு குற்றவாளியாக இங்கிலாந்துக்குச் செல்லும் வாய்ப்பை அளித்தது; ஆசியாவிலேயே முதல் தணிக்கைக் கொடுமையை உலகறியச் செய்தது.

டாக்டர் மெக்ளீனை அரசு அழைத்தது; தம் செயலுக்காக மன்னிப்பு கேட்குமாறு சொன்னது. மெக்ளீன் மறுத்து விட்டார். எனவே அவரைக் கைது செய்து இங்கிலாந்துக்கு அனுப்பியது.

A. மெக்ளீனுக்காகப் பரிந்துகொண்டு டாக்டர் மெக்ளீன் இதழாசிரியர்க்கு எழுதிய கடிதம் அவரது மனிதத் தன்மையை விளக்குவதாகும். அதற்குப் பரிசாக அவர் நாடு கடத்தும் தண்டனையைப் பெற்றார். இதனால் ஆண்டு வருவாயான எழுநூறு பவுன்களை அவர் இழந்தார். தமது அச்சகத்தை விரிவுபடுத்த அவர் செலவிட்ட இரண்டாயிரம் பவுன் களும் வீணாயின.

இங்கிலாந்துக்கு அவர் அனுப்பப்பட்ட முறையும் கொடுமையானதுதான். அவரும் அவர் மனைவியும் வணிகப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பலில் கொண்டு செல்ல தலைமை ஆளுநரால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. கீழ்த்தரமான குற்றச்சாட்டு களுக்காகக் கைது செய்யப்பட்ட ஆங்கிலக் குற்றவாளி களுடன் அவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. இங்கிலாந்து செல்லும் வரையிலும் அவர்களுக்கு நல்ல உணவும் கொடுக்கப்படவில்லை. அவர் தண்டிக்கப் பட்டார்; விசாரிக்கப்பட்டார்; மன்னிப்பு வேண்டப்

பட்டார்; நாடு கடத்தப்பட்டார் என்று சுருக்கமாக டாக்டர் மெக்ளீனின் தண்டனைப் படலத்தைப் பற்றிச் சொல்லிவிடலாம்.

வெல்லெஸ்லி பிரபு இங்கிலாந்து சென்றதும், மெக்ளீன் தமது வழக்கு பற்றிய விவரங்களை அச்சிட்டு வழங்கினார். கடைசி வரையிலும் கொள்கைப் பிடிப்போடு உறுதியாக இருந்தவர் என்னும் பாராட்டுக்குரியவர் மெக்ளீன்.

மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர் டாக்டர் மெக்ளீன். இவர் துருக்கியில் பிளேக் நோய் பற்றிய ஆராய்ச்சிகள் செய்து, அது தோன்றுவதற்குரிய காரணத்தையும் அதைப் போக்கிக் கொள்வதற்குரிய வழி முறைகளையும் தெளிவாக அனைவர்க்கும் தெரிவித்தவர்; ஸ்பெயினில், மஞ்சள் நோயைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்து புகழ் கொண்டவர்"[1]

இதழியலின் முதல் இருபதாண்டுகளின் வரலாற்றை இதுகாறும் அறிந்தோம்.

---

1 Leicester Stanhope, Sketches of the History and influence of the Press in British India, p. 7 - 9

இந்திய இதழ்கள் - 2
(1800 - 1858)

7

இந்திய இதழ்கள் - 2
(1800 - 1858)

சமயப் பரப்பாளர்

1813 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட சார்ட்டம் சட்டத்தின்படி பாதிரியார்கள் சமயம் பரப்ப இந்தியாவுக்கு வர அனுமதிக்கப்பட்டனர். இந்த சட்டத்தின்படி 1814 இல் இந்தியாவுக்கு வந்தவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் ரெவரண்ட் தாமஸ் ஃபேன்ஷா மிடில்டன், ரெவரண்ட் டாக்டர் சாமுவேல் ஜேம்ஸ் ப்ரைஸ் (Reverend Dr. Samuel James Bryce) என்போராவார்.

இதழின் இயக்குநர்

இதழியல் துறையில் அறிமுகமாயிருந்த டாக்டர் ப்ரைஸ், 1814 இல் (நவம்பர் 28) 'ஏஷியாட்டிக் மிர்ரர்' என்னும் வார

இதழின் நிர்வாக இயக்குநரானார். இவருடைய எழுத்துகளால் இதழியல் தணிக்கை முறையில் பல மாற்றங்கள் உண்டாயின.

இவருடைய காலத்தில் அரசின் தலைமைச் செயலராக இருந்தவர் ஜான் ஆடம் என்பவர்; தலைமை ஆளுநராக இருந்தவர் ஹேஸ்டிங்ஸ் பிரபு.

ஏஷியாட்டிக் மிர்ரர்

1815 இல் 'ஏஷியாட்டிக் மிர்ரர்'ரின் ஆசிரியரான ஜேம்ஸ் ரால்ப், இரண்டு முறை அரசின் கண்டனத்துக்குள்ளானார். ராணுவ அமைப்பு முறைபற்றிய செய்திகளை வெளியிட்டார் என்பதும், ஜானிக்பூரிலிருந்து காத்மந்துக்குச் செல்லும் ராணுவ வழிபற்றிய விளக்கங்களை நீக்க வேண்டும் என்று தணிக்கைக் குழுவினர் தெரிவித்தபோதும் அதனைப் பொருட்படுத்தாமல் வெளியிட்டார் என்பதும் இவர்மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகள்.

கருத்து வேறுபாடு

இது தொடர்பாக இதழின் நிர்வாக இயக்குநரான டாக்டர் ப்ரைஸ், அரசின் தலைமைச் செயலாளர் ஜான் ஆடம் மீது கண்டனம் தெரிவித்தார். தேவைக்கு அதிகமாகவே தடைச் சட்டங்கள் இருப்பதாகவும், தமக்கும் நன்மை தீமை பற்றித் தெரியும் என்றும் அவர் தெரிவித்தார். தலைமைச் செயலருக்கும் அவருக்கும் இதனால் கருத்து வேறுபாடு தொடர்ந்து, பகை இறுகியது. ப்ரைஸ் இது தொடர்பாகத் தலைமை ஆளுநருக்கும் எழுதினார்.

ஹேஸ்டிங்ஸ் ஆடம் சார்பில்தான் நின்றாரென்றாலும், கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிக்காத வகையில் இதழ் நடத்துவது அரிய செயல் என்னும் தமது கருத்தினையும் வெளிப் படுத்தினார்.

ப்ரைஸின் போராட்டம், இதழ் தொடர்பான சட்டங்களின் கடுமையைத் தலைமை ஆளுநர் உணரச் செய்தது.

ஜான் ஆடம்

ஜான் ஆடம் இதழியல் சட்டங்கள் தொடர்பாகப் பேரிடம் பெறுபவரானதால் அவரைப் பற்றி அறிவது வேண்டும். அவருடைய தந்தையார் ஸ்காட்லாந்தில் உயர் பதவியில் இருந்தவர். ஆடம் தம்முடைய பதினாறாவது வயதிலேயே இந்தியாவிற்கு வந்தவர். பல துறைகளில் பணியாற்றிய பின்பு அரசு தலைமைச் செயலராக இருந்தவர். எனவே, விட்டுக் கொடுக்காத மனப்போக்கு அவருக்கு இயல்பாகிவிட்டது.

இந்நிலையில், அரசை இதழ்கள் தாக்குவது என்பதோ, அரசின் போக்கிற்கு முரண்பட்டு அவை கருத்துகள் தெரிவிக்கும் உரிமைகளைக் கொள்வது என்பதோ அவரால் எண்ணியும் பார்க்க முடியாததாகியது. இங்கிலாந்தில் உரிமை வேட்கை எந்தெந்தத் துறைகளில் பரவி வெற்றியடைந்தது என்பதை அறியும் வாய்ப்பும் அவருக்கு இல்லை. அதுபற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் அவருக்கு இருந்ததில்லை.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நிலை பெற வேண்டுமானால், அது தன்னுடைய போக்கினை எந்தக் காரணம் கொண்டும் மாற்றிக் கொள்ள வேண்டுவதில்லை, எவர்க்காகவும் வளைந்து கொடுக்க வேண்டுவதில்லை என்பதில் அவர் உறுதியாக இருந்தரர். பிரிட்டிஷ் ஆட்சி அசைக்க முடியாததாக இருக்க வேண்டுமானால் தன் மனப் போக்குதான் சரியான வழிமுறையாகும் என்பது அவருடைய உறுதியான எண்ணமாக இருந்தது.

கல்கத்தாவின் நிலை

கல்கத்தாவில் இக்காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர் நிலை பற்றி நாம் எண்ணலாம். ஆடம், இவர்களை, கிழக்கிந்தியக்

கம்பெனியைச் சேர்ந்த ராணுவ அதிகாரிகள் - பிற அரசு அதிகாரிகள், கம்பெனியின் அனுமதி பெற்றுள்ள வணிகர்கள், பல்வேறு தொழில்களை மேற்கொண்டு வாழும் அரசின் அனுமதி பெற்ற - பெறாத பிறர் என்று மூன்று பிரிவினராகப் பிரித்திருந்தார்.

கல்கத்தாவின் நிலையை முழுவதுமாக அறிய வேண்டுமானால், அங்கு வாழ்ந்த இந்திய மக்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த ஒருமித்த வாயிலாக இதழ்களை வெளியிடுவதில் ஆர்வம் கொண்டிருந்தனர் என்பதையும் உணரவேண்டும்.

இந்த நாட்டிற்குரிய சொந்த மக்களான அவர்கள், தங்களை ஆண்டு கொண்டிருப்பவர்கள் போலவே தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த இதழ்களை வெளியிட வேண்டும் என்று விழைந்தது, காலம்கடந்த ஒன்று என்றும் நாம் எண்ணலாம்.

வில்லியம் பட்டர்வொர்த் பெய்லி

1818 ஆம் ஆண்டின் தொடக்க காலத்தில் உடல் நலம் குன்றி ஜான் ஆடம் ஓய்வு கொண்டபோது, இதழ் தணிக்கைப் பொறுப்பாளராக வில்லியம் பட்டர்வொர்த் பெய்லி என்பவர் தற்காலிகமாகச் செயல்பட்டார். அவர் இதழ் தணிக்கைச் சட்டங்களைப் பற்றிப் பின்வரும் கருத்துடையவராயிருந்தார்.

> அரசாங்கத்தின் நடைமுறை செயல்களுக்குத் தடையாகும் வகையில் வெளியிடப்படும் செய்திகளைத் தடுப்பதும், பொதுமக்களிடையில் அரசாங்கத்தைப் பற்றிய தவறான கருத்துகளைப் பரவச் செய்யும் வகையில் வெளியிடப்படும் செய்திப் பகுதிகளைத் தடுப்பதும், சமய உணர்வு காரணமாக எவர்க்குள்ளும் வேறுபாடுகள் வளர்ந்துவிடக் கூடாது என்று கருத்தாகப் பார்த்துக் கொள்வதும், இந்திய மக்களின் உணர்வுகள் பாதிக்காத வகையில் இயங்கச் செய்

வதும், எங்கும் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதுமே தணிக்கை முறையின் கடமைகளாக இருந்தன. இம்முறைகளால் இதழாசிரியர்கள் பொதுவான-தங்கள் பகுதிவாழ் மக்கள் பற்றிய பிரச்னைகள் பற்றி விவாதிப்பதும் சிந்திப்பதும் தடை செய்யப்படவில்லை.''[1]

ஞாயிறு இதழ்

இந்நிலையில்தான், ஜான்பர்ட்டன், ஜேம்ஸ் மெக்கன்ஸி என்னும் இருவரும் 1815 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் நாளன்று, 'கார்டியன்' என்னும் இதழ் வெளியிட அரசின் இசைவை வேண்டி விண்ணப்பித்தனர். இவ்விதழ் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டுமே வெளிவந்தது.

ஞாயிற்றுக் கிழமைகளில் இதழ்கள் வெளிவருதல் கூடாது என்பது முன்னர் அரசு விதித்த விதியாக இருந்தது எனவே, பர்ட்டனும், மெக்கன்ஸியும் தங்கள் விண்ணப்பத்தில், இங்கிலாந்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் பல இதழ்கள் வெளிவருகின்றன என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். அது மட்டுமல்லாமல்,

> ''இதழின் அச்சுத் தொடர்பான பணிகள் எல்லாம் சனியன்று இரவுக்குள் முடிந்துவிடும். ஆதலால் பணியாளர் எவரும் ஞாயிறன்று வேலை செய்ய வேண்டியதில்லை. இதழ்களை விநியோகம் செய்ய வேறு சிலர் அமர்த்திக் கொள்ளப்படுவர்.''

என்று எழுதியிருந்தார். அரசின் இசைவு கிடைத்தது. இரண்டாண்டுகளுக்குப் பின்னர், 'கல்கத்தா ஜர்னல்' என்னும் இதழுக்கும் இது போன்றே இசைவு அளிக்கப்பட்டது.

---

1 Margarita Barns, The Indian Press, p. 87.

செராம்பூர் கிறிஸ்தவ இயக்கம்

செராம்பூர் கல்கத்தாவுக்கு இருபது கல் தொலைவில் உள்ள இடமாகும். 1818 ஆம் ஆண்டில் இங்கு கிறிஸ்தவ சமயக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டது. இதுவே இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் கிறிஸ்தவ சமயச் சார்புடைய கல்வி நிலையமாகும். இதனைத் தொடங்கியவர்கள் டாக்டர் வில்லியம் காரி (Dr. Wiliam Carey), டாக்டர் மார்ஷ்மன் (Dr. Marshman), வார்ட் (Ward) என்போராவர்.

டாக்டர் வில்லியம் காரி

டாக்டர் வில்லியம் காரி, தோல் வினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்; சமயத் துறையில் ஆழ்ந்த பற்றாளர். சமயத் துறையில் இவருக்கிருந்த பெரும் பற்று இந்தியாவுக்குச் சென்று சமயம் பரப்பும் ஆர்வத்தை வளர்த்தது. தம்மை அதற்கு முழுமைத் தகுதியுடையவராக்கிக் கொள்ளும் நோக்குடன் லத்தீன், கிரேக்கம், ஹீப்ரு முதலிய மொழிகளைக் கற்றார்.

1793 இல் இவர் இந்தியாவுக்கு வந்தார். பரந்த மனம் கொண்ட நில உடைமையாளர் ஒருவரிடம் பணி செய்தார். அவர் தம்மிடமுள்ள அச்சகம் ஒன்றை இவர் பயன்படுத்திக் கொள்ள இசைவளித்தார்.

1800 ஆம் ஆண்டில் டேனிஷ் கப்பலொன்றின் மூலம் நான்கு பாதிரியார்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் கம்பெனி யாதிக்கம் உள்ள பகுதிகளில் வாழ்வதற்குரிய அனுமதிச் சீட்டு பெறாமையால் செராம்பூரில் தங்கினர், வில்லியம் அவர்களோடு சேர்ந்து கொண்டார். இந்தக் குழுவினரே செராம்பூர் கிறிஸ்தவ இயக்கத்தின் தோற்றத்திற்குக் காரணமாயினர்.

The Friend of India.

(QUARTERLY SERIES.)

SEPTEMBER, 1820.

ART. I.—*Review of Golownin's Recollections of Japan, comprising a particular account of the Religion, Language, Government, Laws, and Manners of the People, with observations on the Geography, Climate, Population, and Productions of the Country.* 8vo. London, 1819.

WITHIN the last two centuries various circumstances have combined to render the different nations of Eastern Asia in a high degree interesting. In the latter end of the fifteenth century the spirit of discovery, which had lain dormant for nearly two thousand years, at least from the reign of Alexander and the voyage of Nearchus, if it could be said ever to have lived; revived with astonishing vigor;—and while it led to the acquisition of new worlds in North and South America, it opened a passage to Eastern Asia, which changed the face of the world, and brought the nations of the East almost home to Europe in all their wealth and their immense population. The circumstances which led to such a burst of European energy may be traced in the revival of classic literature and the invention of printing. The spirit of Europe, which, springing from the north, had overwhelmed the colossal empire of the west, the terror of the world for nearly a thousand years, and had planted a new circle of kingdoms destined to be the future scene of liberty and peace through

பன்மொழிப் புலவர்

1806 ஆம் ஆண்டில் டாக்டர் வில்லியம் தலைமையி லமைந்த குழு விவிலிய நூலை மொழி பெயர்த்து வெளியிடத் தொடங்கியது. அவருடைய அர்ச்சகம் பதினேழு மொழிகளில் அச்சிடும் நிலையில் வளர்ந்தது. அரசு, காரியின் தொண்டினை யும் ஆற்றலையும் உணர்ந்தது; எனவே, கல்கத்தாவிலிருந்த ஃபோர்ட் வில்லியம் கல்லூரியில் வங்காளம், சம்ஸ்கிருதம், மராத்தி ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் பேராசிரியராக அவரை நியமித்தது. அக்கல்லூரி கிழக்கிந்தியக் கம்பெனியில் பணி புரியும் முதனிலை அலுவலர்க்கு உரியதாகும்.

மூன்று இதழ்கள்

1818 இல் செராம்பூர் கிறிஸ்தவ சமயப் பரப்பு இயக்கத் தினர் இந்திய மொழிகளில் இதழ்களை வெளியிட்டனர். அவை 'திக்தர்சன்' என்னும் திங்கள் இதழும், 'சமாச்சார் தர்பன்' என்னும் வார இதழுமாகும். அவை இரண்டும் வங்காள மொழியில் வெளிவந்தன. அதே ஆண்டில் (ஏப்ரல் 30) Friend of India என்னும் திங்கள் இதழையும் தொடங்கினர். இது ஆங்கிலத்தில் வெளிவந்தது.

1820 இல் (ஜூன்) Friend of India என்னும் காலாண் டிதழையும் அவர்கள் வெளியிட்டனர். டாக்டர் வில்லியம் காரி இதழ்கள் வெளியிடுவதில் ஆர்வம் காட்டவில்லை. எனவே டாக்டர் மார்ஷ்மனும் வார்டுமே இவற்றில் பேரார்வம் கொண்டு செயல்பட்டனர். 'இவ்விதழ்கள் இந்திய மக்களுக்கு நன்மை யைத் தரவல்லன' என்று தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்ஸின் பாராட்டைப் பெற்றன.

Friend of India ஆங்கில இதழ்கள் இரண்டுமே 1827 வரை வெளிவந்து நின்றன. ஆனால் இதழின் பெயர் எல்லோராலும் விரும்பப்பட்டது எட்டாண்டுகளுக்குப் பின்னர் 1835 இல் (ஜனவரி, 1) அதே பெயரில் வார இதழ் ஒன்று வெளிவந்தது.

கல்கத்தா ஜர்னல்

1818 இல் (அக்டோபர் 2) வாரம் இருமுறை இதழாக கல்கத்தாவிலிருந்து 'கல்கத்தா ஜர்னல்' (Calcutta Journal) வெளிவந்தது. எட்டுப் பக்கங்களைக் கொண்ட இவ்விதழின் விலை ஒரு ரூபாய்.

ஜான் பால்மர் என்பவர் வணிகர். கல்கத்தாவில் வாழும் வணிகர்க்கென்று தனியொரு இதழ் இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். தாம் தொடங்கவிருக்கும் இதழுக்கு ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாமே ஆசிரியராக இருக்க வேண்டும் என்று விரும்பினார்; தமது விருப்பத்தை அவரிடம் தெரிவித்தார்.

முன்பே இரு இதழ்களில் பணியாற்றி, இதழியல் பற்றி அறிந்திருந்த ஜேம்ஸ் சில்க் பக்கிங்'ஹாம் அதற்கு இசைந்தார்.

இவ்விதழில், மக்களுக்குப் பயன்படும் வகையில் செய்திகள் தேர்ந்து தரப்பட்டன. அதே வேளையில் அரசின் குறைகளும் அரசு அலுவலர்களின் குறைகளும் சுட்டிக் காட்டப்பட்டன. தனிப்பட்டவர்களின் தேவைகளை வெளியிட்டு அவை நிறைவு பெறத் துணை நிற்கும் வகையில் இவ்விதழ் துணை புரிந்தது. கல்கத்தா நகரில் இரவு நேரத்தில் மக்கள் நடமாட முடியாதபடி போலீசார் வேடத்தில் சில சமூக விரோதிகள் தொல்லை விளைவித்துக் கொண்டுள்ளனர் என்று நகரமக்கள் நலன் கருதிக் குறைகளை வெளிப்படுத்திய கல்கத்தா ஜர்னல், "கடிதங்கள்" என்னும் தனிப்பகுதியை ஒதுக்கி அதில் மக்கள் தங்கள் மனக் கருத்துகளை வெளிப்படுத்த வாய்ப்பளித்தது. ஆசிரியர்க்குக் கடிதங்கள், புகார்... என்னும் பகுதிகளை இன்றைய நாள், வார, திங்கள் இதழ்களில் காணும் நமக்கு, சடந்த நூற்றாண்டிலேயே இதழாசிரியர் ஒருவரின் சிந்தனையில் இம்முறை இடம் பெற்றிருந்ததை எண்ணும்போது, இதழியலில் புதுமை சேர்க்கும் அவரது ஆர்வம் வியப்பையும் நிறைவையும் தரும்.

ஒழுங்காக நடத்தப்படுகிறது

தனித்தன்மையுடன் விளங்குகிறது

அறிவு பரப்பும் நல்ல இதழ்

என்னும் சிறப்புகளைப் பெற்றிருந்த இவ்விதழ் கல்கத்தா மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது.

ஆளுவோரின் கடமைகளை உணர்த்துவதும்

அவர்களின் குறைகளைக் கண்ணோட்டமின்றி வெளிப்படுத்துவதும்

உண்மைக்குப் புறம்பான செய்திகளைத் தடுப்பதும் இதழின் நோக்கங்களாக இருந்தன.[1]

இரண்டாண்டுகளுக்குப்பின் இதழின் சந்தா குறைக்கப் பட்டது. இதனால் இதழின் விற்பனை பெருகியது; பெருஞ் செல்வம் சேர்ந்தது. இங்கிலாந்திலிருந்து, ஆங்கிலம், கிரேக்கம், ஹீப்ரு, அரபு மொழி எழுத்துகளும், அச்சகத்திற்குத் தேவையான எல்லாப் பொருள்களும் வரவழைக்கப்பட்டன. இதழுக்கென்று பெரியதொரு கட்டடம் உரிமையாயிற்று. புதிய அச்சகம் 'கொலம்பியன் பிரஸ்' என்னும் பெயர் கொண்டது.

நான்காண்டுகளுக்குள் சந்தாதாரர்களின் எண்ணிக்கை ஆயிரமாகப் பெருகியது. அக்காலத்தில் இவ்வளவு அதிகமான சந்தாதாரர்களைக் கொண்ட ஒரே இதழாக இது விளங்கியது.

ராணுவ அதிகாரிகள், வணிகர்கள், கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த உயர்மட்ட அலுவலர்கள் ஆகியோரிடையில் இவருடைய இதழுக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது.

இவ்விதழின் ஆசிரியர் ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம் என்பவர்.

---

1. J. Natarajan, History of Indian Journalism, p. 14

ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம்

ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம் இந்திய இதழியல் துறையில் சிறப்பிடம் பெறுபவராவர். இவர் ஆசிரியப் பொறுப்பேற்ற காலம் இதழியலின் பொற்காலமாகும். தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்ஸ் இதழ் தணிக்கைச் சட்டத்தின் கொடுமைகளைக் குறைத்தார்.

"இதழ்களில் இதழாசிரியர்கள் தங்கள் கருத்துகளை வெளிப் படுத்துவது சுதந்திரமான உணர்வாக இருக்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பமாகும். என் ஆட்சிக்குட்பட்ட மக்கள், உரிமை உணர்வுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது என் கருத்தாகும். நெருக்கடியான நேரங்களில் இதழாசிரியர் தங்கள் பொறுப்புணர்ந்து நடப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்" என்று கல்கத்தாவில் தமக்களிக்கப்பட்ட பாராட்டு நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு ஹேஸ்டிங்ஸ் கூறினார். அதுகாறும், இதழ் தணிக்கைச் சட்டங்களால் பெரிதும் துன்புற்றிருந்த இதழாசிரியர்களுக்கு இந்தக் கூற்று மகிழ்ச்சியை அளித்தது.

பங்கிங்ஹாம் கடலோடியாகத் தமது வாழ்வைத் தொடங் கியவர். அவர் கப்பலொன்றின் தலைமை மாலுமியாக இருந் தவர். அடிமைகளைக் கொண்ட கப்பலொன்றை ஓட்டிச் செல்லவேண்டும் என்ற நிலை வந்தபோது, தமக்கு அவ்வாறு செய்ய விருப்பமில்லை என்று கூறி மறுத்து விட்டார். பக்கிங்ஹாமின் இந்தத் துணிவான செயலைத் தலைமை ஆளுநர், தலைமை பிஷப் உள்ளிட்ட அனைவரும் பாராட்டினர்.

சிறந்த இதழாசிரியர்

இவர் நன்கு கற்றவர். அரசியல் தொடர்பாக எழுது வதுடன், பயணக் கட்டுரைகளையும் மிகுதியாக எழுதினார். கடலோடியான இவர். தம்முடைய பயணங்களைப் பற்றி மிகவும் சுவையாக எழுதினார். அவற்றைப் படிப்பதற்கென்றே வாசகர்கள் பெருகினர். இதழின் விற்பனை பெருகியது.

இலக்கியத் துறையிலும் தமது இதழ்வழி இவர் போற்றும் வகையில் தொண்டு செய்துள்ளார். கல்கத்தா வாசகர்கள், இவருடைய இதழால் பெருங்கவிஞரான பைரனின் கவிதைகளையும், ஸ்காட்டின் கதைகளையும் அறியும் வகையில் நிரம்ப எழுதினார்.

மாலுமி என்ற வகையில், போக்குவரவுத் துறைகளில் புதுமைகள் தோன்ற வேண்டும் என்று இவர் எண்ணினார். வடமேற்கு வழி, செங்கடல் வழி, நீராவிக்கப்பல், பம்பாயிலிருந்து லண்டனுக்கு விண்வழிச் செலவு என்னும் தலைப்புகளில் தமது ஆசிரியப்பகுதியில் எழுதினார்.

இவர், கிழக்கிந்தியக் கம்பெனியின் மேலாதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று பாடுபட்டார்; ஆசியா முழுவதும் வாணிகம் செய்யும் உரிமை எல்லோர்க்கும் இருக்க வேண்டும் என்று போராடினார்; உடல் நலம் பற்றியும், பொருள் வளம் பற்றியும் தங்கள் சொந்தப் பொறுப்பில் விளைவுகளை ஏற்கக் கூடிய எவராயினும் எத்தகைய தடையுமில்லாமல் வாணிகம் செய்ய அனுமதிப்பதே கிழக்கிந்தியக் கம்பெனியின் எதேச்சாதிகாரத்தை அழிக்கும் என்று கூறினார்.

> அரசு என்பது பொதுமக்களின் கண்காணிப்புக்கு உரியதாக இருக்க வேண்டும்; பொறுப்பில்லாத அரசாங்கத்தை நெறிப்படுத்துவனவாக இதழ்கள் விளங்க வேண்டும்

என்பன இவருடைய கொள்கைகளாகும்.

அரசின் தவறான போக்கினைச் சுட்டிக்காட்ட அவர் என்றுமே தயங்கியதில்லை. இந்தியாவில் நெடுங்காலமாக நிலவி வந்த - இந்தியத் தலைவர்கள் வெறுத்துவந்த உடன் கட்டையேறும் கொடிய பழக்கத்தைத் தமது இதழில் வன்மையாகக் கண்டித்து எழுதினார். அரசினர் அக்கொடுமை வழக்கத்தைத் தடை செய்யாமலிருப்பது அவர்களது திறமை

வின்மையையே சுட்டுகின்றது என்று எண்ணிய இவர், தமது எண்ணத்திற்கு எழுத்துரு அளித்தார். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழல்களை இதழ்தோறும் கண்டித்தார். இந்த வகையில் நாற்பதாண்டுகளுக்கு முன்னால் இந்தப் போக்கில் இதழ் நடத்திய ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கியுடன் ஒப்பவைத்து எண்ணத் தகுந்தவராகின்றார். இதனை உறுதிப்படுத்த சில சான்றுகளைக் காண்போம்.

1819 மே மாதத்தில் வெளிவந்த இதழொன்றில், அதிகாரிகளின் சினத்துக்காளாகும் வகையில் செய்தியொன்றை வெளியிட்டார். அச்செய்தி இதுவாகும்.

> "சென்னையிலிருந்து ஒரு கடிதம் எங்களுக்கு வந்துள்ளது. நல்ல அகலமும் நீளமும் கொண்ட அது, சுற்றிலும் அடர்ந்த கருப்பு மையினால் தீட்டப்பட்ட கோடுகளைக் கொண்டுள்ளது. இரங்கல் அறிவிப்புப்போல அது அமைந்துள்ளது. அதை அனுப்பியவர்கள் ஆழ்ந்த துயரத்துக்குள்ளாகியுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.
>
> "இப்போது சென்னைக் கவர்னராக உள்ள எலியட் சென்னை மாநிலத்திற்குரிய கவர்னராக மேலும் மூன்றாண்டுகளுக்குப் பதவி வகிப்பார் என்று அவருக்கு அளிக்கப்பட்டுள்ள பதவிக்கால நீட்டிப்புப் பற்றியே அந்த அறிவிப்பு அறிவிக்கின்றது.
>
> "அரசாங்கத்தின் இந்த அறிக்கையினை அந்த மாநில மக்கள் தங்களுக்கு நேர்ந்த பெருத்த அதிர்ச்சியாகவே கருதுகின்றனர். அதைப் பற்றி எண்ணும் போது, இந்தியா முழுவதும் உள்ள மக்கள் அவர்கள் துயரில் பங்கு கொள்வார்களோ என்று நாங்கள் அஞ்சுகிறோம்."[1]

1 Margarita Barns, The Indian Press, p. 96.

பக்கிங்ஹாமின் எழுத்தாற்றலை இப்பகுதியால் உணரலாம். கம்பெனியாரின் சார்பில் நியமிக்கப்படும் ஆளுநர்கள் மக்களுக்கெதிராக நடந்து கொள்வதைக் கண்டிக்கும் போக்கில்தான், அவர், சென்னை மாநில மக்களின் குறையை அம்பலப்படுத்த முனைகின்றார்.

சென்னை ஆளுநரான எல்பின்ஸ்டன் இதனை அறிந்து சினந்தார். கல்கத்தா அதிகாரிகளுக்கு கல்கத்தா ஜர்னல் ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எழுதினார். அவர்கள் 1818 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட இதழ் சட்டம் பற்றிய நகலை அனுப்பி அவரை எச்சரித்தனர்; 'தலைமை ஆளுநர் உங்கள் போக்கில் அதிருப்தி அடைந்துள்ளார்' என்னும் குறிப்பினையும் எழுதினர்.

மிக நீண்ட கடிதத்தைத் தமக்கு அனுப்பப்பட்ட எச்சரிக்கைக் கடிதத்திற்குரிய பதிலாக எழுதினார் பக்கிங்ஹாம். "தலைமை ஆளுநர் தம்முடைய மன நிறைவின்மையை சபையில் தெரிவிக்கும் அளவுக்கு நேர்ந்து விட்டதற்காக வருந்துகிறேன்" என்னும் குறிப்பினையும் அக்கடிதம் கொண்டிருந்தது இதழ்களுக்கு எழுத்துரிமை இருப்பதாகத் தாம் எண்ணிக் கொண்டிருப்பதாகவும் அதில் தெரிவித்தார். அரசாங்கத்தின் கொடுமைக்கும் அளவுண்டு என்பதைத்தான் இவ்வாறு மறைமுகப் போக்கில் அவர் வெளிப்படுத்தியுள்ளார் என்று என்னலாம்.

கல்கத்தா ஜர்னலின் வளர்ச்சி கண்டு ஏனைய இதழ்கள் வருந்தின. இதழ்களின் உரிமை குறித்து மாறான கருத்துகளையும் அவை வெளியிட்டன. கல்கத்தா ஜர்னலை எதிர்ப்பதையே தமது பணியாகக் கொண்டு ஏஷியாட்டிக் மிர்ரர் செயல்பட்டது.

ஹிக்கியோ இவர்?

ஹிக்கிக்குப் பின்னர் இதழுலகில் கொள்கைகளைக் கொண்ட இதழாசிரியராக விளங்கியவர் வில்லியம் டுயன்

அவர்போன்றே பக்கிங்ஹாமும் விளங்கினார். அவர் தலைமை நீதிபதி, கல்கத்தாவின் பிஷப் முதல் பலரையும் கண்டித்து எழுதினார்.

பாதிரியார்கள் தங்கள் கடமையினைச் சரிவர செய்வதில்லை. அவர்களின் தலைவர் (பிஷப்) பாதிரியார்கள் தங்களுக்குரிய கடமையினைச் செய்யாமல், நகரில் நடைபெறும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கடமை தவறியவர்களாவதற்குத் துணை போகின்றார். ஞாயிற்றுக்கிழமைகளில்—கிறிஸ்துமஸ் பெருநாளின் போதெல்லாம் அப்பாதிரிமார்கள் பொருந்தி இருந்து கடமைகளைச் செய்வதில்லை என்று வெளிப்படையாகவே தமது கருத்தினைத் தெரிவித்தார் அவர். (ஜூலை 10, 1821)

பிஷப் பற்றியும் பாதிரியார்கள் பற்றியும் கூறப்பட்ட குற்றச்சாட்டினை எழுதியவர் யார் என்று கேட்டு அரசிடமிருந்து வந்த கடிதத்திற்கு, தமக்கு அதுபற்றி ஏதும் தெரியாதென்றும், அது பெயரேதும் குறிப்பிடப்படாமல் தமக்கு வந்த செய்தியாகும் என்றும் பக்கிங்ஹாம் பதில் எழுதினார். அத்துடன் நல்ல கருத்துகளை உண்மையானவற்றை எழுதுவது இதழின் கடமையாகும் என்று தாம் கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மறுமொழி அரசுக்குச் சினத்தைத் தந்தது. பக்கிங்ஹாம் பற்றியும் அவருடைய இதழ் பற்றியும் அழுக்காறு கொண்ட ஏனைய இதழாசிரியர்கள் தங்கள் எதிர்ப்பினை அரசுக்கு எழுதிக் குவித்தனர். அதிகாரிகளும், வணிகர்களும், நீதித் துறையினரும் தங்கள் குறைகளை பக்கிங்ஹாம் வெளிப்படுத்துவதால் அவர்மீது கடுங்கோபம் கொண்டனர். அவரைத் தண்டிக்க வேண்டும் என்றும் அவர் இதழுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் அவர்கள் அரசாங்கத்துக்குப் பல கடிதங்களை எழுதினர்.

இவை பற்றியெல்லாம் எண்ணியிருந்த அரசு, அவர் எழுதிய மறுமொழியையும் துணையாகக் கொண்டு அவருடைய இதழியல் போக்கினைத் தடுப்பது கடமையாகும் என்னும்

முடிவுக்கு வந்தது; எனவே, இதழில் வெளிவரும் செய்திகள் எவரால் எழுதப்பட்டன என்று தெரிவிக்க விரும்பாதவர் கட்டுப் பாடுகளுக்குட்படாதவராகின்றார் என்று குற்றம் சாட்டி அவருக் குக் கடிதம் ஒன்றினை அனுப்பியது.

"வங்காளத்தில் இதழ்கள் தொடர்பாக நெடுங் காலமாக நிலவியிருந்த சட்டங்களில் கடுமையான சில, வற்றை இப்போதைய அரசு நீக்கியதற்குக் காரணம் மக்கள் அறிவு வளர்ச்சி கருதி இதழ்கள் வெளியிடும் செய்திகளுக்குக் கட்டுப்பாடு இருக்கக்கூடாது என்று எண்ணியதேயாகும்.

அதைப் பயன்படுத்திக் கொண்டு நல்ல பய னுள்ள கருத்துகளை இதழ்கள் கொண்டு வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் உங்கள் இதழ் அந்தத் தடைநீக்கத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நன்மை களுக்குத் துணை போவதாகக் கூறிக் கொண்டு தனிப் பட்டவர்களின் குறைகளை நீங்கள் அம்பலமாக்குகிறீர் கள். குறைகளைச் சுட்டுவதையே கடமை என்று நீங்கள் கருதுவதாகத் தெரிகிறது. உங்களால் குறை சொல்லப்பட்ட தனி மனிதர்கள் அரசுக்கு எழுதிக் குவித்த கடிதங்கள் ஏராளம்.

உங்கள் போக்கு மாறும் என்று எதிர்பார்த்தோம். அது பயனில்லை என்று தெரிகிறது. எனவே உங்கள் இதழுக்குத் தடை விதிப்பதுடன், நீங்கள் உடனடி யாக இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும் என்று ஆணையிடும் நிலைக்கு அரசை ஆளாக்கிவிட் டீர்கள்."

அரசு அனுப்பிய இக்கடிதத்திற்குப் பக்கிங்ஹாம் பதில் எழுதினார். ஆனால் அப்பதில் அவருடைய போக்கில் மாற்ற மேதும் ஏற்பட்டதாகத் தங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்றும்

அதனால் தாங்கள் கொண்ட முடிவில் மாற்றம் ஏதும் கொள்ளத் தேவையில்லாமல் உள்ளது என்றும் அவர்க்குத் தெரிவிக்கப் பட்டது.

ஜான்புல் இன் தி ஈஸ்ட்[1]

பங்கிங்ஹாம் அரசுடன் கொண்ட கருத்து வேறுபாடும், அரசு அவரைப் பற்றிக் கொண்ட முடிபும் குறையாத—மாறு படாத நிலையிலேயே, கல்கத்தா இதழியலுக்குப் புதிய வரவொன்று சேர்ந்தது.

1821 இல் (ஜூன் 3) ஜான்புல் இன் தி ஈஸ்ட் என்னும் இதழ் வெளிவந்தது. கம்பெனி ஊழியர்களே இவ்விதழை நடத்தினர். இதழின் குறிக்கோள்களாகக் கூறப்பட்டுள்ளவை இவை :

> "நெடுங்காலமாக நிலவி வந்த இதழ் தடைச் சட்டங்களை நீக்கி, கருத்து வெளிப்பாட்டிற்குச் சுதந் திரமளித்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நல்லனவற்றைப் பரப்ப இவ்விதழ் முனைகின்றது. கொடுமையான சட்டங்களைத் தளர்த்துவதற்குரிய காரணங்களைச் சொல்லி இதழியலின் நோக்கும் போக்கும் மனித சமுதாயத்திற்கு நன்மை செய்வதாக அமைய வேண்டும் என்று விருப்பம் தெரிவித்த தலைமை ஆளுநரின் எண்ணம் சிறக்குமளவில் இதழின் உள்ளடக்கம் இருக்கும். இந்திய மக்கள் கற்றுச் சிறக்கும் வகையில் இதில் கருத்துரைகள் வெளியிடப்படும்."[2]

முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்ட இதழாக அமைந்தது ஜான்புல்.

---

1 John Bull in the East.

2 Margarita Barns, The Indian press, p. 98

கடிதத்தின் விளைவு

ராணுவ அதிகாரி ஒருவர் கல்கத்தா ஜர்னலுக்குக் கடிதமொன்றை எழுதினர். அதில் அவர், ஜேம்ஸின் திறமையைப் போற்றியிருந்தார். இந்திய நாட்டின் நலம் கருதும் அவருடைய நல்ல மனத்தைப் பாராட்டியிருந்தார். ராணுவத்தில் பதவி உயர்வு என்பது பற்றிய வினாக்களை எழுப்பியிருந்த கடிதத்தின் முடிவுப் பத்தி,

> "இந்திய மக்களைப் பாராட்டுவதில் உண்மையாகவே நான் மகிழ்கிறேன். நீங்கள் இந்தியர்களுக்காகப் பல நல்ல காரியங்களைச் செய்துள்ளீர்கள். உங்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். 'உங்களை நாங்கள் காக்கின்றோம்' என்று கூறிக்கொண்டு இந்திய மக்களை வழக்கு மன்றங்களுக்கு இழுப்பதும், சட்டங்கள்—ஒழுங்கு முறைகள் என்றெல்லாம் சொல்லி அவர்களை அமைதியற்ற வாழ்வில் உழலச் செய்வதுமாக உள்ள ஒரு சூழலிலிருந்து நீங்களும் உங்கள் இதழும்தான் அவர்களைக் காக்கவேண்டும் என்று விரும்புகிறேன்"

என்றமைந்திருந்தது.

இதனைக் கண்டதும் கடிதம் எழுதியவரின் பெயரைத் தெரிவிக்குமாறு பக்கிங்ஹாமுக்கு அரசு ஆணையிட்டது. அவர் கடிதம் எழுதியவருடன் தொடர்பு கொண்ட பின்னர், அரசுக்கு அவர் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார்.

நாக்பூரிலிருந்த ராணுவ அதிகாரியான லெப்டினன்ட் கர்னல் ராபிசன் என்பவர்தான் அக்கடிதத்தை எழுதியவர். உடனே அவருக்குக் கடிதம் எழுதி உண்மை அறிவது என்ற முடிவுக்கு அரசு வந்தது.

ஜான் ஆடம் இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு பக்கிங்ஹாமுக்குத் தொல்லை கொடுக்க எண்ணினர். அரசு அலுவலர் எவரும் இதழ்களுடன் எந்தவகையான தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று அவர் தெரிவித்தார். அத்துடன் நில்லாமல் தலைமை ஆளுநர்க்கும் மூன்று கருத்து களைத் தெரிவித்துக் கடிதம் எழுதினர்.

அவை :

1. லெப்டினன்ட் கர்னல் ராபிசன் பதவியிலிருந்து நீக்கப் படவேண்டும்.
2. ராணுவத்துறையினருக்கு இந்தச் செய்தி சுற்றறிக்கை யின் மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டும்.
3. இந்தியாவில் இருப்பதற்கு பக்கிங்ஹாமுக்கு வழங்கப் பட்ட அனுமதியைத் திருப்பப் பெறுவதோடு, அவர் உடனடியாக இங்கிலாந்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

கம்பெனியின் ஆட்சிக்குழுவினருள் இருவர் ஜான்ஆடத்தின் நண்பர்கள். ஃபெண்டல், பெய்லி என்னும் அவர்களிருவரும் ஆடம் கொண்ட முடிவு செம்மையானது என்றனர்கள். எதிர் காலத்தில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாமலிருப்பதற்கும், இதழாசிரியர்கள் பணிந்து நடப்பதற்கும் பக்கிங்ஹாம் நாடு கடத்தப்படுவது வழிகாட்டுவதாகும் என்று அவர்கள் கருதினர்கள்.

தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்ஸ் தலைமையில் நடை பெற்ற கூட்டமொன்றில் அவர், நாடுகடத்துவதால் எந்தவித நன்மையும் ஏற்பட்டுவிடப்போவதில்லை என்றும், பக்கிங்ஹாம் ஒழுங்கு எல்லையைக் கடக்கின்றார் என்பது உண்மைதான் என்றும், அதற்கு அவர் இந்தியாவில் இருக்கக்கூடாது என்பதோ, உடனடியாக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட

வேண்டும் என்பதோ சரியான தீர்ப்பாகிவிடாது என்றும் கூறினார். "அவரை அச்சுறுத்தி நல்வழிப் படுத்தலாம். பக்கிங்ஹாமை நாடு கடத்த வேண்டும் என்று நீங்கள் ஒருமனதாக செய்த முடிவுக்கு நான் மாறுபடுகிறேன்." இவ்வாறு தலைமை ஆளுநரே கூறியதால் மற்றவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஜேம்ஸ்சில்க் பக்கிங்ஹாமை எதிர் நோக்கியிருந்த பேராபத்து தலைமை ஆளுநரின் கருணை உள்ளத்தால் நீங்கியது. ஆனால் கடிதம் எழுதிய ராபிசன் நாடுகடத்தப் பட்டார். அவர் தலைமை ஆளுநருக்குக் கடிதம் ஒன்று எழுதி விட்டுப் புறப்பட்டார். அக்கடிதத்தில், தலைமை ஆளுநரின் இரக்கமற்ற, அறியாமை மிக்க, லஞ்சலாவண்யங்களுக்குரியவர்களான ஆலோசகர்களுக்குத் தம் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக எழுதியிருந்தார். அவர் இங்கிலாந்துக்குச் செல்லும் வழியிலேயே காலமானார்.

டாக்டர் ஜேம்சன்

இந்த நிகழ்ச்சிக்குப் பின், ராபிசனின் கடிந்துரைக்குப் பின் பக்கிங்ஹாமின் இதழை ஒழித்து விடுவதில் பெருங்கருத்து கொண்டார் ஆடம்.

1822 ஜூலை மாதம் வெளிவந்த 'கல்கத்தா ஜர்னலின்' இதழொன்றில், இந்தியர்களுக்குரிய மருத்துவப் பள்ளியொன்றின் கண்காணிப்பாளராக டாக்டர் ஜேம்சன என்பவர் நியமிக்கப் பட்டது பற்றி எழுதப்பட்டது.

மருத்துவப் பள்ளியின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்ட டாக்டர் ஜேம்சன், மருத்துவக்குழுவின் செயலாளராகவும், எழுதுபொருள் பிரிவின் தணிக்கைக் குழுவினருள் ஒருவராகவும் இலவசப் பாடசாலையொன்றின் மருத்துவ ஆலோசகராகவும் பதவிகளை வகிப்பவர். நான்கு பணிகளில் ஈடுபட்டு நான்கு இடங்களிலும் ஊதியம் பெற்றார் அவர். அரசு, தனக்கு

வேண்டியவர்களுக்கு, இப்படி ஒழுங்கு மீறி உதவுவது என்பது பொருந்தாததாகும். அரசின் இந்தப் பொருந்தாச் செயல் பக்கிங்ஹாமுக்குத் தெரிந்தது. இதனை அவர் கண்டித்தார். மருத்துவப்பள்ளியில் கண்காணிப்பாளராக இருப்பதற்குத் தேவையான தகுதிகள் இல்லாதபோது அவரை எப்படி அரசு அப்பதவிக்கு நியமித்தது, அவர்தான் அதை எப்படி ஏற்றுக் கொண்டார் என்று தமது இதழ் மூலம் எதிர்ப்பு தெரிவிக்கலானார் பக்கிங்ஹாம். இரண்டு அமைப்புகளுக்குச் செயலாளராகவும், ஒரு அமைப்புக்கு டாக்டராகவும், இன்னொன்றிற்குக் கண்காணிப்பாளராகவும் இருப்பதற்கு எப்படி ஒருவரால் முடிகிறது என்ற பக்கிங்ஹாமின் கேள்வி, டாக்டர் ஜேம்சனுக்குக் கோபத்தை அளித்தது. தம்மைப் பற்றிய ரகசியம் அம்பலமாகி விட்டதே என்று அவர் வருந்தினார்; கடுமையான முயற்சிகள் செய்து அவரை நாடுகடத்தச் செய்துவிடுவது என்று உறுதி கொண்டார். ஜான் ஆடம் அவருக்குத் துணையானார்.

ஜான் ஆடம், இதழாசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் நீக்கப்பட்டாலொழிய இதுபோன்ற குறைகளைத் தவிர்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார்; இதழாசிரியர்கள் அரசுச் செய்திகளையும், செயல்களையும் மக்கள் முன் வைப்பதென்றால் அரசு இயக்கம் பெறாது என்று வாதிட்டார். அரசாங்கம், அரசு ஊழியர்களால் ஆணையிடப்பட்டுத் திருத்தப் படுவதற்குரியதன்று, பொதுமக்கள் கருத்து என்பது அரசின் செயல்களில் குறுக்கிடுவதாக இருக்கக் கூடாது என்பது அவர் கருத்தாகும். இந்தியாவின் எதிர்காலம் பாராளுமன்றத்திடம் தான் உள்ளதே தவிர, இதழாசிரியர்களின் எழுத்துகளில்லை என்று ஆடம் சினந்து சொன்னார். "இப்போதே இதழ்கள் பெருஞ் செல்வாக்குடன் உள்ளன. நிலைமை சரியாக வேண்டுமானால் கடுமையான இதழ் தணிக்கைச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பொதுமக்கள் கருத்துக்குச் செவிசாய்ப்பது என்ற கொள்கையை அரசு விட்டொழிக்க வேண்டும் அப்போதுதான்—இதழ் தணிக்கைச் சட்டம் விரிவு படுத்தப் பட்டால்தான் நாடெங்கும் அமைதி நிலவ

முடியும். இல்லையென்றால்—ஒவ்வொரு இதழாசிரியர் மீதும் வழக்குத் தொடுத்து செயல்படுவதென்றால் அரசு, தன் கடமையிலிருந்து வழுவியதாகிவிடும்'' என்றெல்லாம் தம்முடைய கருத்துகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார் ஆடம்.

ஆனால், தலைமை ஆளுநரான ஹேஸ்டிங்ஸ் இம்முறையும் பக்கிங்ஹாம் சார்பிலேயே நின்றார். இருப்பினும் ஜான் ஆடம் பக்கிங்ஹாமுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், அவர் இவ்வாறே தொடர்ந்து தமது இதழைப் பிறரைத் தூற்றும் போக்கிலேயே நடத்தி வந்தால், நாட்டில் அமைதியில்லாமல் போய் விடும் என்று குறிப்பிட்டார்.

மாறுபட்ட கருத்துகள்

கல்கத்தாவில் நடைபெற்ற இதழ்களுள் பல, அரசுடன் இணைந்துபோகும் ஆர்வம் கொண்டு செயல்பட்டன. அவை, இதழ்களின் உரிமை பற்றித் தங்கள் கருத்துகளை வெளி யிட்டன.

'ஜான்புல்' இதழாசிரியர், இதழுரிமை என்பது பற்றித் தலைமை ஆளுநர் ஏதும் குறிப்பிடவில்லை என்றும், அவர், இதழ்கள் விரும்பிய வண்ணம் எல்லாம் எழுதலாம், அதுதான் இதழின் உரிமை என்று எங்கும் சொல்லவில்லை என்றும் பங்கிங்ஹாம்தான், இதழ் உரிமை பற்றிப் பேசுகின்றார் என்றும், அவர்தான் இதழ்கள் எது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்று தலைமை ஆளுநர் இதழ்களுக்கு உரிமையளித்துள்ளார் என்று கூறுகிறார் என்றும், அவர் கூற்றின் மூலமாகத்தான் இப்படியொரு நிலை இருப்பதைத் தாங்கள் அறிய முடிகிறது என்றும் எழுதினார்.

சென்னை மக்கள் அளித்த வரவேற்புக்குப் பதில் அளிக்கும் வகையில் ஹேஸ்டிங்ஸ் இதழியல் உரிமைகளைப் பற்றிப் பேசியதைக் குறிப்பிட்டு பக்கிங்ஹாம் தமது இதழ் வழி இவ்விதழ்

களுக்குப் பதில் அளித்தார். இதழ்களின் உரிமை பற்றி மிகத் தெளிவாக ஹேஸ்டிங்ஸ் கூறியுள்ளவற்றை அவர் எழுதினார். 'ஜான்புல் இதழின் தாக்குதலிலிருந்து ஹேஸ்டிங்ஸுக்குப் பாதுகாப்பு' என்று அப்பகுதிக்குத் தலைப்பிட்டார்.

குறிப்பும் கடிதமும்

இது போன்று பக்கிங்ஹாம் தொடர்ந்து வெளியிட்ட செய்திகள் ஜான் ஆடம் பெரிதும் சினம் கொள்ளச் செய்தன. 1822 செப்டம்பர் 1 இல் அவர் பக்கிங்ஹாமுக்குத் தெரிவிக்குமாறு பின்வரும் குறிப்பினை எழுதினார்.

> "பல முறை பக்கிங்ஹாம் தம்முடைய பொருந்தாப் போக்கினை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளார். ஆயினும் அவர் அது பற்றி ஏதும் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. அவர் தம் போக்கிலேயே எழுதி வருவது அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டுவதாக உள்ளது. எனவே அவர் அரசு பற்றியோ அரசு ஊழியர்கள் பற்றியோ அரசின் கொள்கைகள் பற்றியோ எழுதுவதை நிறுத்தாவிட்டால், இதுவரையும் பன்முறை எச்சரித்து வந்ததைப் போலில்லாமல், கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்பட்டு நாடு கடத்தப்படுவது உறுதியாகும்."[1]

பக்கிங்ஹாம் மீது ஆடம் கொண்ட வெறுப்புணர்வு சிறிதும் குறையவில்லை. எனவே அவரே நான்கு நாட்களுக்குப் பின்னர் பக்கிங்ஹாமுக்குக் கடிதம் எழுதி எச்சரித்தார்.

ஆனால் ஹேஸ்டிங்ஸ் ஆடம் போக்கில் அமைதி உண்டாக்கினர். கிழக்கிந்தியக் கம்பெனியார் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதியின் மக்கள் நல்வாழ்வுக்கு வேண்டுவனவற்றைச்

---

1 Margarita Barns, The Indian Press, p. 105.

செய்வதே கடமையாகும் என்றும், அது பற்றிய குறிப்புகளைச் சில இதழ்கள் தெரிவிக்கும் போது அவற்றின் மீது சீறிச் சினந்து பாய்வதில் பொருளில்லை என்றும், குறைகளை ஏற்க வேண்டும் என்றும், நாடு கடத்துவது என்பது தனிப்பட்ட விரோத மனப்பான்மையின் அடிப்படையில் அமைந்துவிடக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு கடத்தப்பட்டார்

ஆயினும் ஹேஸ்டிங்ஸின் பதவிக் காலம் முடிந்து விட்டதால், அவரால் தொடர்ந்து பக்கிங்ஹாமைக் காக்க முடியவில்லை. அவருக்குப்பின் தலைமை ஆளுநர் பதவியினை ஏற்க வேண்டியவர் பதவியினை ஏற்பதற்கு முன்னரே இறந்துவிட்டதால், புதிய தலைமை ஆளுநரைத் தெரிந்தெடுப்பதில் காலநீட்டிப்பு ஏற்பட்டது. எனவே தற்காலிகத் தலைமை ஆளுநராக ஜான் ஆடம் 18-3இல் (ஜனவரி 13) பொறுப்பேற்றார்.

ஜான் ஆடம் தலைமை ஆளுநர் பொறுப்பேற்றதும், ரெவரண்ட் சாமுவேல் ஜேம்ஸ் ப்ரைஸ் என்பவரைக் கம்பெனி ஊழியராகச் சேர்த்துக் கொண்டார். அவர் செயின்ட் ஆண்ட்ரூஸ் சர்ச்சின் தலைவராக இருந்தவர். எனவே இந்தப் புதிய பதவி தேவையற்றது என்று தாம் கருதுவதாக தலைமை ஆளுநரின் ஆலோசனைக்குழு உறுப்பினருள் ஒருவரான ஹாரிங்டன் தமது எதிர்ப்பைத் தெரிவித்த பின் ஆளுநரின் ஆணையை ஏற்றார்.

பக்கிங்ஹாம் இதனை மிகவும் வன்மையாகக் கண்டித்து எழுதினார். இதுவரையும் ஹேஸ்டிங்ஸின் தடையால் தாம் எண்ணியதைச் செயல்படுத்த முடியாமல் இருந்த ஜான் ஆடம், இப்போது அவரே தலைமை ஆளுநரான காரணத்தால், பக்கிங்ஹாம் அமைதிக்குக் களங்கம் விளைவிக்கின்றார் என்று கூறி பக்கிங்ஹாமின் உரிமைகளைப் பறிமுதல் செய்துவிட்டார்.

பக்கிங்ஹாம் சிறப்புகள்

மஸ்கட் சுல்தானிடம் தொடக்கத்தில் பணியாற்றிய ஜேர்ஸ் சில்க் பக்கிங்ஹாம். அங்கு நிகழ்ந்த அரேபிய அடிமை வியாபாரத்தைக் கண்டனம் செய்து தமது பதவியைத் துறந்து வெளிவந்தது[1] முதல், அவருடைய ஒவ்வொரு செயலும் கல்கத்தாவில் வாழ்ந்த ஆங்கிலேயர்களால் போற்றப்பட்டது. ஆயினும் ஆளுவோர் அவருடைய வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாயிருந்ததால், இந்திய மக்களின் நல்வாழ்வு பற்றிய கருத்து கொண்டு, அவர்களின் முன்னேற்றத்திற்குத் தமது இதழின் பக்கங்களைப் பயன்படுத்தியவரும், இந்தியாவின் சீர்திருத்தவாதியான ராஜாராம் மோகன்ராயின் சிறந்த நண்பராக விளங்கி அவருடைய முயற்சிகளுக்கெல்லாம் துணைநின்றவரும், ஆங்கிலேயருக்குச் சமமாக இந்தியர்களுக்கும் பதவி வாய்ப்புகள் தரப்படல் வேண்டும் என்று போராடியவரும், உயர் பதவிக்கான தேர்வுகள் இங்கிலாந்தில் நடத்தப்படுவதை விட்டொழித்து அவை இந்தியாவிலேயே நடைபெறுமாறு செய்ய வேண்டும் என்று சொன்னவரும், கம்பெனி ஆதிக்கத்தைப் புதுப்பிக்கும் காலங்களிலெல்லாம் பேரரசியின் ஆதிக்கத்துச்குட்பட்டதாக இந்தியா இருக்க வேண்டும் - அறிவிக்கப்பட வேண்டும் என்று வாதாடியவரும், கம்பெனியாரின் ஆதிக்கத்தில் தொடர்ந்து இந்தியா இருப்பது இந்தியாவின் வளர்ச்சிக்குக்கேடு தருவதுடன் இங்கிலாந்தின் புகழுக்கும் களங்கமாகும் என்று அறிவுறுத்திய வரும், சிறந்த எழுத்தாற்றல் கொண்டவருமான ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம் ஆட்சியின் பிடிவாதத்தால் நாடு கடத்தப்பட்ட கொடுஞ்செயல், இந்திய இதழியல் வரலாற்றில் விழிப்போடு நோக்க வேண்டும் ஒன்றாகும்.

வழிகாட்டிய மூவர்

மனித மனம் குறையற்ற ஒரு வாழ்வை - பதவி - செல்வாக்கு இவற்றின் வலிமையால் பிறர் நலம் பற்றி எண்ணாத ஒரு

---

1 பழநி, அரங்கசாமி, செய்தி உலகம், பக் 48

போக்கைக் கண்டிக்கும் உணர்வைப் பெறுகிறது - தன் அளவில் குறையிருந்தாலும் அது தனிப்பட்ட குறையாகி விடுகிறது என்று எண்ணி, அதனால் சமுதாயப் பாதிப்பு ஏதும் ஏற்பட்டு விடுவதில்லை என்று கருதி, பொதுப் பொறுப்புகளில் இருப் பவர்கள் கூடிய வரையில் குறைகளுக்கு - ஆசைகளுக்கு அப்பாற்பட்டவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது இயல்பு என்பதை 1780இலேயே தம்முடைய செயல் களால் வெளிப்படுத்தியவர் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி அவரைத் தொடர்ந்து நம்மை ஈர்த்தவர் வில்லியம் டுயேன். இப்போது அந்த வரிசையில் சேர்ந்துவிட்டார் ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம்..

இங்கிலாந்திலும் இதழ்ப்பணி

இங்கிலாந்து சென்ற பக்கிங்ஹாம் 'ஓரியண்டல் ஹெரால்ட்" (The Oriental Herald) என்னும் இதழினைத் தொடங்கி நடத்தினார். அவ்விதழ் கல்கத்தாவுக்கும் அனுப்பப்பட்டது. ஓரியண்டல் ஹெரால்டில் அவர், கல்கத்தா ஜர்னலில் வெளிவந்த செய்திகளை மறுபதிப்பு செய்தார். "பிரிட்டிஷ் இந்தியாவில் இதழ்களின் வரலாறும் தாக்கமும்" என்னும் லிசெஸ்டர் ஸ்டேன் ஹோப்பின் நூலின் சில பகுதிகளும் அவ்விதழில் வெளியிடப்பட்டன.

தொடர்ந்த தொடர்பு

பக்கிங்ஹாம் இங்கிலாந்திலிருந்தாலும், அவருக்குப் பின் அவராலேயே பொறுப்பேற்குமாறு செய்யப்பட்டிருந்த கல்கத்தா ஜர்னலின் ஆசிரியர்களோடு அவர் தொடர்பு வைத்துக் கொண்டி ருந்தார். இதழின் போக்கு ஆசிரியர்களின் மாற்றத்தால் மாற்றம் பெறவில்லை. அரசுடன் அடிக்கடி கருத்து வேறு பாடுகள் தோன்றிய வண்ணமிருந்தன. அரசின் புதிய நியமிப்பு களையெல்லாம் தக்க காரணம் காட்டி கல்கத்தா ஜர்னல் கண்டித் தது. சான்டிஸ், சான்ட்போர்ட் ஆர்னாட் என்னும் இருவரும் இதழாசிரியர்களாக இருந்தனர். இவருள் சான்டிஸ் ஆங்கிலே

இந்தியராவார். எனவே, இதழின்பால் சினம் கொண்ட அரசு, அவரை நாடு கடத்தும் தண்டனைக்குள்ளாக்க முடியவில்லை. எனவே, கம்பெனியின் அனுமதியின்றி இந்தியாவில்தங்கியிருந்த சான்ட்போர்ட் ஆர்னாட்டை அரசு நாடு கடத்தி ஆணையிட்டது (1823). நாடு கடத்தப்பட்ட இதழாசிரியர்கள் வரிசையில் சான்ட்போர்ட் ஆர்னாடும் ஒருவரானார்.

1824 இல் இதழ்கள்

1824 இல் ஐந்து இதழ்கள் வெளிவந்தன.

அவை,

ஸ்காட்ஸ் மேன் இன் தி ஈஸ்ட்

பாம்பே கெசட்

வீக்ளி கிளீனர்

கொலம்பியன் பிரஸ் கெசட்

பெங்கால் வீக்லி மெஸன்ஜர்

என்பன.

டாக்டர்மஸ்டன் 'பிரிட்டிஷ் லயன்' (British Lion) என்னும் இதழ் தொடங்க அனுமதி வேண்டினார். ஆனால் கம்பெனியார் இசைவளிக்க மறுத்தனர். அவர் பக்கிங்ஹாம் நடத்திய கல்கத்தா ஜர்னல் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் 'பிரிட்டிஷ் லயன்' என்றுதான் சொல்வார். எனவே அப்பெயரிலேயே இதழ் நடத்த விரும்பினார்.

1824 இல் (பெப்ரவரி 12) டாக்டர் மஸ்டன் ஸ்காட்ஸ்மேன் இன் தி ஈஸ்ட் (Scotsman in the East) என்னும் இதழினைத் தொடங்க அனுமதி வேண்டினார். அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. மஸ்டன் கல்கத்தா ஜர்னல் அச்சகத்தையே பயன்படுத்தித் தமது இதழினை வெளிப்படுத்தினார்.

பாம்பே கெசட்டின் ஆசிரியரான சி. ஜே. ஃபேர் உச்ச நீதி மன்றத்தின் நடைமுறைகளைத் தமது இதழில் கண்டித்து எழுதினார் (ஜூலை 28, 1824) என்பதற்காக அரசு அவர்மீது வழக்கு தொடர்ந்தது. இருபதினாயிரம் ரூபாய் அவர் தமக்குரிய ஈடுகாணமாகச் செலுத்தவேண்டும் என்றும், பத்தாயிரம் ரூபாய் ஈடுகாணம் தனித்தனியாக இருவர் அவருக்காகச் செலுத்தவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதழாசிரியர் சி. ஜே. ஃபேர் இதற்குக் கட்டுப்படாமையால் நாடு கடத்தப்பட்டார்.

நாடு கடத்தப்பட்ட இதழாசிரியர் வரிசையில் ஐந்தாவது இடம்பெறுகிறார் சி. ஜே. ஃபேர்.

விக்ளி கிளீனர் என்னும் வார இதழ் பாட்ரிக் கிரிக்டன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. (அக்டோபர் 21, 1824) முதல் இதழுக்கும், இதழ் தொடர்பான அறிக்கைகளுக்கும் இலவச அஞ்சல் சலுகை தரப்பட்டது.

மான்டி டி ரொசாரியோ என்பவர் 'கொலம்பியன் பிரஸ் கெசட்' என்றும் வாரம் இருமுறை இதழினைத் தொடங்கினார். (அக்டோபர் 29, 1824) சில காலத்திற்குள் இவ்விதழ் 'கொலம்பியன் பிரஸ் கெசட் அண்ட் கமர்ஷியல் அட்வர்டைசர்' என்னும் பெயர் மாற்றத்துடன் வாரம் இருமுறை இதழாகவே வெளிவந்தது.

1825 இல் இதழ்கள்

1825 ஜனவரி 19 இல் டாக்டர் ப்ரைஸ் என்பவர் 'குவார்ட்டர்லி ஓரியண்டல் மேகஸின், ரெவ்யூ அண்ட் ரிஜிஸ்டர்' என்னும் இதழையும், ஏ. ஸி. மைக்கேல் ஜான் என்பவரைக் கொண்டு 'ஜான்புல்' என்னும் இதழையும் வெளியிட்டார்.

'பெங்கால் கிரானிக்கள்' என்னும் இதழ் ஜேம்ஸ் சதர்லண்ட் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இவ்விதழின்

ஆசிரியராக சாமுவேல் ஸ்மித் என்பவரும் இருந்தார். 1824 இல் 'கொலம்பியன் பிரஸ் கெசட்'டைத் தொடங்கிய ரொசாரியோ தான் இவ்விதழின் உரிமையாளர். கொலம்பியன் பிரஸ் கெசட் நின்றுவிட்டது.

1827 இல் இதழ்கள்

1827 இல் கல்கத்தா கிரானிக்கள், இண்டியா மாகஸின் அல்லது மிஸ்ஸலேனி ஆஃ ஜெனரல் லிட்டரேச்சர், ஐரிஸ் என்னும் இதழ்கள் வெளிவந்தன.

கல்கத்தா கிரானிக்களின் ஆசிரியர் வில்லியம் ஆடம் என்பவர்.

இண்டியா மாகஸின் அல்லது மிஸ்ஸலேனி ஆஃப் ஜெனரல் லிட்டரேச்சர் என்னும் இதழின் ஆசிரியர் வில்லியர்ஸ் ஹால் கிராஃப்ட் என்பவர்.

ஐரிஸ் இதழின் ஆசிரியர் ஜே. எச். ஸ்டாக்குலர்.

1828 இல் இதழ்கள்

கல்கத்தா கெசட் அண்ட் கமர்ஷியல் அட்வர்டைசர், காஸ்பெல் இன்வெஸ்டிகேட்டர், கெலிடாஸ்கோப், கல்கத்தா டொமஸ்டிக் ரீடெயில் பிரைஸ் கரண்ட் அண்ட் மிஸ்ஸலேனியஸ் ரிஜிஸ்டர் என்னும் நான்கு இதழ்கள் 1828 இல் வெளிவந்தன.

1827 இல் இண்டியா மாகஸீன் இதழைத் தொடங்கிய வில்லியர்ஸ் ஹால்கிராஃப்ட் என்பவரே கல்கத்தா கெசட் அண்ட் கமர்ஷியல் அட்வர்டைசர் என்னும் நாளிதழினையும் (செப்டம்பர் 26, 1828) தொடங்கினார்.

'காஸ்பெல் இன்வெஸ்டிகேட்டர்' என்னும் பருவ இதழ் இமானுவேல் ரோபம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்தது. (பிப்ரவரி 7, 1828)

'கெலிடாஸ்கோப்' என்னும் திங்கள் இதழினை எச். எல். வி. டி. ரோஸாரியோ என்பவர் தொடங்கினார். இவருக்குத் துணையாக ஆசிரியப் பொறுப்பில் டேவிட் ட்ரம்மண்ட் (David Drummand) இருந்தார்.

மாண்ட் டி ரொசாரியோ 'கல்கத்தா டொமஸ்டிக் ரீடெயில் பிரைஸ் கரெண்ட் அண்ட் மிஸ்ஸலேனியஸ் ரிஜிஸ்டர்' என்னும் வார இதழினை வெளியிட்டார். நாளடைவில் இதழின் இந்த நீளமான பெயர் சுருக்கப்பட்டது என்று தெரிகிறது.

சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர், விலங்கியல், மானிட வியல்,இயற்பியல், நிலவியல், மருத்துவ இயல் போன்ற கலைகள் தொடர்பாக ஏஷியாட்டிக் சொசைட்டி வெளியிட்ட இதழ்களில் கட்டுரைகளை எழுதிவந்தவர். இவர் 'கிளீனிங்ஸ் இன் சயன்ஸ்' என்னும் திங்கள் இதழினை வெளியிட்டார்.


1830 இல் இதழ்கள்

1830 ஏப்ரல் 8 இல், 'தி மிர்ரர் ஆஃப் தி பிரஸ் அல்லது தி பொலிட்டிக்கல் அண்ட் லிட்ரடரி ரிஜிஸ்டர்' என்னும் வார இதழ் மார்க்கஸ் ராக்ஃபோர்ட் என்பவரால் வெளியிடப்பட்டது.

ராபர்ட் மாண்ட்கோமெரி மார்ட்டின், நீல்ரத்தன் ஹால்தார் என்னும் இருவரும் 'பெங்கால் ஹெரால்ட் அல்லது வீக்லி இன்டலிஜென்ஸர்' என்னும் வார இதழினை வெளியிட்டனர்.

1831—1840 இதழ்கள்

ஜே. பி. ேநமி என்பவரை ஆசியராகக் கொண்ட ரிஃபார்மர், சார்லஸ் ஹென்றி டி சேன்டை ஆசிரியராகக் கொண்ட



The Calcutta Courier, Calcutta, April 4, 1832

'தி ஜூவைனல் எமலேட்டர்', கிருஷ்ண மோகன் பானர்ஜியை ஆசிரியராகக் கொண்ட 'என்கொய்ரர்', எ. மொரீரோவை ஆசிரியராகக் கொண்ட 'தி ஹெஸ்பரஸ்' என்னும் இதழ்கள் 1831 இல் வெளி வந்தன. இவற்றுள் 'ஹெஸ்பரஸ்' தவிர பிற எல்லாம் வார இதழ்களாகும்.

கல்கத்தா கூரியர், ஆண்ட்ரு டிஸௌஸாவை ஆசிரியராகக் கொண்ட பெங்கால் ஜர்னலும் 1832 இல் வெளிவந்தன. இவற்றுள் கல்கத்தா கூரியர் வாரம் இருமுறை இதழாகும்.

1833 இல் வெளிவந்த 'கல்கத்தா கெசட்'டின் ஆசிரியர் ஜி. ஏ. பிரின்ஸப். இவ்வாண்டில் 'பிலந்த்ட்ராபிஸ்ட்', 'இங்கிலீஷ் மேன்' என்னும் இதழ்கள் வெளிவந்தன. இவற்றின் ஆசிரியர்கள் முறையே ஜி. எச். ஹாக், ஜெ. எச். ஸ்டாக்குலர் என்போராவர்.

1820 இல் செராம்பூர் கிறிஸ்தவ இயக்கத்தினர் Friend of India என்னும் திங்கள் இதழினை நடத்தினார்கள் என்பதை முன்னர் கண்டோம் அல்லவா? அவ்விதழ் இடையில் நின்று விட்டது என்பதையும் அறிந்தோம். ஆனால் இதழின் பெயர் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்ததால் மீண்டும் 1835 இல் வார இதழாகவே வெளி வரலாயிற்று. டாக்டர் மார்ஷ்மனே இப்பொழுதும் இவ்விதழின் ஆசிரியராக விளங்கினார்.

1836 இல் சென்னையில் 'மெட்ராஸ் ஸ்பெக்டேட்டர்' என்னும் வாரம் இருமுறை இதழ் வெளிவந்தது. ஆக்டர்லோனி என்பவர் இதன் ஆசிரியர்.

1838 இல் கல்கத்தாவிலிருந்து வாரம் இருமுறை இதழாக ஜே. இ. பிரீனன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு 'பாம்பே டைம்ஸ் அண்ட் ஜர்னல் ஆஃப் காமர்ஸ்' வெளியாயிற்று.

1840 இல் 'பெங்கால் கவர்ன்மென்ட் கெசட்' கல்கத்தா விலிருந்து வெளிவந்தது.

1841 - 1850

1841 முதல் 1843 முடிய ஆங்கில இதழ்கள் எதுவும் வெளி வரவில்லை.

1844 இல் சென்னையிலிருந்து காசலு லட்சுமி நரசு செட்டி 'கிரெசன்ட்' என்னும் வார இதழை வெளியிட்டார். சென்னையில் இந்தியர் ஒருவரால் வெளியிடப்பட்ட முதல் ஆங்கில இதழ் இதுவேயாகும். மக்களை ஒருங்குகூட்ட செயல் திறம் கொண்டவர்களாகச் செய்யும் பணியினை நடை முறைப்படுத்திய பெருமைக்குரியவர் காசலி லட்சுமி நரசு செட்டி.

1846 இல் அமெரிக்க கிறிஸ்தவ பாதிரியார்கள் சிப்சாகர் என்னுமிடத்திலிருந்து 'அருணோதயா' என்னும் இதழினை வெளியிட்டனர்.

1851 - 1858

1851 இல் 'டெல்ஹி ஸ்கெட்ச் புக்' என்னும் கருத்துப்பட இதழ் டில்லியிலிருந்து வெளிவந்தது. குன்னியாலால், எ. டிஸௌஸா என்னும் இருவரும் இதழின் முழுமைப் பொறுப்பையும் ஏற்றிருந்தனர். இந்தியாவில் வெளியான முதல் கார்ட்டூன் இதழ் இது.

இதழுலகில் புதுமை செய்த இவ்விதழின் வளர்ச்சிக்குத் துணை நிற்கப் பலர் முன்வந்தபோதும், நெடுங்காலம் நடை பெறவில்லை இந்த இதழ்.

1857 இல் இதழுலகில் மிக்க திறன் கொண்டவரான ராபர்ட் நைட் என்பாரை ஆசிரியராகக் கொண்ட 'பாம்பே ஸ்டாண்டர்ட்' என்னும் இதழ் பம்பாயிலிருந்து வெளிவந்தது. வாசகர்களைப் பலதுறை அறிவு உடையவர்களாகச் செய்யும் முயற்சியில் இவ்விதழ் வெற்றி பெற்றது.

முடிவுரை

இதுகாறும் 1800 ஆம் ஆண்டு முதல் 1858 ஆம் ஆண்டு வரை வெளிவந்த இதழ்கள் பற்றி அறிந்தோம்.

இவை யாவும் ஆங்கிலத்தில் வெளிவந்தன. இவற்றுள் ஒரு சில தவிர எஞ்சியவை எல்லாம் ஆங்கிலேயர்களாலேயே நடத்தப்பட்டன. இந்தியர் சிலர் நடத்திய இதழ்களுக்கும் ஆங்கிலேயர்களே ஆசிரியர்களாக இருந்தனர். பல இதழாசிரியர்கள் அரசின் போக்கிற்கு மாறுபடாமல் செயல்பட்டனர். சில இதழாசிரியர்கள் தந்நலமற்ற நிலையில் பணி செய்தனர். அவர்கள் சட்டங்களாலும் தனிப்பட்டவர்களாலும் ஒதுக்கப் பட்டனர். பொருளாதார நோக்கில் கண்டால் கொள்கைக்காக நடைபெற்ற இதழ்கள் நீண்ட கால வாழ்வைப் பெறாமல் நலிந்ததையும் காண முடிகிறது. புகழ் மட்டும் கருதி, பொருள் மட்டும் கருதி கொள்கைகள் பற்றியே எண்ணாமல் அல்லது அறியாமல் இதழ் நடத்தியவர்கள்—ஆளுவோர்க்கு நெருக்கமாக, அவர்கள் பகைத்தவர்களைப் பகைத்து வாழ்ந்த இதழாசிரியர்கள் வளமார்ந்த வாழ்வு கொண்டனர்.

இந்திய இதழ்கள் I, II என்னும் இரு பகுதிகளிலும் 79 ஆண்டுகளில் வெளிவந்த ஆங்கில இதழ்கள் பற்றியும், இதழாசிரியர்கள் பற்றியும், ஆட்சியாளரின் அணுகுமுறைகள் பற்றியும், சட்டங்கள் பற்றியும், அவற்றின் கொடும் போக்கு பற்றியும் அறியலானோம்.

8

இந்திய மொழி இதழ்கள்
(1818-1858)

8

இந்திய மொழி இதழ்கள்
1818 - 1858

இந்தியரின் முதல் இதழ்

1780 ஆம் ஆண்டு முதல் 1817 ஆம் ஆண்டு வரை இந்திய மொழிகளில் இதழ்கள் வெளிவரவில்லை.

1816 ஆம் ஆண்டில் வங்காளத்தைச் சேர்ந்த கங்காதர் பட்டாசார்யா, ஹரிசந்திரராய் என்னும் இருவரும் 'பெங்கால் கெசட்' என்னும் ஆங்கில இதழை வெளியிட்டனர்.[1] இந்தியரால் நடத்தப்பட்ட முதல் இதழ் என்னும் பெருமைக்குரியது 'பெங்கால் கெசட்'. இவ்விதழ் குறுகிய காலமே வெளிவந்தது.

1 Tarachand, History of the Freedom Movement in India, vol II, p 214

திக் தர்சன்

1818 ஆம் ஆண்டில்தான் முதல் இந்திய மொழி இதழ் வெளிவந்தது.

கல்கத்தாவிற்கு இருபது கல் தொலைவிலுள்ள செராம்பூர் என்னுமிடத்தில் இருந்த கிறிஸ்தவ இயக்கத்தினர், 'செராம்பூர் கிறிஸ்தவ இயக்கத்தினர்' எனப்பட்டனர். இவர்கள் கல்கத்தா விலிருந்து இதழ் வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்ட போது, வெல்லெஸ்லி இவர்களை செராம்பூருக்கு அனுப்பி வைத்தார்.[1] செராம்பூர் டச்சுக் காலனியாக விளங்கியது. அங்கிருந்து தான் 'திக் தர்சன்' என்னும் வங்கமொழி - ஆங்கிலமொழி மாத இதழை அவர்கள் வெளியிட்டனர். டாக்டர் மார்ஷ்மன், வார்ட் என்னும் இருவரும் இதனைத் தொடங்கினர்.

சமாச்சார் தர்பன்

இரண்டு மாதங்கட்குப் பின்னர் 'சமாச்சார் தர்பன்' என்னும் பெயரில் வங்கமொழி வார இதழை அவர்கள் தொடங்கினார்கள். இவ்விதழுக்கு டாக்டர் மார்ஷ்மன் ஆசிரியராக விளங்கினார். வங்கமொழி எழுத்தாளர்கள் இதழின் வளர்ச்சிக்குத் துணை நின்றனர். சனிக்கிழமைகளில் வெளிவந்த இவ்விதழ் தொடர்ந்து இருபத்து மூன்றாண்டுகள் நடைபெற்றது; 1841 இல் நின்று மீண்டும் 1851 இல் தோன்றிச் சில ஆண்டுகள் நடைபெற்றது.

படிப்பவரிடையே புத்துணர்ச்சியை உண்டாக்கியது இவ்விதழ். ஐரோப்பியர், அமெரிக்கர் ஆகியோரின் அறிவாற்றலை விளக்கும் செய்திகளைக் கொண்ட கட்டுரைகள், இந்திய வாணிகம், விஞ்ஞானச் செய்திகள், தாவரங்கள் பற்றிய விவரங்கள், வரலாற்றுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் இவ்விதழில் வெளிவந்தன. ஆயினும், கிறிஸ்தவ சமயமே

---

1 பழநி. அரங்கசாமி, செய்தி உலகம், பக். 44

உயர்ந்தது என்று நிலைநாட்டுவதையே அடிப்படை நோக்க மாகக் கொண்டிருந்தது 'சமாச்சார் தர்பன்'.

இவ்விரண்டு இதழ்களும்தான் முதன்முதலில் வெளிவந்த இந்தியமொழி இதழ்களாகும். இவை இந்தியரால் வெளியிடப் படவில்லையாயினும் தங்கள் மொழியில் இதழ்களை வெளியிட வேண்டும் என்னும் ஆர்வத்தை இந்தியருக்கு உண்டாக்கியவை இவ்விரண்டு இதழ்களேயாகும்.

இதழ்களின் நோக்கும் போக்கும்

இந்திய மொழி இதழ்கள் சமுதாய சீர்திருத்தம், சமய மறு மலர்ச்சி என்பன பற்றியே எண்ணின, எழுதின. அரசியல் பற்றி அவை அவ்வளவாகக் கருத்து செலுத்தவில்லை. ஆட்சி யாளரின் போக்கில் நிறைவின்மை தோன்றினாலும் அதனைப் பொருட்படுத்தாத பக்குவ நிலையை அவை பெற்றன. ஆங்கி லேயரின் ஆட்சி தங்களுக்குக் கிடைத்த பேறு என்று எண்ணிய நிலைமை இருந்தது. எனவே ஆங்கிலக் கல்வியைப் பெறுவதி லும் ஆங்கில ஆட்சி இயல் பற்றி அறிவதிலும் ஆர்வம் கொண் டனர். அந்த ஆர்வத்துக்குத் தடையேதும் உண்டாகாத வகை யில் இதழ்கள் கருத்தாக இருந்தன. தங்களுடைய எண்ணங் களை ஆளுவோரை அரவணைத்துச் சென்றால் செயலாக்கிக் கொள்ளலாம் என்றும் அவர்கள் நம்பினர்.

காலப்போக்கில் சமயம் சமுதாயம் என்னும் உணர்வுகள் குறுகின. நிறைவேற்றப்பட வேண்டும் என்னும் சீர்திருத்தங் கள் சட்டங்களாலும் பேச்சு வார்த்தைகளாலும் நடைமுறைத் தெளிவுகளாலும் செயலாகிய பின்பு, அவற்றுக்குத் தேவையில் லாமல் போய்விட்டது. அவைபற்றியே எண்ணுதலும் எழுது தலும் வேண்டுவதில்லை என்ற நிலை ஏற்பட்ட பின்பு, இதழ் களுக்கு அரசியலே அடிப்படையாய் அமைந்தது. முன்புபோல ஆளுவோரின் செயல்கள் எல்லாம் இந்தியரின் நன்மையையே கருத்தாகக் கொண்டவை என்று எண்ண இதழ்கள் மறுத்தன

ஆளுவோரின் ஆணைகளையும், செயல்களையும் ஐயக்கண் கொண்டு நோக்கும் நிலை வளர்ந்தது. நம்மை ஏன் அவர்கள் ஆளவேண்டும், எங்கிருந்தோ வந்தவர்கள் நம்மைத் தாழ்த்துவதா, காலம் காலமாய் நம்முடைய சமயமாக இருந்துவரும் இந்து சமயத்தையும் அதன் நோக்கங்களையும், அறிவுரைகளையும் வந்தவர்கள் பழிப்பதா என்பன போன்ற எண்ணங்கள் மக்களிடையே உருவாயின. இதழ்கள் அவற்றை வளர்த்தன. வெளியாரின் உறவு நீக்கமே நம்மைக் காக்கும் என்னும் கருத்தினை அவை மக்களிடையே படிப்படியாக உண்டாக்கின, ஆளுவோரை வெளியேற்றிவிட வேண்டும் என்னும் உணர்வின் எல்லைக்கு அவை செல்லவில்லை யென்றாலும் தங்களுக்கிடையே உரிமை வேண்டும் என்றும், தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள வகை காணவேண்டும், வழிபெறவேண்டும் என்றும் மக்கள் எண்ணத் துணையாயின. இந்திய மொழி இதழ்கள் இந்த நோக்குடன் விரைந்த வளர்ச்சியைப் பெற்றன.

1858 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஆண்டுகளில் அதாவது 1818 ஆம் ஆண்டுமுதல் 1858 ஆம் ஆண்டு வரை வெளிவந்த இதழ்கள் சமய - சமுதாய சீர்திருத்த இதழ்களாகவே விளங்கின. 1818 இல் வெளிவந்த செராம்பூர் கிறிஸ்தவ இயக்கத்தவரின் "திக்தர்சனும்", "சமாச்சார் தர்பனும்" அதற்குக் காரணமாயின.

இந்து மதக் கோட்பாடுகளைப் பற்றி "திக்தர்சனி"லும் "சமாச்சார் தர்பனி"லும் வெளிவந்த கருத்துகளை மறுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்துமதப் பற்றாளர்களிடையே நிலவியது.

சம்பாத் கௌமதி

1821 ஆம் ஆண்டு டிசம்பர் நான்காம் நாளன்று தாராசந்த் தத், பவானி சரண் பண்டோபாத்யாயா என்னும் இருவரும் "சம்பாத் கௌமதி" என்னும் வார இதழைத் தொடங்கினர்.

இது வங்காள மொழியில் வெளிவந்தது. இவ்விதழே இந்தியரால் முதன்முதலாக நடத்தப்பட்ட இந்தியமொழி இதழாகும்.

ராஜாராம் மோகன்ராய் இவ்விதழோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்; பல கட்டுரைகளை எழுதினார். இந்துக்களின் சமய—சமுதாய சீர்திருத்த இதழாக இதனைச் செய்தவர் இவரே. உடன் கட்டையேறும் வழக்கத்தைக் கண்டித்து அவர் இவ்விதழில் எழுதிய கட்டுரைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இவ்விதழ் இடையிடையே நின்று பத்தாண்டுகள் நடைபெற்றது.

"சம்பாத் கௌமதி" யை இந்துக்களில் உயர் வகுப்பினர் வெறுத்தனர். நெடுங்காலமாக நிலவிவரும் வழக்கங்களை இவ்விதழ் எதிர்த்ததுதான் அதற்குக் காரணம். இதனால் இதழின் வளர்ச்சியில் காலப்போக்கில் தளர்வு ஏற்பட்டது.

இக்காலத்தில் இந்திய இதழியலில் சிறப்பிடம் பெற்றவரான ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம் என்பவர் தாம் நடத்திய "கல்கத்தா ஜர்னல்" என்னும் ஆங்கில இதழில் ராஜாராம் மோகன்ராயின் கொள்கைகளை ஆதரித்து எழுதினார். "சம்பாத் கௌமதி"யின் வீழ்ச்சி குறித்து, 14 .2. 1823 ஆம் நாளன்று வெளிவந்த "கல்கத்தா ஜர்னலில்" பின்வரும் செய்தி காணப்படுகின்றது

> "சம்பாத் கௌமதி" பெருத்த எதிர்ப்புக்குள்ளாகியது. வெடிமருந்துக் குவியலில் சிறிய தீப்பொறியைச் சேர்த்தது போன்று நாடெங்கும் புரட்சித் தீயை உண்டாக்கியது இந்த இதழ். ஆனால் மக்களாதரவு இல்லாமையால் இந்த இதழ் போதிய வளர்ச்சி பெறவில்லை. இந்து விதவைகளை உயிரோடு எரிக்கும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கண்டித்து எழுதியதுதான் இந்த இதழின் வளர்ச்சியின்மைக்குத் தலையாய காரணமாகும்."

ராஜாராம் மோகன்ராய்-
இதழாசிரியர்

"சம்பாத் கௌமதி" வெளிவந்து கொண்டிருந்த போதே ராஜாராம் மோகன்ராய், "பிராமணிகல் மேகஸின் அல்லது பிராமின் சேவாதி"[1] என்றும் இதழை, கிறிஸ்தவ இயக்கத்தவரின் தாக்குதலிலிருந்து இந்து மதத்தைக் காப்பாற்றத் தோற்றுவித்தார். ஆங்கிலத்திலும் வங்கமொழியிலும் அமைந்த கட்டுரைகளைக் கொண்ட இருமொழி இதழாக விளங்கியது இது. மூன்று இதழ்களே வெளிவந்தன.

இவ்விதழ்களில், ராஜாராம் மோகன்ராய், கிறிஸ்தவ சமய இயக்கத்தவர் தெருக்களில் தங்கள் சமயம் பற்றிப் பிரசாரம் செய்வதையும், ஏழை மக்களை ஈர்க்கும் வகையில் பல்வேறு ஆசைகளைக் காட்டுவதையும் பற்றிக் கடுமையாக எழுதினார். ஆளுவோரைச் சார்ந்தவர்கள் என்னும் உரிமையைப் பயன் படுத்தி இந்திய மக்களைத் தங்கள் சமயத்தின்பால் ஈர்க்கும் போக்கினைக் கிறிஸ்தவ சமய இயக்கத்தவர் கொண்டிருப்பது முறையற்றதும் வெறுக்கத்தக்கதும் ஆகும் என்றும் எழுதினார்.[2]

இதனையடுத்து ராஜாராம் மோகன்ராய் 1822 இல் பெர்சிய மொழியில் 'மீரட் - அல் - அக்பர் (வார இதழ் வெள்ளிதோறும் வெளிவந்தது) என்னும் இதழினை நடத்தினார்.

"மக்கள் சமுதாய சீர்திருத்தத்தில் ஆர்வம் கொள்ளும் வகையில், அவர்கள் கருத்தை ஈர்க்கும்

---

1 Tarachand, History of the Freedom Movement in India, p. 215

2 Ibid, p. 216.

வகையில் எழுதுவதே என் நோக்கம். தங்கள் ஆளுகைக்குட்பட்ட மக்களின் உண்மையான நிலையை ஆட்சியாளர்க்கு அறிவிப்பேன். மக்கள் தங்களை ஆளுவோர் விதிக்கும் சட்டங்களைப் பற்றியும் அவர்களின் வாழ்வியல் முறைகளைப் பற்றியும் அறியுமாறு செய்வேன். ஆளுவோர் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கு வேண்டுவனவற்றைச் செய்யுமாறு உளம் கொள்ளச் செய்வேன். மக்கள் தங்களுக்குரிய நன்மைகளை ஆட்சியாளரிடம் கேட்டுப் பெறவும், அதனைக் காத்தோம்பிப் போற்றுமாறும் பக்குவம் பெறச் செய்வேன். அனைவரும் கல்விகற்றுச் சிறக்க வேண்டும் என்பதும் மக்களுள் சட்டங்களின் வழி அமைந்துள்ள உயர்வு தாழ்வு நிலைகள் நீங்க வேண்டும் என்பதும் இவ்விதழின் குறிக்கோள்களாக இருக்கும்.''

என்று ராஜாராம் மோகன்ராய் தமது இதழ் நடத்தும் நோக்கம் பற்றி ''மீரட்—அல்—அக்பரின்'' முதல் இதழில் எழுதியுள்ளார். [1]

ஆங்கில இதழிலிருந்து செய்திகளைக் கொள்வதுடன், இந்தியா முழுவதிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதும் இவ்விதழ்களின் நோக்கமாக இருந்தது. 'நிருபர் கடிதங்கள்' இவற்றில் இடம் பெற்றன. ஆட்சியாளரின் குறைகள் கண்ணோட்டமின்றிச் சுட்டிக் காட்டப்பட்டன. அயோத்தி அரசாங்க நடைமுறையைக் கண்டித்து எழுதியதும், ராஜா ரஞ்சித் சிங் பற்றிய கட்டுரையும் அரசினர் பார்வைக்குள்ளாயின. அவர்கள் அவற்றின் வெளியீட்டிற்காகச் சினந்தனர்; ஆட்சிக்கு எதிரானவை அவை என்று குற்றம் சாட்டினர். ஆயினும் அவர் தொடர்ந்து

---

1 Margarita Barns, The Indian press, p. 112.

இதழ்களை நடத்தினார். இவ்விரண்டு இதழ்களும் சமயச் சீர்திருத்த நோக்குடையனவாகவே விளங்கின.

1823 இல் தற்காலிகத் தலைமை ஆளுநராக இருந்த ஜான் ஆடம் இந்தியமொழி இதழ்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை (Vernacular press Act of 1823) கொணர்ந்தார். இதழ் நடத்த அனுமதி பெறவேண்டும் என்னும் அடிப்படை விதிக்கேற்ப இந்தியர் பலர் இதழ்கள் பல தொடங்குவதற்கு அனுமதி கேட்கலாயினர்.

பவானிசரண் பானர்ஜி

'இந்திய மொழி இதழ்கள் கட்டுப்பாட்டுச் சட்டம்' வெளி வந்த பின்னர், முதன் முதலாக இதழ் நடத்த இசைவு வேண்டினவர் பவானி சரண் பானர்ஜி என்பவர்.

இவர் 'சமாச்சார் சந்திரிகா' என்னும் வங்காள மொழி வார இதழைத் தொடங்கினார். இவ்விதழ் 11 - 4 - 1823இல் வெளி வந்தது.

'தர்ம சபா' என்னும் அமைப்பின் ஆதரவில் வெளிவந்த இவ்விதழ், உடன்கட்டையேறும் வழக்கத்தை ஒழிக்கவேண்டும் என்னும் முனைப்பு கொண்டிருந்த ராஜாராம் மோகன்ராய்க்கு எதிராகச் செயல்பட்டது. 1857 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இவ்விதழ் 'தர்ம சபாவின் அழிவுக்குப் பின் நடைபெறவில்லை.

இதனைத் தொடர்ந்து 'சம்வாத் பூர்ண சந்த்ரோதயா' என்னும் மாத இதழ் வெளிவந்தது. இலக்கியம், அரசியல் தொடர்பான செய்திகளைக் கொண்டு நடைபெற்ற இம் மாத இதழ், வார இதழாகவும், வாரம் மும்முறை இதழாகவும் வெளி வந்து பின்னர் நாளிதழாகி, நெடுங்காலம் நடைபெற்றது.

இளைஞர் இதழ்

வங்காள இளைஞர்கள் 'கியானான்ஷா' என்னும் வார இதழைத் தொடங்கினர். இவ்விதழ் சமயம், விஞ்ஞானம்

பற்றிய கட்டுரைகளைக் கொண்டது. ராபர்ட் மாண்ட்கோ மெரி மார்ட்டின், நில் ரதன் டீ என்னும் இருவரும் இவ்விதழின் ஆசிரியர்களாக இருந்தனர், வங்காள மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இரு இதழ்களுள் இதுவும் ஒன்றாகும். அரசின் ஆணை களுக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டமைக்காகப் பலமுறை இவ்விதழ் அரசின் எச்சரிக்கைகளுக்குள்ளாகியது.

மேலும் சில இதழ்கள்

இதனைத் தொடர்ந்து கோவிந்த் சந்தர் கௌர், ஆனந்த கோபால் முகர்ஜி என்னுமிருவரும் 'சங்க்பாத் கௌமுதி" என்னும் வங்கமொழி இதழைத் தொடங்கினர்.

ஹரிஹர்தத் என்பவர் பெர்சியன் மொழியிலும் ஹிந்துஸ் தானியிலும் இதழ்களை நடத்தினார்; 'ஜாம் - இ - ஜான் நியூமா' தான் பெர்சியன் மொழியில் வந்த முதல் இதழாகும்.

1823 இல் மோத்தூர் மோகன் மிட்டர் என்பவர் பெர்சியன்-இந்துஸ்தானி ஆகிய இருமொழி இதழினை நடத்தினார். இதழின் பெயர் "ஸமொ - ஸஉல்-அக்பர்" (Shumasual Akbar) என்பதாகும்.

முதல் இந்தி இதழ்

1826 ஆம் ஆண்டில் (9-2-1826) இந்தி மொழியில் முதல் இதழ் வெளிவந்தது. கல்கத்தாவிலிருந்து ஜுஹல் கிஷோர் சூகூல் என்பவர் "ஊதந்த் மார்டண்ட்" என்னும் வார இதழை வெளியிட்டார். இது தேவநாகரி எழுத்துக்களைக் கொண்டிருந் தது. வங்க மொழிப் பகுதியிலிருந்து முதல் இந்தி மொழி இதழ் வெளிவந்தது வியப்புக்குரியது.

பங்க தூத்

1830 இல் (10-4-1830) "பெங்கால் ஹெரால்ட் அல்லது "வீக்லி இன்டெலி ஜென்ஸர்" என்னும் ஆங்கில வார இதழை

நடத்திக் கொண்டிருந்த ராபர்ட் மாண்ட்கோ மெரி மார்ட்டின் என்பவரோடு, துவாரகநாத் தாகூர், பிரசன்னகுமார் தாகூர், ராஜாராம் மோகன்ராய் ஆகியோர் இணைந்து "பங்கதூத்" என்னும் இதழைத் தொடங்கினர். இவ்விதழ் வங்காளம், பெர்சியன் மொழிகளில் வெளிவந்தது.

அதே ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் (17-8-1830) ஷேக் அலிமுல்லா என்பவர் வங்காளம், பெர்சியன் ஆகிய மொழிகளில் "சமாச்சார் சுபராஜேந்த்ரா" என்னும் இதழினை வெளியிட்டார்.

1830 இல் இதழ்கள்

வங்காளத்தில் 1818 ஆம் ஆண்டு தொடங்கி 1830 ஆம் ஆண்டுவரை வெளிவந்த பிற இந்திய மொழி இதழ்களுள்,

"பிரபாகர்", "சந்த்ராடே", "மகோஜன் தர்பான்" என்னும் மூன்றும் நாளிதழ்களாகும்;

"பாஸ்கர்" என்பது வாரம் மும்முறை இதழாகும்.

"சந்திரிகா", "ராஸராஜ்" என்பன வாரம் இருமுறை இதழ்களாகும்.

"கியான் தர்பன்", "பங்கதூத்", "சாதுரஞ்சன்", "கியான் சஞ்சாரிணி", "ராசசாகேவ்", "ராங்பூர் பார்த்தபாழு", "ராஷ முக்தார்" என்னும் ஏழு இதழ்களும் வார இதழ்களாகும்,

"நித்ய தர்ம நரஞ்சிகா", "தர்ஜான் தாமன் மஹாநாபம்" என்பன மாதம் இருமுறை இதழ்களாகும்.

"தத்வ போதினி" என்பது மாத இதழாகும்.

கடுமைக்குக் காரணம்

1830 இல் நடைபெற்ற முதல் பர்மியப் போரில் ஏற்பட்ட மிகுதியான செலவின் காரணமாக, கிழக்கிந்தியக் கம்பெனி

பணப் பற்றாக்குறைக்குள்ளாகியது. எனவே சிக்கன நடவடிக்கையாக ராணுவ அதிகாரிகளுக்குத் தந்த அலவன்ஸைப் பாதியாகக் குறைப்பதென்று கம்பெனி ஆட்சியாளர் முடிவு செய்து ஆணை பிறப்பித்தனர். இந்த ஆணை "Half - Bhatta Order" எனப்பட்டது.

"இம் முடிவு அறியாமையின் விளைவு—அவசரக் கோலத்தின் விளைவு—எந்த நன்மையான விளைவையும் தராதது" என்று ஆட்சியாளரின் முடிவு பற்றி பெண்டிங் பிரபு எண்ணியபோதும், அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார். இதழ்கள் இந்த ஆணையைக் கண்டித்து எழுதின. ராணுவத் தலைவர்களால் கலகம் விளையுமோ என்ற அச்சச் சூழல் தோன்றியது. இதழ்கள் ராணுவச் செய்திகளை வெளியிடக் கூடாது என்று கட்டுப் படுத்துவதில் பெண்டிங் தீவிரக் கருத்து செலுத்தினார். இதனால் சில கடுமையான விதிகளை உண்டாக்கி இதழ்களைக் கட்டுப் படுத்தலானார். ஆயினும் பெண்டிங் பிரபு புதிய இதழ்களைத் தொடங்க விரும்புவோர் முன் அனுமதி பெறவேண்டும் என்று பிறப்பித்த உத்தரவின் மூலம் தொடர்ந்து பல இதழ்கள் வெளி வரக் காரணமானார்.

1831—33

1831 ஆம் ஆண்டு முதல் 1833 ஆம் ஆண்டுவரை இந்திய மொழி இதழ்களும் ஆங்கில இதழ்களும் பல வெளிவந்தன. அவற்றுள் வங்காளத்தில் வெளிவந்த இதழ்கள் இவை :

1831 ஜனவரியில் (7 - 1 - 1831) ஈஸ்வர் சந்தர் குப்தா என்பவர் 'சம்பாத் பிரபாகர்' என்னும் வங்கமொழி வார இதழை வெளியிட்டார். இவ்விதழில் நாவலாசிரியர் பங்கிம் சந்திர சட்டர்ஜி, தீன்பந்து மித்ரா, பிரசன்னகுமார் தாகூர் முதலிய புகழ்பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகள் வெளியாயின.

பிப்ரவரியில் (14 - 2 - 1931) பிரேம்சந்த்ராய் என்பவர் "சம்பாத் சுதாகர்" என்னும் வார இதழைத் தொடங்கினார்.

ஆகஸ்ட் மாதத்தில் (4 - 7 - 1931) மட்டும் மூன்று புதிய இதழ்கள் வங்கமொழியில் வெளிவந்தன. தூலூப் சந்தர் சட்டர்ஜி என்பவர் "நித் பிரகாஷ்" என்னும் நாளிதழை ஆரம்பித்தார்.

11 - 8 - 1831 இல் மதுசூதன் தாஸ், "சம்பாத் ரத்னாகர்" என்னும் வார இதழையும்,

15 - 8 - 1831 இல் பூயன் மோகன் பானர்ஜி என்பவர் 'சம்பாத் முயோகா" என்னும் வார இதழையும் வெளியிட்டனர்.

செப்டம்பர் மாதத்தில் இரண்டு இதழ்கள் வெளிவந்தன. 3 - 9 - 1831 இல் பானே மதாப் டே என்பவர் 'சங்பாத்சர் சாங்கோ' என்னும் இதழையும், 15 - 9 - 1813 இல் ஈசர் சந்தர் தத் என்பவர் 'சங்பாத் சௌதாமினி' என்னும் வார இதழையும் வெளியிட்டனர். இவற்றுள் 'சங்பாத்சர் சாங்கோ' வங்க மொழியிலும் ஆங்கில மொழியிலும் வெளிவந்தது.

1832 ஆம் ஆண்டில் (19-7-1832) மோகஸ் சந்தர்பால் என்பவர் 'சங்பாத் ரத்னபாலி' என்னும் வார இதழை வெளியிட்டார்.

1833 இல் இரண்டு இதழ்கள் வெளிவந்தன, ரசி கிருஷ்ண முல்லிக், மதூப் சந்தர் முல்லிக் என்னும் இருவரும் 'கியான் ஆனேஷம்' என்னும் திங்கள் இதழைத் (15 - 1 - 1833) தொடங்கினர். இவ்விதழ் வங்காளம் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் வெளிவந்தது.

வஹாஜீடீம் முஹம்மத் என்பவர் 22 - 3 - 1833 இல் "மகாலம் அஃப்ரோஸ்" என்னும் பெர்சிய மொழி இதழைத் தொடங்கினார்.

பம்பாயில் இதழ்கள்

பம்பாயில் வெளியான முதல் இந்திய மொழி இதழ் 'மும்பாய்னா சமாச்சார்' என்பதாகும். 1822 ஆம் ஆண்டு வெளிவந்த இவ்வார இதழின் ஆசிரியர் பர்தூன்ஜி முர்ஷ்பன் என்பவர். இவர்தான் முதன் மூதலாக பம்பாயில் 1812 ஆம் ஆண்டில் குஜராத்தி மொழி அச்சகத்தைத் தொடங்கினார். 'சமாச்சார் பிரஸ்' என்று அதற்குப் பெயரிட்டார். வணிகச் செய்திகளைத் தெரிவிப்பதுதான் இவ்விதழின் நோக்கமாக இருந்தது.

பம்பாயில் வாழ்ந்த பார்சியரிடையே அவர்களது காலண்டர் கணிப்புப் பற்றிய கருத்து வேறுபாடுகள் இதழ்கள் பல தோன்றுவதற்குக் காரணமாயமைந்தது. தஸ்தூர் முல்லா பெரோஸ் என்னும் பார்சிக்காரர், பம்பாயில் உள்ள பார்சியர்கள் தங்கள் காலண்டர் முறையைத் தவறாகக் கொண்டுள்ளார்கள் என்று எண்ணியதால், பெர்சியாவுக்குச் சென்று விளக்கம் பெற முயன்றார். இதனால் பார்சியரிடையே இரு பிரிவு ஏற்பட்டது. முல்லாவைப் பின்பற்றியவர்கள் காட்மிஸ் (Kadmis) எனப் பட்டனர். பழைய முறையைப் பின்பற்றியவர்கள் ஷகான் ஷாயிஸ் (Shahanshais) எனப்பட்டனர்.

காட்மிஸ் பிரிவினர் "எப்தால்—இ—கபிஷே" (Ebtal—e—Kabiseh) என்னும் இதழையும்,

பழைய முறையைப் பின்பற்றியவர்கள் "அக்பர்—இ—கபிஷே" என்னும் இதழையும் வெளியிட்டனர்.[1]

இவை இரண்டும் குறுகியகால வாழ்வுடையவை.

1830 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நவ்ரோஜி தோராப்ஜி சந்த்ரு என்பவர் "மும்பாய் வர்த்தமான்" என்னும்

---

1. J. H. Stocqueler, Memoirs of a Journalist, pp. 61-62

வார இதழினைக் குஜராத்தி மொழியில் தொடங்கினார். பதின் மூன்று திங்களுக்குப் பின்னர் இவ்விதழ், "மும்பாய்னா ஹல்காரு அனேவர்த்மான்" என்னும் பெயர் மாற்றத்துடன் வாரம் இரு முறை இதழாக வெளிவந்தது. ஆயினும் இவ்விதழ் தன் காலத் தில் வந்த பிற இதழ்களோடு போட்டியிட்டு நிலைபெற முடியா மல் பதின்மூன்றாண்டுகளுக்குப் பின்னர் (1843) மறைந்தது.

1831 இல் பெஸ்டோன்ஜி மானக்ஜி மோதிவாலா என்பவ ரால் "ஜாம்—இ—ஜாம்ஷெட்" என்னும் வார இதழ் குஜராத்தி மொழியில் தொடங்கப்பட்டது. இது 1853 இல் நாளிதழாகியது. மக்களின் வரவேற்பைப் பெற்ற இதழாக இது விளங்கியது.

குஜராத்தி மொழிச் சங்கம்

1849 இல் குஜராத்தி மொழிச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் "வர்தமான்" என்னும் இதழைத் தொடங்கினர். அமரேஷ்வர் கபீர்தாஸ் (Amareshwar Kuberdas) என்பவர் இதழின் ஆசிரிய ராக விளங்கினார். இவர் குஜராத்தி மொழிச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர். இந்தச் சங்கத்தின் பொறுப்பிலிருந்தவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களே. அவருள் ஒருவரும், அகமதாபாத் வழக்கு மன்றத்தில் கூடுதல் நீதிபதியாக இருந்தவருமான சர். அலெக் சாண்டர் கின்லாக் போர்ப்ஸ் என்பவர் "தர்பனி"ல் அடிக்கடி எழுதிவந்தார். இவ்விதழ் குஜராத் மொழிச் சங்கத்தைச் சேர்ந்த மற்றொரு ஆங்கிலேயரின் பொறுப்பிலிருந்த சிறைச்சாலையின் கொடுமைகளைத் தாக்கி எழுதியபோது, அரசு சினந்து இதழின் உரிமைகளைப் பறிமுதல் செய்து விட்டது.

வர்தமானில் பணியாற்றிய ஒருவர், அவ்விதழ் நின்றபின்பு, "ஷாம்சர் பகதூர்" என்னும் இதழைத் தொடங்கினார். இவ்வித ழும் அரசின் சீற்றத்திற்குள்ளாகி நின்றது.

1850 இல் சூரத்தில் இரண்டு இதழ்கள் வெளிவந்தன. ஆயினும் அவை தொடர்ந்து நடைபெறவில்லை.

சித்தரஞ்சன் தர்பன்

இக்காலத்தில் பெராம்ஜி ஜாம் ஷெட்ஜி காந்தி என்பவரால் "சித்தரஞ்சன் தர்பன்" என்னும் இதழ் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விதழ் இறைதூதரான நபிகள் நாயகத்தின் வரலாற்றினை வெளியிட்டதுடன் வரிநுணுக்கக் கூறுகளில்லாமல் பொதுமைப் பாவமும் தொனியும் உண்டு பண்ணும் ஓவியப்பண்புக்கூறாக (Impressionistic) அவருடைய திருவுருவப்படத்தையும் வெளி யிட்டது. இது இஸ்லாமியர்களிடையே பெருஞ்சினத்தை விளைவித்தது. இதனால் இஸ்லாமியர்க்கும் பார்சியர்க்கு மிடையே பெருங்கலகம் தோன்றியது.

தாதாபாய் நவ்ரோஜீ

இக்கலகத்தினை ஒடுக்கும் நோக்கத்துடனும், பார்சியரி டையே புத்துணர்ச்சியை உண்டாக்கும் குறிக்கோளுடனும் 1851 இல் (நவம்பர் 15) பம்பாயில் மாதம் இருமுறை இதழாக "உண்மை விளம்பி" என்னும் பொருளைக் கொண்ட 'ராஷ்ட் காஃடர்" என்னும் பெயருடன் இதழொன்றைப் பாராளுமன்றத் தின் முதல் இந்திய உறுப்பினரான பெருமைக்குரிய தாதாபாய் நவ்ரோஜி, கோர்ஷெட்ஜி காமா என்பவரின் பொருளுதவியோடு தொடங்கினார்.

ஏழாண்டுகட்குப் பின்னர் 'சாதி சமய வேறுபாடில்லாமல் இந்தியர் அனைவர்க்கும் உரியது தமது இதழ்' என்று தாதாபாய் நவ்ரோஜி அறிவித்தார்.

கேர்சன் தாஸ் முல்ஜி (Karsondas Mulji) என்பவர் 'சத்ய பிரகாஷ்' என்னும் இதழை இக்காலத்தில் நடத்திக் கொண்டிருந் தார். இவர் 'ராஷ்ட் காஃடர்' இதழுக்குத் தொடர்ந்து எழுதும் எழுத்தாளர். இவர் ஒன்பது மாத காலம் 'ராஷ்ட் காஃடரி'ன் ஆசிரியராக இருந்தவர். 'சத்ய பிரகாஷுடன்' 'ராஷ்ட் காஃடர்' இணைந்து, 'ராஷ்ட் காஃடர் அண்ட் சத்ய பிரகாஷ்' என்னும் புதிய பெயருடன் நடைபெற்ற போது, கேர்சன் தாஸ் முல்ஜி இரண்டரை ஆண்டுக்காலம் ஆசிரியப் பொறுப்பிலிருந்தார்.

பின்னர் கேசஸ்ரு கப்ராஜி (Keshashru Kabraji) ஆசிரியரானார். இவர் தாதாபாய் நவ்ரோஜியின் கருத்துகளுடன் முரண்பட்டார். அவர் தலைமையேற்று நடத்திய இந்திய தேசீய காங்கிரஸ் குறித்து அடிக்கடி கண்டனங்களைத் தெரிவித்தார். இது குறித்து, இதழின் நிருவாகியான தீன்ஷா வாச்சா என்பவருக்கு தாதாபாய் நவ்ரோஜி கடிதம் எழுதினார். சரியான விளக்கம் தரப்படாததால் தாதாபாய் தம் தொடர்பைக் குறைத்துக் கொண்டார்.[1]

1921 ஆம் ஆண்டு வரை இவ்விதழ் நடைபெற்றது.

1852 இல் 'பார்சி பன்ச்' (Parsi Punch) என்னும் இதழும், 'அக்பர் - இ - சோட்கார்' என்னும் இதழும் வெளிவந்தன.

மராத்தி மொழியில் முதல் இதழ் 1832 இல் வெளிவந்தது.

பால்சாஸ்திரி ஜம்பேகர்

பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியின் பேராசிரியரும் அரசின் கல்விதுறைக் கண்காணிப்பாளராக இருந்தவருமான பால் சாஸ்திரி ஜம்பேகார் என்பவர் 'பாம்பே தர்பன்' என்னும் மாதம் இருமுறை இதழைத் தொடங்கினார். ஆங்கில - மராத்தி இரு மொழி இதழான 'பாம்பே தர்பனி'ல் இந்து விதவைகளின் மறு மணம் போன்ற சமுதாயச் செய்திகளே சிறப்பிடம் பெற்றன. இதுவே மராத்தி மொழியில் வெளிவந்த முதல் இதழ். இவ்விதழ் சில மாதங்கட்குப் பின் வார இதழாயிற்று. எட்டாண்டுகட்குப் பின்னர், பாம்பே தர்பன் நாளிதழாகியது.

பால்சாஸ்திரி ஜம்பேகர் 1840 இல் 'திக் தர்ஷன்' என்னும் மாத இதழைத் தொடங்கினார். முழுமையும் மராத்தி மொழியில் வெளிவந்த இவ்விதழில் அறிவு வளர்ச்சிக்கான கட்டுரைகள்,

---

1 M. Chalapathi Rau, The Press, p. 110.

பொதுக்கட்டுரைகள், வரலாறு, நிலவியல் விஞ்ஞானம், தத்துவம் தொடர்பான கட்டுரைகள் படங்களுடன் வெளிவந்தன.

1840 ஜூலை மாதம் 3ஆம் நாளன்று சூர்யாஜி கிருஷ்ணாஜி என்பவர் 'மும்பாய் அக்பர்' என்னும் இதழைத் தொடங்கினார். இவ்விதழ் சில மாதங்களே வெளிவந்தது.

பாஹு மகாஜன்

1841 அக்டோபர் 24ஆம் நாளன்று கோவிந்த் விட்டல் குந்தே என்னும் பாஹுமகாஜன் என்பவர், 'பிரபாகர்' என்னும் வார இதழைத் தொடங்கினார். இவ்விதழ் 1865 வரை நடை பெற்றது. சர்தார் கோபால்ராவ் ஹரிதேஷ்முக் என்பவர் 'லோகிதவாதி' என்னும் புனைபெயரில் நூறு கடிதங்கள் எழுதி யுள்ளார். மக்களிடையே இவ்விதழுக்கிருந்த செல்வாக்கினை இக் கடிதங்கள் நன்கு உணர்த்துகின்றன. பால்சாஸ்திரி ஜம்பேகரின் மறைவுக்குப் பின்னர் அவருடைய 'திக்தர்ஷன்' மாத இதழையும் இவர் தொடர்ந்து வெளியிட்டார்.

தின் யானோதயா

கிறிஸ்தவ சமயத்தவர் 1842 ஜூனில் "தின்யானோதயா', என்னும் வார இதழை வெளியிட்டனர். இவ்விதழ் மராத்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் வெளி வந்தது. ரெவரண்ட் ஹென்ரி பாலன்டைன் என்பவர் ஆங்கிலப் பகுதிக்கும், ஷாகுராவ் குட்கே என்பவர் மராத்திப் பகுதிக்கும் ஆசிரியர் களாயிருந்தனர். கிறிஸ்தவ சமய வளர்ச்சிக்காக வெளியிடப் பட்ட இதழ் இது.

1842 இல் வீரேஷ்வர் சாதுசத் சாத்ரே என்பவர் பம்பாயி லிருந்து "தின்யான் சிந்து" என்னும் இதழை வெளியிட்டார். இது மூன்றாண்டுகளே வாழ்ந்தது.

பால் சாஸ்திரி ஜம்பேகரின் மற்றொரு ஆதரவாளரும் நண்பருமான பண்டிட் மொராபட் தந்தேகர் என்பவர், 1844 ஜனவரியில் "உபதேஷ் சந்திரிகா" என்னும் மாத இதழை வெளியிட்டார். கிறிஸ்தவ சமயத்தவரின் தாக்குதலிலிருந்து இந்து சமயத்தைக் காப்பதே இதழின் நோக்கமாக இருந்தது.

1849 பெப்ரவரியில் கிருஷ்ணாஜி ட்ரிம்பக் ரானடே என்பவரால் புனாவிலிருந்து "தின்யான் பிரசாத்" என்னும் வார இதழ் வெளியிடப்பட்டது: ஐம்பத்தைந்தாண்டுகட்குப் பிறகு இவ்விதழ் நாளிதழாகியது. பிரபல மராத்தி மொழி நாவலாசிரிய ரான ஹரிநாராயண் ஆப்தே நாளிதழின் ஆசிரியரானார்.

1852 இல் வ. பி. கோகலே பம்பாயிலிருந்து "வர்த்தமான் தீபிகா" என்னும் வார இதழினைத் தொடங்கினார்.

புனாவிலிருந்து அதே ஆண்டில் கிருஷ்ண சாஸ்திரி சிப்லோன்கார் "விசார லஹரி" என்னும் மாதமிருமுறை இதழினை வெளிட்டார்.

1853 இல் கோவிந்த் விட்டல் குந்தே என்னும் பாஹு மகாஜன் "தூமகேது" என்னும் வார இதழினைத் தொடங்கினார். இது 1865 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது.[1] இவ்விதழ் இந்தியர் ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்காகப் பாடு பட்டது.

பெர்சிய மொழி இதழ்கள்

ஆட்சி மொழியாக 1836 இல் ஆங்கிலம் இடம் பெறுவதற்கு முன்னர் இந்தியாவின் வடமாநிலங்களில் பெர்ஷிய

---

1 J. Natarajan, History of Indian Journalism, p. 56-59.

மொழியே ஆட்சி மொழியாகவும் அலுவலக மொழியாகவும் இருந்தது. இதற்கு அடுத்த நிலையை உருதுமொழி பெற்றிருந்தது.

வங்காள மொழி இதழ்கள் மட்டுமல்லாமல் பெர்சியன்மொழி இதழ்களும் கல்கத்தாவிலிருந்துதான் முதன் முதலாக வெளிவந்தன.

பெர்சியன் மொழியில் வந்த முதல் இதழ் 1822 இல் ராஜாராம் மோகன்ராய் தொடங்கிய மீரட்-அல்-அக்பர் என்பதாகும்.

அதனையடுத்து, 1822 இலேயே ஜாம்-இ-ஜான் நியூமா என்னும் இதழ் தோன்றியது. முன்ஷி சுதாசுக் என்பவர் இதன் ஆசிரியர். இவ்விதழ் தொடக்கத்தில் சில ஆண்டுகள் வரையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதரவைப் பெற்றிருந்தது. உருது மொழியில் சில பக்கங்கள் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டு இவ்விதழுடன் வழங்கப்பட்டது. இவ்வனுபந்தத்தில் பெர்சிய மொழி, ஆங்கில மொழி நூல்களின் மொழி பெயர்ப்புகளும், கவிதைகளும், செய்திகளும், கட்டுரைகளும் இடம் பெற்றன.

தொடர்ந்து பல இதழ்கள் பெர்சிய மொழியில் வெளிவந்தன. அவை மணிராம் தாகூரால் 1823 இல் தொடங்கப்பட்ட "ஷாம்சுல் அக்பர்", செராம்பூர் கிறித்தவ சமய இயக்கத்தவரால் 1826 இல் வெளியிடப்பட்ட "செராம்பூர் அக்பர்", "ஆயினே-இ-சிக்கந்தர் (1831), முன்ஷி வாஜுதீனை ஆசிரியராகக் கொண்ட மாஹ்-இ-ஆலம் அஃப்ரோ(ஸ்)ஜ் (Afroz) முன்ஷி வாஜித் அலிகானை ஆசிரியராகக் கொண்ட ஜூபிதத்-அக்-அக்பர் (1833), லக்னோவைச் சேர்ந்த ராஜாப் அலியால் வெளியிடப்பட்ட சுல்தான்-அல்-அக்பர் (1835), மாஹ்-இ-முனிர் (1841) என்பன.

இவற்றுள் மாஹ் - இ - ஆலம் அஃப்ரோஜ், சுல்தான் - அல் - அக்பர் என்னும் இரு இதழ்களும் ஆட்சியாளரின் சீற்றத்துக்கு ஆளாயின.

வேட்டைக்குச் சென்ற ஆங்கிலேய அதிகாரி ஒருவர் தவறுதலாக ஒரு பெண்ணைச் சுட்டுவிட்டார். அவரை எந்த விதமான எச்சரிக்கையும் செய்யாமல் நீதிபதி விடுவித்து விட்டார். இந்த நிகழ்ச்சியைக் குறித்து மாஹ் - இ - ஆலம் அஃப்ரோஜ், நிறவேறுபாடும், செல்வ வளமுமே இதற்குக் காரணம் என்றும், ஏதுமறியாத பெண்ணின் இறப்புக்குக் காரணமானவர் விசாரணை ஏதுமின்றி, தண்டனை ஏதுமின்றி விடுதலை செய்யப்பட்டது விந்தையாக உள்ளது என்றும் எழுதியது.

அலுவலகங்களிலும், வழக்கு மன்றங்களிலும் உள்ள சாதாரண அலுவலகங்கள் கையூட்டு போன்ற தவறான பழக்கங்களுக்குள்ளாகி, அங்கு வருவோர்க்குத் தொல்லை தருவது வேதனையாக உள்ளது என்றும், ஆங்கில அதிகாரிகள் அதுபற்றிய புகார்களைப் பெற்ற போதும், விசாரணை செய்யாம லிருக்கிறார்கள் என்றும் சுல்தான் - அல் - அக்பர் எழுதியது.

நிலச் சுவான்தாரர்கள் பலவகையான கொடுமைகளுக்கு ஆளாகின்றனர் என்றும், கல்கத்தா போன்ற பெருநகரங்களில் கொலைகள் மலிந்துவிட்டன என்றும், விசாரணை முயற்சி ஏதுமின்றி எவர்மீதும் பழி சுமத்தும் அடாத போக்கு ஆட்சி யாளரிடையே உள்ளது என்றும், வழக்கு மன்றங்கள் போன்ற பொது அமைப்புகளில் அங்குப் பணியாற்றுவோரே கையூட்டு பெறும் கொடுமை குறையாமல் உள்ளது என்றும் குறைகளைத் தொடர்ந்து சுட்டிக்காட்டும் பணியினையும் சுல்தான் - அல் - அக்பர் மேற்கொண்டது.

அரண்மனை இதழ்

சிராஜ் - அல் - அக்பர் என்னும் இதழ் டில்லி மன்னரின் அரண்மனை இதழாக விளங்கியது. இவ்விதழ்பற்றி, டில்லி மாஜிஸ்ட்ரேட் ஜான் லாரன்ஸ் பின்வருமாறு எழுதியுள்ளார் :

அரண்மனை அலுவலர்கள் மட்டுமே இவ் விதழுடன் தொடர்புடையவர்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இவ்விதழ் வெளியிடப்பட்டது. முப்பத்து நான்கு படிகளே அச்சிடப்பட்டன. இவற்றுள் தலைமை ஆளுநருக்கும் டில்லி ஆளு நர்க்கும் அரண்மனை நிருவாக அதிகாரிக்கும் ஒவ்வொரு படி அனுப்பப்பட்டது. எஞ்சியவை எல்லாம் அரசின் உயர் அதிகாரிகளிடையே விநி யோகிக்கப்பட்டன. இவர்களிடமிருந்து மட்டும் ரூபா ஒன்று இதழின் விலையாக சம்பளத்திலிருந்து கழித்துக் கொள்ளப்பட்டது. அரசரின் அன்றாட அலுவல் களை வெளியிடுவதுடன் சிறுபகுதி நாட்டுச் செய்தி களுக்காகவும் ஒதுக்கப்பட்டது.[1]

உருது மொழி இதழ்கள்

இன்றைய உத்தரப் பிரதேசத்தின் பெரும் பகுதியைக் கொண்டு அன்று விளங்கிய வடமேற்கு மாநிலங்களில் விளங்கிய சமயங்கள் இரண்டு. அவை இந்து சமயமும் இஸ்லாமுமாகும். இச் சமயத்தவர்களின் மொழிகளான இந்தியிலும் உருதுவிலும் இதழ்கள் பல வெளிவந்தன.

டில்லியிலிருந்து முதன் முதலாக (1836) வெளிவந்த உருது மொழி இதழ் "உருது அக்பர்" என்பதாகும்.

1837 இல், அலிகாரில் முஸ்லிம் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்த சர் சையத் அகமத்கானின் மூத்த சகோதரரான சையத் முகம்மத்கான் "சையத் - அல் - அக்பர்" என்னும் இதழைத் தொடங்கினார்,

1844 "டெல்ஹி உர்தூ அக்பர்" மௌலவி முகமது பாகுர், மோதிலால் என்னுமிருவரால் நடத்தப்பட்டது.

---

1 M. Chalapathi Rau, The press, pp. 103 - 104.

ஆக்ரா கல்லூரியைச் சேர்ந்த சிலர், ரூபா ஐந்து ஒருபங்கு என்ற வகையில் இருநூறு பங்குதாரர்களைச் சேர்த்து 1846 இல் "சுத்தர்—அல்—அக்பர்" என்னும் இதழைத் தொடங்கினர். பங்குதாரர் அனைவரும் ஆக்ரா கல்லூரியைச் சேர்ந்தவர்களே. மிகக்குறுகிய காலத்திற்குள் இதழின் ஆசிரியராக இருவர் பணி யாற்றினர். கருத்துவேறுபாடு கொண்ட செய்திகளை வெளி யிட்ட காரணத்தால் இவ்விதழ் அரசின் சீற்றத்திற்கு ஆளா கியது. ஃபாலன் என்பவர் ஆசிரியப் பொறுப்பேற்றார். இதழின் பெயர் மாற்றம் பெற்றது. "அக்பர்—அல்—ஹகயாக்" என்னும் புதுப்பெயருடன் வாரம் இருமுறை இதழாக இது வெளிவந்தது.

ஆக்ரா கல்லூரியைப் போலவே டில்லி கல்லூரியைச் சேர்ந்த வர்களும் "குரான்—அஸ்—சாதைன்" என்னும் இதழை வெளி யிட்டனர். அக்கல்லூரியைச் சேர்ந்த ஆங்கிலப் பேராசிரியர் தர்ம நாராயண் இதழாசிரியராக விளங்கினார்.

இவையேயல்லாமல் "ஷேக்—அல்—அக்பர்", "ஃபேவைத், அல்— நஸ்ரீன், மஸூர்—அல்—ஹக் என்னும் இதழ்களும் 1847-48 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. 1849 இல் ஷேக் முகம்மது ஜியாவுடீன் என்பவரால் "ஜியா-அல்-அக்பர்" தோற்று விக்கப்பட்டது.

இதழ்களும் இடங்களும்

1849-50 ஆம் ஆண்டுகளில் ஆக்ராவிலிருந்து "குதாப்— அல் —அக்பர்," "அக்பர்—உன்—நுவா", "நூர்-அல்-அப்சார்", "போதி பிரகாஷ்" என்னும் நான்கு இதழ்களும்,

மீரட்டிலிருந்து "மிஃபாத்-அல்-அக்பர்" என்னும் இதழும்,

பெனாரஸிலிருந்து, "பாக்—ஓ—பாஹார்," "பனாரஸ் சந்தி ரோதயா," "சழூரின்-இ-ஹிந்த்" என்னும் மூன்று இதழ்களும், இந்தூரிலிருந்து "மால்வா அக்பர்" என்னும் இதழும், லாகூரி லிருந்து "கோஹினூர்", "துர்யா—இ—நூர்" என்னும் இரண்டு

இதழ்களும், சிம்லாவிலிருந்து "சிம்லா அக்பர்" என்னும் இதழும் வெளியாயின.

அரசு உதவி

இவற்றுள் சில இதழ்களின் பிரதிகளை அரசாங்கம் விலை கொடுத்து வாங்கி, எட்டு மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு அனுப்பி வைத்து உதவி செய்தது. அவை மருத்துவம், வானியல், வரலாறு தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டன.

வங்காள மொழி, பெர்சிய மொழி, இந்தி, உருது ஆகிய மொழிகளில் வெளிவந்ததைப்போல எண்ணற்ற இதழ்கள் இந்தியாவின் பிறமொழிகளில் 1857க்கு முன்னர் வெளிவரவில்லை.

இருவேறு கருத்து

பஞ்சாபி மொழிகளில் "கோஹினூர்" என்னும் வார இதழ் 1848 இல் முன்ஷி ஹர்சுக்ராய் என்பவரால் வெளியிடப்பட்டதாகத் தாராசந்த் என்பவர் குறிப்பிடுகின்றார். இதழியல் வரலாறு எழுதிய பிற ஆசிரியர்கள் 1867 இல்தான் பஞ்சாபி மொழியில் முதல் இதழ் வெளிவந்தது என்னும் கருத்துடையவர்களாயுள்ளனர்.[1]

பஞ்சாபி, ஒரியா, அஸ்ஸாமி மொழிகளில் இதழ்கள் 1858க்குமுன் தோன்றாததற்கு அவர்களுடைய எண்ணிக்கைக் குறைவும், அவருள்ளும் மிகச் சிலரே புலமை உடையவர்களாக இருந்ததும், அவர்களை நெறிப்படுத்தி இதழ் தொடங்க எவரும் முன்வராததும், வங்காள மொழியையே அவர்கள் ஆர்வமுடன் கற்க முன்வந்ததும், அரசாங்கம் அதை ஆதரித்ததும் ஆகியவையே காரணங்கள் என்று ரேவரண்ட் லாங் என்பவர் எழுதியுள்ளார்.[2]

---

1 Tarachand, History of the Freedom Movement in India, Vol II p 225

2 M. Chalapathi Rau, The Press, p. 112

அஸ்ஸாமிய மொழியில் இதழியலை உருவாக்கிய பெருமை அமெரிக்கக் கிறித்தவப் பாதிரிமார்களையே சாரும். 1836 இல் சிப்சாகர் என்னும் இடத்தில் அச்சகத்தை நிறுவிய அவர்கள், சமய வளர்ச்சிக்காக "அருணோதயா" என்னும் பெயரில் இதழொன்றினை 1846 இல் தொடங்கினர். இந்த இதழ் ஆங்கிலத்தில்தான் வெளி வந்தது. தாய் மொழி ஆர்வம் கொண்ட தாய்நில மக்கள் தங்கள் மொழியிலும் இது போன்ற இதழ் கொண்டு வரவேண்டும் என்னும் ஆர்வம் கொண்டனர். ஆயினும் 1857க்கு முன்னர் அஸ்ஸாமிய மொழியிலும் தாய் மொழியில் இதழ்கள் வெளிவரவில்லை.

கன்னட சமாச்சார்

கன்னட மொழியில் செர்மானிய நாட்டுக் கிறிஸ்தவ இயக்கத்தவர் 1812 இல் "கன்னட சமாச்சார்" என்னும் பெயரில் இதழொன்றை வெளியிட்டனர். இதுவே கன்னட மொழியில் வெளிவந்த முதல் இதழாகும். இவ்விதழுக்குப் பின்னர் வேறு இதழ் எதுவும் இதழியலன் முதல் கால கட்டத்தில் கன்னட மொழியில் வெளிவரவில்லை.

தெலுங்கில் இதழ்கள்

தெலுங்கு மொழியில் முதல் இதழ் வெளிவரக் காரணமாக இருந்தவர்கள் பெல்லாரியில் இருந்த கிறிஸ்தவ சமய இயக்கத்தவரே யாவர். இவர்கள் 1835 இல் "சத்திய தூதன்" என்னும் இதழை வெளியிட்டனர். விர்த்தாந்தினி என்னும் இதழ் 1840 இலும், வர்த்தமான தரங்கிணி என்னும் இதழ் 1842 இலும் வெளிவந்தன. இம்மூன்று இதழ்களும், ஆந்திரா மாநிலத்தில் அச்சுக்கலை வளராத காரணத்தால் சென்னையில் அச்சிடப்பட்டு ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பப்பட்டன.

கோட்டயத்தில் முதல் இதழ்

மலையாள மொழியில் முதல் இதழ் கோட்டயத்திலிருந்து வெளி வந்தது. 1840 இல் வெளிவந்த இவ்விதழின் பெயர்

''விக்ஞான நிக்ஷேபம்'' என்பதாகும். 1857 வரை வேறு இதழ்கள் மலையாள மொழியில் வெளிவரவில்லை.

தமிழில் முதல் இதழ்

தமிழ் இதழியலுக்கு வித்திட்டவர்கள் சென்னைக் கிறிஸ்தவ சமய இயக்கத்தவரே ஆவர். இவர்கள் 1831 இல் ''தமிழ் மாகஸீன்'' என்னும் பெயரில் திங்கள் இதழொன்றை வெளியிட்டனர். இதுவே தமிழில் தோன்றிய முதல் இதழாகும். அரசு ஆதரவுடன் வெளிவந்த இவ்விதழ் இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்குமேல் நடைபெறவில்லை.[1]

திரு. தி. பாக்கியமுத்து தமது ''அச்சும் தமிழும்'' என்னும் கட்டுரையில் இவ்விதழ் பற்றித் தெரிவித்துள்ள கருத்து இதுவாகும்.

> 1831 - ம் ஆண்டு ''தமிழ் பத்திரிகை'' என்ற பெயரில் சென்னை சமயத் துண்டுப் பிரசுரச் சங்கம் ஒரு மாத இதழைக் கொண்டு வந்தது. இதுவே இந்தியாவின் முதல் பத்திரிகை. பல காரணங்களால் அது 1846 - ம் ஆண்டு ''சத்திய தூதன்'' என்ற மாதம் இருமுறை செய்தித்தாளுடன் இணைக்கப் பெற்றது. பின்னர் ஆறு மாதத்திற்குள் மூடப் பெற்றது.[2]

திரு. பாக்கியமுத்துவின் கூற்று ஏற்கத் தகுந்ததாகத் தோன்றவில்லை.


''சத்திய தூதன்'' என்னும் இதழ் 1887 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல்தான் வெளிவந்துள்ளது.[3] சென்னை

---


1 J. Natarajan, History of Indian Journalism. p. 64

2 கணையாழி (மாத இதழ்) ஆகஸ்ட் 1980, பக் 2

3 சு. அ. இராமசாமிப் புலவர், இதழ் விளக்க வரிசை, பக் 67



நற்போதகம் இதழின் இரு பக்கக் காட்சி ஜூலை, 1874



[illegible]

Vol. 26.	July.	No. 7.

Contents:

[illegible]

Palamcottah:
PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
[illegible]
[illegible]

வேப்பேரி எஸ். பி. சி. கே. அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட நான்கு பக்கங்களைக் கொண்ட இவ்விதழ் கிறித்தவ சமயக் கோட்பாடுகளை மக்களிடையே பரப்பி அவர்களைக் கிறித்தவர்களாக்க வேண்டும் என்னும் நோக்குடையதாகும்.

திரு. பாக்கியமுத்து கூறுவது போன்று

1 சத்திய தூதன் மாதம் இருமுறை இதழாக வெளி வரவில்லை.

2 சத்திய தூதன் 1846 இலோ அல்லது அதற்கு முன்னரோ தொடங்கப் பெறவில்லை.

3 சத்திய தூதன் செய்தித் தாளும் அன்று.

எனவே இதழியல் வல்லுநர்கள் கூற்றிற்கேற்ப, தமிழில் வெளிவந்த முதல் இதழான "தமிழ் மாகஸின்" 1831இல் தொடங்கி இரண்டு அல்லது மூன்றாண்டுகளே வாழ்ந்தது என்று கொள்வது பொருந்தும்.

மூன்று இதழ்கள்

1833 ஆம் ஆண்டில் "ராஜ விருத்தி போதினி" என்னும் வார இதழும் 1849 ஆம் ஆண்டில் நற்போதகம் அல்லது Friendly Instructor என்னும் மாத இதழும்,[1] 1855இல் "தினவர்த்த மானி" என்னும் வார இதழும் வெளி வந்தன.

---

1 மா. ரா. இளங்கோவன், முற்காலத் தமிழ் இதழ்கள் ஓர் அறிமுகம், பக் 19

பெர்சிவல் பாதிரியார்

"தினவர்த்தமானி"க்கு அரசு மாதந்தோறும் ரூபாய் இருநூறு மானியமாக அளித்தது. அக்காலத்தில் வெளிவந்த இதழ்களுள் ஆயிரம் பிரதிகள் விற்பனையான ஒரே இதழ் என்னும் பெருமை தினவர்த்தமானிக்கு உரியது. இது அறிவைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் பயனுள்ள பல செய்திகளைக் கொண்டிருந்தது. பெர்சிவல் பாதிரியார் இதன் ஆசிரியர். சில காலம் திரு. சி. வை. தாமோதரம் பிள்ளையும் இவ்விதழின் ஆசிரியராக இருந்துள்ளார்.

இந்தியப் பெருங்கிளர்ச்சி

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி 1857 இல் நடைபெற்ற இந்தியப் பெருங்கிளர்ச்சிக்குப் பின் முடிவடைந்து விட்டது.

இதழ்கள் மக்களிடையே படிப்படியாக உண்டாக்கிய நாட்டுணர்வு 1857 மே மாதம் 10 ஆம் தேதி மீரட்டில் நடைபெற்ற இந்தியப் பெருங்கிளர்ச்சியைக் காணச் செய்தது.

வரலாற்றுக் குறிப்புடைய அப்பெருங்கிளர்ச்சிக்கு அல்லது இந்திய மக்களின் பொங்கெழுச்சிக்குரிய பிற காரணங்களையும் காண்போம்.

இதழியல் 1857க்குப் பின்னர் பெற்ற பெருவளர்ச்சிக்கு அப் பொங்கெழுச்சி வித்திட்டது. சாதி ஒழிப்பு, மூடப்பழக்க வழக்கங்களின் ஒழிப்பு, சமய சீர்திருத்தங்கள் என்பவற்றிலேயே இது காறும் முனைந்திருந்த இந்திய மொழி இதழ்கள், அரசியல் உணர்வு கொண்டு செயல்படும் புதிய போக்கினைப் பெறத் துணைபுரிந்தது இந்தியப் பெருங்கிளர்ச்சி.

இனி அதுபற்றி விரிவாகக் காண்போம்.

சிப்பாய்க் கலகமா?

ஆங்கில வரலாற்றாசிரியர்களால் சிப்பாய்க் கலகம் (Sepoy Mutiny) என்று கூறப்படும் இப்பெருங்கிளர்ச்சி பற்றி அறிவது இதழியலின் வளர்ச்சியை உணரத் துணை செய்வதாகும்.

பெருங்கிளர்ச்சியின் நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்களை இங்கிலாந்துக்கு அனுப்பிய இந்தியச் செயலாளர் (Secretary of State for India) ஏர்ல் ஸ்டான்லி என்பவர்தான் 'கலகம்' என்னும் பொருளில் 'Mutiny' என்ற சொல்லைக் கையாண்டார். அதனை அப்படியே பின்பற்றினர் சார்லஸ் பால், ஜி. டபிள்யூ ஃபாரஸ்ட், டி.ஆர். ஹோம்ஸ், எம். இன்னீஸ், ஜே. டபிள்யூ. கே. ஜி. எஃப். மேக்மன், ஜி. பி. மாலீசன், இ. டி. மெட்சால்ஃப், ஏர்ல் ராபர்ட்ஸ் போன்ற வரலாற்றாசிரியர்கள்.[1]

ஆனால் இங்கிலாந்து மக்கள் சபையில் 1857 ஜூலை 27இல் இந்திய நிகழ்ச்சிகள் பற்றி உரையாற்றிய டிஸ்ரேலிதான் இதனைத் 'தேசியக் கிளர்ச்சி' (National Revolt) என்றும், ராணுவக் 'கலகம்' (Military Mutiny) அன்று என்றும் கூறினார்.[2]

கிளர்ச்சியின் வரலாறு

1857 இல் நடைபெற்ற இந்திய மக்களின் பொங்கெழுச்சிக்கு முன்னரே நாட்டின் பல பகுதிகளிலும் இது போன்ற கிளர்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

முதன் முதலாக 1764 இல் பாட்னாவில் இந்திய வீரரிடையே எழுச்சி ஏற்பட்டது. வந்தவர்க்காகச் சொந்த நாட்ட

---

1 Tarachand, History of the Freedom Movement in India, vol II, p. 40

2 C. Ball, the History of Indian Mutiny, vol II, p. 418

வரைக் கொல்வதா என்ற உணர்வு அவர்களுக்குத் தோன்றியதே அதற்குக் காரணம். மன்றோ தலைமையில் நவாப் மீர்காசிமை எதிர்க்கும் நிலை நேர்ந்தபோது இந்திய வீரர்கள் மீர்காசிமுக்கு ஆதரவாகவே நின்றனர். ஆனால் இந்த 'ஒத்துழையாமை' உடனடியாக அடக்கப்பட்டுவிட்டது.

இராணுவத்தாரிடையே இரண்டாம் முறையாக 1806 இல் நிறைவின்மை தோன்றி வேலூரில் கிளர்ச்சி தோன்றியது. 1803 இல் திப்புசுல்தானையும், மராத்தியர்களையும் வென்ற பின்னரே கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சி இந்தியாவில் முழுமையாக நிறுவப்பட்டது. அப்போதுதான் அவர்கள் 1796 இல் திருத்தி அமைக்கப்பட்ட ராணுவ விதிகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கினர். அதனால் ஆங்கிலப் படை வீரர்கட்கும் வழங்கப்பட்ட தனிச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு ராணுவ அதிகாரிகள் ஓய்வூதியம் பெற்று தாயகம் செல்லத் தொடங்கினர். புதிய அதிகாரிகள் இந்திய வீரர்களோடு பழகி அவர்களைப் புரிந்து கொள்ளக் காலம் தேவைப்பட்டது. தொடர்பில் நெருக்கம் இருக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

திப்புசுல்தானை வென்றபின், அவனுடைய இரண்டு பிள்ளைகளும் வேலூர்க் கோட்டையில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இராணுவ வீரரிடையேயும் உடையிலும் உடற் பயிற்சி போன்ற நடைமுறைப் பழக்கங்களிலும் மாற்றங்கள் புகுத்தப்பட்டன. இந்திய வீரர்கள் தங்கள் தாடியை நீக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர்; நெற்றியில் சமயச் சின்னங்கள் இடுதல் கூடாது, காதணிகள் அணிதல் கூடாது எனப்பட்டனர்; தலைப் பாகைகளுக்குப் பதிலாக அவர்கள் தொப்பியை அணிதல் வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டனர். அந்தத் தோலணி, பன்றி அல்லது பசுவின் தோலால் செய்யப்பட்டது ஆகும். எனவே முஸ்லிம் வீரர்களும் இந்து வீரர்களும் வெறுப்புற்றனர். ஆங்கில அதிகாரிகள் இந்திய வீரர்களைத்

தரக்குறைவாக நடத்தினர்; ஆங்கில வீரர்கள் இந்திய அதிகாரிகளிடம் மரியாதையுணர்வுடன் நடந்து கொள்ள மறுத்தனர்.

சொந்த ஊரிலிருந்து வெகு தொலைவில் சென்று பணிபுரிய நேருவதும், கடல் கடந்தும் செல்ல வேண்டி ஏற்படுவதும் இந்திய வீரர்களால் விரும்பப்படவில்லை.

மொழி, சமயம், பண்பாடு, காலநிலை இவைகளோடும் போராடி, உறவாடிக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் தங்களாட்சியை இந்தியாவில் நிலை நிறுத்தினர். ஆயினும் மேலாதிக்கப் போக்கால் இந்தியர்களும், இந்திய வீரர்களும் அவர்களை வெறுத்தனர்.

இந்த வெறுப்புணர்ச்சிதான் வேலூர்க் கிளர்ச்சியாகியது. 1806 மே மாதத்தில் வேலூரில் இந்திய ராணுவத்தின் ஒரு பிரிவினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால் அது உடனே அடக்கப்பட்டு விட்டது. மீண்டும் ஜூலை மாதத்தில் (10-7-1806) நள்ளிரவுக்குப் பின்னர் வேலூர்க் கோட்டையில் புரட்சி வெடித்தது. ஆங்கில அதிகாரிகள் பலர் கொல்லப் பட்டனர். பொது மக்கள் பலர் இக் கிளர்ச்சியில் பங்கு கொண்டனர். கொந்தளிப்பு மிகுதியாகியது. செய்தி கிடைத்ததும் ஆற்காட்டிலிருந்து ஆங்கில ராணுவம் வேலூர் நோக்கி விரைந்தது. கிளர்ச்சி அடங்கியது.

எனினும் 18 ஆண்டுகளுக்குப் பின்னர் 1824 இல் வங்காள ராணுவப் பிரிவில் இன்னொரு கிளர்ச்சி தோன்றியது.

வலியுல்லாஹ் இயக்கம்

அன்னியர் ஆட்சியை ஒழித்து நாட்டில் இஸ்லாமியர் ஆதிக்கத்தை ஏற்படுத்துவது என்னும் நோக்கத்தைக் கொண்ட ‘வலியுல்லாஹ் இயக்கம்’ 1824 இல் இந்தியாவில் உத்திரப் பிரதேசத்தில் உள்ள ரேபரேலி என்னும் மாவட்டத்தைச் சேர்ந்த சையத் அகமது என்பவரால் தொடங்கப்பட்டது

அரேபியாவில் இருந்த இவ்வியக்கத்தின் தலைமை இடத்தை, அவ்வியக்கத்தைத் தோற்றுவித்த வஹியுல்லாஹ் என்பவருக்குப் பின் அதனைத் தொடர்ந்து நடத்திய அவர் மகன் அப்துல் அஜீஸ் என்பவரின் மறைவுக்குப் (1823) பின்னர் இவர்தான் இந்தியாவிற்கு மாற்றினார்.[1]

'ஜிஹாத்' என்னும் 'புனிதப் போர்' செய்து முஸ்லிம்கள் ஆண்ட பகுதிகளை மீண்டும் அவர்களுக்கே உரிமையாக்க வேண்டும் என்னும் நோக்குடன் வடமேற்கு எல்லைப் பகுதிக் குத் தாம் திரட்டிய பெரும் படையுடன் சையத் அகமது சென்றார். அங்கிருந்தபடி அவ்வப்பொழுது கிளர்ச்சிகள் செய்து கொண் டிருந்தார். இந்தியப் பெருங் கிளர்ச்சியின்போது இவர் பங்கும் பெரிதாகும்.

வைதேகி கிருஷ்ணமூர்த்தி

இவையே யல்லாமல், கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சியில் வறுமை, வேலையில்லாக் கொடுமை ஆகியவற்றால் தாக்குண்ட இந்திய மக்கள் கொண்டிருந்த வெறுப்புணர்வும், தங்கள் நாட்டுப் பழக்க வழக்கங்கள் மறக்கப்படும் அளவுக்கு ஆங்கில நாட்டு நாகரிக முறைகள் புகுத்தப்பட்டதால் அவர் களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும் ஆங்கிலக் கல்வி முறையை விரும்பாத அவர்கள் போக்கும் அன்னிய ஆட்சியிலிருந்து விடுபட வேண்டும் என்னும் உணர்வை அவர்களின் அடி மனத்தில் தோற்றுவித்தன என்றும், அவ்வுணர்வு அவ்வப்போது வட்டாரக் கிளர்ச்சிகளுக்குக் காரணமாகிப் பின் பெருங் கிளர்ச்சிக்கு வழி வகுத்தது என்றும் அல்லாடி வைதேகி கிருஷ்ணமூர்த்தி கூறுகின்றார்.[2]

---

1 Tarachand, History of the Freedom Movement in India, p, 25

1 Alladi Vaidehi Krishnamurthy, Freedom Movement in India, p. 6 - 7

1830 இல் நடைபெற்ற முதலாம் பர்மீயப் போருக்குப் பின்னர் சிக்கன நடவடிக்கை காரணமாக ராணுவத்தினர்க்குச் சம்பளக் குறைவு செய்யப்பட்டது. ஆங்கில வீரர்களுக்கும் தளபதிகளுக்கும் ஏராளமான ஊதியம் கொடுக்கப்பட்டபோதும், இந்திய வீரர்களுக்கு மிகவும் குறைவான சம்பளமே தரப்பட்டது. எனவே இந்திய வீரர்கள் சம்பள உயர்வு விரும்பினர். போக்கு வரவு வசதியின்மையால் தங்கள் உடைமைகளைச் சுமந்தபடி நெடுந்தொலைவுப் பயணம் செய்ய வேண்டிவந்தது. அது மட்டுமல்லாமல் கடுமையான பணிகளும் இந்திய வீரர்களுக்குத் தரப்பட்டன.

இந்த நிலையில், 1844 பிப்ரவரியில் பெரோஸ்பூரில் ராணுவக் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆங்கிலப் படைவீரர்களோடு சிந்து நோக்கி நடைபோட மறுத்து விட்டனர் இந்திய வீரர்கள்.

பஞ்சாபிலும் கிளர்ச்சி தோன்றியது. சம்பள வெட்டின் காரணமாக ராவல்பின்டி ராணுவத்தினர், சம்பளம் வாங்கவே மறுத்தனர். அவர்கள் அதிகாரிகளை எதிர்த்தனர். ஆனால் ராணுவ உயர் அலுவலரான சார்லஸ் நேபியர் சம்பள உயர்வு மக்கள் உரிமை போன்றவற்றில் தாராள மனப்பாங்குடன் நடப்பதாக வாக்களித்ததால், கிளர்ச்சி நின்றது.

இவை ராணுவத்தாரிடையே இருந்து வந்த மனக்குமுறலை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளாயமைந்தன.

இந்தியா இந்தியருக்கே

1828 இல் ராஜாராம் மோகன்ராயால் தொடங்கப்பட்ட பிரம்மசமாஜம், கேசப் சந்திரசென் தொடங்கிய ஆதிசமாஜம், சிவநாத சாஸ்திரி தொடங்கிய சதரானா பிரம்ம சமாஜம், தயானந்த சரஸ்வதி தொடங்கிய ஆரிய சமாஜம், கல்கத்தா காளி கோயில் பூசாரியாகத் தமது வாழ்வைத் தொடங்கிய கங்காதர சட்டோபாத்யாயா என்னும் இராமகிருஷ்ணரின் இயக்கம், மேடம் ப்ளாவிட்ஸ்கி அம்மையாரின் தியாஸபிகல்

சொசைட்டி போன்ற பல்வேறு அமைப்புகள் அடிமை வாழ்வின் கொடுமைகளை அவ்வவற்றின் நோக்கங்களுக்கு ஏற்ப மக்களுக்கு உணர்த்தி வந்தன. இவ்வியக்கங்கள் சமயச் சார்புடையனவாக இருந்தாலும், தேசிய உணர்வை இவை வளர்த்தன என்று கர்னல் ஆல்காட் பாராட்டியுள்ளார். ஆன்மீக நெறியில் இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவை இவை. இவற்றில் ஈடுபாடு கொண்ட இந்திய மக்களுள் பலர் இந்திய விடுதலையை வேட்டனர். "இந்தியா இந்தியருக்கே" என்னும் முழக்கத்தை எழுப்பியவர் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்த சுவாமி தயானந்த சரஸ்வதி என்கிறார் அன்னிபெசன்ட்.[1]

சமயப் பரப்பாளரும் காரணம்

கிறிஸ்தவ சமய இயக்கத்தவர்களும் இதற்குக் காரணமாயினர். அவர்கள் மக்களைக் கூட்டிப் பேசுவதும், கிறிஸ்தவ சமயம் இறைவனால் படைக்கப்பட்டது என்றும், கிறிஸ்துநாதர் பாபங்களை மன்னிப்பவர் என்றும், கிறிஸ்தவரானால் ஏற்றத்தாழ்வற்ற வளமான வாழ்வைப் பெறலாமென்றும் அவர்கள் சொற்பொழிவாற்றினர். தாங்கள் நடத்திய இதழ்களிலும் இந்திய சமயங்களைக் கண்டித்துத் தங்கள் சமயமே மேலானதென்று வலியுறுத்தினர். இதழ்கள் வழி அவர்கள் செய்த பிரசாரமும், மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டு அவர்கள் கூறியவையும் இந்தியர் சிலரை ஈர்த்தன. அவர்களைக் கிறித்தவ மதத்தைச் சாரச் செய்தன என்றாலும், பெரும்பாலான இந்திய மக்கள் வெறுப்புற்றிருந்தனர். இந்திய மக்கள் அனைவரையுமே இவர்கள் கிறித்தவராக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர் என்ற எண்ணமே அவர்களுக்கிருந்தது. முஸ்லிம்களின் மசூதிக்கருகிலும், இந்துக்களின் கோவில்களின் முன்னும் தங்கள் கூட்டங்களைக் கிறிஸ்தவ இயக்கத்தினர் நடத்தினர். அவர்களை எதிர்க்க இந்தியர்கள் அஞ்சினர். அதிகாரிகளின் கடுந்தண்டனைகள் அவர்களை அடக்கம் கொள்ளச் செய்தன.

---

1 பா. மாணிக்கவேலு, இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு, பக். 10—11

இந்த அடங்கிய உணர்வு படிப்படியாக வளர்ந்து பெருங் கிளர்ச்சிக்குத் துணையாகியது என்னலாம்.[1]

போராட்டப் படைக்கலன்கள்

இப்பெருங் கிளர்ச்சிக்கு முன்னர் நடைபெற்ற இந்திய மொழி இதழ்களுள் பல இந்தியத் துணைக் கண்டத்தில் வளர்ந்த ஆதிக்கத்திற்கு எதிரான செய்திகளையே எழுதி வந்தன. அதாவது படிப்படியாக அவை மக்கள் உணர்வுகளைத் தங்களுக்கு ஆதரவாக்கிக் கொள்ள முயன்றன. நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிடுவதன் மூலமும், பண்டைப் பெருமைகளை விளக்குவதன் மூலமும் அவை போராட்டப் படைக்கலன்களாக விளங்கின.

ஆயினும், ஆட்சியாளர், இந்திய மக்களை ஒடுக்கி வைப்பதில் கருத்தாகவே இருந்தனர். இதழ்களைப் பல சட்டங்கள் மூலம் அழித்துவிடும் அவர்களின் போக்கு மக்களுக்கு வெறுப்பைத் தந்தது. எனவே இதழாசிரியர்கள் உள்ளத்தில் கிளர்ச்சி நோக்கங்கள் உருக்கொண்டன.

நீறுபூத்த நெருப்பு

தங்களாட்சிக்குட்பட்ட நாடுகளை இழந்த இந்திய மன்னர்கள் நிறுபூத்த நெருப்பாகவே இருந்தனர். தங்கள் திறமைக்கேற்ற வாய்ப்புக் கிடைக்காத டாக்டர்களும், வக்கீல்களும் கலங்கி நின்றனர்.

இந்த நிலையில் அரசர்கள், ரயத்வாரி சட்டம் மூலமாக நிலமிழந்த நிலச்சுவான் தார்கள், அறிஞர்கள், இதழாசிரியர்கள், சமயவாதிகள், போர் வீரர்கள், பொது மக்கள் எல்லோரையும் கொண்ட பொதுவியக்கத்தின் பொங்கெழுச்சிதான் 1857 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியப் பெருங்கிளர்ச்சியாகும்.

---

1 Tarachand, History of the Freedom Movement in India, Vol II, p. 65

இந்தியப் பெருங்கிளர்ச்சிக்கு முன்னர் இந்திய இதழியல் பிள்ளைமைப் பருவத்தில் (infancy) இருந்தது. அக்காலத்தில் இதழ்கள் பல வெளிவந்தன என்றாலும் மிகச் சிலவே தொடர்ந்து வாழ்ந்தன. நான்கு பக்கங்களைக் கொண்ட இதழ்களாக அவற்றின் விற்பனை அளவும் குறைந்துதானிருந்தது.

1857-க்கு முன்னர் இருந்த பள்ளிகள், கல்லூரிகளின் எண்ணிக்கை நாளடைவில் பெருகின; புதிய பல்கலைக் கழகங்கள் இரண்டு தோன்றி மொத்த பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையை ஐந்தாகப் பெருக்கியது. இந்தியர்கள் தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவிலும் இடம்பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. சமுதாய சீர்திருத்தக்காரர்களும் தங்களுள் கூடிக் கலந்து உரையாடும் நல்லுறவு நிலை வளர்ந்தது. உலகெங்கும் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிவதில் இந்தியர்க்கு ஆர்வம் பெருகியது; ஜெர்மனியிலும் இத்தாலியிலும் தோன்றிய விடுதலை இயக்கங்கள், அயர்லாந்தில் தோன்றிய தன்னாட்சி இயக்கம், ஆப்பிரிக்காவில் அமைந்த மேற்கத்திய (நாடுகளின்) மேலாதிக்கம், சூடான், எகிப்துப் பகுதிகளை ஆங்கிலேயர் கைக்கொண்டமை, ஐரோப்பியர் ஆட்சியில் ஆப்பிரிக்காவில் தோன்றிய நிறவேறுபாட்டுக் கொடுமைகள் போன்றவற்றைப் பற்றி அறிவதில் பேரார்வம் காட்டினர். அவர்களது ஆர்வம் இதழ்களால்தான் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற நிலை உண்டாகியது.

நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளை மக்களுக்கு அறிவிக்கவும், மக்களுடைய குறைகளை, எதிர்பார்ப்புகளை அரசினர்க்குத் தெரிவிக்கவும் இதழ்கள் பயன்பட்டன. இந்தியப் பெருங்கிளர்ச்சிக்குப் பின்னர் அறிவுப்பசி கொண்டு விளங்கிய இந்திய மக்களுக்கு உதவ முன்வந்த இதழாளர் பலர், தொடக்கத்தில் அரசினரின் தடைகளையே கண்டனர்.

தலைமை ஆளுநர்கள் 1857க்கு முன்னர் ஹேஸ்டிங்ஸ், பெண்டிங், மெட்கால்ப் என்னும் தலைமை ஆளுநர்கள் மூவரும்

1857க்குப் பின்னர் ரிப்பன் என்னும் தலைமை ஆளுநருமே இந்திய இதழியலின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்தவர்களா வார்கள். இக்காலக் கட்டத்தின் இந்திய இதழியலின் வளர்ச் சியைக்கூட இரண்டு பிரிவுகளில் காணலாம். ஒன்று, இந்தியப் பெருங்கிளர்ச்சிக்குப் பின்னர் தொடங்கி தலைமை ஆளுநர் லிட்டன் காலம் முடிய (1857 - 1880); மற்றொன்று, தலைமை ஆளுநர் ரிப்பன் காலம் முதல் கர்ஸன் காலம் வரை (1880-1905).

1858 முதல் இந்தியர் பலர் இதழ்களை வெளியிடத் தொடங்கினர். ஆயினும் அவற்றுள் பல ஆங்கிலத்தில் வெளி வந்தன.

1858 இல் துவாரகநாத் வித்யாபூஷன் என்பவர் "ஷோம் பிரகாஷ்" என்னும் இதழைத் தொடங்கினார். இதனை வளர்த்த பெருமை கல்கத்தா சமஸ்கிருதக் கல்லூரியின் முதல்வரான ஈசுவரசந்திர வித்யாசாகரரையே சேரும்.

❁

ஆற்றுப்படுத்திய நூல்கள்

1 Chalapathi Rau, M. — The Press, National Book Trust, India, New Delhi, 1974

2 Margarita Barns, — The Indian Press, George Allen & Unwin Ltd., London, 1940

3 Nair, A A., — Peeps at the Press in South India, 8, South St., Santhome High Road, Madras-28

4 Natarajan, J., — History of Indian Journalism, The Publications Division, New Delhi, 1955

5 Ramaswami Aiyar, C. P., — Annie Besant, Publications Division, New Delhi, 1971

6	Sadasivam, D., Dr.	The Growth of Public Opinion in the Madras Presidency (1858 - 1909), University of Madras, 1974
7	Sahni, J. N.,	Truth about the Indian Press, Allied Publishers, Madras, 1974
8	Tarachand,	History of the Freedom Movement in India, Vol II., Publications Division, New Delhi, 1974
9	Vaidehi Krishnamoorthy, Alladi, Dr.,	Freedom Movement in India, (1858 - 1947) A. Aruna, Basheerbagh, Hyderabad - 500 029, 1977
10	Vinayak Purohit (Ed).,	The Press and the People, The Christian Literature Society, Madras - 600 003, 1973
11	Wolseley, E. Roland., (Ed).,	Journalism in Modern India, Asia Publishing House, Madras, 1964

இ-16

1 அரங்கசாமி, பழநி., செய்தி உலகம், முத்தமிழ் நிலையம், மதுரை-19, 1975

2 இராமசாமிப் புலவர், சு. அ., இதழ் விளக்க வரிசை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-600 001, 1961

3 இளங்கோவன், மா. ரா., முற்காலத் தமிழ் இதழ்கள் - ஓர் அறிமுகம், (1848 - 1909) சேகர் பதிப்பகம், சென்னை-600 089 1979

4 குளத்தூரான், க, தமிழ்ப் பத்திரிகைகள், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1975

5 கோதண்டபாணி, இரா., இதழியல், கற்பக நூலகம், மதுரை-625 002, 1980

6 சிவஞானம், ம. பொ, விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு. இன்ப நிலையம், சென்னை–600 004, 1970

7 சோமலெ தமிழ் இதழ்கள், சென்னைப் பல்கலைக் கழகம், 1975

8 திரவியம், கா., — தேசியம் வளர்த்த தமிழ், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-600 014, 1974

9 நம்பூதிரிபாட், இ.எம்.எஸ் , (மொ.பெ.) பரமேஸ்வரன், பி. ஆர். — இந்திய வரலாறு ஒரு மார்க்சிய கண்ணோட்டம் பாட்டாளிகள் வெளியீடு, சென்னை-600 021, 1978

10 பி. ஸ்ரீ., — கிளைவ் முதல் ராஜாஜி வரை, அசோகா பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை, 1954

11 மணி, பெ. சு. — இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பூங்கொடி பதிப்பகம், சென்னை-600 004, 1978

12 மணியன், தங்க., — பத்திரிகைத் தமிழ், மாணிக்கப் பதிப்பகம், பரணம் அஞ்சல், திருச்சி-621 804, 1978

13 மாணிக்கவேலு, பா., — இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1977

14 வேங்கடசாமி, சீனி; மயிலை., கிறிஸ்தவமும் தமிழும்
கா. ஏ. வள்ளிநாதன், மயிலாப்பூர்,
சென்னை-600 004, 1936

15 மருதாசலக் கவுண்டர், வி. நா., இந்தியப் பத்திரிகைத் தொழிலியல்,
கோவைத் தமிழ்ச் சங்கம், கோவை, 1935

இதழ்கள்

1 கணையாழி, ஆகஸ்ட், 1980

2 தினத்தந்தி, வெள்ளி விழா மலர், 1968

3 The Illustrated Weekly, April 1, 1981
(Ist Special Centenary Issue)

4 Mirror, January, 1980

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் இதழ் தொடர்பான சட்டங்கள்

1 டிசம்பர் 12, 1795	தமது இதழில் வெளியாகும் அரசு ஆணைகளை ராணுவச் செயலாளரிடம் காட்டிய பின்பே வெளியிட வேண்டும் என்று 'மெட்ராஸ் கெசட்' ஆசிரியருக்கு ஆணையிடப்பட்டது. இதழ் தொடர்பான முதல் தணிக்கைச் சட்டமாகும் இது. இச்சட்டம் தலைமை ஆளுநர் சர். ஜான் ஷோரால் சென்னையில் பிறப்பிக்கப்பட்டது.
2 ஜூன் 29. 1799	சென்னை அரசாங்கத்தின் செயலாளரான வெப்பி, (webbe) சென்னையிலிருந்து வெளியாகும் எல்லா இதழ்களும் தாங்கள் வெளியிடும் செய்திகளையும் அரசுச் செயலரின் பார்வைக்கனுப்பி ஒப்புதல் பெற்ற பின்பே வெளியிடுதல் வேண்டும் என்ற தலைமை ஆளுநரின் ஆணையை இதழாசிரியர்களுக்குத் தெரிவித்தார்.
3 மே 13, 1799	கல்கத்தா வில்லியம் கோட்டையிலிருந்து தலைமை ஆளுநர் வெல்லெஸ்லியால் ஐந்து பிரிவுகளைக் கொண்ட இதழ் ஒழுங்குமுறைச் சட்டம் பிறப்பிக்கப் பட்டது.
4 மே 22, 1800	இதழ் உரிமையாளர்கள் அஞ்சல் தலைக்குரிய பாதுகாப்புக் கட்டணத்தைச்

	செலுத்துமாறு வற்புறுத்தும் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. கட்டணம் செலுத்தாத இதழ்களை அஞ்சலகங்கள் ஏற்க மறுத்தன.
5 ஏப்ரல் 4, 1823	தலைமை ஆளுநர் ஆடம்ஸ் கொண்டு வந்த ஒழுங்கு முறைச் சட்டம் இது. (Adam's Regulations Act of 1823)
6 ஆகஸ்ட் 3, 1835	தலைமை ஆளுநர் மெட்கால்ஃப் கொண்டு வந்த 1835 ஆம் ஆண்டு - இதழ்கள் சட்டம் எண்ணம் 11
7 ஜூன் 18, 1857	தலைமை ஆளுநர் கானிங் காலத்தில் பிறப்பிக்கப்பட்டது. Act No XV of 1857 An act to regulate the establishment of Printing presses and to restrain in certain cases the circulation of printed books and papers.

தலைமை ஆளுநர்கள்—1774 - 1856

1774		வாரன் ஹேஸ்டிங்ஸ்
1785		சர். ஜான் மேபர்ஸன் (தற்காலிகப் பொறுப்பு)
1786		கார்ன்வாலிஸ்
1793		சர். ஜான்ஷோர்
1798		வெல்லெஸ்லி
1805	ஜூலை	கார்ன்வாலிஸ்
	அக்டோபர்	சர். ஜார்ஜ் பார்லோ
1807		மின்டோ
1813		ஹேஸ்டிங்ஸ்
1823		ஜான் ஆடம் (தற்காலிகப் பொறுப்பு)
1823		லார்ட் ஆம்ஹெர்ஸ்ட்
1828		வில்லியம் பட்டர்வொர்த் பெய்லி (தற்காலிகப் பொறுப்பு)
1828		வில்லியம் கேவண்டிஷ் பெண்டிங்
1835		சர். சார்லஸ் மெட்காஃப் (தற்காலிகப் பொறுப்பு)
1836		ஆக்லண்ட்
1842		எல்லன்பரோ
1844		டல்ஹௌஸி
1856		லார்ட் கானிங்

நாடு கடத்தப்பட்ட இதழாசிரியர்கள்

1.	வில்லியம் டுயன்	1794
2.	ஹம்ப்ரீஸ்	1795
3.	டாக்டர் சார்லஸ் மெக்ளீன்	1798
4.	ஜேம்ஸ் சில்க் பக்கிங்காம்	1823
5.	சேன்ட் ஃபோர்ட் ஆர்னார்ட்	1823
6.	சி. ஜே. ஃபேர்	1824

இதழியலின் வளர்ச்சிக்குத் துணையான தலைமை ஆளுநர்கள்

1. ஹேஸ்டிங்ஸ்
2. வில்லியம் கேவண்டிஷ் பெண்டிங்
3. மெட்கால்ஃப்
4. ஆக்லண்ட்

இதழியலின் வளர்ச்சிக்குத் தடையானவர்கள்

1. ஜான் ஆடம்
2. எல்லன்பரோ
3. டல்ஹௌசி

ஆசிரியரின் பிற நூல்கள்

1 முற்காலத் தமிழ் இதழ்கள்-ஓர் அறிமுகம் (1849-1909)
2 சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்
3 இந்திய இதழ்கள் (கிழக்கிந்தியக் கம்பெனிக் காலம்)
4 இலக்கிய விருந்து
5 செந்தமிழ்ச் சிந்தாமணி
6 தமிழ்ப் புலவர்
7 ஐம்பெருங் காப்பியக் கதைகள்
8 தவச் செல்வி
9 இலக்கியச் செல்வம் I
10 இலக்கியச் செல்வம் II
11 பொற்காலப் பேரூர்கள்
12 குறிஞ்சிப் பாவை
13 பேரறிஞர் எமர்சன்
14 பேரறிஞர் ரூசோ
15 பேரறிஞர் டாக்டர் ராதாகிருஷ்ணன்
16 காலம் போற்றும் காரிகையர்
17 பிரிவுக் கோடு
18 வைரமாலை
19 பாவைப் பரிசு
20 தமிழகத்தின் துறைமுகங்கள்
21 தமிழகத்தின் தலைநகரங்கள்
22 கலையும் வாழ்வும்
23 வைகுந்தம் திறந்தது (சிலம்புச் செல்வரின் சிறுகதைகள்)
24 அறிவுலகின் குருதேவர் (தெ. பொ. மீ.)
25 கல்வி மொழி ஆங்கிலமா? தமிழா?
(ம. பொ. சி. தரும் விளக்கம்)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	தவறு	திருத்தம்
9	13	சேர்த்துள்ளனர்	சேர்த்துள்ளேன்
11	2	பகுதி	பகுதியில்
11	5	கற்பார்க்கும்	கற்பார்க்குப்
14	8	கல்கத்தா கெசட்	பெங்கால் கெசட்
31	3	பின்னர்	பின்னவர்
39	எண் 39	முன்ஷி சூதா சூக்	முன்ஷி லாலா சூதா சூக்
42 - 43	எண் 44	நீக்கப்பட வேண்டும்	
44 - 45	எண் 61		வாரம்
44 - 45	எண் 65		வாரம்
48 - 49	எண் 94		நாளிதழ்
48 - 49	எண் 102		ஆசிரியர்: ஜியார்ஜ் பிரின்ஸப்
48 - 49	எண் 106		வாரம்
50 - 51	எண் 108		வாரம்
58 - 59	எண் 198		ஆசிரியர்: சியாம் சத்தர் ஸென்
78	20	propeusity	propensity
99	9	dractises	practises
99	10	qepraved	depraved
137	4	இந்தியா ஹெரால்டை	இண்டியன் ஹெரால்டை

பக்கம்	வரி	தவறு	திருத்தம்
137	9	ஹம்ப்ரியை	ஹம்ப்ரீஸை
138	8	கிளைவினை	கிளைவின்
151	16	முத்நூறு	முந்நூறு
158	24	ரகசியபாக	ரகசியமாக
165	2	சார்ட்டம்	சார்ட்டர்
169	23	எழுதியிருந்தார்	எழுதியிருந்தனர்
197	6	ஒருங்கு கூட்ட	ஒருங்கு கூட்டி
218	11	வ. பி. கோகலே	வி. பி. கோகலே
220	11	அலுவலகங்கள்	அலுவலர்கள்
234	24	சதரானா	சாதாரண
237	29	ஆளுநர்கள்	ஆளுநர்களுள்
243		The Illustrated weekly, April 1, 1981	The Illustrated weekly of India, April 1, 1980
245	10	சட்டம் எண்ணம்	சட்டம் எண்
246	தலைப்பு	1774 - 1856	1774 - 1858
246	17	டல்ஹௌஸி	சர். ஹென்றி ஹார்டிஞ்ச்
246	18		1848 டல்ஹௌஸி
246	20		1858 லார்ட் கானிங் (முதல் வைஸ்ராய்)
247	எண் 5	ஆர்னார்ட்	ஆர்னாட்

மேலும் சில இதழ்கள் !

குறிப்பு : 1858 ஆம் ஆண்டுவரை வெளிவந்த மேலும் சில இதழ்கள் பற்றிய விவரங்கள் இங்குத் தரப்படுகின்றன.

1846 சித்ர கியான் தர்பன்
பம்பாய் – குஜராத்தி மொழி
திங்கள் இதழ் (படங்களுடன் வெளி வந்த முதல் இதழ்)

1851 பெங்கால் ரெக்கார்டர்
கல்கத்தா – ஆங்கில மொழி
திங்கள் இதழ்
ஆசிரியர் : கிரீஷ் சந்திர கோஷ்

1856 ஸ்திரீ போதா
பம்பாய் – குஜராத்தி மொழி
திங்கள் இதழ்
(பெண்களுக்காக நடத்தப்பட்ட முதல் இந்திய இதழ்

1857 பயாம் – ஏ – ஆஸாத்
டில்லி – உருது, இந்தி மொழி
நாளிதழ்
ஆசிரியர் : மிர்ஸா பேதர் பத்தா